# ஊழலற்ற திருச்சபை சாத்தியமே!

அறிவர். கிறிஸ்டோப் ஸ்டுக்கல்பெர்கர்

தமிழில் : அருள்திரு. S. சந்திரமோகன்

Globethics.net

# ஊழலற்ற திருச்சபை
# சாத்தியமே!

அறிவர். கிறிஸ்தோப் ஸ்டுக்கல்பர்கர்
தமிழில் : அருள்திரு. S. சந்திரமோகன்

# ஊழலற்ற திருச்சபை
# சாத்திமே!

அறிவர். கிறிஸ்தோப் ஸ்டுக்கல்பர்கர்
தமிழில் : அருள்திரு. S. சந்திரமோகன்

Globethics.net

# ஊழலற்ற திருச்சபை சாத்தியமே!

(அனுபவங்கள், மதிப்பீடுகள் மற்றும் தீர்வுகள்)

ஆசிரியர்: கிறிஸ்தே0ாப் ஸ்டுக்கலபெர்கர்
குளோப் எதிக்ஸ் வெளியீடு
தமிழில்: அருள்திரு. S. சந்திரமோகன்

------------------

## உள்ளடக்கம்

முகவுரை 1. ஓலாப் பிக்ஸே ட்வெய்ட், பொதுக்காரியதரிசி உலகத் திருச்சபை மாமன்றம் (WCC)

முகவரை 2. ஜான் நிடுனா, பொதுக்காரியதரிசி ACT அலையன்ஸ்

1. முன்னுரை:

2. ஊழல் பற்றி ஓர் விளக்கம்

2.1 ஊழல் என்றால் என்ன ? அதன் வடிவங்கள்?
2.2 வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு எதிரான விளைவுகள்
2.3 ஊழலால் யார் பயன் பெறுகிறார்கள்? யார் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்?
2.4 ஊழல் ஓர் கண்ணோட்டம், அதன் வடிவெல்லை
2.5 கலாச்சாரம், திருச்சபை இயல், பாவ அறிக்கைகள்
2.6 ஊழலின் பெண்ணிய பரிமாணம்

3. அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள் (1995- 2010)

3.1 திருச்சபை அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள்
3.2 வளர்ச்சிப் பணி நிறுவனங்களின் அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள்
3.3 அருட்பணி அமைப்புகளின் அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள்
3.4 மற்ற மதங்கள், மதங்களுக்கிடையே ஆன அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள்
3.5 வணிகங்களிலிருந்து கற்றுக் கொண்டவை
3.6 அரசியலிருந்து கற்றுக் கொண்டவை
3.7 தொண்டு நிறுவனங்களிலிருந்து கற்றுக் கொண்டவை
3.8 வெற்றிகளும் தடைகளும்

4. சமயம் மற்றும் நெறிமுறை அடிப்படைகள் ஊழலுக்கு எதிராக

4.1 விவிலிய அடிப்படை: ஊழல் அநீதியானது- பாவம்
4.2 பொறுப்புள்ள தலைமை: ஊழலற்ற திருச்சபை சாத்தியமாக அடிப்படை
4.3 ஏனைய உலக சமயங்களில் சமய அடிப்படைகள்
4.4 நெறிமுறை மதீப்பிடுகள், மற்றும் உண்மைகள் ஊழலை வெற்றி கொள்ள

5. திருச்சபை / மற்றும் தொடர்பான நிறுவனங்களுக்குப் பரிந்துரைகள்

5.1 இறையியல், திருச்சபை இயல், மற்றும் நெறிக் கோட்பாடுகள் அடிப்படையில் ஊழலை வேரறுத்தல்
5.2 தலைமைத்துவம் மற்றும் ஆளுகை அடிப்படையில் ஊழலை வேரறுத்தல்
5.3 திட்டங்கள் மற்றும் வளம் உக்கிரானத்துவம் மூலமாக ஊழலை வேரறுத்தல்
5.4 அருளுரை, போதித்தல் மற்றும் கற்பித்தல் மூலமாக ஊழலை வேரறுத்தல்
5.5 பாலியல் சமத்துவம் / மகளிர் மேம்பாட்டின் மூலமாக ஊழலை வேரறுத்தல்
5.6 நீதிமன்றங்கள் மற்றும் சட்டங்கள் மூலமாக ஊழலை வேரறுத்தல்
5.7 ஊடகங்கள், பிரச்சாரங்கள், தகவல் திரட்டு, மற்றும் வலைப்பின்னல் அமைப்புகள் மூலம் ஊழலை வேரறுத்தல்

6. முடிவுரை

7. சேர்க்கைகள்: நடத்தை விதிகள், பிரகடனங்கள் மற்றும் செயல் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| A.1. இந்தியா | : | திருச்சபைக்கான வெளிப்படை நெறிகள் |
| A.2. இந்தியா | : | NCCI செயல் திட்டங்கள், தலைமைத்துவ நெறிகள் மற்றும் பிரச்சாரங்கள் |
| A.3. இந்தியா | : | திருச்சபைத் தலைவர்களுக்கு வேண்டுகோள் |
| A.4. கேமரூன் | : | தொண்டு நிறுவனங்கள் மற்றும் திருச்சபையைக்குரிய நடத்தை விதிகள் |
| A.5. கேமரூன் | : | ஊழலுக்கு எதிராக இளைஞர்களுக்கு நடத்தை விதிகள் |

A.6. AACC
அனைத்துஆப்பிரிக்க
திருச்சபைகள் ஒன்றிப்பு: பரிந்துரைகள்

A.7.உலகத்
திருச்சபை மாமன்றம் : நெறிமுறை வணிக நடத்தை; ஊழலுக்கு எதிரானகொள்கை

A.8.UEM ஒன்றிப்பு சுவிசேஷ
அருட்தொண்டு அமைப்பு : நடத்தை விதிகள்

மொழியாக்குவோரின் குறிப்புகள்

| | |
|---|---|
| நெறி, நடத்தை விதிகள் | - Code |
| நெறிமுறை | - Ethics |
| வள ஆதாரம் | - Resource |
| வள உக்கிரானத்துவம் | - Resource Management |
| தகவல் திரட்டு | - Database |
| வலைப்பின்னல் அமைப்புகள் | - Networks |

# முகவுரை - 1

கிறிஸ்தோப் ஸடுக்கல் பெர்கரின் இப்புத்தகம் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த அமைப்புகளின் தலைவர்களை நோக்கி எழுதப்பட்டுள்ளது. ஊழலற்றதாய் திருச்சபைகளையும், திருச்சபை நிறுவனங்களையும் உருவாக்க, வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் தேவைகளை ஏற்படுத்த இது வலியுறுத்துகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் சாத்தியமான தீர்வுகளை முன்னிறுத்துவதுடன் பெரும் நம்பிக்கையும் கொள்கிறது. உலக அளவிலான சமூக மக்களுக்கு இப்புத்தகம் புதிய வெளிச்சத்தைக் கொண்டு வந்து பரவலாக இது வாசிக்கப்படும் என்று நம்புகிறேன்.

அரசுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளை நோக்கி திருச்சபை தன் வாதிடும் பணியை (Advocacy) செய்யும் போது 'அதிகாரங்களை நோக்கி மெய்யைப் பேசுதல்' என்கிறோம். இப்புத்தகம் நம் சொந்த நிறுவனங்களில் ஊழலுக்கு எதிராக உண்மை பேச வேண்டி நம்மை அழைக்கிறது. ஒழுக்கத்தை வலியுறுத்தும் சமயத் தலைவர்களாக உலகம் எதிர்பார்க்கும் நிலையில் நம் திருச்சபைகளும், திருச்சபை சார்ந்த அமைப்புகளும் ஊழலில் திளைப்பது நம்மை- கிறிஸ்தவர்களை கேள்விக்கு உட்படுத்துகிறது. சுவிசேஷம் தன் நம்பகத்தன்மையை இழந்து விடுகிறது.

ஆய்வுகள், சமய – நெறிமுறை - இறையியல் கருத்தாக்கங்கள் மூலமாக திருச்சபைகள் எங்குமுள்ளவை, ஊழல் காரியங்களை ஒழிக்க, அதற்குரிய வழிவகைகளை கிறிஸ்தோப் எடுத்து இயம்புகிறார். 35 பரிந்துரைகளை உள்ளடக்கி திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையாகவும் கணக்கு ஒப்புவித்தலுடன் இருக்கவேண்டும் என்கிறார். இந்த பரிந்துரைகள் சாத்தியமான தீர்வுகளைக் கொள்வதுடன், ஆழமான இறையியல், ஆராதனை வழிமுறைகள் மற்றும் திருச்சபை இயல் பிரச்சினைகளைக் கையாளுகின்றன. தவிர நெறிமுறை மற்றும் ஆவிக்குரிய தலைமையாக இருக்கவேண்டியதின் தற் பரிசோதனை மற்றும் பொறுப்பான தலைமைத்துவ நடத்தை விதிகளை பிற்சேர்க்கையில் காணக் கூடும்.

தமக்குள் கணக்கு ஒப்புவித்தலில் மேம்பட இப்பரிந்துரைகள் உதாரணமாக இருக்கின்றன. 2006ல் போர்ட் அலக்ரேயில் நடத்த திருச்சபை மாமன்றக் கூட்டத்தில் ஒரே சபையாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற ஆவணத்தில் இது இருக்கிறது. ஏற்கப்பட்டிருக்கிறது.

திரித்துவ கடவுளால் திருச்சபை ஒன்றிப்பு காரியங்களில் திருச்சபை நடக்க அழைக்கப்படுவதற்கு ஏற்ற வகையில் இந்த கணக்கு ஒப்புவிப்பும் ஏற்றதானது. திருச்சபைகளின் ஐக்கியத்தில் ஒழுக்க நெறி சார்ந்த இது நல்லதொரு கண்ணோட்டம் தலைமையானவர் பிறருக்கு ஊழியக்காரார் என்று அழைக்கப்படவேண்டிய திருச்சபையில் கணக்கு ஒப்புவித்தல் என்பது விமர்சனத்துக்கு உள்ளாக நாம் நேரிட்டாலும் அவசியமானது. நம்முடைய அதிகாரங்களை நோக்கி வரும் மெய்யை நாம் கேட்க உதவியாயிருக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாக நாம் தொடர் முன்னேற்றம் அடைய உதவுகிறது.

ஊழல் எவ்விதம் ஏழைகளைப் பாதிக்கிறது என்று இப்புத்தகம் தெளிவாகக் கூறுகிறது. சரியான முறையான இறையியல் கல்வி, கணக்குப் பயிற்சிகள், ஊழலக்கு எதிராக அமைப்புகளில் கொண்டு வர வேண்டிய கட்டமைப்பு விதிகள் இவைபற்றிய மாதிரியை இப்புத்தகம் நமக்கு தருகிறது. பங்கேற்பு வலியுறுத்தும் உயர் கட்டமைப்பு திருச்சபைகளில் (Hierarchy) எவ்விதம் அதிகாரங்களும் தலைமைத்துவமும் ஊழலை எவ்விதம் கனிசமாகக் குறைக்கிறது என்று இப்புத்தகம் சுட்டிக் காட்டுகிறது. தவிர, கணிசமாக பெண்கள் தலைமை ஏற்கும் அமைப்புகளில் ஊழல் எவ்விதம் சரியான கட்டுக்குள் வைக்கப்படுகிறது என்றும் விளக்குகிறது.

ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவித்தல் சரிநிகர் நம்பிக்கையையும் உண்மைத்தண்மையையும் கொடுக்கும். விமர்சனத்தை உள்வாங்க திருச்சபைத் தலைமைகள் வெளிப்படையாக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி வெளிப்படையான நிர்வாகத்தை தொடர்தல் நமக்கு உதவும். அப்படி நாம் செய்வோமெனில் கடவுளுக்கு நாம் கணக்கு ஒப்புவிப்பவராக மாறுதல், நமக்கு கடவுள் அளித்த நன்கொடைகளை நீதியுடன் நாம் பகிர்ந்து கொள்ளுதலும் நடக்கும்.

ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க இப்புத்தகம் திருச்சபைகளுக்கும் நிறுவனங்களுக்கும் உதவும் என்று நம்புகிறேன்.

அருள்திரு. அறிவர் ஒலாப் பிக்ஸே ட்வெயிட்
பொதுக்காரியதரிசி
உலகத் திருச்சபை மாமன்றம்
ஜெனிவா, செப்டம்பர் 2010

# முகவுரை 2

நிலைத்த வளர்ச்சிக்கும், நல்ல ஆளுகைக்கும் எதிராக ஊழல் இருக்கிறது என்று பொதுவாக அதிகமாக பலராலும் அங்கீகரிக்கப்படுகிறது. எல்லா நாடுகளில் உள்ள சமூகங்களும் திருச்சபையும் ஊழலால் பாதிக்கப்பட்டுள்ளன. வேதனை தரும் அதே சமயம் நம்பிக்கை தரும் பல அனுபவங்களை இப்புத்தகம் சேகரித்துள்ளது. திட்டமான தீர்வுகளையும் திருச்சபைக்கு அளிக்கிறது.

நூற்றுக்கு மேலான மனித வளர்ச்சி நிறுவனங்கள் மற்றும் திருச்சபைகளை உள்ளடக்கியதும், 1 பில்லியன் யு எஸ் டாலர் வருமானத்தை ஒவ்வொரு வருடமும் கையாளும் உலகளாவிய ACT அலயன்ஸ் அமைப்பு உறுப்பினர்கள் தம் அமைப்புகளைச் சரிப்படுத்திட முதலில் முன்வரவேண்டும். பிறகே ஊழலுக்கு எதிராக பொதுச்சபையில் நாம் பேசிட முடியும் பல்வேறு உடனடி அல்லது நாளார்ந்த துன்பங்களில் பாதிக்கப்படும் ஏழைகளுக்கு உதவிடும் ACT அலயன்ஸ் தனக்கு வரும் நிதி மற்றும் பொருள் ரீதியான நன்கொடைகளை சரியான முறையில் செலவிட கணக்கு ஒப்புவித்தல் இன்றியமையாதது.

ACT அமைப்பு உறுப்பினர்களின் பணியாளர்கள் மற்றும் நிர்வாகம் உண்மை சார்ந்த கலாச்சாரம், வெளிப்படையைக் கட்டமைக்க வேண்டும் என்றே ACT அலயன்ஸ் நம்புகிறது, வேண்டுகிறது. ஊழலற்ற நடவடிக்கைகளை கொண்டுவர ஒவ்வொரு உறுப்பு அமைப்புகளும் அநீதியான ஊழல் செயல்பாடுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து முற்றிலும் நீக்க விதிமுறைகள் மற்றும் கொள்கை வரைமுறைகளை உருவாக்கிடவேண்டும். ஊழலை நீக்கிட பல உறுப்பு அமைப்புகள் சில தீர்வுகளை நோக்கி செயல்பட ஆரம்பித்துள்ளன. திறன் வளர்ப்பின் மூலம் தங்களுக்கிடையேயுள்ள பலம் மற்றும் பலவீனங்களை ஆய்வு செய்திடவேண்டும். அவ்வாறு செய்தால்தான் பொதுச் சமூகத்திடமிருந்தும் தனியாரிடமிருந்தும் பெறும் நன்கொடைகளை சரியாக நாம் நிர்வகிக்கமுடியும்.

சமீப வருடங்களில், ஊழலை ஒழித்திட நிறுவனங்களிலும் தனிப்பட்ட நபர்களின் செயல்பாடுகளிலும் தாக்கத்தை விடுவிக்கும் பல கொள்கை விதிகளை ACT உருவாக்கியுள்ளது. ACT நடத்தை விதிகளில் ஒவ்வொரு ACT உறுப்பினரும் கையெழுத்திடவேண்டும். நெறியற்ற நடத்தைகள் அநீதிகளை விலக்கிட நடத்தை விதிகள் உதவுகின்றன. நடத்தை விதிகளை மீறும் பணியாளர்களை ACT அலயன்ஸ் சகித்துக் கொள்ளாது என்று பணியாளர்கள் உணர்ந்தேயுள்ளனர். அப்படி மீறினால் உள்கட்டமைப்பு தண்டனைகள், பணிநீக்கம், குற்றவியல்

வழக்குகளை சந்திக்க வேண்டும் என அவர்கள் அறிவார்கள். நடத்தை விதிமுறை மீறல்கள் விதி ACT புகார்கள் கொள்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை செயல்பாடுகளில் உள்ளது.

ACT தற்போது மனிதநல கணக்கு ஒப்புவித்தல் பங்கேற்பு மற்றும் தெள்ளிய நிர்வாகம் தொடர்பான கணக்கெடுத்தலைச் சந்தித்துவருகிறது, ஆடிட்டர் ஒருவரின் உதவியுடன் இது தற்போது செயல்படுத்தப்படுகிறது. HAP Standard ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவித்தலையும், சமூகங்களின் எதிர்பார்ப்பை சரியான முறையில் பூர்த்தி செய்யவும் தொடங்கியிருக்கிறது.

கிறிஸ்டோப் அவர்களின் செயல்பாடுகளை நான் பாராட்டுகிறேன் திருச்சபைகளும் திருச்சபையை சார்ந்த அமைப்புகளும் இதில் பயன்பெற அழைக்கிறேன்.

ஜான் நிகுனா
பொதுக்காரியதரிசி
ACT Alliance
ஜெனிவா, செப்டம்பர் 2010

# அத்தியாயம் - 1

## முன்னுரை

எதிர்த் தூண்டலை விளைவிக்கும் ' ஊழலற்ற திருச்சபை சாத்தியமே' என்ற தலைப்பு கீழ்க்கண்ட 5 அடிப்படையில் எழுந்துள்ளது. (அ) ஊழல் வணிகம், அரசியல் மற்றும் தொண்டு நிறுவனங்களில் மட்டுமல்ல, திருச்சபைகளிலும், மற்றெல்லா சமய நிறுவனங்களிலும் இருக்கிறது; (ஆ) ஊழலை வேரறுக்க திருச்சபையிலும், மற்ற இதர சமய நிறுவனங்களிலும் முயற்சிகளும் அனுபவங்களும் நடந்தேறிவருகின்றன; (இ) ஆவிக்குரிய, நன்னெறிக்குரிய, நிறுவன அடிப்படைகள் வெற்றிகரமாக செயல்பட்டால் ஊழல் வேரறுக்கப்படும்; (ஈ) சுவிசேஷம் அனைத்துத் திருச்சபைகளுக்கும் (உலக மெங்கும், பல நாடுகளில், பல கலாச்சாரங்களில் அல்லது அறிக்கைகளில் உள்ளவை) பொதுவானது என்பதால் உலகத் திருச்சபைகளால் ஊழல் வேரறுக்கப்படும். தவிர திருச்சபைப் பிரிவுகள் அதனதன் அறிக்கை பன்மைத் தன்மையின்படி இருப்பினும் உலகளவிய நன்னெறிக் கோட்பாடு சாத்தியம்; (உ )ஊழலுக்கு எதிரான போராட்டம் திருச்சபையை அழிக்க அல்ல மாறாக அதை ஊன்றக் கட்டுவதே அதைத் தாங்கி குணப்படுத்துவதே. நீதிக்காக குரல் கொடுப்பது திருச்சபையை நேசிப்பதால்தான். இப்புத்தகம் மேற்கண்ட 5 அடிப்படைகளைப் பற்றி விவாதிக்கிறது. மற்ற சமயங்களில் ஊழல் இல்லையா? ஆம் இருக்கவே இருக்கிறது. ஆனால் இந்த வெளியீடு திருச்சபையில் நடைபெறும் ஊழல்களை முன்னிறுத்துகிறது- அவ்வப்போது இதர சமயங்களில் காணப்படும் காரியங்களை கீழ்காணும் நிலைகளில் சுட்டுகிறது: (அ) இந்த ஆக்கியோனின் பின்னணி மற்றும் அனுபவங்கள் கிறிஸ்தவ நிறுவனங்களில் காணப்படும் ஊழலை வேரறுக்க எடுத்த முயற்சிகளில்; (ஆ) மற்ற சமயங்களில் காணப்படுவதைக் காட்டிலும், கிறிஸ்தவ அமைப்புகளில் கண்டுபிடித்து வெளியிடப்படும் ஊழல் விவகாரங்கள், திருச்சபையை மிக்க பலவீனமாக, அதே சமயம் வெளிப்படையுள்ள அமைப்பாக காட்டுகிறது; (இ) இதர சமயநிறுவனங்களில் காணப்படும் ஊழல் காரியங்களை வெளியிடவும் அதை எதிர்த்துப் போராடவும் போதுமான அளவிற்கு ஆய்வுகள் இல்லை, எனினும் இப்புத்தகம் ஏனைய சமய நிறுவனங்கள் தமக்குள் உள்ளாய்வு செய்ய உற்சாகப்படுத்தும்.

பிற சமய நிறுவனங்களைக் காட்டிலும் ஒப்பிட்டளவில் கிறிஸ்தவ நிறுவனங்கள் ஊழலால் பெரிதும் பாதிக்கப்படவில்லை, பிற சமய நிறுவனங்கள் தம் புனித நூல்களில் ஊழலைக் கண்டித்தாலும், நன்னெறியில்லாத நடவடிக்கைகளால் அவை பாதிப்புக்குள்ளாகியே வருகின்றன. தாம் வாழும் ஊழல் மிகுந்த பின்னனியில், சமூகத்தில் அவைகளுக்கு இருக்கும் அந்தஸ்தில், ஒவ்வொரு சமயத்திற்கும் அதன் நிலைக்கு தக்கவாறு ஊழல் கூறுகள் அங்கே மலிந்தே இருக்கின்றன. சில கிறிஸ்தவ அமைப்புகள் உள்ளூரிலிருந்து உலக அளவிலும்

வியாபித்து உள்ளன. இஸ்லாத்தைப் பொறுத்தவரை மத்திய அளவிலான அமைப்பு அதற்கு இல்லை. ஆனால் உள்ளூர் அளவில் உள்ள முஸ்லீம் நிறுவனங்கள் பல பல அரசியல் அமைப்புகளாயும் அவை செயல்படுகின்றன. ஊழலைப் பொறுத்தவரை புத்த மத நிறுவனங்களே, இந்து நிறுவனங்களோ, மடங்களோ, இயக்கங்களோ, சீக்கிய அமைப்புகளோ, தனியார் திருச்சபைகளோ, பெந்த கொஸ்து நிறுவனங்களோ, குடும்ப திருச்சபை அமைப்புகளோ, அனைத்தும் ஊழல் பிடியில் சிக்கியே உள்ளன.

நன்னெறிக் காப்பாளர்களாக சமயத் தலைவர்கள் எண்ணப்படும் போது ஊழல் காரியங்கள் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. பாஸ்டர்களும் பிஷப்புகளும் ஊழல்வாதிகளாக மாறிப்போனால், மெய்மைக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் யாரால் உதவிட முடியும்? ஒவ்வொரு தனி விசுவாசியும், இதனால், கேள்விக்கு உட்படுத்தப்படுகிறார். சுவிசேஷம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு, விசுவாசத்தின் மீது சந்தேகச் சாயை படிந்து, சமூகத்தில் புற்று நோயாக அது பரவுகிறது.

திருச்சபையில் ஊழலை வேரறுக்க பல்வேறு தடைகள் உள்ளன. ஊழல் செயல்களுக்கு துணைபுரியும் பலர் தங்களது நடைமுறையை கண் பார்வைக்கு மறைக்கின்றனர். ஊழலுக்கு எதிராக பணிபுரியும் பணியாளர்களை, சில திருச்சபைத் தலைவர்கள் தடுப்பதுமாய், அவர்களை பயமுறுத்துவதுமாய் இருக்கின்றனர். ஊழல் செய்யவில்லை என்றும் மறுதலிக்கின்றனர். சிறு குழந்தைகளைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய, குறிப்பாக ரோமன் கத்தோலிக்க திருச்சபையின், பல பணியாள்களது பங்கு ஊழலின் ஓர் வடிவத்தை நமக்கு உணர்த்துகிறது. தனிப்பட்ட விருப்புகளுக்கு தம் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தலே ஆகும்.

இதற்கிடையில் தைரியமான நேர்மையான பல திருச்சபைத் தலைவர்களும் இருக்கவே செய்கின்றனர், குறிப்பாக லே சர்ச் தலைவர்களும் தீர்க்கதரிசிகளால் ஊழலுக்கு எதிராக சமூகத்தில் குரல் கொடுக்கின்றனர். இந்தப்புத்தகம் ஊழலுக்கு எதிரான சில முயற்சிகளைக் குறித்து சொல்கிறது இந்த முயற்சிகள் பல அமைப்புகளை வருத்தப்படவைக்கும் அது தேவையே. ஊழலை வேரறுக்கவும், தோல்விகளில் பாதைகளைக்காணவும் அவை உதவும்.

கடந்த பதினைந்து வருடங்களில் ஊழலுக்கு எதிராக பல கட்டுரைகள் வந்துள்ளன. புள்ளிவிபரங்கள், உலகளாவிய சர்வேக்கள், அரசியல் கலாச்சார ஆய்வுகள், கருவிகள், அரசியல் தீர்மானங்கள், வழிகாட்டுதல்கள், ஊடக அறிக்கைகள் பல ஆயிரக்கணக்கான ஊழல் பிரச்சினைகள் தொடர்பாக வெளிவந்துள்ளன. இரட்டை உலக ஒழிப்பும், தனியார் மற்றும் அரசுத் துறையில் வெளிவரும் ஊழல்களும், லஞ்சப் பண பயங்கரமும்,1994ல் தோற்றுவிக்கப்பட்ட வெளிப்படைக்கு ஆதரவான பன்னாட்டு வெளிப்படை அமைப்பு (Transparency International - TI), 1996ல் உருவாக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான அமெரிக்க அமைப்பும், 2003 ல் ஏற்படுத்தப்பட்ட UN கன்வென்ஷன் ஆன் கரப்ஷன்

அமைப்பும், 2006ல் உருவாக்கப்பட்ட ஆப்பிரிக்க யூனியன் ஊழல் ஒழிப்பு மாநாடும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தலைமை வகிக்கின்றன.

1994ல் ஊழலுக்கு எதிரான என் சொந்த போராட்டம் தொடர்ந்தது. பிரட் பார்த ஆல் என்ற ஸ்விஸ் புராட்டஸ்டண்டு அமைப்பில் நான் பொதுக் காரியதரிசியாய் இருந்தபோது, திட்ட செயல்பாடுகளில் ஊழலுக்கு எதிராக போராடினேன். பொது வளர்ச்சிக்குரிய பணம் சிலருடைய பாக்காட்டுகளுக்குப் போய்ச் சேர்ந்தது தவிர அப்படிச் சேர்ந்த பணம் சில ஏழை நாடுகளின் பொதுக் கடன் அளவிற்கு வளர்ந்திருந்தது. வளர்ச்சிப்பணிகளுக்கு இந்நிலை தடைசெய்தது. சில நாடுகளின் கடன் தள்ளுபடியைக் காட்டிலும் அந்நாட்டில் நிலவும் ஊழல் ஒழித்தாலே நாடுகள் சுபிட்சம் பெறும் என்று நம்பிக்கை கொண்டேன். இது 1995ல் ஸ்விஸ் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற (TI) அமைப்பை நான் நிறுவிட உதவியது பிற்பாடு பெர்லின் (TI) அமைப்பு தோன்றியது அதன் தலைவராக 1995 முதல் 1999 வரை நான் செயல் ஆற்றினேன்.

பொதுத்துறை ஊழல்களுக்கு எதிராக பொதுச்சமூகம் செயல்பட்ட வேளையில், தனியார் கம்பெனிகளுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இடையில் ஊழல் செயல்பாடுகள் பெருகி வரும் வேளையில், சேவைத்துறையில் மூன்று அமைப்புகளில் ஊழலுக்கு எதிராக பணியாற்றினேன், 1999ல் கேமருனில் NGO க்கு நடத்தை விதிகள் உருவாக்கப்பட்டன. 2002லிருந்து ஆப்பிரிக்க பள்ளிகளில் ஊழலுக்கு எதிரான பள்ளிகள்; 2004ல் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளுக்கு இங்கு நடைபெற்ற ஊழலுக்கு எதிரான பயிற்சிகள் இப்புத்தகம் எழுதிட உதவியுள்ளன. இதன் அனுபவ வெளிப்பாடுகள் 3 வது அத்தியாயத்தில் உள்ளன.

ஊழலுக்கு எதிராக தலைமையில் உள்ளோர் முக்கியப்பணி ஆற்றுகின்றனர் என்னுடைய நெறிமுறை சார்ந்த நடத்தை விதிகள் தலைமைக்கான நன்னெறி மற்றும் பொறுப்பான தலைமை தொடர்பான பயிற்சிகளிலிருந்து பெறப்பட்டன. தனியார் தலைமை நடத்தை விதிகள் அமைப்பு ரீதியான காரியங்களில் இணைந்து வந்தன (A 13 பொறுப்பான தலைமை நடத்தை விதிகள் பார்க்க) குளோப் எதிக்ஸ் நெட்டின் முக்கிய குறிக்கோள் பொறுப்பான தலைமைப் பங்காளர்களை உருவாக்குவதே.

1999-2007 வரை ECLOF சிறு கடன் நிறுவனத்தின் தலைவராக நான் பணியாற்றிய போது எனக்கு ஊழல்பற்றி, திருச்சபையில் அதன் தாக்கம் பற்றி தெளிவு கிடைத்தது. பின்னாளில் 2006 – 2007ல் உலகத் திருச்சபை மாமன்றத்தில் மத்திய உறுப்பினராக நான் இருந்த போது இன்னும் தெளிவு பெற்றேன் கடந்த 15 வருடங்களாக ஊழலுக்கு எதிராக நடந்த மாநாடுகளில் இந்தியா, இந்தோனேசியா, காங்கோ, காமரூன் நாடுகளில் - பங்கேற்றதும், Globe Ethics ஆன்லைன் தொடர்பாளர்களுடன் உள்ள உறவும் என்னைப் பலப்படுத்தியது.

இந்தச் சொந்த அனுபங்களின் விளைவாகவே மீண்டும் மீண்டும் ஒரு சில

நாடுகளே குறிப்பிடப்படுகின்றன. நேர்மறை மற்றும் எதிர்மறை அனுபவங்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பற்றியே உள்ளன. லத்தீன் அமெரிக்கா, ஓசினியா மற்றும் வட அமெரிக்கா பற்றி குறைவாகவே உள்ளது இங்கு நேர்மறை மற்றும் எதிர்மறை அனுபங்கள் இருக்கின்றன. வாசகர்கள் அவற்றை எனக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறேன்.

இந்தப்புத்தகம் ஏற்கனவே நான் வெளியிட்டிருந்த ' நிதி நிறுவனங்கள்- மிஷனரி சொசைட்டிகள் - சர்ச்சுகளுக்கு தேவையான உடனடி செயல்பாடுகள்'(1999) மற்றும் 'ஊழலை எதிர்த்து தொடர் போராட்டம் (2003) பற்றிய புத்தகங்களை விரிவாக்கம் மற்றும் மறு பதிப்பு செய்து வந்துள்ளது. 2008-2010ல் கிடைத்த அனுபங்களை இதில் கொண்டு வந்துள்ளேன். இறையியல் பார்வை, நல்ல வேத விளக்கம் மற்றும் நல்ல தலைமை ஊழல் புற்று நோய்க்கு மருந்து தரிசனம் உள்ள தலைமை, பாலியல் பற்றிய புரிதல், பெண்களை வலிமையுடையவர்களாக மாற்றுதல், இவை ஊழலுக்கு எதிராக உதவும் கிறிஸ்தவம் சாரா இதர சமய நிறுவனங்களின் அனுபவம் உதவும்.

வாயளவில் ஊழலுக்கு எதிராக சர்ச்சுகள் பேசுகின்றன. நடத்தை விதிகள் அறிக்கைகள் நல்லதே. ஆனால் போதுமானவையல்ல ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் திருச்சபையில் பல்வேறு விதிமுறைகள் அமைப்பு முறைகள் உருவாக்கப்பட்டு பலமாக கடைபிடிக்கப்பட வேண்டும். ஊழல் கடவுளுக்கு எதிரானது. ஊழல் ஓர் கொடுர குற்றம்.

இப்புத்தகம் திருச்சபையில் தலைமைப் பொறுப்பை வகிப்போருக்கு எழுதப்பட்டது. இதர சமய நிறுவனப் பணியாளர்கள், சமூக செயல்பாட்டார்களுக்கு உதவும். அரசியலார் நீதித்துறை சேர்ந்தோர், வணிகர் வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர் ஆகியோருக்கு உதவும்

## அத்தியாயம் - 2

# 2. ஊழல் பற்றி ஓர் விளக்கம்

## 2.1 ஊழல் என்றால் என்ன? அதன் வடிவங்கள்?

ஊழல் என்றால் என்ன?

பல விளக்கங்கள் உண்டு. Transparency International என்ற ஊழலுக்கு எதிராக முற்போக்கு அமைப்பு தரும் விளக்கத்தைப் பெறுகிறேன். ' சொந்த லாபங்களுக்காக ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தல்' தனியார் அல்லது பொது அதிகாரங்களை தனிப்பட்ட விருப்பங்களுக்காக தவறாகப் பயன்படுத்தல் பல்வேறு வித ஊழல்கள் உண்டு

<u>சிறு ஊழல்கள்:</u>

வறுமை ஊழல் என்கிற இவ் ஊழல் தாழ்வான அல்லது நடுத்தர பொது அதிகாரிகளால் குடிமக்களுக்கு எதிராக நிகழ்த்தப் பெறும், அதிகார முறைகேடுகள். ஆஸ்பத்திரி, பள்ளிகள், கல்லூரிகள், காவல்துறை அலுவலகங்கள், மற்றும் தொடர்பான பொது அலுவலகங்களிலிருந்து குடிமக்கள் பயன் பெற முயற்சிக்கும்போது, பொது மக்களைச் சிறிய அளவில் சுரண்டி ஊழல் புரிவார்கள்

<u>பெரும் ஊழல்கள்:</u>

அதிக அதிகாரப் பேராசையாலும், பணத்தாசையாலும் அல்லது இருக்கும் அதிகாரம் பொருளாதார நிலையைத் தக்கவைத்துக் கொள்ள இது நிகழும். உயர் நிலை அதிகாரி ஒருவர் கொள்கையை திரிபுபடுத்துவார். அல்லது மைய அரசின் இயக்கத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்துவார். பொதுச் சொத்தை அதிகாரத்தை வைத்து அபகரிப்பார்.

<u>அரசியல் ஊழல்</u> :

பொருளாதார நலன் மட்டுமல்லாது இல்லாது, இது பெருமளவில் கொள்கையை திரிவு செய்தல், விதிமுறைகளைத் தனக்கு சாதகமாக வளைத்து அரசியல் தீர்மான சக்திகளுக்கு நலன் தருதல். இதன் மூலம் தனது பதவி, பொருளாதார சுகம், பணம் இவற்றைத் தக்க வைத்தல்

<u>கொள்முதலில் ஊழல்:</u>

வணிகப் போட்டியில் தன் பொருளை விற்க, வாங்குபவருக்கு லஞ்சம் தருதல் இப்படிச் செய்து போட்டியாளரைத் தோற்கடிக்கச் செய்தல்

<u>விரைவு ஊழல்:</u>

சில பொருள் அல்லது சேவையைப் பெற பணியாளர்களுக்கு லஞ்சம் கொடுத்து காலதாமதம் இன்றி சேவை பெறுதல்

நன்கொடை ஊழல்:

எந்தக் காரியத்திற்காக நன்கொடை பெறப்பட்டதோ, அதற்கு அல்லாது வேறு திட்டங்களுக்கோ, வேறு அமைப்புகளுக்கோ நிதியை நன்கொடையைப் பயன்படுத்தல் தொண்டு அமைப்புகளுக்கும் திருச்சபைக்கும் இது பொருந்தும் ஆனால் சில நன்கொடைகள் அல்லது கொடைகள் (Gift) எக்காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் கொடை அளிப்போருக்கும் கொடை பெறுபவருக்கும் உள்ள ஒப்பந்தம் இதில் பிரதானமானது (2. 5. 1 பார்க்க)

பாலியல் தவறு ஊழல்:

பாலியல் ரீதியான பலன் பெற, பொருளாதார நலனுக்கல்ல ஆண்கள் பொதுவாக பெண்களை, தவறு அதிகாரம், பதவி இருப்பு ஆகியவற்றை தவறாக பயன்படுத்தல் - ஆசிரியர்கள், போதகர்கள் மருத்துவர்கள் இதில் சிக்குகிறார்கள் பள்ளிகளில் கல்லூரிகளில் சீட் வாங்கித் தருபவர்கள் இப்படிப்பட்ட தவறான நலன்களைப் பெறுகிறார்கள் ( பார்க்க 4. 4. 3)

தெளிவாகப் புலப்படாத ஊழல்:

தவறான பொருள் சேர்க்க, இரண்டு தரப்பார், தனியார் துறையிலோ பொதுத்துறையிலோ, சில தவறான செயல்களில் ஈடுபட்டு ஊழல் செய்தல் இதை COLLUSION என்பார்கள்.

சர்வ அதிகாரம் படைத்த ஒருவர், தன் அமைப்பில் தொடர்புடைய வறியவர் ஒருவரைச் சுரண்டல் அவரைத் தன் சுய விருப்பத்திற்கு அவரது அதிகாரமின்மையை பயன்படுத்தல் CLIENTELISM என்பார்கள:

ஸ்விஸ் வளர்ச்சிப்பணி அமைப்பு ஊழலை 'தன் அதிகாரம் மற்றும் வல்லமையை, பொறுப்பை தன் சுய விருப்பத்தை பூர்த்தி செய்ய பயன்படுத்தல் என்கிறது. தனித்த ஒருவரின் சுய விருப்பத்திற்காக பொது நலன் பலியிடப்படுகிறது என்று பீட்டர் உல்ரிச் என்கிற நெறிக் கோட்பாட்டாளர் கூறுவார்.

இப்புத்தகம் அகில உலகில் பயன்படுத்தப்படும் சில விளக்கங்களையும் ஏற்கிறது. ஊழல் மற்றும் லஞ்சத்தின் பண்புகளான

- சிலவற்றை பெறுவதற்கு வழி
- மறைக்கப்பட்ட அல்லது வெளியாக்கப்படாத காரியம்
- தனிப்பட்ட சுயலாபத்திற்காக சட்டரீதி அல்லாத தேடுதல்
- பெறுவதற்கு தகுதியற்று இருந்தும், சட்டரீதி அன்றி சிலவற்றை சொந்தமாக்கி கொள்ளல்
- பணத் துஷ்பிரயோகம்
- பிளாக்மெயில், பொது அதிகார துஷ்பிரயோகம், தனி குடும்ப உறவினர்களுக்கு சலுகை
- நம்பிக்கை துரோகம்
- ஒழுக்கச் சிதைவு
- நீதியைச் சிதைத்து சட்டசிதைவு

எல்லாப் பாவங்களையும் ஊழல் என்று நாம் குறிப்பிடவில்லை ஊழலிலிருந்து நிர்வாககுறைபாடு, பொறுப்பின்மை இவற்றை வேறுபடுத்திபார்க்க வேண்டும். உலகச் சந்தையின் சில போக்குகள் ஊழலுக்கு வழிவகுக்கின்றன. சில கம்பெனிகளை அவை லாபத்தில் ஓடினாலும் உலகச் சந்தையில் அவை நஷ்டத்தில் இயங்குவதாகக் காட்டி நஷ்டத்தில் இயங்கும் சில கம்பெனிகளுக்கு தவறாக பணம் சேர்த்தல். சுய பண வேட்கை, குறிப்பாக பணச் சந்தையில் காணப்படும் ஊழலை ஊழல் இல்லை என்று ஒதுக்கி விடமுடியாது.

ஏமாற்றுதல், பணத்தை தவறாக பயன்படுத்தல், ஆவணங்களை போலியாக தயார் செய்தல் வணிக ரகசியங்களை சந்தையில் விற்றல் ஆகியவை ஊழலுடன் தொடர்புடையவை ஊழலுக்கு இரண்டு ஆள் தேவை லஞ்சம் கொடுப்பவர் லஞ்சம் வாங்குபவர்.

## 2.2 வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு எதிரான விளைவுகள்?

ஊழல், வளர்ச்சியின் மேல் எதிர்மறைத் தாக்குதலை பல்வேறு கோணங்களில் மட்டங்களில் கொண்டு வருகிறது உதாரணமாக

- வளர்ச்சி தவறான திசையில் நகர்தல் (வள ஆதாரங்கள் தவறாக ஒதுக்கீடு செய்தல்) வள ஆதாரங்களை சமூக ஆதார தளங்களான தொலை தொடர்பு, சுகாதாரம், எரிசக்தி, போக்குவரத்து, போன்ற மிக அவசரமான பொருளாதார சமூக அரசியல் நலன்களுக்கு பயன்படுத்தாது, அதிகாரிகள்,பொதுத்துறை ஊழியர்களும் லஞ்சத்தில் திளைக்கின்றனர்
- சமத்துவம், சமூகப்பாதுகாப்பு, உணவு உத்தரவாதம், குடிநீர் போன்ற மனித உரிமைப்பாதுகாப்புக்கு ஒதுக்கீடு ஊழலால் பாதிப்புக் குள்ளாகிறது.
- சரியானமுறையில் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணம், ஊழலால் கறைபடிந்தால், கடன் சுமை தனி நபருக்கும் அரசுக்கும் அதிகரிக்கும்.
- வரி வாங்குவோர் லஞ்சம் ஊழலில் திளைத்தால் பொது மக்களிடமிருந்து வாங்கும் வரி குறையும்; இதர தேசிய வருவாய் குறையும்.
- வரி ஏய்ப்பு ஊழலுக்கும் கருப்புப் பணத்திற்கும் வித்திடும்.
- உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தரக்குறைவாக தயார் செய்யப்படும்.
- கட்டப்படும் பாலம், சாலை ஆகியவை ஊழலினால் தரக்குறைவாக அமைக்கப்பட்டு மக்கள் உயிருக்கும், சுற்றுப்புறத்திற்கும் தீமை பயக்கும்
- சிலருக்கு எல்லாப் பொதுச் சேவையும், பலருக்கு பொதுச் சேவை கிடைப்பது மறுப்பதும் தொடரும்.
- ஊழல் ஆளைக் கொல்லும். லஞ்சம் கொடுத்து வாங்கிய ஓட்டுநர் உரிமம் ஆளைக் கொல்லும்: காலாவதியான மருந்துப் பொருட்களை சந்தையில் விற்கும்.

- சந்தைப் போட்டியை நேர்மையாக்காது.
- சிறு தொழில் முயற்சிகளை முடக்கும்.
- முதலீட்டாளர்களை ஊக்குவிக்காது.
- வர்க்க பாகுபாடுகளை அதிகரிக்கும். சமூக ஒற்றுமையை குலைக்கும்.
- வெளிப்படைத்தன்மை அற்று பிளாக் மெயில், மாபியா ஆட்களின் தொல்லை அதிகரிக்கும்.
- அரசு மீது நம்பிக்கை இழக்கும்.
- மக்கள், நிறுவனங்கள், காவல்துறை, சுங்கம் போன்றவை தமது ஒழுக்கத்தை இழந்து விடுவார்கள்: சனநாயகம் செத்துப் போகும். ஊழல் தவறான ஆட்களை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யும்.
- பாலின சமத்துவம் பலவீனமாகும்: ஆதிக்க ஆண்களின் வலிமை கூடும். நிலம் சொத்து, அதிகாரம் போன்றவை தவறாகப் பயன்படுத்தப்படும்.
- சட்டத்தின் ஆட்சி நடக்காது. நீதிமன்றங்கள் ஊழலால் செயல் இழந்து விடும்.
- சர்வாதிகார ஆட்சியை மக்கள் தேடுவார்கள்: பயங்கரவாதம் தலைதூக்கும்.
- தனியார் துறை மற்றும் பொதுத்துறை இணைந்து செய்யும் தன்மை போய்விடும்.

கடன் சுமையைப் போலவே, ஊழல் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் எதிரானது. நாட்டின் கடன் சுமைக்கும் ஊழலுக்கும் தொடர்பு உண்டு. வெளிநாடுகளில் கருப்பு பணமும் ஊழல் பணமும் முதலீடு செய்யப்படும். IMFஅல்லது World Bank நாட்டிற்கு கடன் கொடுப்பது குறித்து தயங்குவர். வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் இல்லாத நாட்டிற்கு TI பரிந்துரை செய்யாது.

தேசிய வருவாய் பாதிக்கும். வரி ஏய்ப்பு சிறுமட்டங்களிலிருந்து பெரும் மட்டம் வரை வருவாய் உயர்வை அழிக்கும். நார்வேயின் சமூகவியலாளர் டான்சானியாவின் மூன்று பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வைச் சொன்னார் சில இடங்களில் 95 சதவிகித வரிப்பணம், வரித்துறைக்கு போகாமல் அதிகாரிகளின் பாக்கெட்டில் போகிறது என்று மக்கள் வரிக் கட்டமாட்டோம் என்று போராட்டம் நடத்துகின்றனர். அர்ஜென்டினாவில் 40-50 சதவிகிதம் வரி ஏய்ப்பு உள்ளது. 1996ல் மட்டும் கம்போடியா தன் வெப்பகால காடுகளிலிருந்து வரும் வருவாயில 100 மில்லியன் டாலரை இழந்தது. இது வருட வருவாயில் 3ல் ஒரு பங்கு ஜனநாயகமாதல் மற்றும் சந்தையை தாராளமயமாக்குதல் ஊழலைக் குறைக்கும் ஒன்றும் ஊழலுக்கு எதிரான சிறப்பான நடவடிக்கைகளே அவை என்றும் கருதப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அவ்வாறு எதுவும் நிகழாது என்பதே

உண்மை. பல நாடுகளில் ஜனநாயகமாதலும்,சந்தையை தாராளமயமாக்குவதும் ஊழலை அதிகப்படுத்தியே இருக்கின்றன. 1989ல் கிழக்கு ஐரோப்பாவில் இதையே பார்க்கிறோம். டயடர் பிரிட்ச், முன்னாள் ஐரோப்பிய யூனியன் மற்றும் TIன் தோற்றுவாய் உறுப்பினர் கூறுவதெல்லாம், ' ஒரு அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்புக்கு பயனிக்கும் போது குறிப்பாக இன்னொரு அமைப்பு முழுமையாக மலராது போது சட்டத்தில் உள்ள பாதுகாப்பின்மை ஊழலை மேலும் வளர்க்கும் என்கிறார்.

வரி வருவாய் செலுத்தத் தவறுவதல், மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவையும், அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்படும் என பல நிலைகளில் ஊழல் நிலவுகிறது தேர்தல் செலவுகள் உயருவதும், பொறுப்பு ஏற்றவடனே ஊழலில் ஈடுபடக் காரணமாகும் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது, உணவு கொடுப்பது முதல் மிகவும் உயர்ந்த ஊழல்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைபெறும் பலம் வாய்ந்த தேர்தல்களில் காணப்படுகிறது. 2010 பிரான்சு ஊழல், குறிப்பாக சர்கோசிக்கு கொடுத்த பணம் உட்பட, ஜனநாயகத்தில் ஊழல் புரையோடிப் போயுள்ளது பற்றியும், தேர்தல் பிரசாரங்களில் நெறிமுறைகள் வகுக்க வேண்டிய அவசியத்தையும் கூறுகின்றன.

வறுமையில் உள்ள தெற்கு உலக நாடுகளானாலும் அகில உலக நிதி மற்றும் பொருளாதார அமைப்பைக் கையில் வைத்துள்ள வடக்கு உலக நாடுகளானாலும் ஊழல் பிரச்சினையாகியே உள்ளது. இந்த ஊழல் ஒழிப்பு மிகப் பெரிய வேலை என்கிறார் டான்சானியன் பொருளாதார நிபுணர் ரோகேட் மஷானா என்பவர். சில பண்க்கார நாடுகளில் அரசுகள் கம்பெனிகளுக்கு வரிச்சலுகைகள் அளித்துள்ளன. தொழிற்சாலை கணக்காளர்கள், வழிக்கறிஞர்கள், வங்கியாளர்கள் வசதியுள்ள கம்பெனிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து தப்பிக்க வைக்கச் செய்யும் கூட்டுத் தொழிலை ஊக்குவிக்கின்றன இப்படி வரி மறைக்கப்பட்ட வருவாய் ஏழை நாடுகளுக்கு உதவிடுவதின்றும் தவிர்க்கப்பட்டு, பெரும் செல்வந்த நாடுகளில் வைப்புத் தொகையாக முதலீடு செயல்படுகின்றன.

இந்த ஊழல் பணத்திற்கு தண்டனையில்லை. தவிர, ஊழல் அரசுகளுக்கு உதவி செய்து, குறிப்பாக தேவையற்ற செலவுகளுக்கு உதவி செய்து, ஏழை நாடுகளின் கடன்சுமை ஏறிப் போகிறது. கருப்பு ஊழல் உலகத்தில் பங்காளர்களைக் கொண்டுள்ளது. யுனெட்டிங் சர்ச் ஆப் ஆஸ்திரேலியா இங்ஙகனம் ஏழு அம்சங்களைக் குறிக்கிறது உலகப் பெரும் கம்பெனிகள் லஞ்சம் தருகின்றன். வரி ஏய்க்கின்றன மேலை நாட்டு வங்கிகளின் ஊழல் பணத்தில் பயன் பெறுகின்றன, கடன் தருதலில் ஊழல் செய்கின்றன, பொருட்கள் மீது ஊழல் செய்கின்றன, வங்கிக் கடன் வழங்குவதில் ஊழல் செய்கின்றன என்கிறது.

வளர்ச்சிக்கான ஒப்பந்தம் நிறைவேற்றுவதில் ஊழல்:

பல நிலைகளில் ஊழல் நிலவுகிறது. OECD நாடுகள் இந்த ஊழல் குறைப்பில் வெகுவாக ஈடுபட்டுள்ளன. சில ஊழல் நாடுகளுக்கு உதவி செய்வது எதிர்மறையல்ல ஏனெனில் இந்த உதவி அந்த நாடுகளின் ஆளுமை, வெளிப்படைத்தன்மை மற்றும் வரி அமைப்பு முறையை சரிப்படுத்துகிறது.

## மனித நேய உதவுவதில் ஊழல் நிலவுகின்றன:

வெள்ளம், பூகம்பம், சுனாமி போன்ற பேரழிவுகளில் செய்யப்படும் அவசர கால உதவி மற்றும் மனித நேயங்களில் ஊழல் மற்றும் வஞ்சிப்பு ஆகியவை பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அந்த செயல்பாடுகள் விரைவாக நடைபெறுவதால் கட்டமைப்பு சீரழிவதுடன், நிறுவனங்கள் ஒழுங்காக நடைபெறுவதும் பாதிக்கிறது. விரைவாக பயணச் சீட்டு, வாகன அனுமதிகள் பெறவேண்டியிருக்கிறது. கால தாமதமின்றி நிவாரானப் பொருட்கள் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே ஊழல் மற்றும் பிளாக்மெயிலுக்கு பணியாளர்கள் உட்படுத்தப்படுகின்றனர். ECHO என்ற ஐரோப்பிய யூனியன் நிவாரண அமைப்பு, அல்லது GTZ என்ற ஜெர்மன் அமைப்பு, 1990களில், அவை பெரும் அமைப்புகள், ஊழல் புரிந்தோர் தவறாக நிவாரணப் பொருட்களைச் சேகரித்தால் தண்டனை பெற்றனர். தென் இந்திய சுனாமியில் ஈடுபட்ட பல நிறுவனங்களின் கேஸ் ஸ்டடி: முஸ்லீம் அமைப்பு மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்கள் வழிமுறைகள் உருவாக்க வழி அமைத்தன. 2006 மற்றும் 2008ல் TI அறிக்கை தந்தது. 2010ல் கைப்புத்தகம் ஒன்றை வெளியிட்டது. ஆக்ஷன் எய்ட், கேர், கத்தோலிக்க நிவாரண அமைப்பு, இஸ்லாமிக் ரிலீப் வெர்டுவைட், LWF, Save the Children USA, வேர்ல்டு விஷன் ஆகியவை அடங்கிய நிவாரண அமைப்புகள் IT யுடனும், HPG என்று அழைக்கப்படும் மனித உதவி அமைப்பான Overseas Development Instituteடும், FIC என்ற Feinstein International Centre ஆன Tufts பல்கலைக் கழகமும் இணைந்து இந்தபுத்தகத்திற்கான ஆய்வை தந்தன. கடைசி ஆய்வு ஆவனம்: 2008ல் வந்தது. மனித நேய உதவிகளில் ஊழலை ஒழிப்பது. ஆய்வின் வழியே வந்த கைப்புத்தகம் அது.

## 2. 3 யார் ஊழலில் பயன் பெறுகின்றனர்? யார் அதன் விளைவுகளால் பாதிக்கப்படுகின்றனர்?

ஊழலுக்கு யார் வெற்றியாளர் என்றோ தோல்வியாளர் யார் என்றோ தெரியாது. சின்ன ஊழலைத் தந்தவர்களாகவோ, அல்லது சிறு ஊழலைப் பெற்றவர்களாக அவர்கள் காணப்பட்டாலும், அவர்களே தோல்வியுறுகின்றனர். ஊழலின் பெரும் விளைவுகள் பொருளாதார ரீதியாய் தாக்குகின்றன. தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள மேல்மட்ட மக்களின் ஊழலை எதிர் கொள்கின்றனர்.

சுகாதார வசதிக் குறைவுகள், சுற்றுச் சூழல் பிரச்சினைகள், ஊழல் நீதிபதிகள், அரசினால் வளர்ச்சிக்கென ஒதுக்கப்படும் வரியின் ஒரு தொகை அவர்களது கல்விக்கெனவும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்படும் நிதி அது. பாலியல் பரிமான ரீதியாகவும் அது உள்ளது. இருக்கும் கட்டமைப்யைத் தக்க வைக்கவே அது பயன்படுகிறது (குறிப்பாக நிலம், சொத்து, அலுவலகப் பயன்கள் மீது பயன்பாடு), எனவே பெண்கள் ஊழலால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஊழல் எதிர்ப்பில் பெண்ள் அதிகமாக வேலை செய்ய வேண்டும். பல சமயங்களில், ஆனால் பெண்கள் தங்கள் செயல்பாடுகளினால் ஆண்களின் ஊழலை நியாயப்படுத்துகின்றனர். எதிர் கேள்வி கேட்பதில்லை.

ஊழலில் வெற்றி பெறுகிறவர்கள் சமூக மல்ல. சில தனி நபர்கள் பணக்காரர்கள், தரகு வேலை பார்ப்பவர், அலுவலர்கள் ஆகியோர் எல்லா மட்டங்களிலும் ஊழலுக்கு துணை புரிகின்றனர். ஆனால் வெளிப்படைத்தன்மையற்றதும் ஊழலுக்கு துணைபோகும் அமைப்பு முறையில் வாழ்கின்றனர். தனி நபர்கள் மட்டுமன்றி அவர்களது வலைப்பின்னல், தொடர்பாளர் யாவரும் இதில் சிக்கியுள்ளனர்.

### 2. 4 ஊழல் பற்றிய கண்ணோட்டம், அதன் வடிவெல்லை:

மனித மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஊழல் தடையாயுள்ளது உலக மெங்கும் வளரும் புற்று நோய். வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு என்று எல்லா கண்டங்களையும் தாக்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் கூறுகின்றன. ஊழலின் காரணமாக 1999 மார்ச் 15ல் அகில உலக ஒலிம்பிக் கமிட்டி ஐரோப்பிய யுனியன் கமிஷனின் ஒரு பகுதி ராஜினாமா செய்தது. ஊழலின் காரணமாக அமைச்சர்கள் ராஜினமா செய்தனர். ஊழலினால் உலக வங்கி கடன் பாதிக்கப்பட்டன. சிமென் கம்பெனி 100 மில்லியன் டாலர் அபராதமாகக் கட்டியது (ஸ்விட்சர்லந்து தவறான பணப் பரிவர்தனைச் சட்டத்தைக் கொண்டிருப்பினும்)ஊழல் பணத்தை ஸ்விஸ் வங்கிகள் கையாளுகின்றனர் என்ற சந்தேகம் வந்துள்ளது. தேசிய ஆய்வுத் திட்டம் இதைக் குறித்து இயற்றப்பட்டுள்ளது மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஊழல் வெளிப்படையாகவே நடக்கிறது. BRIC நாடுகளில் (பிரேசில்,ரஸ்ஸியா, இந்தியா, சீனா)ஊழல் தாண்டவமாடுகிறது, வெளி வந்து கொண்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் ஊழல் விரிவடைந்துள்ளது. 1980 வரை ஒட்டுமொத்த வணிகத்தில் ஊழலின் அளவு 5-10 சதவிகிதமாய் இருந்தது. 1990களில் இது 20 சதவிகிதமாக வளர்ந்தது. நாடுகளுக்கிடையே போட்டி, ஊழல் தொகையின் அளவை அதிகப்படுத்தியதால், ஊழலை எதிர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு அவை வந்துவிட்டன. தெற்கு உலகின் கடன் சுமைக்கு ஈடுகட்டும்

அளவில் ஊழல் வளர்ந்துவிட்டன. 1999 அக்டோபர் மாதம் அன்னியான டெசிரட்டோவின் நடுவர் மன்ற அமைப்பு பிலிப்பைன் அரசில் ஊழல் 48 மில்லியன் டாலர் அளவுக்கு கடந்த 20 ஆண்டுகளில் வளர்ந்து விட்டதாகவும், இது கடன் சுமையான 41 பில்லியன் டாலர் காட்டிலும் அதிகம் என்கிறது.

அரசுக்கும் தனியார் கம்பெனிகளுக்கும் இடையே, மிக அதிக முதலீடு எடுக்கும் தவிர நீண்ட கால உரிமை கோரும் வளம் தயாரிக்கும் துறைகள் (எண்ணெய், எரிவாயு, சுரங்கம், மரம்) நிறைய லஞ்சம் தருகின்றன. அங்கோல, ருஷியா, காங்கோ ஆகியவை சில உதாரணங்கள் EITI என்று அழைக்கப்படும் வெளிப்படை முயற்சி நல்ல உதாரணம். சமூகம், தனியார் துறை, அரசுகள் ஊழலை ஒழிக்க எடுக்கும் முயற்சிகளுக்கும், தரமான போட்டிகள் நடைபெற தரங்களைத் தந்துள்ளன.

## 2.4.1 அகில உலக ஊழல் குறியீடுகள்: CPI, BPI, GCB

1995 லிருந்தும் TI ஒவ்வொரு வருடமும் ஊழல் குறியீடுகள் வெளியிடுகிறது. வணிக வட்டங்கள், மக்கள், உலக சமூகம் எப்படி பார்க்கின்றன என்று குறிப்பிடுகின்றது ஊழல் பார்வை குறியீடு (CPI) அதன் வழிமுறைகளை மறுபரீசீலனைக்கு அவ்வப்போது உட்படுத்துகின்றன. CPI சொன்னதுமே நாடுகளில் அரசியல் எதிர்ப்பு, மற்றும் ஊழல் நீக்க எதிர்க்குரல் வெளிப்படுத்துகின்றது. CPI ஓர் நல்ல கருவி, நாடுகள் மற்றும் முதலீட்டாளர்கள் சரியாக அதை உணர வேண்டும். CPIயின் குறியீடு குறைவாக இருப்பின் அது ஊழலில் நிறைந்துள்ளது.

(பார்க்க: WWW.media.transparency.org/imaps/cpi2009)

| ராங்க் 2009 | நாடு | குறியீடு |
|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 9.4 |
| 2 | டென்மார்க் | 9.3 |
| 3 | ஆஸ்ட்ரேலியா | 8.7 |
| 14 | ஜெர்மனி, அயர்லாந்து | 8 |
| 25 | சிலி, உருகுவே | 6.7 |
| 84 | இந்தியா, பனாமா, தாய்லாந்து | 3.4 |
| 97 | லைபீரியா | 3.1 |
| 109 | நைஜா | 2.9 |
| 111 | மாலி, இந்தோனேசியா | 2.8 |
| 120 | ஆர்மீனழயா | 2.7 |

| ராங்க் 2009 | நாடு | குறியீடு |
|---|---|---|
| 126 | சிரியா | 2.6 |
| 130 | லிபியா | 2.5 |
| 146 | கென்யா | 2.2 |
| 146 | ருஷியா | 2.2 |
| 146 | சிம்பாப்வே | 2.2 |
| 154 | பராகுவே | 2.1 |
| 158 | கம்போடியா | 2 |
| 162 | வெனிசூலா | 1.9 |
| 168 | இரான் | 1.8 |
| 179 | ஆப்கானிஸ்தான் | 1.3 |
| 180 | சொமலியா | 1.1 |

1999 க்குப்பின் TI தனது இரண்டாவது புத்தகத்தை உருவாக்கியது. ஊழல் தருவோர் பார்வை பட்டியல் (BPI) இது ஊழல் நிலவுகிற நிலையைக் காட்டிலும் லஞ்சம் தருவோரை பார்த்தது. தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள அகில உலக பன்னாட்டு நிறுவனங்களை பார்த்தது பிரமாண்ட கார்பரேஷன்கள், தணிக்கை நிறுவனங்கள், பன்னாட்டு வணிக கூட்டுறவு அமைப்புகள்,வணிக வங்கிகள் மற்றும் பொருளாதார விஷயங்களில் வழக்காடுவோரிடம் விசாரித்தது. இது தவிர GCB எனும் உலக ஊழல் பார்வை அறிக்கை மக்கள் இதை எப்படி பார்க்கிறார்கள் என்றது. 2003ல் இது அறிக்கையாக இருக்கிறது.

(www.transparency.org/policy-research/surveys-indices/gcb)

## 2.4.2 திருச்சபைக்குள் நிலவும் ஊழல் மற்றும் மற்ற மதங்களில் நிலவும் ஊழல் பற்றிய பார்வை

திருச்சபைக்குள் நிலவும் ஊழல் பற்றிய விரிவான ஆய்வு இல்லை. ஊழல் பற்றிய பிரசுரங்கள் வேதாகம ஆய்வாகவோ, நெறி முறை வியாக்கியனங்களாகவோ, பொது திருச்சபை அறிக்கைகளாகவோ, நெறிமுறை வடிவங்களாகவோ உள்ளன. அதன் வடிவ விளக்கங்கள் இல்லை. தீர்வுதான் உள்ளன மூன்றாவது அத்தியாயம் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த அமைப்புகளின் அனுபவாங்களைத் தருகின்றன.

தியோடர் அக்ரென் என்னும் காம்பர்க் பல்கலைக்கழக போராசிரியர் ஓர் ஆய்வை செய்தார். 2006ல் 41 பணியாளர்களிடம், அனைவரும் ஜெர்மன் மிஷன் தொடர்புள்ளவர்கள், ஆய்வு செய்தனர். 61 சதவிகிதம் திட்ட பணம் மற்றும் நன்கொடையை தவறாக உபபோகப்படுத்தல் என்றனர். 95% பேர் ஊழல் பிரதானமானது என்றனர். 78% பேர் தடுக்கும் கருவிகள் இல்லை என்றனர். 49% பேர் வறுமையே ஊழலை ஊக்குவிக்கின்றது என்றனர். 29% பேர் சட்ட வடிவம் தெரியவில்லை என்றனர். 20% பேர் தனி நபர் பேராசை மற்றும் பண்பு மாற்றம் என்றனர். 61% பேர் ஊழல் நன்கொடை தருவோரின் நம்பிக்கையை சிதைத்துவிட்டது என்றனர். 98% பேர் அனைத்து திருச்சபை பங்காளர் இடையே ஊழலை விமர்சிக்க வேண்டும் என்றனர். 73% பேர் ஊழலை எதிர்கொள்ளும் நடவடிக்கை தொடங்கி விட்டது என்றனர். ஊழல் குறைந்தால் நன்கொடை வளரும் என்று 66% பேர் கூறினர். கல்வியில் நன்னெறி புகுத்தப்படவேண்டும் என்று 24% பேர் கூறினர். நம்பிக்கையை நாம் நன்கொடையாளடமிருந்து இழந்துவிடுவோம் என்றனர் 78%பேர் மற்ற மத அமைப்புகளில் உள்ள ஊழல் பிரச்சினைகளை விவாதிப்பது புத்தகத்தின் நோக்கமன்று. ஒப்பிடும் அளவில் ஆய்வுகள் இல்லை. TI மத அமைப்புகளை ஆய்வுக்குள் கொண்டு வரவில்லை. சிலவற்றைக் கூறலாம்.

### இஸ்லாம்:

2009TI ஊழல் அளவின்படி, 40% பேர் மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் கடந்த 12 மாதங்களாக ஊழல் லஞ்சம் கொடுத்தனர் என்கின்றனர் அதிக ஊழல் இங்குதான். 85 முதல் 100 சதவிகித மக்கள் இங்கு வாழ்வதால் ஊழல் அங்கேயே அதிகம் எனினும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. 2009ல் நடந்த துபாய் நாட்டில் உள்ள பிரச்சினையில், ஊழல் ஒழிப்பு பிரதான நோக்கமானது.

### இந்துமதம்:

இந்து மத நிறுவனங்களின் அரசியல் வணிக ஈடுபாடு குறித்த ஆய்வு, இந்து மத வலது நிறுவனங்களின் ஈடுபாட்டை குறிப்பாக தேர்தல்கள், நீதி மன்றங்களில் தலையீடு, மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பரிந்துரையில் உள்ளது. கடவுள் மனிதர்களின் புதிய அவதாரங்களும், புதிய புதிய கடவுள் தோன்றலும், புதிய புதிய பூசாரிகள் உருவாக வழிவகை செய்கின்றன. மத அமைப்புகள் தனி கல்வி அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் கம்பெனிகளை நடத்தலாம். இந்து மத அமைப்புகளுக்கும் பூசாரிகளுக்கும் கடவுள் மனிதருக்கும் நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. அரசின் தனியார் மயம், இந்து மதத்தை வளர்க்கிறது.

### புத்தமதம்:

புத்தமதத்தில் ஊழல் குறைவாக உள்ளது என்று பொதுப் புத்தி சொன்னாலும் உண்மை அப்படியில்லை. ஊழல் பார்வை குறியீட்டில் தாய்லாந்து,பூடான், லாவோஸ் மற்றும் சீன நாடுகள் நடு அளவைத் தொட்டுள்ளன, புத்த மடங்களில் அதன் இயக்கங்களில் ஊழல் உள்ளன. தவிர அரசியல் போராட்டங்களில் அவை உண்டு. 2005ல் திபெத் புத்த இயக்கம் ஊழலில் மாட்டியது. சாக்கிய அமைப்பு தெற்கு கொரியாவில் மாட்டியது.

மதங்களுக்கிடையே போட்டி, மற்றும் மதப் பூசல்களினால் ஊழல் வளர்கிறது. ஒரு மதத்தைச் சேர்ந்தவர் அரசியல் லாபம் பெற வேறொரு மத ஆட்களை தாக்குவதும் தொடர்கிறது.

## 2.5 கலாச்சாரம், திருச்சபை இயல், பாவ அறிக்கைகள்

ஊழல் மனித சமூகம் போலவே புராதானமானது. கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பேராசைக்காக பயன்படுத்தல் நடக்கிறது. ஊழல் பற்றி எல்லா மதங்களிலும் குறிப்புக்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளில் கூறப்பட்டுள்ளது. பல கலாச்சாரங்களில் கடுமையான குற்றமாகவும் பல சட்ட வடிவங்களில் குற்றமாகவும் கூறப்பட்டுள்ளது. ஊழலின் ஊற்றுக் கண் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்றது. அது பற்றி இப்போது பேச இயலாது மேலும் நமது படிப்புக்கு கீழ்க்காணும் கற்பிதங்களைப் பற்றிய கேள்விகள் உள்ளன.

எந்தக் கலாச்சாரம் ஊழலை வளர்க்கிறது? ஒரு கலாச்சாரத்தில்

நன்கொடையாகப் பார்ப்பது இன்னோரு கலாச்சாரத்தில் தவறாக பார்க்கப்படுகிறதா?

'என்' 'உன்' சொத்து 'தனியார் சொத்து' 'பொதுச் சொத்து' என்பது குறித்து கலாச்சாரம் கூறுகிறது என்ன?

ஊழலை சர்ச், திருச்சபை உறவுகள், சட்ட வடிவங்கள், நிதி காரியங்கள் எப்படி உதவுகின்றது? (பார்க்க 2:5:3)

இறையியலின் உதவி எங்குள்ளது? திருச்சபை மாதிரிகள் தலைமை வடிவங்கள் எப்படி ஊழலுக்கு உதவுகின்றன? மாறுபட்ட திருச்சபை பிரிவுகள்? (2.5.4)

திருச்சபை வரலாறு,வளர்ச்சி, மிஷன் பணிகள் இவற்றுடன் பங்கேற்பு இவை ஊழலுக்கு என்ன கூறுகின்றன? (2.5.5)

டேனியல் டெரஸ்மென் கீழ்க்காணும் ஏழு கற்பிதங்களைத் தந்து (1980,1990களில்) உள்ளார்.

H1. சட்ட வடிவங்களின் திறன் பிரிட்டன் மற்றும் அதன் காலணிய நாடுகளில் அதிகம் எனவே ஊழல் குறைவு.

H2. சட்ட வடிவங்களின் திறன் பிரிட்டன் மற்றும் அதன் காலணிய நாடுகளில் அதிகம் எனவே ஊழல் குறைவு.

H3. புராட்டஸ்டண்டு பாரம்பரீயம் கொண்ட தேசங்களில் ஊழல் குறைவு.

H4. சீரிய பொதுச் சமூகம், சுதந்திரமான ஊடகம், கொண்ட ஜனநாயக நாடுகளில் ஊழல் குறைவு.

H5. பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளில், படிப்பறிவு உள்ள நாடுகளில் ' பொது மற்றும் தனி' க்கு பொருள் தெளிவாக தெரிவதால் ஊழல் குறைவு.

H6. பொதுப்பணியில் அதிகம் சம்பளம் கிடைக்கும் நாடுகளில் ஊழல் குறைவு.

H7. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நாடுகளில் ஊழல் அதிகம்.

## 2.5.1 கலாச்சாரம்: நன்கொடை, பரிசு, அல்லது லஞசம்?

எந்தக் கலாச்சாரப் பண்பு ஊழலை அதிகரிக்கிறது அல்லது எதிர்க்கிறது? சில கலாச்சாரங்கள் பரிசுகளையும் லஞ்சங்களையும் பிரிக்கின்றன. ஊழலை ஆதரிக்கிறவர்கள், லஞ்சத்தின் மறைமுகத் தன்மையை வெளிப்படையாக இல்லா தன்மையை அதன் துஷ்பிரயோகத்தை ஆதரிக்கின்றனர். மறைந்திருக்கும் ஊழல் மறைவான இடத்தில் உள்ளது. உதாரணம் தனக்கு வேண்டியவர்களுக்கு சிபாரிசு,அங்கே லஞ்சம் உள்ளது.

### கலாச்சாரத்திற்கும் ஊழலுக்கும் உள்ள தொடர்பு:

இது விவாதத்துக்குரியது. பல கலாச்சாரங்கள் பரிசுக்கும் லஞ்சத்திற்கும் வித்தியாசம் கூறுகின்றன. பல உலக ஆய்வுகள் இதைக் குறித்து கூறுகின்றன. தேசிய உண்மைTI சர்வேக்கள் பல காரியங்களைக் கூறுகின்றன. ஊழலுக்கு வக்காலத்து வாங்காவிடினும், பல கலாச்சாரங்களில் ஊழலுக்கு எதிரான நிலை இருப்பினும் தெற்கோ வடக்கோ எங்கேயினும், சூழல் பற்றியும் நாம் பேசவேண்டும். சூழலில் பொது எது தனியார் எது என்று பேசப்படுகிறது. அது மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியில் மிகப் பின்தாங்கியுள்ள நாடுகளில் ஊழல் முற்றிலும் ஒழிக்கப்பட பேசுவதில்லை.

பரிசுக்கு லஞ்சத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. பரிசுகள் வெளிப்படையாக தரப்படுகின்றன. பதிலுக்கு எதுவம் எதிர் பார்க்கப்படுவதில்லை. பெறுபவரை அங்கீகரிக்கின்றன. லஞ்சம் ரகசியமாக தரப்படுகின்றது. லஞ்சம் அதிகமாக உயர் மதிப்புடையதாக இருக்கிறது. கலாச்சார வரலாற்றில் இது குறித்து பேசப்பட்டுள்ளதா? எழுத்தாளர் புராதான ஏதென்ஸ் மற்றும் மத்திய கால இங்கிலாந்து மற்றும் நவீன சமுதாயத்தை ஆய்கிறார். பரிசு வழங்கல் எல்லா நாடுகளிலும் நடந்துள்ளது. இந்த பரிசு வழங்கல் சொத்து மற்றும் அதிகாரம் தொடர்புடையது லஞ்சத்தின் தன்மையும் இதோடு தொடர்புடையது. ஆப்பிரிக்க கலாச்சாரத்தில் பரிசு என்பது அங்கீகரிப்பு மற்றும் விருந்தோம்பலின் அடையாளம். இது கேட்கப்படுவதில்லை இந்த நன்கொடையில் மனம் உள்ளது. பணம் பிரதானப்படுத்தப்படுவதில்லை. வெளிப்படையாக நடைபெறுகிறது. ரகசியத்தில் அல்ல பரிசு அதீதமாய் இருந்தால் மிகச் சங்கடம் தோன்றும். எனவே ஊழல் மற்றும் லஞ்சம், என்பவை பரிசு மற்றும் டிப்ஸ் அல்ல. ஒரு காரியம் ஆக கொடுப்பதில்லை பரிசு. மில்லியன் கணக்கில் லஞ்சம் இப்போது பேசப்படுகிறது. உதாரணமாக கட்டுமானங்களில்.

மே 2003ல் நடந்த ஊழல் எதிர்ப்பு அகில உலக மாநாட்டில் ஊழலை எந்த கலாச்சாரமும் வலியுறுத்தவில்லை என்று பேசப்பட்டது. தவிர மத நம்பிக்கைகளையும் பாரம்பரீயங்களையும் ஊழல் தகர்க்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

நன்கொடை ஊழல் என்பது நன்கொடையை கேவலப்படுத்துகிறது. ஒப்பந்தத்தில் இல்லாத ஒன்றாக தனிப்பட்ட நலனுக்கு அது வந்து சேருகிறது. பொதுச் சேவை அல்லது தனியார் வணிக நலனுக்கு, லாபம் இல்லாமல் அது வருவதில்லை நன்கொடையாளர் - பெறுபவர் நலனை ஊக்குவிப்பதில்லை நன்கொடையும் பரிசும் வேறு வேறு நன்கொடை, குறிப்பாக திருச்சபை தொடர்பாக வருபவை குறித்த பணம் குறித்த காரியத்திற்கு வருகின்றன. பரிசு ஒருவரை அங்கீகரிக்கும் ஒன்று பெறுபவர் அதை எப்படிபயன்படுத்தலாம் என்பதை பெறுபவரே தீர்மானிப்பார்.

## 2.5.2 சொத்து:பொது அல்லது தனியார், குடும்ப வசதிகள்?

சொத்தைப்பற்றிய கலாச்சார பங்கு என்ன கூறுகிறது? கற்பிதம்: பொதுச் சொத்து என்பது சில சமயங்களில் தனிச் சொத்து விளிம்புகளில் தலையிடுவதால், பொதுச் சொத்து தனிநபர் விருப்பத்தில், அதிகார துஷ்பிரயோகத்தில் சிரமப்படுகின்றது. ஊழல் ஒழிய வேண்டுமானால் குடும்பம் மீது உள்ள நிதிச் சுமை குறைக்கப்பட வேண்டும்.

என்னது உன்னது என்ற வேற்றுமை, பொதுச்சொத்து தனிச் சொத்து குறித்து பல கலாச்சாரங்களில் பல்வேறு முறைகள் உள்ளன. சில கலாச்சாரங்களில் நிலம் பொதுச் சொத்து ஆனால் மேற்கத்திய பொருளாதார அமைப்பில் நிலம் தனியாருக்கு சொந்தம் பொது – தனியார்- தனிநபர்- சமூகம் பற்றிய வேறுபாடுகள் தற்போது வலியுறுத்தப்படுகின்றன. ஆனால் பல மனித உரிமைப் பிரகடனத்தின் பிரகாரம் தனியார் சொத்து தனி மனிதர் உரிமை வலியுறுத்தப்படுகின்றது. சமூகம் சார்ந்த கலாச்சாரங்களிலில் பொதுச் சொத்து – தனிச் சொத்து இவைகளில் மிகச் குறுகிய வேறுபாடுகளே உள்ளன. எனினும் பொதுச் சொத்தை அபகரிப்பு என்பது அதிகார துஷ்பிரயோகமே பொதுச் சொத்து சமூகத்திற்கு உரியது. ஆதன் வளங்களை தலைவர் சீரிய முறையில் அனைவருக்கும் பங்கு கொள்ள உதவ வேண்டும். தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர் தண்டிக்கப்பட்டார்.

எந்தக் குறித்த காரியத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டதோ, அதற்கு அல்லாது வேறு காரியத்திற்கு செலவு செய்யப்பட்டால், தனியார் பாக்கெட்டிற்கு செல்லா விடினும், ஒரு சர்ச் அல்லது குடும்பத்திற்கு செல்லாவிடினும், அது தவறாகவே பார்க்கப்பட்டது. பொது தனி என்ற பார்வையில் இது வன்முறையே. பொது நிதி தனியாருக்கு பயன்படுதல் வன்முறையே. தனிநபருக்கு கொடுக்காவிடினும், ஒரு குழுவிற்கு கொடுக்கப்பட்டாலும் வன்முறையே.

தங்களது குடும்ப சார்பில் அல்லது இனம் சார்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சம் பெறுகின்றனர். சில சமூகங்கள், சம்பளம் தனியார்

உடமையாக அல்லது குடும்ப உடமையாகவே பார்க்கப்படுகிறது. நல்ல கல்வியும் வேலை வாய்ப்பும் உள்ளவரை குடும்பம், சுற்றம் யாவரும் பெரும் உதவியை எதிர்பார்க்கின்றனர். இதனால் பேராயர்களும் இந்த அழுத்ததிற்கு அடிபணிந்து போகின்றனர். பெரும் குடும்ப சுமையாலே நான் ஊழலுக்கு ஆளானேன் என்று காமரூன் நெறி நடத்தை பேராசிரியர் குறிப்பிட்டார்.

ஆனால் ஒரு பாஸ்டர் நல்ல சம்பளம் வாங்குகிறவர் பெரும் குடும்ப சுமையினால் ஊழலுக்கு ஆளானேன் என்று கூற இயலாது. இன்சூரன்ஸ், சமூகப்பாதுகாப்பு அமைப்புகள் இதனுடன் தொடர்புடையது. குடும்ப உறுப்பினர்களிலிருந்து வரும் சுமைகளைக் குறைக்க விபத்து மற்றும் சுகாதார காப்பீட்டு வசதிகள் இப்படிப்பட்ட சூழலில் உதவும்.

## 2. 5. 3 திருச்சபை சமூக இயலும், திருச்சபை நிதியும்:

ஊழலுக்கு திருச்சபை அளவு, திருச்சபை அரசு உறவு, சட்ட வடிவங்கள், வரவு ஊற்றுகள் எப்படி உதவுகின்றன? கற்பிதம்: திருச்சபை சைஸ் ஊழலுக்கு பொருந்தாது. நல்ல திருச்சபை அரசு உறவு ஊழலைக் குறைக்கின்றன. நன்கொடை மட்டுமே பெறும் சபைகளைக் காட்டிலும் அரசு வரி வருவாய் வெறும் சபைகள் குறைவான ஊழலை உடையாக இருக்கின்றன.

சமூக அமைப்பு மற்றும் சட்ட வடிவை உடைய ஒன்றை வைத்தே சர்ச்சின் தனிமையை ஊகிக்கலாம்.

a) பெரும்பான்மை திருச்சபை என்பது உறுப்பினர்களால் அதிக நபர்கள் உள்ளவர்கள் உடையது. அரசியல் ஆளுமை இருக்கும்.
b) சிறு திருச்சபை உறுப்பினர் குறைவாயும் குறைவான அரசியல் ஆளுமை இருக்கும்.
c) அரசு திருச்சபைகள் அரசுடன் பொது சட்ட அடிப்படையில் இணைந்து அரசின் உதவி பெறும் சபை இது.
d) சுதந்திர சபைகள் எந்த வரி வருவாய் இல்லாது, நன்கொடை மூலம் நடத்தப் பெறும்.
e) சில சபைகள் அரசுத் திருச்சபை மற்றும் சுதந்திர சபை அடங்கியது.
f) இடம் பெயர்ந்த திருச்சபை இடம் பெயர்ந்த மக்களால் மொழி இன அடிப்படையில் உள்ளன.
g) குடும்ப திருச்சபைகள், குறிப்பாக பெந்தகொஸ்தே அமைப்பினர், தனியாரால் நடத்தப் பெறுகின்றன. குடும்ப அமைப்பாக இயக்குகின்றன.
h) மிஷன் சர்ச்சுகள் மிஷன் அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. பல சமயம் பெரும்பான்மை திருச்சபைகளுடன் இணைகின்றன.
I) சுதந்திர திருச்சபைகள் வெளிநாட்டு மிஷன் அமைப்புகளால உதவி பெறாது, உள்ளூர் மக்களால் நடத்தப்பெறும்.

இந்தப் பல தரப்பட்ட திருச்சபைகள், பல வகை நிதி வெளிப்பாட்டை கொண்டுள்ளன. அரசுடன் தொடர்புடைய திருச்சபைகள் மிகுந்த ஊழல் அற்றதாக உள்ளன. அரசு ஊழலாயிருப்பினும் பொதுச் சபையாகவே அவை இயங்குகின்றன. சுதந்திர சபைகள், இடம் பெயர்ந்த சபைகள், மற்றும் குடும்ப சபைகளில் நிதி பற்றிய வெளிப்படை இல்லை.

ஊழலில் மாட்டிக் கொண்ட திருச்சபைகள் CPI கூறப்பட்டபடி உயர் ஊழலில் தவித்தாலும், அவைகளுடைய ஊழல் தரத்தில் வேறுபட்டே உள்ளன பல சபைகள் வருமானம், சொத்து குறைவாயுள்ள சபைகளில் ஊழல் அதிகம் இருக்கும் என்று பலர் வாதிடலாம். இந்தியா பிரேசிலில் உள்ள பல சபைகள் ஆப்பிரிக்க நாட்டின் சபைகளைக் காட்டிலும் ஊழலின் திளைத்துள்ளன.

ஊழல் பெரும்பான்மை திருச்சபை பொது நிதியிருந்து அல்ல பாரா திருச்சபை மற்றும் அதன் திட்ட நிதியிலிருந்தே ஊழல் இருக்கிறது. திருச்சபை அமைப்புகள் பள்ளிகள் மற்றும் நிவாரணங்களில் ஊழல் இருக்கிறது.






குறைந்த சம்பளம் வாங்கும் பேதகர்களினால் ஊழல் உண்டாகிறதா? சம்பளத்திற்கும் லஞ்சத்திற்கும் தொடர்பில்லை. பல சமூகங்களில் ஆசிரியர்கள், போலீஸ், வருவாய் அதிகாரிகளுக்கு சம்பளம் தவிர வேறு கிடைக்கிறது. அது அவர்களது கீழான நிலையைக் காட்டுகிறது. குறைந்த ஊதியம் ஊழலை வளர்க்கிறது. பரிசுகள்,நன்கொடைகளின்றும் லஞ்சத்தை தனியாக பார்ப்பது நல்லது. நிதி ஊழல் பல பணியாளர்களால் நடக்கிறது. ஓட்டு வாங்கவும், தவறாக நிதி பயன்படவும் அவர்கள் பல சமயங்கள் ஊழல் செய்கின்றனர் குறைந்த சம்பளமே பாலியல் ஊழலுக்கு காரணமகவும் அமைகிறது.

### 2. 5. 5 சபைப் பிரிவுகள்: சபை இயல் மற்றும் தலைமைத்துவ மாதிரிகள்

இறையியலின் தாக்கம், மற்றும் சபை இயல், மற்றும் தலைமைத்துவ மாதிரிகள் சபையில் காணும் ஊழலுக்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கற்பிதம: கத்தோலிக்க ஆர்தடாக்ஸ் மற்றும் சில பெந்தகொஸ்தே சபைகளைக் காட்டிலும் புராட்டஸ்டண்டு சபைகள் ஊழல் குறைவாயுள்ளன. திருச்சபை இயல் மற்றும் தலைமைத்துவ மாதிரிகள் ஊழல் மீது தாக்கம் தருகின்றன. படிநிலை தலைமைத்துவம், ஜன நாயக கட்டுக்கோப்பும் இல்லாத இடத்தில் அதிகார துஷ்பிரயோகம் ஏற்பட்டு ஊழல் மிகப் பயங்கரமாகிறது.

CPIன் கூற்றுப்படி (TIயின் அறிக்கை) புராட்டஸ்டண்டு சர்ச்சுகள் தான் ஊழலில் முதன்மை வகிக்கின்றன CPI 2009 நியூசிலாந்து, டென்மார்க்,ஸ்வீடன், சுவிட்சர்லந்து,சீங்கப்பூர் சபைகள், நெதர்லந்து, ஆஸ்திரேலியா,கனடா, ஐஸ்லாந்து சபைகள் முன்னிலையில் உள்ளன. ஐரோப்பாவில் வடக்கு ஐரோப்பிய புராட்டஸ்டண்டு சபைகள் தெற்கு ஐரோப்பிய கத்தோலிக்க சபைகளைக் காட்டிலும் (உம் பிரான்சு (24)ஸ்பெயின் (32), போர்ச்சுகல்(35) இத்தாலி(63) ஊழல் குறைவாக உள்ளன. கிழக்கு ஐரோப்பிய ஆர்தடாக்ஸ் நாடுகளில் இன்னும் கீழான நிலை உள்ளது. (பல்கேரியா (71), ருமேனியா (71) செர்பியா (83), ரஸ்ஸியா(146)

மதத்திற்கும் சபைப்பிரிவிற்கு மிடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன என்று சமூக இயல் கூறுகின்றது படிநிலை மதங்களும் சமூகங்களும் ஜனநாயக அமைப்புகளைக் காட்டிலும் ஊழல் நிறைந்தலை. குடும்ப இன அடிப்படையிலான சமூகம் மதங்கள் ஊழலால் பாதிப்புக்குள்ளாகின்றன. ஊழல் தன் உறவினர்க்கு சலுகை, இவை மதச் சார்பின்மை சமுகத்தில் குறைவே

2010ல் நடந்த ஜெர்மனி மாநாட்டில், ஐரோப்பிய வணிக நெறி இணைய மாநாட்டில் வணிகத்திற்கு மதம் தெந்தரவா? வளமா? என்று குறித்துப் பேசப்பட்டது. TIயின் பொறுப்பாளர் ஜோகன் கிராப் கூறுவது 'புராட்டஸ்ண்டுகள் கத்தோலிக்கர்களைக் காட்டிலும் ஊழல் குறைவு. அகில உலக ஆவணங்களின்படி

லஞ்சம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல என்பதைக் குறித்து பாகுபாடு போதகங்கள் இல்லை. ஊழலுக்கு எதிரான செயல்பாட்டில் புராட்டஸ்டண்டுகள் பணி செய்ய வாய்ப்பு உள்ளது. வசதியானவர்கள் மட்டுமன்றி, ஏழைகளும் ஊழலில் ஈடுபடுகின்றன. படித்தால் மட்டும் ஊழல் போவதில்லை.

புராட்டஸ்டன்டைக் காட்டிலும் கத்தோலிக்கர்களிடையே இந்த இரட்டை வேட நெறிகள் சுட்டிக் காட்டப்படுகின்றன தண்டனை நீக்கம் சில பாவ மன்னிப்பு பரிகாரங்களால் நீக்கப்படுகின்றது என்கிறது. சபையின் அமைப்பு அப்படி சொல்கிறது. திருச்சபை விசுவாச அறிக்கை இறையியல் பொருளாதாரம், கலாச்சார, அரசியல் சூழலில் வளர்கிறது. என்னைப் பொறுத்தவரை, புராட்டஸ்டண்டில், மெதடிஸ்ட் மற்றும் சீர்திருத்த சபைகள் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன, அவர்களை ஒற்றியே லுத்தரனும் ஆங்கிலக்கினும் கற்பிதம் சொல்கிறபடியே விசுவாச அறிக்கை படி நிலை அடி ஒற்றியே வருகின்றது. கத்தோலிக்கரிடையே ஊழல் பற்றி கருத்து இருப்பினும், ஊழல் எதிர்ப்பு குறைவே. அவ்வப்போது வாடிகனின் ஊழல் சார்பில் அதிகாரங்கள் துஷ்பிரயோகப் படுத்துவது நடக்கிறது (பார்க்க 3.1.9).

இந்த சபைப்பிரிவு பற்றிய விஷயங்கள், ஒரு சபை இன்னொரு சபையை உயர்திட அல்ல, ஒன்றினைந்து ஊழல் ஒழிக்கவும், ஆழமான இறையியல் திருச்சபை வேர்களுக்குள் செல்லவும் உதவும். பரஸ்பர உதவி மற்றும் சபைகளுக்குடையே புரிதல் பகிர்தல் நடைபெற வேண்டும்.

### 2.5.2 பங்கேற்பு: பல கணக்கொப்புவித்தல் மாதிரிகள்

திருச்சபை வளர்ச்சி, குறிப்பாக மிஷன்களுடன் இசைவும் ஊழலுக்கு எதிர்ப்பாக பங்கேற்பும் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? கற்பிதம்: மிஷன் சர்ச்சிலிருந்து சுதந்திர திருச்சபையாக மாறுதல் புதிய திருச்சபையை சொத்துக்களை கைக்கொள்ளுவதாக மிஷன் சொசைட்டிகளுடன் பங்கேற்பும் உள்ளதாக உருவாக்கியது.

காலணிமாற்றம் 1950 ல் நடந்தது. 1960லிருந்து தொடங்கிய பல வளர்ச்சி திட்டம் மிஷன் அமைப்புகளிடமிருந்து திருச்சபைகளை சுதந்திரமாக்கியது (பார்க்க Bad Herrenalb conference,1956) 1973ல் அகில உலக மிஷன் மாநாடு பாங்காக்கில் நடந்தது. ஆட்கள் வளங்கள் இவற்றை வடக்கு உலகிலிருந்து துண்டித்தது. புதிய சபைகள் தமது சொந்த வாழ்வில் நிதி ஆதாரத்தில் வளர ஊக்குவித்தது. இது நடைபெறவில்லை பங்கேற்பின் புதிய பார்வை, பரஸ்பர பகிர்தல் வந்தது WCCன் 1987 El Escorial மாநாடு சபைகளுக்கிடையே புதிய பங்கேற்பு உதவுதலைத் தேடியது. குறிப்பாக 'Koinonia' என்ற பரஸ்பர சமூக பங்கேற்பு இங்கு எல்லோரும் சமமே; 'Kenosis' என்ற தன்னை வெறுமையாக்கல் மூலம் கிறிஸ்துவின் அடிப்படையில் அதிகாரம் பயன்படுத்தல், குறிப்பாக நிறுவன, மற்றும் இதர பொருள்

மூலம் வரும் அதிகாரம் (உ.ம். நிலம்) ' ஏழைகளின் சார்பு' திருச்சபைகளின் சமூகப் பங்கேற்பு ஏழைகளை வலுப்படுத்த தீர்மானிக்கும் இடத்தில் அவர்களைக் கொண்டு வருதல். மிஷன் மற்றும் வளர்ச்சியில் ஐக்கியம், அறிவித்தல் மற்றும் சேவை.

El Escorial சொல்வதெல்லாம்; அதிகாரம், வெளிப்படைத்தன்மை, அனைவரிடமும் பகிர்வதே திருச்சபையின் முக்கிய பிரச்சினையாக கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருந்தது. வடக்கு ஆதிக்கம் சுதந்திரத்தை உருவாக்கியது. கண்ட்ரோல் செய்ய மறுத்தது. பரஸ்பர நம்பிக்கைக்கு பங்கேற்பு என்றது. நன்கொடை நிறுவனங்களின் கண்டிப்பு நம்பிக்கை இன்மையின் அடையாளம் என்றன தெற்கு சபைகள். 1960களில் பிராந்திய Ecumenical அமைப்புகள் தோன்றின. உதாரணம் AACC,CCA,CLAI போன்றவை. பங்கேற்பு தரிசனம் வளர்க்கப்பட்டது. மிஷன் சொசைட்டிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு உலகலாவிய கவுன்சில்கள் உருவாக்கப்பட்டு எல்லா பங்காளர்களுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டது. சுதந்திர திருச்சபைகளின் நிதி மேலாண்மை வலியுறுத்தப்பட்டது ( CEVAA,UEM, மிஷன் 21, CWM பார்க்க) சில சமயம் வலுவிழந்த கண்டரோல்கள் அதிகார துஷ்பிரயோகத்தை ஊக்கு வித்தன. எனவே 1990களிலிருந்து தங்களது நிதியின் கொடைகளை பங்காளர் திருச்சபைக்கு தர நிதி அமைப்புகள் மறுத்தன. NGO மற்றும் மதச் சார்பின்மை நிறுவனங்களுக்குத் தந்தன. கடவுளின் பிரதிநிதிகளாக திருச்சபைத் தலைவர்கள் இருக்கிறார் என்ற இறையியல் பார்வையில் நொட்டம் விழுந்தது. இது தொடர்ந்து வெளிப்படையற்ற நிதி ஆளுமை இன்னும் தொடர்கிறது. இவை ஊழலுக்கு வழி வகுக்கின்றன. இதற்கு அமைப்பு, கீழ்ப்படிதல் பண்பு, பங்கேற்பு பற்றிய புரிதல்இன்மை ஆகியவை துஷ்பியோகம் செய்யப்படுகின்றன. வடக்கு சபைகள் தெற்கு சபைகளை விமர்சிக்க தயங்குகின்றன. தெற்கு சபைகள் விமர்சனத்தை ஏற்க மறுக்கின்றன. ஆனால் இந்த பண்பில் மாற்றம் நிகழ்ந்துள்ளன. தெற்கில் பொறுப்பான தலைவர்கள் ஊழலுக்கு எதிராக இருக்கின்றனர் வடக்கு சபைத் தலைவர்களை கடுமையான கொள்கைகளை உருவாக்கவும், ஊழல் சபைகளுக்கு நிதியை நிறுத்தவும் கோருகின்றன. ஆனால் வடக்கு இந்த தயங்கலைத் தவிர்த்து பங்கேற்பை உறுதி செய்கின்றன. 1990 தொடங்கி ஊழல் விவாதிக்கப்படுகிறது. 21ம் நூற்றாண்டின் பின்னர் (2002லிருந்து ஜெர்மன் சொசைட்டிகள்) பலர் பிரச்சினையில் ஈடுபடுகின்றனர். இதற்கு எதிரான போக்குகள் தயக்கங்கள் தொடந்தாலும்.

## 2.6 ஊழலின் பெண்ணிய பரிமானம்

2.6.1 ஊழல் கறைகள் பெரும்பாலும் ஆண்களின் மேலேயே பந்துள்ளது. அதே சமயம் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு குறைவே. சரியான முறையில் ஊழல் ஒழிக்கப்பட, பெண்களின் பங்கு மிக அவசியம் மூன்று கேள்விகள் நம்பார்வைக்கு: ஊழலில் பெண்ணியப் பார்வை நடததை ஒன்று உள்ளதா? பெண்ணியத் தாக்கம் ஊழல் மீது நடக்கிறதா? ஊழல் ஒழிப்பிற்கு இவை உதவுமா? Bread for all ன் Study, Regnla Frey செய்தது, தவிர ஆசிரியர் Update செய்தது, கீழ்க்கண்ட பதில்களாக வருகிறது.

ஊழல் தொடர்பாக பெண்ணியப் பார்வை இல்லாது இருந்தது. 1990களில் கலந்தாலோசிக்கப்பட்ட ஆவணங்களில் பெண்ணியப் பங்கு குறித்த எந்தக் காரியமும் இல்லை. இன்டர்நெட்டிலும் இல்லை. TI யின் எந்த ஆவணங்களிலும் பெண்ணியப் பார்வை இல்லை என சூசன் ஜார்ஜ் கூறுகிறார். ஆண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் பெண்ணியப் பார்வை பார்த்ததில்லை. இது இப்போது மாறிப்போனது. TI யின் தற்போதைய தலைவர் ஒரு பெண். TI யின் பெரும் பகுதி ஊழியர்கள், பெர்லினில், பெண்களே. பிரச்சினையில் தங்கள் பகுதியை வேறுவிதமாக வெளிப்படுத்துகின்றனர். ஆங்காங்கே தோன்றியுள்ள ஆய்வுகளில் கீழ்க்காணும் சுருக்கம் இந்த ஆய்வுக்கான தகவலுக்கு வந்துள்ளது.

## 2.6.2 ஊழல் தொடர்பாக பெண்ணிய நடத்தை என்று ஒன்று உள்ளதா?

பிரான்சும் சுல்சும் இக்கேள்விக்கான சோதனை நடத்தினர். மக்களைக் காட்டிலும் பொருளியலாளர். பெண்கள் சொன்ன பதில்களை தொகுத்தனர். பெண் ஆண் மாணவர்களைச் சந்தித்தனர் (அவர்கள் பொருளியலாளராகவோ, பொருளியலாளர் இல்லாதோ இருந்தனர்) இவர்களிடம் கற்பனை ச் சூழல் ஒன்று கொடுக்கப்பட்டது. பொது நலன் அல்லது தனி நபர் ஆசையில் ஒன்றைத் தேர்வு செய்யும் நடத்தை கொடுக்கப்பட்டது. கண்டது என்னவெனில் பொருளியல் மாணவர்களே மிக ஊழல்வாதிகள் என்று. ஆனால் பாலியல் ரீதியில் பெண்கள் குறைவான ஊழல் வாதியாய் இருந்தனர். ஆனால் பொருளியல் பயிலாத மாணவர்களைக் காட்டிலும் உழல் வாதிகளாய் இருந்தனர். பெண்கள் ஊழல்வாதிகளாய் இருக்க முடியாது என்ற முன் அறுதியிடும் கூற்றை இது நிராகரித்தது.

Swamy et al, புள்ளியல் வடிவத்தில் பெண்ணிய ஊழல் நடத்தையை ஆய்வு செய்தார். உலக மதிப்பு தொடர்பான ஆய்வு ஒன்றை, பிரான்சு சுல்சு போல, நடத்தினார். இதில் பெரும் ஆண்கள் பெண்கள் கலந்து கொண்டனர். கற்பிதச் சூழல் கொடுக்கப்பட்டு நேர்மையான நிலை அல்லது சந்தர்ப்ப சூழல் கொடுக்கப்பட்டு நேர்மையான நிலை அல்லது சந்தர்ப்பவாத நிலை பதில் கூற அழைக்கப்பட்டனர். நேர்மையான நிலைக்கு பெண்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்க்கப்பட்டது. லஞ்சம் ஏற்கலாமா என்ற கேள்வி முன் வைக்கப்பட்டது. லஞ்சம் ஏற்கலாமா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. பெண்களில் பலர் (திருமணமானவர், மதம் சார்ந்தவர், பணி செய்பவர்) பதில் தந்தனர். பல்வேறு கேள்விகள் முன்வைத்தும், வந்த பதில் பெண்கள் ஆண்களைவிட லஞ்சம் ஏற்காத ஆட்களாகவே இருந்தனர்.

Swamy et al ன் இன்னோரு பணி. ஊலக வங்கி உதவியுடன் ஜார்ஜியாவில் ஊழல் பற்றி ஆய்வு செய்வது. கம்பெனி ஊழல் குறித்த ஆய்வு அது. பெண்களால் நடத்தப் பெறும் கம்பெனிகளை விட ஆண்களினால் நடத்தப்படும் கம்பெனிகளில்

ஊழல் இரட்டிப்பாய் இருந்தது. கம்பெனியின் சைஸ்,பணியின் தன்மை, அரசின் சார்பு, நிர்வாகத்தினரின் படிப்பு / மற்றும் முதலாளியின் படிப்பு இவையெல்லாம் சார்ந்த கேள்விகள் அது.

இவை மூலம் கண்டது: பிரானசு சுல்சு சொன்தை மாறுபட்டதாக Swamy et al ன் பார்வை வந்தது. அது தீர்க்கப்பட முடியாத பிரச்சினை. Swamy et al, இன்னும் சொல்லப் போனால், Macro அளவில் அதை செய்தார். பல நாடுகளில் உள்ள கம்பெனிகளில் பெண்களின் ஈடுபாடு ஆய்வு செய்யப்பட்டது. இருவருமே TI யின் CPI 1998, மற்றும் ICRG (International Country Risk Guide) of 1995 ஐ உபயோகித்தனர். கல்வி மேன்மை, ஊடக சுதந்திரம், பன்மை கட்டு நிலை, இன பன்மை, சமூக ஒன்றிப்பு, குடிமை அலுவலரின் சம்பளம், காலணிய வரலாறுகள் ஆகியவையும் அதில் அடங்கின indicators களாக. வேலை சந்தையில் பெண்களின் பங்கு, மற்றும் பார்லிமெண்டில் பெண்களின் பிரதிநிதித்துவம் பேசப்பட்டது பெண்களின் ஈடுபாடு ஊழலில் குறைவே என்று ஒப்பிட்டு அளவில் பார்க்கப்பட்டது. இந்த பதில் தொடர்ந்து Check செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

Dollar et al என்று உலக வங்கி ஆய்வு, பெண்களின் பார்லிமெண்ட் பங்கேற்பு ஊழலைக் குறைத்தது என்றும் காண்கிறது.

Swamy et al: பெண்கள் ஊழலை வெறுக்கிறார்கள் என்றும் பொது வாழ்வில் பங்கேற்கும் பெண்கள் ஊழலை எதிர்க்கிறார்கள் என்றும் வந்தது. ஊழலை ஒழிக்க பெண்களின் அரசியல் பங்கு அவசியம். (வறுமை ஒழிப்பிற்கு பெண்களின் சமத்துவத்திற்கு இது அவசியம் என்றும் பார்க்கப்பட்டது) அதே போல் Dollar et all நல்ல 'நேர்மையான அரசை' பெண்கள் தருவார்கள் என்றும் கண்டறியப்பட்டது.

Sandra Mehlomakhulu, TI யின் சிம்பாப்வே வேறொரு பண்பு சார்ந்த அனுகுமுறையை மேற் கொண்டார். வளம் குறைவாயுள்ள பெண்கள், குறிப்பாக தங்கள் வேலையைத் தக்க வைக்க தங்கள் பாலியலைப் பயன்படுத்தினர் என்றும் பாலியல் தொந்தரவுகளை சகித்துக் கொண்டனர் என்றும் கூறுகிறார். தங்கள் தாழ்வு நிலையினால் பாலியல் லஞ்சம் தந்து தங்களை காத்துக் கொண்டனர். எனவே ஊழல் ஒழிக்கப்பட பெண்களின் கையில் சொத்து வளம் இருக்க வேண்டும் என்றும் வளப் பங்கீடு அதிகாரம் அவர்கள் கையிலிருக்க வேண்டும் என்கிறார்

### 2. 6. 3 பாலியல் சார்ந்த விளைவுகள் ஊழலை எதிர்கொள்கிறதா?

ஊழலை எதிர் கொள்ள பெண்ணியம் சார்ந்தவை பயன்படுகின்றன என்கிறார் Rosylyn Hees என்ற TI யின் ஆலோசகர்.

1. ஊழல் வன்முறையையும், மனித உரிமை வன்முறையையும்

உருவாக்குகின்றன. இதில் பெண்களும் இளம் மகளிரும் பாதிக்கப்படுகின்றனர். ஊழல் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடையது, தாதாக்கள், போதைக் கடத்தல் உள்பட சூழல் விபச்சாரத்தையும், பாலியல் வக்கிர ஆபாச படம் உற்பத்தியையும் ஆதரித்து பெண்களையும், இளம் மகளிரையும் சுரண்டுகிறது.

2. அரசியல் அதிகாரம் பொது நிர்வாகம் ஆகியலை விலைக்கு வாங்கப்படுகிறபடியால், தனி நபர் உறவில் அமைகிறபடியால், பெண்கள் ஈடுபடமுடிவதில்லை. எனவே ஊழல் வாதிகள் பெண்ணுரிமை வலியுறுத்தும் NGOக்களை எதிர்க்கின்றனர்.
3. ஊடகம் அரசால் கட்டுப்படுத்துப்படும் போதும், அரசியல் கட்சி மற்றும் தனிநபர் விருப்பத்தில் இயக்கும் போதும் பெண்களின் பிரச்சினை முனவைக்கப்படுவதில்லை.
4. ஊழல் நிறைந்த சட்டமுறை ஏற்கனவே இருக்கும் பெண்ணியத்திற்கு எதிரான சட்டமுறையை ஆதரிக்கிறது. ஆண்கள் லஞ்சம் கொடுத்து பெண்களுக்கு எதிரான வெற்றியை பெற்று விடுகின்றனர்.
5. ஊழல் பொருளாதார ரீதியில் பெண்களை முன்னேறவிடுவதில்லை. பெரிய அளவிலும் சரி, சிறிய அளவிலும் சரி. பெரும் அளவில் நாட்டுக்குரிய வருவாயை ஊழல் தடுக்கிறது (வரி, வெளிநாட்டு முதலீடு, உதவி, தனியார் மூலம் வரவு, தவறாக நிதி பயன்பாடு) இப்படி குறைவாக வருமானம் வருவதால் பெண்கள் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம்,குடும்பத்திற்கான ஒதுக்கீடு, மற்ற சமூகக் காரியங்களுக்கான நிதி பாதிக்கிறது (குறிப்பாக தண்ணீர்,மின்சாரம்) சிறு அளவில், பெண்களுக்கென வேலை வாய்ப்பு மிகக் குறைவே. பெண்களில் வணிகச் சிறப்பு வாய்ந்தவர்களுக்கு வேலை இல்லை. கடன் வசதியும் தரப்படுவதில்லை
6. பள்ளிக்கு அனுமதி என்பது பணத்தால் கிடைப்பதால், பெண் குழந்தைகள் அனுமதிக்கப்படுவதில்லை,பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுகின்றனர்.
7. (காடு அழிப்பு) சட்டபூர்வமற்ற சூழல் பிரச்சினையாய் ஏழைகள் பாதிக்கப்படுகின்றனர். பெண்கள், குழந்தைகள்.

Hees ஊழலின் பெண்ணியப் பார்வை குறிப்பிடுகிறார் Mehlomahulu சொல்வதை கூறுகிறார். பெண்கள் தாழ் நிலையில் இருப்பதால் (குறைந்த ஊதிய வேலை, பள்ளி அமைப்பு, வழக்கு நிலை, கடன் வசதி இல்லாமை) சிறு ஊழலை அவர்கள் சந்திக்கின்றன. இது ஒழிய வேண்டுமெனில் பெரும் ஊழல்கள், அரசுக்கு வரும் வருவாய் குறைதல் அல்ல சட்ட ஒழுங்கை தங்களுக்கு சாதகமான பயன்பாடு செய்தல் நீங்க வேண்டும். Hees பேப்பருக்கு மூல ஆவணம் இல்லை. ' பொது அறிவிலிருந்து' இதைச் சொன்னரா அல்லது ஆய்வின் அடிப்படையில் சொன்னாரா தெரியவில்லை முன்னது சரியானால், கற்பிதம் பொய்யல்ல, அது தொடர்ந்து படிக்கப்பட வேண்டும்.

### 2.6.4 பேசியவற்றின் சுருக்கம்

பொதுவாக பெண்கள் ஊழலை வெறுக்கின்றனர். ஆண்களைக் காட்டிலும். பல கற்பிதங்கள் இன்னும் தேவை. பூரண ஆய்வுக்கு. ஆனால் எங்கெல்லாம் பொது வாழ்வில் பெண்கள் ஈடுபட்டனரோ, அங்கு ஊழல் குறைந்துள்ளது. எனவே பொது வாழ்வில் பெண்கள் ஈடுபடுத்தப்படவேண்டும்.

ஊழல் பெண்களுக்கு எதிராக வடிவம் கொண்டுள்ளது. பெண்களுக்கு ஊழல் வரும் வழிகள் இல்லை. எனவே ஊழல் அமைப்பில் அவர்கள் பங்கேற்பதில்லை ' பாலியல் பணத்தால்' சில சமயம் ஊழலை எதிர் கொள்கின்றனர். சமூக அமைப்பு ஆண் சார்ந்தது. எனவே சிறு ஊழலே அவர்கள் பங்கு. எனவே பெண்களின் சொத்து வளம் பெருக வேண்டும். பெரும் ஊழல்கள் பெண்களுக்கு எதிரானது வணிக நன்நெறிகளில் கண்ட நெறி சார்ந்த முதலீடு, நெறி சார்ந்த வணிகம் அவர்களை மேம்படுத்தும், நெறி சார்ந்த மேம்பாடே பெண்களை வலுமைப்படுத்தும்.

## அத்தியாயம் - 3

# அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள் (1995 – 2010)

1. Transparency International, 2. திருச்சபைகள், அகில உலக அனைத்துத் திருச்சபை அமைப்புகள், 3. கிறிஸ்தவ மானிட வளர்ச்சி அமைப்புகள், கிறிஸ்தவ அருட்பணி குழுக்கள், 4. மற்ற மதங்கள் போன்ற நான்கு பகுதிகளினின்றும் உதாரணங்களை குறிப்பாக ஊழலுக்கு எதிராய் அவை எடுத்து வரும் நடவடிக்கைகளை இந்த அத்தியாயம் சேகரித்து ஆய்வு செய்கிறது. இவை நன் முறை முயற்சிகளையே குறிப்பிடுகிறது. ஒரு போதும் அவர்களை ஏசுவதோ பேசுவதோ நோக்கமன்று. சில குறிப்பிட்ட உதாரணங்களே எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் அன்றி பல நிலைகளில் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இலக்கு முழு சர்வே அல்ல ஊழலற்ற திருச்சபைகள் சாத்தியமே என்பதற்கான எடுத்துக் காட்டுகளே இவை.

என்னுடைய / அனுபவம், குறிப்பாக Bread for all என்ற ஸ்விஸ் மானிட வளர்ச்சி நிறுவனத்தில் பொதுக் காரிய தரிசியாக நான் இருந்ததினால் (1992-2004), TIன் முதல் தலைவராக இருந்ததினால் (1995 -1999), ECLOF சிறு நிதி நிறுவனத்தின் தலைவராக இருந்ததினால் (1999-2007), ஸ்விஸ் அரசின் வளர்ச்சிக்கான நட்புறவு அனைத்து நாட்டு ஆணையத்திற்கான ஆலோசகராக இருந்தபடியால் (1994-2008), உலக திருச்சபை மாமன்ற உறுப்பினராக (2006-2007) வரை இருந்ததினால், எனக்கு நிறைய திருச்சபை தலைவர்களுடன் தொடர்பு கிடைத்தது. இந்தியாவுக்கும் நன்னெறி பேராசிரியராக அவ்வப்போது சென்றும் வந்ததினால், பேராசிரியர்கள், திருச்சபைகளுடன் தொடர்பு வந்ததினால், 2008 முதல் Globeethics.netன் தொடர்பில் உள்ள 180 நாடுகளுடன் உறவு வைத்துள்ளதால் இந்த உதாரணங்களை தேர்வு செய்ய முடிந்தது.

## 3.1 திருச்சபை அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள்

### 3.1.1 இந்தியா: உதாரணங்கள், முயற்சிகள் 2000-2010

**ஊழல் உதாரணங்கள்:**

ஊழல் சமூகத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக இந்தியத் திருச்சபை மாறியுள்ளது. இயேசுவின் இடத்தில் பணம் தலைவராக உள்ளது (மத் 6:24:லூக் 16:13) இது எல்லாவற்றையும் தனதாக்கிக் கொள்கிறது. தென்னிந்தியாவில் உள்ள சில வசதி வாய்ந்த சபையார்களின் சபைகள் வியாபாரம் பெருக்கும் ஸ்தலங்களாகி விட்டன. திருமண மண்டபங்களையும், ஆங்கில போதனை வழி பள்ளிகளையும் கட்டி பணம் சம்பாதிக்கின்றனர். 'நீ

கடவுளுக்குக் கொடுப்பாயானால், கடவுள் உனக்கு மூன்று மடங்காக, நாலு மடங்காக, நூறு மடங்காக ஆசீர்வாதத்துடன் தருவார்' என்ற வளமை செழுமை இறையியல் (Prosperity) பிரசங்கப்பீடங்களிலிருந்து பேசப்படுகிறது. கடவுளுக்கு லஞ்சம் கொடுப்பது என்பது இங்கிருந்தே ஆரம்பிக்கிறது. ஞான ராபின்சன் என்ற பிரபலமான இந்தியக் கிறிஸ்தவ இறையியலாளரின் சீரிய ஆய்வு இது. வலுவாக தாக்குகிறது.

இந்தியத் திருச்சபைகள் ஊழலின் பல உதாரணங்களை வெளிப்படுத்தியுள்ளன. CSIன் உதாரணம் இங்கே தரப்படுகிறது. 1947ல் CSI பல அருட்பணி அமைப்புகளால் இணைந்த ஓர் ஐக்கியமாக உருவாக்கப்பட்டது. ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு அடுத்து 14,000 சபைகளும், 45 லட்சம் வழிபாட்டாளர்களுமாய் இந்த CSI இந்தியாவின் இரண்டாவது பெரும் சபையாயிற்று. CSI இந்தியாவின் உள்ள பத்து பணம் வாய்ந்த நிறுவனங்களில் ஒன்று CSIக்கு நிறைய நிலங்களும் சொத்துக்களும் வளர்ந்து நகரங்களில் பெருகிவருகின்றன. 200 பள்ளிகள், 130 கல்லூரிகள், 104 ஆஸ்பத்திரிகள், 500 மாணவர் இல்லங்கள்,50 கிராம வளர்ச்சித் திட்டங்கள் உட்பட பலவற்றை இது நடத்துகிறது. அதீதமான ஊழல்கள் இருப்பினும், ஊழல்களை வேரறுக்க மிக அதிகமான முயற்சிகளையும் பெற்றதாயிருக்கிறது.

<u>ஊழல் நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்கள்</u>

- பேராயராக தேர்வு செய்யப்படவும் சில பல பதவிகளுக்கும் பணம் கொடுக்கப்படுகின்றது. சூட்கேஸ் கிருமிகள் கடந்த பத்தாண்டுகளில் காணப்படுகின்றன. போராயர்கள் தேர்வு செய்யப்படும் முறையே இந்தியத் திருச்சபைகளின் பிரதான பிரச்சினைகளுக்கான காரணம்.
- இறையியல் ஆய்வின்று அப்போதைய CSI மாடரேட்டர் கே.ஜே சாமுவேல், 2004ல் சுயமாய் தன்னை பேராயராக அங்கீகரித்துக் கொண்ட கேபி யோகன்னான், பிலீவர் சர்ச் அவர்களுக்கு அபிஷேகம் பண்ணுவிக்கிறார்.
- மூப்பர்கள் நியமனம், பள்ளித் தாளாளர்கள் நியமனம், கல்லூரித் தலைவர்கள் நியமனம், மற்றும் திருச்சபை நிறுவனங்களுக்கு தலைவர்கள் தேர்வு செய்வது லஞ்சம் கொடுத்தே பெரும்பான்மையில் நடைபெறுகிறது.
- திட்ட நிதி தவறாகப் பயன்படுத்ப்படல்.உதாரணமாக முன்னாள் CSI காரியதரிசி அறிவர் பாலின் சத்தியமூர்த்தி, அவர் கணவர், மகள் மற்றும் உறவினர்கள் அக்டோபர் 2009ல் 7.5 கோடி ரூபாய் பணத்தை அபகரித்துக் கொண்டார்கள் (மேற்படி பணம் ERD என்ற US அமைப்பினின்றும் சுனாமி நிவாரணத்திற்கு அனுப்பப்பட்டது) என்று அவர்கள் மீது குற்றம் விழுகிறது.

  ERD சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்கிறது. 19 கோடி ரூபாய் திருப்பி தமக்கு அனுப்பிட வேண்டும் என்றும், மேற்படி சுனாமி பணத்திற்கு

எந்த விளக்கமான அறிக்கையோ, கணக்குத்தணிக்கை அறிக்கையோ முறையாக இல்லை என்றும், பங்காளருக்கான மரியாதை எதுவும் தனக்கு அளிக்கப்படவில்லை என்றும் புகார் தருகிறது.

- திருச்சபை நிலம் சந்தை நிலவரத்திற்கு தனிப்பட்டாருக்கு வழங்குதல்
- கட்டிடம் கட்டுதலில் ஊழல் (Appendix A10 பார்க்க)
- ஆட்களை நிர்வாகம் செய்வதில் ஊழல் - உதாரணமாக சமூகப்பாதுகாப்பு / பென்ஷன் நிதியை வழங்காமை பென்ஷன் பணம் திருச்சபை நிர்வாகியின் தனிப்பட்ட கண்க்குக்கு திருப்புதல்.
- ஊழல் எச்சரிப்பாளர்களை தண்டித்தல
- ஏறத்தாழ 230 நிதிமன்ற வழக்குகள் CSI தலைவர்களுக்கு எதிராக உள்ளது. 200 -300 வழக்குகள் CSI க்கு எதிராக உள்ளது. 2010 படி பெரும்பான்மை ஊழல் சம்பந்தப்பட்டவை. நிதி தவறாகப் பயன்படுத்தப்படல், சொத்து நிர்வாகம் தொடர்பானவை.
- ஜனவரி 2010ல், பேராயர் S.வசந்தகுமார் மாடரேட்டராக CSI க்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் (அப்போது அவர் உதவி மாடரேட்டராக இருந்தார் சுனாமி பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட காலத்தில்) பணம் கொடுத்து பதவிக்கு வந்தார். ஏழு பேராயர்கள் பணம் பெற்றுக் கொண்டனர். இரண்டு பேர் மறுத்து விட்டனர் 2010 மேயில் பிஷப் காட்டன் பள்ளியில் 4,00,000 ரூபாயை திருடியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. அதே கால கட்டத்தில் ஏழைகள் முன்னேற்றம் வெளிப்படைத்தன்மை தொடர்பான மாநாட்டிற்கு ஜெர்மனி சென்று வந்தார். மே 2010ல் கோவை பேராயர் மாணிக்கம் துரையும், அவருடன் 27 ஆட்களும் 3,35,000 பவுண்டு பணத்தை திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டார்.

### ஊழலை மேற்கொள்ள முயற்சிகள்:

இவ்வகை ஊழல்கள் திருச்சபையை விழிப்புணர்வு செய்யவைத்துள்ளன. 1970 முதற்கொண்டு நிர்வாக சீர்திருத்தலுக்கு பல பரிந்துரைகளை CSI கொண்டுள்ளது. இந்தியத் திருச்சபைகளில் கடந்த பத்தாண்டுகளில் பல முயற்சிகள் ஊழலுக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்டன.

- 1983ஐ ஊழலற்ற ஆண்டாக மிசோரம் பிரஸ்பைட்பீரியன் சபை சினாடு (PCI) அறிவித்தது.
- 9 டிசம்பர் 2000ல் கூடிய திருச்சபைத் தலைவர்கள் ICSA மையத்தினால் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஊழலுக்கு எதிராக அறிக்கை வெளிப்பட்டன.
- ஜீலை 1 லிருந்து 7 வரை, மேற்படி இடத்தில் 8 சபைப் பிரிவுகளைச் சார்ந்த 32 பாஸ்டர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- செப்டம்பர் 2001ல் ஊழல் பற்றி கருத்துக்களை பேராயர்கள் தெரிவித்தனர் ஒரு ஆய்வுக்காக.

- 29 நவம்பரிலிருந்து டிசம்பர் 1 வரை, 2001ல் ஆந்திரா கிறிஸ்டியன் கவுன்சில், லுத்தரன் லெ மக்கள் இயக்கம், உலகத் திருச்சபை மாமன்றம் மற்றும் தேசிய கிறிஸ்தவ கவுன்சில் (NCCI) இணைந்து ICSA வில் அனைத்துத் திருச்சபை மறு சிந்தனை மற்றும் தலைமைத்துவ கூட்டம் நடத்தின வெளிப்படைத் தன்மைக்கென விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஏழு திருச்சபை அமைப்புக்களைச் சார்ந்த ஐம்பத்தைந்து பிரதிநிதிகளால் வெளியிடப்பட்டன. (பார்க்க Appendix I)
- 2000 ல் அறிவர் ஞானராபின்சனும் ஏனைய பிறராலும் திருச்சபை வாழ்வு மற்றும் சாட்சியத்திற்கான தீர்க்கர்களின் அணி உருவாக்கப்பட்டது. நிலத் தகராறு தொடர்பாக ஒரு பேராயர் கொல்லப்பட்டதின் தொடர்பாக இது உருவாக்கப்பட்டது.
- 2004ல் NCCI ன் கூடுகை ஊழலுக்கு எதிரான செயல்திட்டத்தையும், அதற்கான தலைமைத்துவ விதி, பிரச்சாரக் கொள்கை இவற்றை உருவாக்கியது (பார்க்க Appendix 2)
- 2009ல் PBM பசம்வாயிட், NCCI ன் துணைத் தலைவர், ஊழலுக்கு எதிரான தேசியக் கூட்டணியை உருவாக்கினார் ' இந்திய சமூகமும் அரசியலும் ஊழலின்றி இருக்க அனைத்துத் திருச்சபைகள், அவைகளின் கருத்தமைவு பல வேறு வேறாக இருப்பினும், ஏனைய விசுவாச நிறுவனங்கள், குடிமைச் சமூக நிறுவனங்களை (CSO) இணைத்து நடைபெற' குரல் கொடுத்தார். Transparancy International India அமைப்பின் தேசிய தேர்தல் கண்காணிப்பதுடன் திருச்சபைகளின் கூட்டு அமைய வலியுறுத்தினார்.
- 2009ல் பிரஸ்பைட்பீரியன் திருச்சபை : ஊழலுக்கு எதிராக பிரச்சாரம் பண்ண எல்லா திருச்சபைக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டது. 'ஊழலுக்கு எதிராய் நிற்க, திருச்சபைகள் ஊழலின்றி இருக்க வேண்டும்' என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.
- செப்டம்பர் 2009, NCCI ன் Review, 'நிர்வாகம்: பொறுப்பை நினைத்தல்' என்ற தலைப்பில் சிறப்புப் பதிப்பு வெளியிட்டது இது தொடர்பாக NCCI பணிமனை ஒன்று இதன் தலைப்பில் நடைபெற்றது.
- மார்ச் 20, 2010ல் வெளிப்படையான நிர்வாகம் மற்றும் ஊழல் தொடர்பான ஜெர்மனி மாநாட்டில், அப்போதைய NCCI ன் பொதுக்காரியதரிசி ' ஊழலுக்கு எதிரான இறையியல் தணிக்கை' அவசியம் என்றதுடன், ' கணக்கு ஒப்புவித்தல் மற்றும் வெளிப்படைத் தன்மைக் கலாச்சாரத்தை புறக்கணிக்காமல், திருச்சபைகள் இது குறித்து பிரச்சாரம் செய்வதுடன், வாழ்வுக்குரிய காரியங்களுக்கு அவை இட்டுச் செல்ல வேண்டும்' என்றார்.
- ஏப்ரல் 20, 2010ல் NCCI ஐ பெங்களூரில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. அருள்திரு ஆசிர் எபினேசர் இதில் கலந்து கொண்டு நெறிப்படுத்தினார். மேலும் பல ' தீர்க்கதரிசன இயக்கங்கள்' CSI ன் அடிமட்டத்திலிருந்து எழும்ப ஆரம்பித்துள்ளன.

- 2009 நவம்பர் 27-28ல் சென்னையில் நடந்த 4வது பணிமனையில் ' இரண்டாவது சீர்திருத்தம் இந்திய திருச்சபையில்' என்ற தலைப்பில் நடைபெற்றதில், ' வாழ்வு மற்றும் சாட்சியத்திற்கான தீர்க்கதரிசன இயக்கத்தின் (PFLWC) சார்பில் அறிவர் ஞான ராபின்சன் கீழ்க்கண்டவாறு கூறினார். ' மெய்யான சீர்திருத்தம் திருச்சபையின் ஆவிக்குரிய எழுப்புதல் நடந்தாலே நடைபெறும். மாம்மன்ஐ தொழுவதே, கடவுளுக்கு பதிலாக, இதற்கான காரணம். அதுவே ஊழலை நிரந்தரமாக நீட்டிப்பு செய்கிறது. வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் சுத்தமும் இல்லை. சொத்துக்கள் சரியாக நிர்வாகம் செய்யப்படவில்லை. மிஷனரிகள் ஊழிய மேம்பாட்டிற்காக கொடுத்த சொத்துக்கள் நிலங்கள் இப்போதைய நில தாதாக்களால் கையாளப்பட்டு, அவர்களின் தலையீடு திருச்சபைத் தேர்தல்களிலும் சினாடிலும் இருக்கின்றது' (பார்க்க Appendix 8)
- அறிவர் EC ஜான் அவர்கள் தலைமையில் பெங்களூர் சிந்தனை மன்றம் ஒன்று பாஸ்டர்களுக்காகவும் லே மக்களுக்காகவும் பெங்களூர் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 2010ல் திருச்சபை சீர்திருத்தற்கான ஆயர் மன்றத்தின் தலைவர் அருள்திரு ஜேக்கப் பெல்லியால் சிறு குழு ஆயர்களுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- 2010, CSI பேராயங்களின் பாஸ்டர்கள் நட்புறவுக்குழு அறிவர் தியான்சந்த காரால் உருவாக்கப்பட்டது. நிறைவான வாழ்வு நிறுவனம், தீர்க்கதரிசன இயக்கம், பங்களூர் சிந்தனை மன்றம் ஆகியவை இணைந்து ஆகஸ்டு 2010ல் மதுரையில் கூட்டம் நடத்தி, திருச்சபைத் தலைவர்களை மையப்படுத்தியும் பேராயர்கள் தமது நடவடிக்கைகளை சீர்திருத்தவும் கோரப்பட்டது. (பார்க்க Appendix 3)
- 2010 பிஷப்புக்களை புறக்கணிப்போம் பிரச்சாரம் (BBC) ஒன்று ' நமது திருச்சபை மீட்போம், விசுவாசத்தை மீட்போம்' என்று தலைப்பிட்டு நடத்தப்பட்டது. CSI மாடரேட்டர் வசந்த குமாரின் பிரச்சனைகள் அதில் கண்டன. அவர்தம் பல ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

மேற்படி செயல்கள் எல்லாம், ஊழலுக்கு எதிரான எதிர்விளைவுகளே, CSIன் உறுப்பினராகிய ஒரு பொருளாதார போராசிரியர் மிகக் கடுமையாக இது குறித்து பேசினார் 'இன்ற வரை ஊழலுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இல்லை நிகழ்வு மாற நடவடிக்கை இல்லை. 30 வருடங்களுக்கு மேலாக ஊழலுக்கு எதிராக நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் எங்களுக்கு நம்பிக்கையின்மையே தந்துள்ளன எனவே நாங்கள் எங்கள் செயல்களிலிருந்து விலகிவிட்டோம் எல்லா பேராயக் கமிட்டிகளிலும் தாதாக்களே இருக்கின்றனர்' நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கு, இறையியல் அடிப்படையிலும், அமைப்பு ரீதியிலும் மாற்றங்கள் தேவை. பரிந்துரைகள் 5வது அத்தியாயத்தில் உள்ளன.

2001ல் நடத்தப்பட்ட ஆய்வு பிரச்சினையின் ஆழத்தை விரிக்கிறது: 84 சதவிகித பேர் திருச்சபைகளில் ஊழல் உள்ளன என்கிறார்கள்(25% பலமாக ஒத்துக் கொள்கின்றனர்,59% ஒத்துக் கொள்கின்றனர்,16%ஏற்றுக் கொள்ளவில்லை) வெளிநாட்டுப் பணம் உபயோகம் குறித்து – 68% பேர் பணம் முறையாகச் செலவிடப்பட்டது என்கின்றனர். 16% பேர் ஏதோ பணம் செலவிடப்பட்டது என்றனர். 8 % பேர் கேள்விக்கு விடையே சொல்லவில்லை. கணக்கு ஒப்புவித்தலைப் பொறுத்தவரை 83 % பேர் கணக்கு நன்றாக இருக்கிறது என்றும் 17 % சரியில்லை என்றும் கூறினர். 50 % பேர் குழுத்தன்மை தேர்தலில் இருக்கிறது என்றனர். 67 % பேர் திருச்சபை சொத்துக்கள் முறையாகப் பயன்படுத்தப்பட்டன என்கின்றனர். 33 % பேர் இல்லை என்றனர். 33 % பேர் திருச்சபை சொத்துக்கள் விற்கப்படுகின்றன என்றும், 67 % பேர் முறையற்ற வழியில் விற்கப்படுகிறது என்றும் கூறினர். 75% பேர் சொத்துப்பட்டியில் திருச்சபைகளில் இருக்கின்றனர் என்கின்றனர் 25% பேர் இல்லை என்றனர். 100 % பேர் திருச்சபை சொத்துக்கள் காப்பற்றப்படவேண்டும் என்றனர். 75 % பேர் தங்களது ஆயர்களுக்கு நிர்வாக ரீதியான பயிற்சி தரப்பட வேண்டும் என்றனர். 17 % பேர் அதற்கு தேவை இல்லை என்றனர் 8 % பேர் எந்த பதிலும் சொல்லவில்லை. திருச்சபையில் எழுப்புதல் அவசியம் என்றனர் 33 % பேர் அடுத்த 33% பேர் நல்ல தலைமையும், நல்ல நிர்வாக அமைப்பும் வேண்டும் என்றனர். 26 % பேர் நல்ல தலைமைத்துவம் வேண்டும் என்றனர். இந்த ஆய்வு திருச்சபை தேர்தல், திருச்சபை சொத்து, நிர்வாகம், நல்ல தலைமை போன்றவை இன்றைய ஊழல் கட்டத்தில் தலையாய தேவைகள் என்று அடையாளம் தந்தது.

'திருஞ்சபையின் வெளிப்படைத் தன்மைக்கான விதி' (PEARL உருவாக்கியது) இதை விளக்குகிறது (பார்க்க Appendix 1) திருச்சபை சொத்து நிர்வாகம், நிதியைக் கையாளுவதில் வெளிப்படைத்தன்மை, குறிப்பிட்ட நிதியை குறிப்பிட்ட காரியத்திற்கே செலவு பண்ணுதல், திருச்சபை ஊழியர்களின் தரம், திருச்சபை தீர்மானிக்கும் விஷயங்களில் உறவினர் ஈடுபடாமை, கோர்ட் வழக்குகளில் திருச்சபை செல்லாமல் வழக்குகளை விசாரிக்க ஓர் அமைப்பு, திருச்சபை தலைவர்கள் தங்களது சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை வெளிப்படையாக அறிவித்தல். இந்த சூழ்நிலையில், பேராயர்கள் மற்றும் NCCI ன் பொதுக்காரிய தரிசி போன்றோர் PEARLன் ஆலோசனை மன்றத்தில் பேசினர். இதன் தாக்கம் அளவிடற்கரியது. எதிபார்த்தலுக்கும் மேலானது. CWM ஓர் அறிக்கையை வெளியிட்டது. CWM ன் Inside out என்ற இதழ் இதனை வெளியிட்டது ஆனால் சில தலைவர்கள் இதனை எதிர் மறையாகப் பார்த்தது மட்டுமின்றி, தடைசெய்தனர் இன்னும் தடைசெய்கின்றனர். லூத்தரன் லே இயக்கம், லூத்தரன் திருச்சபைக்குரியது, இந்நிகழ்வுக்கு ஆதரவாய் இருந்தது. பல வெளிநாட்டு திருச்சபை அமைப்புகள் தங்களது இந்திய மிஷன் மற்றும் திருச்சபை பங்காளிகளுடன் இதை ஆதரித்தன, பலர் வெளிப்படையாக வராமல் இந்த

இயக்கத்துடன் துணை நிற்க மறுத்துவிட்டனர். இந்த நிகழ்வு இப்போதுதான் தொடங்கியுள்ளது. அது நீடித்து நிற்க தொடர் செயல்பாடுகள் அவசியம் இந்த இயக்கத்தை வலுப்படுத்திட தனி நபர்களும், திருச்சபை சார்ந்த நிறுவனங்களும் தோழமையுடன் செயலாற்றிட வேண்டும்.

## 3.1.2 டான்சானியா: பிரச்சினைகளும், முயற்சிகளும் 2004-2010 வரை

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைக்கு தொடர்ந்து டான்சானியா நடவடிக்கை எடுத்து வருகிறது. 1958க்கு முன்பாக, சுதந்திரத்திற்கு முன்பாகவே, ஊழலுக்கு எதிரான உறுத்துக் கட்டளை பிறப்பித்தது. சுதந்திரத்திற்கு பின்பு 1967 ஆறுஷா பிரகடனம் 'ஊழல் என்பது நீதிக்கு எதிரி' என்று பிரகடனப்படுத்தியது. ஊழலுக்கு எதிரான சட்டங்கள் 1971,1975,1990,2002 மற்றும் 2007ல் பிறப்பிக்கப்பட்டன. சுகாதாரத்துறையிலும் முயற்சிகள் உருவாக்கப்பட்டன. ஊழலுக்கு எதிரான ஆய்வுகள், டான்சானியாவில், தமது உறவினருக்கு நல்ல தகுதியுடையோரை மீறி வேலை கொடுக்கும் அரசு ஊழியரை தண்டிக்கவே 70% மக்கள் விரும்புகினறனர்.

திருச்சபைகளில் ஏறத்தாழ எல்லா நடவடிக்கைகளுமே சரியாயினும், ஊழல் இருக்கவே செய்கிறது. ELCT ல் 2001-2004 ல் ஒரு ஆஸ்பத்திரியில் பண ஊழல் நடந்தது. மிஷன் பார்ட்னர் NMZ.NMZ ஆய்வு நடத்தியது; ஆட்களை வேலை நீக்கம் செய்தது. வழக்கு விசாரணைக்கு கோர்ட்டுக்கு சென்றது. 2007ல் பேராயர் பதவி இழந்தார். பேராயத்திற்கு பணம் நேரே செல்ல தடைசெய்யப்பட்டது. 2006ல் ஜெர்மனிக் குழுக்கள் பணம் தருவதில் தடைசெய்தன. 2005ல் நிதி தருவோருக்கு செய்தி போயிற்று. மே 2008ல் NMZ இதழ் இந்த ஊழலை பிரசுரித்தது. திருச்சபையில் ஊழலை நிறுத்திட மாநாடு ஒன்று நடந்தது. NMZ அதன் இயக்குநர் கிளாஸ் ஷேபரும் 2002லிருந்து ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

2009ல் நிதி தரும் விஷயங்களில்,நிர்வாகத்தில், திட்டச் செயல்பாடுகளில் NMZ விதிமுறைகளைப் பலப்படுத்தியது. EMS ன் ஊழலுக்கு எதிரான கொள்கையை தரமாக பயன்படுத்தியது. ' நமது நட்புறவை சிதைப்பதால் எந்த ஊழல் வடிவமும் நமது எதிர்ப்புக்குரியது தவிர அவை நமது திட்டங்களை நமது இயக்கங்களை ஆபத்தில் வீழ்த்துகிறது' என்றது ELCT சரியாக நிர்வாக மற்றும் இறையியல் முயற்சிகளை எடுத்தது. 2010ல் ஜெர்மனியில் நடந்த ஓர் ஆலோசனையின் போது, ELCT ன் உதவி செயலர் ஆபேல் மிராமா என்பது, அவர் நிதிக்கும் நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர், இன்றைய தலையாய பிரச்சினை ' ஆளுமையே' என்றும் 'சட்ட நடிவடிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் என்றார். தரமான திருச்சபை ஊழியர்களை தேர்வு செய்வது, வளங்களை சரியாக செயல்படுத்த ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்குவதும், மத்திய தகவல் தொகுப்பில் தகவல்களை வைப்பதுமே என்றார்.

நடைமுறை உண்மை என்ன எனில் தரக் குறியீடுகள் இருப்பினும் ஊழல் நடைபெறவேயுள்ளது. NMZ போதிய நடவடிக்கை எடுத்தது. அதுமட்டுமில்லாம்ல் ECLT சபையும் மொத்தமாக நடிவடிக்கை எடுத்தது. வருடக்கணக்கில் சிலவற்றை அமுல்படுத்திட நேரமானதானால் விரைவு படுத்தல் அவசியமாகிறது. ECLTன் தலைமை நிதியாளர் ஏற்கனவே தேசிய பல நாடுகளின் நிர்வாக அமைப்புகளில் பணியாற்றியவர். திருச்சபையில் அகில உலக தரக்குறியிடுகள் வருவது நல்லதே.

### 3.1.3 மேற்கு ஆப்பிரிக்கா: ஊழல் அற்ற பள்ளிகள் :

மேற்கு ஆப்பிரிக்க கிறிஸ்தவ கவுன்சில் ஆப் சர்ச்சஸ் (FECCIWA), கடந்த நவம்பர் 5-9 2000ல் கானா அருகில் அபோகபி நகரில் திருச்சபை தலைவர்களுக்கான ஊழல், அமைதி, வளர்ச்சி மாநாட்டை நடத்தியது. நாட்டு அறிக்கைகள் சொல்வதெல்லாம் FECCIWA திருச்சபை நாடுகள் உள்ளூர் சண்டை வன்முறையில் கிழிந்து கிடக்கின்றன மட்டுமல்ல, சமூகங்களில் ஊழலின் தாக்கம் நிறைந்துள்ளது என்பதே. நான்கு விஷயங்களில் பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல மாநாடு தீர்மானித்தது. 1. ஊழலற்ற பள்ளிகள் என்ற தலைப்பில் ஊழல் பற்றிய கல்வி மற்றும் தகவல்களை பிரச்சாரம் மூலம் கொண்டு செல்லல், 2. நம்பிக்கையின் அடையாளங்களைப் பிரசுரம் செய்தல், 3. குறிப்பாக திருச்சபைகள், தனிநபர்கள், மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைளை அளக்க ஊழலுக்கு எதிரான விதிமுறைகளை உருவாக்கி அமுல்படுத்தல், 4. ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராக தொடாந்து வாதிடுதல்.

இந்த முதல் விஷயம் 2001ல் ஒரு ஆய்வுக்கு இட்டுச் சென்றது. இது பிரச்சினையின் அவசரத்தை சொன்னதுடன், பிரச்சாரத்தை கொண்டு செல்ல சரியான திட்டத்தை வரையறுக்கவும் துாண்டியது. Bread for all ஸ்விட்சர்லந்து நிறுவனமும், பின்னர் ஜெர்மனி EED நிறுவனமும் இந்தப் பிரச்சாரத்திற்கு உதவி செய்ய முன்வந்தன, தவிர பள்ளிகளில் ஊழல் இல்லா நிலை 2002ல் ஆரம்பித்து இன்று வரை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

(2002 -2004) வரையான முதல் மூன்று வருடங்கள் தெரிவு செய்யப்பட்ட சில பள்ளிகளில் மேற்கு ஆப்பிரிக்காவில் ஊழலைத் தடுத்து நிறுத்த இலக்கு நியமிக்கப்பட்டது. பிரச்சினையின் விழிப்புணர்வு பலப்படுத்தவும் இலக்கு நியமிக்கப்பட்டது. ஐந்து நாடுகளான பெனின், ஐவரி கோஸ்ட், கானா, தெற்கு நைஜீர்ய, வடக்கு நைஜீரியா தேர்ந்தெடுக்கப்பட்டன. பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் பேசும் நாடுகளில் இந்த இரண்டு மொழிகளில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் பல பள்ளிகள் (கிறிஸ்தவப் பள்ளிகள் மற்றும் பொதுப்பள்ளிகள்) தேர்ந்தெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்டத்தில் திட்ட இலக்கான மக்களாக பள்ளித் தலைமை ஆசிரியர்கள், எல்லா மட்ட ஆசிரியர்கள்,

பள்ளிகளின் நிதிப் பொறுப்பாளர்கள், மற்றும் திருச்சபைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத் திட்டம் தேசிய Transparancy International, உள்ளூர் மற்றும் தேசிய கல்வித் துறைகள், ஆசிரியர் பெற்றோர் கழகங்களுடன் உறவு கொண்டது. அகில உலக திட்ட ஒருங்கிணைப்பாளர் கானாவிலுள்ள அக்ரா நகரில் இருந்து கொண்டு, ஐந்து தேசிய ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் திட்டத்தை செயல்படுத்தினர். 'ஊழலற்ற பள்ளிகள் அமைப்போம்; மகிழ்ச்சியான தேசம் பெறுவோம்' என்பதே இதன் கோஷம். இலக்கு பள்ளிகளில் ஊழலில்லாத நிலையே. இதன் செய்தி 444 பள்ளிகள் இதில் பங்கேற்றன. 6,10,000 குழந்தைகள் (271 பள்ளிகளில்) கானா மற்றும் தெற்கு நைஜீரியாவில் மட்டும்.

### 3.1.4 கேமரூன்:

NGO மற்றும் திருச்சபைகளுக்கான நடத்தை விதி 1998, 1999ம் ஆண்டுகளில் உலகத்தில் மிக மோசமான ஊழல் நாடாக கேமரூன் நாடு TI குறியீடு அளந்தது. இங்குதான் திருச்சபைகளுக்கும் NGOக்களுக்குமான முதல் நடத்தை விதிகள் உருவாக்கப்பட்டன. Bread for all நிறுவன உதவியுடன், 15 தேர்வு செய்யப்ட்ட நிறுவனங்களில், ஐந்து சிறப்பாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு ஊழல் மற்றும் எதிர்கொள்ளும் நிலையை விளக்கின. இந்த ஆய்வின் முடிவு மார்ச் 1999ல் யாவுன்டே அருகில் உள்ள மேரல் மெயோ நகரில் நடந்த ஒரு கருத்தரங்கில் பகிரப்பட்டது. இதில் 40 பிரதிநிதிகள் வளர்ச்சி நிறுவனங்கள், விவசாயிகளின் கூட்டுறவு அமைப்புகள், திருச்சபை மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து வந்திருந்தார்கள். இவர்கள் ' ஊழலுக்கு எதிரான மற்றும் வெளிப்படைத் தன்மைக்கு ஆதரவான' நெறிமுறைகள் திருச்சபைகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் உருவாக்கப்பட்டன (Appendix A3) இந்த நடத்தை விதிகள் முதலில் நிதி சம்பந்தமான ஆவணங்களை பிரசுரித்தல், ஜனநாயக ரீதியான அமைப்புகளை உருவாக்கல், அதிகாரங்களை வரையறுத்தல், மற்றும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்போரை பாதுகாத்தல் இவைகளில் அடங்கியது. இந்த விதிகளில் 25 மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள், கேமரூன் திருச்சபைகள் மற்றும் Bread for all கையெழுத்திட்டன. FECCIWA இதனை பரிந்துரை செய்தது. ஏழு மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு சொன்னது. இந்த விதிமுறைகள் இந்தியா மற்றும் ஜெர்மனி UEM ஐ ஈர்த்தன (பார்க்க Appendix 2 மற்றும் Appendix 8)

இந்த விதிமுறைகள் வகுக்கும் போதே இதன் தொடர் நடவடிக்கை அனுபவங்களை விமர்சிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் கையெழுத்திட்ட அனைத்து நிறுவனங்களும் அழைக்கப்பட்டன. இதற்கு மூன்று நோக்கங்கள் இருந்தன. 1. இதை அகில உலக அளவில் வெளிப்படுத்துவது 2. இதில் கையெழுத்திட்டவர்கள் எந்த அளவிற்கு இதை அமுல்படுத்தியிருக்கிறார்கள் என்று அறிவது 3. மற்ற அமைப்புகளுக்கும் விரிவுபடுத்துவது. 2002 அக்டோபர் 25-27ல் இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

பங்கேற்பாளர்களின் அறிக்கை இந்த விதிமுறைகள் கைச்சாத்து இட்ட அனைத்து நிறுவனங்களிலும் நல்ல முன்னேற்றத்தைத் தந்ததாகக் கூறுகிறது. குறிப்பாக அ) ஆளுகை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் விழிப்புணர்வு உயர்வு ஆ) ஊழல் நீக்க உயரிய விடைகள், இ) இந்த அமைப்பு முறைகளில் மாற்றம் குறிப்பாக அதிகாரம், கட்டுப்பாடு நிறுவனங்களுக்கு வெளியே ஊழல் கட்டுப்படுத்த இயலவில்லை. குறிப்பாக பொதுச் சேவைகளில் ஊழல் கட்டுக்கடங்கவில்லை. Appendix A3 ல் தெரிவித்துள்ளபடி, விதிமுறைகளில் உபரிச்சேர்க்கை ஏற்பட்டது. ஊழலுக்கு எதிரான விதிமுறைகளை அமுல்படுத்திட கமிட்டி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. (குறிப்பாக கைச்சாத்து இடும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, மற்றும் TI உடன் அவற்றின் தொடர்பு, அடுத்த கருத்தரங்கை ஏற்பாடு செய்வது ஆகியவை)

### 3.1.5 அனைத்து ஆப்பிரிக்க திருச்சபை மாநாடு; பரிந்துரைகளும் சமூகத் தணிக்கையும்:

Appendix A4 ல் கூறியபடி, நவம்பர் 2003ல் யாவுண்டி, காமரூனில், நைரோபியைத் தலைமையிடமாகக் கொண்டதும், 39 ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்ததும், 120 மில்லியன் திருச்சபைகளை உடையதும், 172 உறுப்புத் திருச்சபைகளை உடையதுமான அனைத்து ஆப்பரிக்க திருச்சபை மாநாடு (AACC), தனது 8வது அசெம்பளியில் ஊழலுக்கு எதிரான தீர்மானப் பரிந்துரைகளை ஏற்றது. 'வாருங்கள், திரும்பக்கட்டுவோம்' என்ற தலைப்பில், 'சிதைந்துள்ள ஒழுங்கீனக் கட்டுமானங்களினால் சிதைந்து போன நமது சமூக பொருளாதார அரசியல் அமைப்புகளை மீட்க திருச்சபைகளுக்கு அழைப்பு எனும் பெயரில்' இது நடந்தது. பிஷப் தண்டலா, 2003- 2008க்கான பொதுக்காரியதரிசி இப்பிரச்சினையில் மிகவும் ஒப்படைப்பு உள்ளவராக இருந்தார். பொதுக்காரியதரிசியாக நான் ஸ்விஸ்ஸின் Bread for All நிறுவனத்திற்கு, இருக்கும் சமயம் சமூகத் தணிக்கை எனும் திட்டத்தில் அவர் ஈடுபட்டார். மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்யும் முன்னர் தனது வீட்டைச் சுத்தம் பண்ணிவிட, இதற்கு முன்னால் அவரது முந்திய ஆட்கள் செய்தவைகளை விமர்சனத்துக்கு உட்படுத்தினர். CORATஆப்பரிக்கா எனும் வெளி நிறுவனத்தால் இந்த வெளித்தணிக்கை செய்யப்பட்டது. இந்த தனியாள் மீது குற்றம் சுமத்திட அல்ல, மாறாக நிறுவனத்தின் நிதி ஆளுமையை மீள்பார்வை பார்ப்பதும், தனி நபர் கணக்கொப்புவிப்பு, நிறுவன, சமூக, அரசு கணக்கொப்புவித்தலை பார்ப்பதும், கண்டத்தில் ' ஒழுக்க மற்றும் நன்னெறிக் குரலாக இறையியல் நிலைப்பாடுகளை திருச்சபை உறுப்புகளில் கொண்டு வருவதுமாகும்'

இந்த சமூகத்தணிக்கை கணக்கு ஒப்புவித்தலில் குறை மற்றும் ஊழலின் பல்வேறு உள் பரிமானங்களைக் கண்டறிந்தது. ' சரியான கட்டுப்பாடுகள் இல்லை, நிறுவன நிர்வாக அதிகாரி பல காலம் இல்லாதது, நிறுவனமாக

இப்பிரச்சினைகளை மீள்பார்வை பார்க்காமை, பதவிக்கு தக்கவாறு ஊதியத்தில் சமமின்மை' போன்றவை பிரச்சினைகளாகக் கண்டு பிடிக்கப்பட்டன. தவிர மனரீதியான உளவியல் பயம். நீண்ட நாட்களாக மீள்பார்வை பார்க்கப்படாத AACCன் அரசியலமைப்புச் சட்டம், தேர்தல் வழி முறைகள், ஊதியங்கள் ஆகியவையும் பிரச்சினைக்கு காரணங்களே. நிதி நிறுவனங்களும் உடன் பொறுப்பாளர்கள் தான். அறிக்கைகளைக் கேட்காதது, கணக்கொப்புவித்தல், ஆளுமைகளை மீள்பார்வை பார்க்காது, AACC ன் முழுமைக்கான திட்ட ஒப்பந்தமில்லாமல் தனி அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதும் காரணங்களே. பதவிகள் வேலைகளுக்கு பொது அறிவிக்கை வெளியிடப்படவில்லை.

இதன் காரணமாக கீழ்க்கண்ட பரிந்துரைகள் வந்தன. பாலியல் கொள்கை, வேலைக்கு ஆள் எடுத்தல் கொள்கை உட்பட பல கொள்கைகள் சீரமைக்கப்பட வலியுறுத்தப்பட்டன. வேலை செய்யும் பணியாளர்களுக்கென விதிமுறைகள், தவிர விதிமுறைகள் கொள்கை உருவாக்குபவர்களுக்கும், ஆணையங்களுக்கும், பங்காளர்களுக்கும், கொள்கை உருவாக்கம் செய்பவர்களுக்குரிய பலன்களுக்கான நெறிமுறைகள் உட்பட உருவாக்க வலியுறுத்தப்பட்டன. AACC ன் செயல்குழு சமூகத்தணிக்கை அறிக்கையைக் கொண்டு, அனைத்து AACC உறுப்பினங்களும் தங்கள் செயல்பாடுகள் குறித்து தகவல் பரிமாற அழைக்கப்பட்டனர். எல்லா பள்ளிகள் மருத்துவமனைகள், அலுவலகங்கள் ஊழல் இல்லாத இடங்களாக, மேற்படி இலக்கை அடைய அறிவிக்கப்பட்டன.

2006ல் பிராந்திய மணிமனைகள் நடந்தன, குறிப்பாக AACC பிராந்தியங்களான கிழக்கு, தெற்கு, மத்திய, மேற்கு, வடக்கு ஆப்பிரிக்காவில் சமூகத் தணிக்கையை விவாதித்து அதை அமுல்படுத்திட எல்லா நிலைகளிலும். 2003 யாவுண்டி நகர அறிக்கையும் 2008 மாபுடோ அசெம்பளி அறிக்கையும் நடந்த செயல்பாடுகளை விவரிக்கின்றன. அமைப்பு முறைகளில் முன்னேற்றம் என்பதே குறிக்கோள். ஊழலுக்கு எதிர் என்ற கோரிக்கை மறைபொருளாக இருந்தது.

சமூகத் தணிக்கை, ஒப்படைப்புள்ள ஒரு AACC ன் பொதுக்காரியதரிசி ஒருவரால் சாத்தியப்படும் என்பது தெளிவாயிற்று. அதுவும் தலைமைப் பொறுப்பு அமைப்பின் கொள்கை அடிப்படையில் அது சாத்தியமாயிற்று. இந்த மீள்பார்வை திருச்சபை அமைப்புகளை மீள்பார்வை பார்த்தது; அமைப்புச் சட்டங்கள் (1960 லிருந்து அவை மீள் பார்வை பார்க்கப்படவில்லை; 1960 என்பது சுதந்திரத் திருச்சபை உருவாக்கல் நேரம்) விதிமுறைகள், தேர்தல் ஒழுங்குகள், தேர்வு முறைகள், ஊதியங்கள் அகில உலக தரத்திற்கு அரசியல் தளம், தனியாள் தளம், மற்றும் குடிமைச் சமூகத் தளங்களில் உள்ளவை பேசப்பட்டன. இந்த நடைமுறைகள் பல திருச்சபைகள் மெய்யான பாதையில் நடக்க தீர்மானித்ததைக் கண்டன. இதற்கு பெரும் தீர்மானம், மற்றும் இதை நடை முறைபடுத்த பெரும் மறுமாற்றம் தேவைப்பட்டது. தவிர 2010ல் பார்த்த போது ஆப்பிரிக்காவில் திருச்சபை நிறுவனங்களில் தொடர்ந்து ஊழல் என்பதை இந்த எழுத்தாளர் பல நாடுகளில் உள்ள ஊழியர்கள் மூலம் அறிகிறார்.

### 3.1.6 எல்லா கண்டங்களிலும்: திருச்சபை பிரச்சாரங்கள், வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்

பெரும்பாலுமான நாடுகளிலும் சமூகத்திலும் திருச்சபையிலும் உள்ள ஊழல் எதிர்க்கப்படுகிறது. இதில் வெற்றியுள்ளது, தடைகளும் உள்ளன. கீழ்க்கண்ட உதாரணங்கள் சிறந்த நேர்மறை முயற்சிகளை விவரித்து நம்பிக்கையின் அடையாளம் தருகின்றன.

ஒசினியா: பிஜியில், பிஜி கவுன்சில் ஆப் சர்ச்சஸ் 2006ல் தமது பகுதியில் ஊழல் ' மிகுந்த கவலை' தரும் விஷயமானதை கண்டறிந்தது. முஸ்லீம் அமைப்பும் அப்படியே கருதியது. Tonga Report இலவச வெகுமானங்கள் பற்றியும், ஒய்வு பெறும் ஊழியர்களுக்கு தரும் இலவச வெகுமானங்கள் பற்றி கவலை அளிக்கும் Tvala அறிக்கையும் வெளிவந்தன. இதைச் செயல்படுத்திட அவர்கள் உறுப்பினர்களில் மிகுந்தும், வெளிநாட்டு உதவித்தொகையிலும் இருந்து பெற்று ஊழலுக்கு பாத்திரவான்கள் என்றார்கள். கிரிபாடியில் இப்படிப்பட்ட மீறல்கள் தண்டிக்கப்படவில்லை. சமோவான் திருச்சபையில் திருச்சபையின் கணக்கு என்பது இல்லை.

ஆஸ்திரேலியாவில், 2008ல் ஆஸ்திரேலியா Uniting Church from Corruption to Good Governance' என்ற அறிக்கையை வெளியிட்டு, வரி ஏய்ப்பில் ஊழல் செய்யும் உண்மை ஊழல் வாதிகள் வசதியான நாடுகளில் உள்ளவர்களை வெளிச்சத்திற்கு அழைத்தது. ஜீலை 2009, Dr. நோயல் பிரஸ்டன் என்ற நெறியாளர், Uniting Church ஊழியர்களை ஊழலுக்கு எதிராக வேலை செய்ய அழைத்தார்; 'ஊழல் செய்ய அனுமதிக்காதீர், அதற்கு மறுத்தால் அடுத்த மனிதனை நேசிக்க மறந்து விடுவோம்' என்றார்.

<u>வட அமெரிக்கா:</u>

158 மில்லியனைக் கொள்ளையடித்த ஜிம் பேக்கர் என்ற தொலைக்காட்சி சுவிசேஷகர் அமெரிக்காவில் 1989ல் ஜெயிலில் அடைக்கப்பட்டார். 2006ல் பாப்டிஸ்ட் பவுன்டேஷனைச் சேர்ந்த இரண்டு பேர் குற்றம் புரிந்தவர்கள் என நிருபிக்கப்பட்டார்கள் அமெரிக்க வரலாற்றில், கிறிஸ்தவத்தில் ஊழல் பெரிய அளவில் 550 மில்லியனை பவுன்டேஷன் இழந்தது. அமெரிக்க திருச்சபையின் 20 % உறுப்பினர்கள் 2005 நியூஸ் டே அறிக்கையின்படி, திருச்சபை நிர்வாகத்தில் பணம் இழக்கிறார்கள் என்றது. பாஸ்டர்களுக்கும் சர்ச் பொருளாளர்களுக்கும் நிதி நிர்வாக கல்வி அவசியம்.

USAல் Abundand life Christian Academy Foundationல் திருச்சபை நிதியில் ஊழல் நடந்தது.

USAல் சுவிசேஷத் திருச்சபைகளிலும் TV நிறுவனங்களிலும் ஊழல் நடந்தது.

USAல், 2011 Do No Harm பாலியல் பிரச்சனைகளுக்காக நடந்தது. இதில் எப்படியெல்லாம் பாலியல் ரீதியான பிரச்சினைகள் கொடுந்துன்பங்கள் நடக்கின்றன என்று பார்க்கப்பட்டது. குறிப்பாக பாஸ்டர்களும், சபை உறுப்பினர்களும் தவறான பாலியல் நடவடிக்கைகளை Uniting Methodist Church ல் செய்கிறார்கள் என்ற தகவல் வந்தது. ஹவுஸ்டனில், ஜனவரி 2011ல் கமிஷன் பெண்களின் நிலை மற்றும் பங்கு குறித்து பேசப்போகிறது.

<u>லத்தீன் அமெரிக்கா:</u>

பிரேசிலில் ஆய்வுகள் ஊழலை வேரறுக்க உதவுகின்றன. புலனாய்வு பத்திரிக்கைகள் மற்றும் அறிவர் ஆய்வுகள் உதவுகின்றன. சாவோ பவுலோவில் உள்ள மெதடிஸ்ட் யுனிவர்ஸிடியில் நடந்த ஒரு அறிவர் ஆய்வு பெந்தகொஸ்து பார்லியமெண்டேரியன்களின் ஊழலை வெளிக்கொணர உதவிற்று.

அர்ஜென்டினாவில், ஒன்பது புராட்டஸ்டண்டு சர்ச்சுகளும், 5 அனைத்துத் திருச்சபை நிறுவனங்களும் வட உலகில் உள்ள சகோதரி திருச்சபைகளுக்கும், நிறுவனங்களுக்கும் வெளிப்படையான கடிதம் ஒன்றை 20 டிசம்பர் 2001ல் எழுதின – அர்ஜென்டினாவின் பொருளாதாரப் பிரச்சினையில் தங்களுடன் தோள் கொடுத்து உதவிடவேண்டும். கடன் மற்றும் ஊழலுக்குமிடையேயுள்ள தொடர்வைச் சொன்னன. தவறான அநீதியான பொருளாதார உறவில் வளரும் கடன் சட்ட விரோதமானது. ஊழலை ஊழலைக் கண்டு கொள்ளாத நிலையையும் இது உருவாக்கிறது என்றன. அகில உலகக்கடன் பிரச்சினையை நீக்க எங்களுக்கு உதவிட வேண்டும் என்ற அவை கேட்டுக் கொண்டன.

<u>ஐரோப்பா:</u>

2008ல், ஜெர்மனியில், புராட்டஸ்டு நிறுவனங்களும் TI ஜெர்மனி அமைப்பும் இணைந்து வளர்ச்சிப் பணியில் ஊழல் பற்றியும் அதை நிவர்த்தி செய்வது பற்றியும் ஆய்வு செய்து வெளியிட்டனர்

பிப்ரவரி 2009ல் ஜெர்மனியில் Bread for world ம் EEDம் இணைந்து 'வெளிப்படையாக நடப்பதற்கு தைரியம்' என்ற தலைப்பில் ஊழலை ஒழிக்கும் அணுகுமுறைகள் குறிப்பாக வளர்ச்சி மற்றும் அவசர கால பணிகளில் சர்ச்சுகளில் கூறினர்.

ஸ்விட்சர்லாந்தில் ஊழல் செய்ததற்காக ஆல்ப்ஸ் மலையில் ஒரு பாஸ்டர் சிறு திருச்சபை ஒன்றிலிருந்து நீக்கப்பட்டார்

2002லிருந்து ஸ்விட்சர்லாந்தில் ஊழல் இல்லாத பள்ளியில் (திருச்சபை சார்ந்த பள்ளியல்) திட்டமொன்றை உதவிசெய்தது.

ஆப்பிரிக்கா:

- மே 2009ல் தான்சானியாவில் மதத் தலைவர்கள் ஆப்பரிக்க அரசியல் தலைவர்களுக்கு சவால் விடுத்தனர். NEPAD திட்டத்தினைக் குறித்துப் பேசினர். ஊழலுக்கு எதிரான இறையியல் மற்றும் படிப்பு தகவல்களை தான்சானியா திருச்சபை வெளியிட்டது.
- 2009 ஏப்ரலில், கானாவில் ' ஊழலை ஏற்க முடியாது – கானாவின் ஊழலுக்கு எதிரான மதத் தலைமைகள்' என்ற கருத்தரங்கில் சர்ச் மற்றும் மதத் தலைவர்கள் பங்கேற்றனர். சர்ச்ல் மிக ஊழல் இருப்பதை ஏற்ற அவர்கள், அதற்கு எதிரான நிகழ்வுகளை தீர்மானித்தனர். பேராசை, சுயநலம்,பொறாமை, விளம்பர அலங்காரம் மற்றும் சொத்துக் குவிப்பு ஆகியவை ஊழலை ஊக்குவிக்கும் ஒட்டுநர் சக்கரமாக திருச்சபையில் உள்ளது என்றனர்.
- 2008ல் லைபீரியாவில் கவுன்சில் ஆப் சர்ச்சஸ், வேர்ல்டு விஷனுடன் சேர்ந்து 'ஊழலுக்கு எதிரான ஜெபம், லைபீரியாவில் ஒப்புரவாடுதலை' நடத்தின.
- 2004ல் AACC அசெம்பளி நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் 2005-2008க்கான நிகழ்வாக சமூகத்தணிக்கை இருந்தன. இத்துடன் நிர்வாக மேம்பாடு பிராந்திய உப பிராந்திய தளங்களில் கொண்டு செல்ல ஊக்குவிக்கப்பட்டன.
- மடகாஸ்கரில் இயேசு கிறிஸ்துவின் திருச்சபை, நாட்டில் பெரியது, 1998ல் ஊழலை எதிர்க்க ஆணையம் ஒன்றை தோற்றுவித்து, அரசின் உயர் பெருமை பெற்ற முன்னாள் அரசு அமைச்சரை தலைவராக நியமித்தது. 1999ல் திருச்சபை ஊழலுக்கு எதிரான அணுகுமுறைகளை வெளியிட்டது. 2001, 2002ல் ஜனாதிபதி தேர்தலின் போது முக்கிய வெளிப்படைப் பங்காற்றியது. ஆணையத்தின் தலைவரோ, திருச்சபையும் ஊழல் நிறைந்ததே. பல அரசு ஊழியர்கள் திருச்சபை உறுப்பினர்கள் என்றார். TI யுன் கூட்டுப்பணியை ஆணையம் செய்தது.
- ஜிம்பாப்பே அனைத்து திருச்சபை 1998ல் ஊழலுக்கு எதிரான நீண்ட அறிக்கை வெளியிட்டது. 2000 பொதுத் தேர்தலை தேர்தல் வலைப்பின்னல், TI ஜிம்பாப்வே அமைப்புடன் இணைந்து ஆதரித்தது. ராபர்ட் முகாபேகு எதிர் நிலையை எடுத்தது. ஜீலை 2001ல் ஊழலுக்கு எதிரான அறிக்கையை வெளியிட்டது.
- நைஜீரியாவில், ஜனாதிபதி தேர்தல் 1999க்கு பிறகு, நைஜீரியா திருச்சபை தலைவர்கள் ஊழலிலிருந்து அரசை விடுவிக்க புதிய அரசைக் கேட்டுக் கொண்டனர் மாறாக முன்னாள் ஜனாதிபதி,நைஜீரியா சர்ச்களை ஊழல் சபைகள் உங்களுக்குள்ளே இருக்கும் ஊழல்களை முற்றுக் கொண்டு வாருங்கள் என்றார். திருச்சபைப் பணியாளர்களாக இருக்க போதிய தகுதிகளை பல திருச்சபை தமது பணியாளர்களுக்கு தந்தன.

- கானாவில் திருச்சபை மற்றும் சமூகத் துறை, கானாவின் கிறிஸ்தவ கவுன்சிலின் ஒரு பங்கும், தேசிய கத்தோலிக்க செயலகமும் 1999ல் கிறிஸ்தவ வாரத்தில் ஊழலுக்கு எதிரான புத்தகமொன்றை வெளியிட்டனர்.
- காமரூனில், 1998ல் கத்தோலிக்க பேராயர்கள் சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிலவும் ஊழலை எதிர்த்தார்கள். 1998ல் காமரூன் பிரஸ்பைட்பீரியன் சபை அரசின் ஊழல் எதிர் நடவடிக்கையை வர வேற்றது. அ)சுதந்திரமான மனிதர்களை விசாரணைக்கு நியமிப்பதும், குறிப்பாக ஒழுக்க ரீதியான ஆட்களை நியமிப்பது மற்றும் ஆ)ஊழல் பெருச்சாளிகளை அரசு தண்டிப்பதால் ஏற்படும் மக்கள் நம்பிக்கை இது இரண்டையும் சினாடு வலியுறுத்தியது.
- கேமரூனில் FEMEC சர்ச் Jugulate Corruption என்ற புத்தகத்தை 2000ல் வெளியிட்டது.
- FEMEC இளைஞர் அமைப்பு, கேமரூனில் ஊழலுக்கு எதிரான விதிமுறை நடத்தைகளை ஆகஸ்டு 4 to 8 தேதிகளில் 2002ல் வெளியிட்டது.
  (பார்க்க Appendix A5)

ஆசியா:

களிமந்தன், இந்தோனேசியாவில்,பிப்ரவரி 2009ல் கத்தோலிக்க புராட்டஸ்டண்டு முஸ்லிம் இளைஞர்கள் ஊழலுக்கு எதிராக நடவடிக்கைக்கும், வன்முறைக்கு எதிராகவும், சுற்றுச் சூழல் பாதிப்புக்கு எதிராகவும் வாக்குக் கொடுத்தனர்.

தெற்கு கொரியாவில், மதத்தலைவர்கள் TI கொரியாவில் 18 பிராந்திய அமைப்புகளை உருவாக்கினர். 19ல் 9 பேர் மதத் தலைவர்கள். பிஷப் சியாங் ஆ கிம், கொரியா ஆங்கிலிக்கன் சர்ச், TI கொரியாவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புத்த, கத்தோலிக்க, புராட்டஸ்டண்டு சபைகளின் ஐக்கியங்கியங்கள் உருவாக்கப்பட்டு, அவைகளால் ஊழல் வேட்பாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். ஊழல் பேர்வழிகளை தள்ளுபடி செய்து பின்னர் வோட்டுப் போடுங்கள் என்று அவர்கள் தகவல் தாள்களைக் கொடுத்தனர்.

தெற்கு கொரியாவில் தமது சர்ச் ஊழலுக்கு எதிராக ஒரு திட்டத்தை உருவாக்கும் என்று ஒரு தலைவர் கூறினர். உங்கள் வாழ்விற்கு உரியதில் எதை இழக்கிறார்களோ அதைத் தருகிறோம் என்றார். என்னுடைய சபையில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றார். இது ஊழலுக்கு எதிரான முக்கிய நடவடிக்கை என்று அருள்திரு. ஜியோ சிங் கிம் தெரிவித்தார். பிலிப்பைன்ஸில் தமது நாட்டில் உள்ள ஊழல் விஷயங்களை வேரோடு பிடுங்கிட பிலிப்பினோ திருச்சபை தலைவர்கள் கத்தோலிக்கர்களுக்கு அழைப்பு விடுத்தனர்.

### 3.1.7 உலகத் திருச்சபை மாமன்றம்:

டிசம்பர் 1998 ஜிம்பாப்வே ஹராரேயில் உலகத் திருச்சபை மாமன்றம் ஊழல் பற்றி தெளிவான அறிக்கை வெளியிட்டது. குறிப்பாக கடன் பற்றி 350க்கும் மேற்பட்ட திருச்சபைச் சமூகம் தமது உறுப்புத் திருச்சபைகளை எல்லா நாடுகளிலும் நன்னெறி ஆளுகை,மற்றும் கடன்களை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் ஊழலின் எல்லா வடிவங்களையும் எதிர்த்து வேலை செய்ய அழைத்தன. தவிர மனித உரிமைகளைப் பற்றி பேசியபோது, ஊழல் மிக மோசமான கொடுரம் என்றன. ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து மனிதர் பாதுகாக்கப்படவேண்டும் என்றனர்.

1999ல், ஊழல் எதிர்க்கவும், WCC ன் மையக் கமிட்டிக்கு தீர்மானம் அனைத்து திருச்சபைகளை மையப்படுத்தி இயற்றவும் நான் முன் மொழிந்தேன். அதன்படி ஒரு தெளிவான அறிக்கை WCC மட்டத்தில் இல்லை எனினும், WCC ம் அதன் பணியாளர்களும் ஊழலை நீக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இந்தியாவில் (பார்க்க 3.1.1) மேற்கு ஆப்பிரிக்காவில் (பார்க்க 3.1.2),மற்றும் மிஷன் அமைப்புகளில் WCC பங்கேற்றது. 1998 முதல் ஆப்பிரிக்காவில் சிறப்புக் கவனம் பெற்றது. ARP எனும் ஆப்பிரிக்க திட்டம் 4 முக்கிய சவால்களைக் கொண்டது. ஒரு தேசியம், வன்முறைக்கு எதிர், HIV AIDSக்கு எதிர், ஊழலுக்கு எதிர் என்பவையே, 2006ல் போர்ட் அலக்ரேயில் நடைபெற்ற அசெம்பளி ஊழலை நேரில் சொல்லாவிடினும்,பொருளாதார நீதி தொடர்பான ஆவணத்தில் சொன்னது. பூமி மற்றும் மக்களை நோக்கி மாற்று உலக மயமாதல்(AGAPE) என்பது அதன் பெயர். ஊழல் எதிர்ப்பு என்பது வறுமை மற்றும் பாலியல் சமமின்மையை எதிர்ப்பது.

2007ல் தான்சானியால் AGAPE நிலைப்பாடு,Ubuta விற்கு எதினை வன்முறை என்று கூறியது. சமூகத்தின் பொறுப்பே அது முழுமையான ஊட்டம் மற்றும் ஊழல் ஒழிப்பு என்றும், ஊழல் வறுமைக்கு தீ ஊட்டுகிறது என்றும் ஊழல் இளைஞர்களுக்கு எதிரானது என்றும் கூறியது.

2009 ஆகஸ்டு 24-25ல் கூடிய கூட்டம் குறிப்பாக WCCன் செயற்குழு 'நெறியுடன் கூடிய வியாபாரம் மற்றும் வஞ்சித்தல் மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கை' அங்கீகரித்தது. நிதிக்கமிட்டி ஆடிட் கமிட்டியின் தணிக்கை எல்லையை விரிவாக்கி, கட்டுக்கோப்புக்கு அப்பால் செல்லும் நிலையில் பணியாளர் குரல் எழுப்புவது நல்லது என்றது. ஜீலை 2010, 29ல்WCC பொதுக்காரியதரிசி ஒலாவ்டிவைட், புதிய லுத்தரன் பெடரேஷன் தலைவர்க்கு ஊழல் மிகப் பெரிய பிரச்சனை என்றார். WCCக்கு நீங்கள் ஒரு நல்ல தோழர் என்றும், உலகப் பிரச்சினைகளான சூழல் பிரச்சினை, கடன் சுமை, திருச்சபை மற்றும் சமூகத்தில் பாலியல் பிரச்சினை மற்றும் ஊழல் எதிர்ப்பு இதில் நாம் ஒத்த கருத்து என்றும் கூறினர்.

### 3.1.8 மறுமலர்ச்சி திருச்சபைகளின் உலக ஐக்கியம், LWF,ACT Alliance:

WARC தனது 24வது பொதுக் கூடுகையில் (ஆக்ரா, 2004) ஒரு செயல்திட்டத்தை வகுத்தது. ஊழலை திருச்சபையிலிருந்து விரட்டி, ஊழலற்ற திருச்சபை உருவாக்க இருக்கும் மற்றும் புதிய திட்டங்களை அமுல்படுத்தலைச் சொன்னது (பார்க்கAACC மற்றும் NCC இந்தியா)

உலக சேவைத்துறை எனும் லுத்தரன் World Federation ன் துறைக்கு கணக்கு ஒப்புவித்தலை ஒரு முக்கிய மதிப்பீடாக நான்கு மதிப்பீட்டில் ஒன்றாக, தனது 2007-2011 அனுகுமுறைத்திட்டத்தில் LWF சொன்னது. LWFன் நடத்தை விதிகள் சட்ட அமைப்பு LWFன் நிவாரண வேலைகளில் பங்காற்றியது. தவிர LWF,Red Cross; Act Alliance, TI மற்றும் இதரர்களுடன் ஊழல் ஒழிப்பு மற்றும் மனிதநேய உதவிகளில் ஈடுபட்டு வருகின்றது. ஜீலை 2010ல் நடைபெற்ற அதன் 11வது கூட்டத்தில், ஜெர்மனி ஸ்ருட்கர்ட்டில் நடைபெற்றது, LWF தனது உறுப்புதிருச்சபைகளை வளம் மற்றும் நிதிகளில் வளர வேண்டும் என்றும் வருவாய் மற்றும் இயற்கை வளங்களில் கணக்கு ஒப்புவித்தல மற்றும் வெளிப்படைத்தன்மை இவற்றில் பலமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றது.

Act Alliance, 100சபைகளின் மறறும் சபை நிறுவனங்களின் கூட்டு, எல்லா ஊழியர்களுக்கும் நடத்தை விதிகள் மற்றும் பாலியல் வன்முறைகளினின்றும், பாதுகாப்பை வலியுறுத்தி சரியான தெளிவான வழிமுறைகளை 'Compliance and Complaints Mechanism ஆக தந்தது' (பார்க்க Appendix 15)

### 3.1.9 ரோமன் கத்தோலிக்க திருச்சபை :

உலகத்தில் பாதிக் கிறிஸ்தவர்கள், 11.66 கோடிப் பேர் 2008ல் கத்தோலிக்கர்கள். கத்தோலிக்க ரோமன் திருச்சபை சார்ந்தவர்கள். இங்கும் ஊழல் பிரச்சினை உள்ளது. இந்த ஆய்வு இதனை ஆய்வதல்ல. மாறாக சில கூறுகளை மட்டும் கூறப்பட்டுள்ளன.

அனுபவங்கள்: 1981ல் பாங்கோ அம்ப்ரோசியனோ ஊழல் பிரபலமானது. வாடிகன் வங்கி தொடர்பானது. வாடிகன் வங்கி, IOR சமீப வருடங்களில் லஞ்சம் மற்றும் பண தவறான பரிவர்தனை பிரபலமானது. இத்தாலிய பத்திரிகை NUZZI இதைக் குறிப்பிடுகிறது. பாதிரிகளின் பாலியல் வக்கிரம் குறிப்பாக இளவயதுடையோர் மீது என்பது மிக மோசம். ஆயிரக்கணக்கானவர் இன்னும் துன்பம் அனுபவிக்கின்றனர் திருச்சபை ஆடிப்போய் நிற்கிறது. திருச்சபை மற்றும் அரசியல் அதிகாரத்தில் வலிமை தொடர்பு ஊழலுக்கு வித்திட்டுள்ளது.

பாலியல் தொடர்பானவை இரட்டை ஒழுக்கம் ஆகியவை கத்தோலிக்க இறையியல் நன்னெறிகளில் நடவடிக்கைகளில் புராட்டஸ்டன்டைக் காட்டிலும் சிக்கலாக உள்ளது. களியாட்டம் ஈடுபடுவது குறித்து திருச்சபை வரலாற்றில் பல தவறுகள் குறிப்பிடப்பட்டு, மறுமலர்ச்சி தோன்றவும் திருச்சபைச் சரித்திரத்தில் இடம் பெற்றது. களியாட்டங்களில் ஈடுபடுவது பல ஊழல் நடவடிக்கைகளை நியாயப்படுத்தியுள்ளது. ஊழலுக்கான தவறான இறையியல் பார்வை அளிக்கிறது.

முயற்சிகள்: அரசியலில் ஊழலுக்கு எதிரான பல தைரியமான கத்தோலிக்க தலைவர்கள் போராடுகின்றனர். தவிர தனியார் துறைகளிலும் நல்ல ஆளுமை, நன்னெறி வியாபாரம் உள்பட ஆனால் திருச்சபைகளில் அதிகாரப்படி நிலைகளில் குரல் மெல்லவே இருக்கிறது. லே இயக்கங்கங்கள், Orders, மற்றும் கத்தோலிக்க சமூக நிறுவனங்களிலும் குரல் பெரிதாக எழும்பவில்லை.

## 3. 2 வளர்ச்சித் பணி நிறுவனங்களின் அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள் :

1990ல், திருச்சபை சார்ந்த அருட்பணி நிறுவனங்கள் ஊழலுக்கு எதிராக முன்னனியில் நிற்கவில்லை, அவர்களது பார்வையில் கணக்கு ஒப்புவித்தல் மற்றும் தரம் முன்னுரிமைகளாக இருந்த போதிலும் அவர்கள் எதிர்செயல்பாடுகளையே செய்தனர். முன் செயல்பாடுகளை அல்ல. ஊழல் பற்றி உள்ளூரில் சொன்னால் நிதி பெறுவதும் சேகரிப்பதும் கடினமாகிவிடும் என்பதை நினைத்திருந்தார்கள். இப்போது மாறிவிட்டது. இப்போது அவர்களுக்கு அணுகு முறைகள், நடத்தை விதிகள், ஒழுங்குகள், கண்காணிப்பு காரியங்கள் உண்டு பிரச்சினைகள் ஆவணங்களாக வெளியிடுகின்றனர். TI யுடன் கூட்டு வைத்துள்ளார்கள்.

### 3. 2. 1 ஜெர்மனி:

புராட்டஸ்டண்டு மற்றும் கத்தோலிக்க அருட்பணி நிறுவனங்கள் மற்றும் TI Bread for the world, மற்றும் EED, ஒன்றாக இணையும் கண்ணோட்டத்தில், 2007-2008ல் ஒரு வழிகாட்டலுக்கு வந்தார்கள், ஊழலை ஒழிக்க. Bread for the World வெளிப்படைத்தன்மை, மற்றும் NGO க்களின் மற்றும் திருச்சபை சார்ந்த அருட்பணி நிறுவனங்களில் நிலவும் ஊழலை ஒழிக்க ஒரு நடத்தை விதிகளை உருவாக்கினார்கள் 2008ல் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்ல ஆளுமையை எதிர்பார்த்தார்கள். 2009ல் Bread for the World price water house coopersன் வெளிப்படைத்தன்மைப் பரிசைப் பெற்றார்கள்.

2007ல் 2 ஜெர்மனி திருச்சபை நிறுவனங்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் மற்றும் அருட்பணி பங்கேற்பில் ஊழல் என்ற செயல்தாளை வெளியிட்டனர். இந்த செயல் குழுவில் பல ஜெர்மன் அருட்பணி நிறுவனங்களின் ஊழியர்கள் இருந்தனர், EED உட்பட, KNH உட்பட, தவிர தனியார் அமைப்புகளும்- அமைப்பு ரீதியான ஊழலைக்

கண்டறிந்தார்கள், குறிப்பாக வடக்கு அமைப்புகள் மற்றும் சர்ச்சுகளில் இது திட்டமிடல், இலக்கை சரியாக அமைக்காது, குறைகள் இருத்தல் குறிப்பாக நிர்வாக அமைப்புகளில், சீர்தூக்கும் அமைப்புகளின் செயல்படாமை. அமைப்புகளின் மதிப்பு குறைவுபடுதல் பற்றிய பயம், தவறான புரிதலுடன் பார்ட்னருடன் தோழமை, நிதி அமைப்புகளின் போட்டி, மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை ஆகியன. தெற்கு உலகின் சர்ச்சுகளில், காரணங்களில் கண்டவை மிஷன் நிறுவனங்களின் பாரம்பரியம், பாஸ்டரல் மற்றும் அருட்பணி கலவை, தீர்மானம் எடுப்போர் மற்றும் பணியாளர்களின் பங்கு (உ.ம்: திருச்சபை தலைவர்களை நம்பிய பணியாளர்கள், மிக குறைந்த ஊதியம்), கண்காணிப்பு அமைப்புகளின் சுதந்திரமின்மை, மக்கள் பங்கேற்பின்மை, மற்றும் வெளிப்படைத் தன்மை இல்லாமை, மற்றும் பொதுப் புரிதல் இல்லாமை ஆகியன. அருட்பணியில் ஊழலை நீக்க பல ஆலோசனைகள் வைக்கப்பட்டன. உதாரணமாக சரியான திட்டமிடல், திட்ட ஒப்பந்தங்களில் ஊழலுக்கு எதிரான ஷரத்துக்கள், மக்களின் பங்கேற்பு, மக்களுக்கு பட்ஜெட் தெரிதல், கணக்கு தெரிதல் போன்றவை, கண்காணிப்பு அமைப்புகளின் மேற்பார்வை, திட்ட அலுவலர்களைத் தேர்வு எடுப்பதில் சுய நலமின்மை, தண்டனைகள், நடுவர் மற்றும அமைப்பு, திட்டச் செயல்பாடுகள் சரியில்லாத பட்சம் கூக்குரல் கேட்பது, TI யின் தேசிய அமைப்புடன் தோழமை, போன்றவை தீர்வை வட மற்றும் தெற்கு அமைப்புகளட இணைந்து செயல்படுதல்.

மார்ச் 2009, 6-7 தேதிகளில் நடந்த மாநாட்டில், TIயும், புராட்டஸ்டண்டு அகாடமி BFWம், Misereorம் மற்றும் அமைப்புகளும் 'வெளிப்படையாக இருப்பதற்கான தைரியம், திருச்சபை மற்றும் NGOக்களுடன் வளர்ச்சிப் பங்கேற்பில் ஊழல் ஒழிப்பை' பேசின. மாநாட்டில் அநேக சரியான பரிந்துரைகள் வந்தன. பங்காளர்கள் என்ற பதம் வெளிப்படைத் தன்மையுடன், கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் நோக்கி வளரும் தணிக்கையை வலியுறுத்தினர். சமூக கலாச்சார நோக்கில் ஊழல், நிதியாளர் மற்றும் பெறுபவர் இடையே பங்கேற்பில் ஒப்பந்தத்தில் ஊழலுக்கு எதிரான ஷரத்துக்களை சேர்த்தல், கண்காணித்தல், நடுவர் மன்றத்தின் தேவை போன்றவை விவாதிக்கப்பட்டன.

2000லிருந்து CARITAS GERMANYன் பொதுக் காரியதரிசி கூர்க் கிரெமர் நல்ல உபயோகமான புத்தகம் ஒன்றை வெளியிட்டார், நல்ல சான்றுகளுடன்.

### 3.2.2 ஸ்விட்சர்லந்து: கிறிஸ்தவ அருட்பணி அமைப்புகளின் திட்டமேலாண்மை:

2001ல், ஸ்விஸ் புராட்டஸ்டண்டு நிறுவனத்தின் Bread for all ன் திட்டம் மற்றும் நிகழ்வுகளுக்கான ஆணையம் தன்னுடைய திட்ட ஊழியர்களிடம் விசாரித்து குறிப்பாக தலைமையத்தில் வளர்ச்சி பணியில் ஊழல் பற்றிய ஆனுபவம், அதை நீக்க தீர்வு இரண்டையும் கீழ்க்கண்ட ஆலோசனைகள் வந்தன.

a) ஊழல் வளர்ச்சிப்பணி மற்றும் சூழலில் இருப்பதற்கான காரணம்:

பணியாளர்களின் பொருளாதார பிரச்சனை, கலாச்சார சூழல், படிநிலை பிரச்சினைகள் மற்றும் அதிகாரம் தொடர்பான நிலைகள் (அலுவலர்களை அடக்குதல்) ; நிதி அமைப்பால் ஒழுங்கீனமான அமைப்புகள், திட்ட கொள்கையில் தெளிவில்லாமை, தெளிவற்ற ஒப்பந்தங்கள், திட்டங்களில் ஒப்பந்தங்களை திட்டமிடுதல் தெளிவில்லை, வெளிப்படைத்தன்மை இல்லாமை முக்கிய காரியங்களில் தெளிவின்மை, உதாரணம் பொருள் விலை, நிதியாளர் இதரர்களுடன் சேர்ந்து இணைந்து நிதி வழங்கல் (Cofinancing ) போன்றவை.

b) திட்ட ஊழியர்களின் ஆலோசனைகள்:

திட்டமிடுதல் சரியாக இருத்தல், விதிகள், பொதுவான சிறப்பு சூழலில் சுற்றியுள்ள சூழலை சரியாக புரிதல், உதாரணம் சட்ட ரீதியான விஷயங்களில் தெளிவு, பங்கேற்பாளர்கள் எல்லா தீர்மானம் எடுக்கும் நிலைகளில் பயன்படுத்தல் சரியான அடிக்கடி பார்டனருடன் பேசி, திட்டத்தை உடமையாக்கல் நேரடி கான்டராக் தருதல், உள்ளூர் பரிசீலனை, சுதந்திரமான தணிக்கை, சரியான PMEI செயல்பாடு ஆகியவை, தவிர செக்லிஸ்டுகள்

2009ல், Bread for allம் TIம் NGO க்களுக்குரிய ஒழுங்குகளை பிரசுரித்தன. HEKS தனது வெளியீடுகளில் ஊழல் விஷயங்களை பிரசுரித்தன. NIGER ல் ஏற்பட்ட வஞ்சிப்பு பின்னர் பொதுமக்களுக்கு அது இது பற்றி கூறியது. இந்தச் செயல்பாடு HEK க்கு வரவேண்டிய நன்கொடையைக் குறைக்கவில்லை, இந்த வெளிப்படைத்தன்மை இன்னும் அதிகமாகவே நன்கொடையைப் பெற்றுத் தந்தது.

CARITAS ஸ்விட்சர்லந்து, அதன் உள் விதிகளை ஊழலுக்கு எதிராக மாற்றியது, சுனாமியின் போது ஏற்பட்ட ஊழல் குறிப்பாக இந்தோனேசியாவில் ஏற்பட்ட 2008 ஊழல் மக்கள் நேரடியாக அதில் பங்கேற்றால் நன்னெறி சரிதான் என்றது. மே 1, 2009ல் CARITAS INTERNATIONAL, ன் தனது திட்டங்களுக்கான ஊழல் எதிர்ப்பு ஒழுக்கங்களை வலியுறுத்தியது. ஒவ்வொரு திட்ட ஒப்பந்தத்திற்கு இது கட்டாயமாயிற்று

### 3.2.3 காமரூன்: உயிர்த்தெழுந்த வார பிரச்சாரம்:

1998லிருந்து, காமரூனின் புராட்டஸ்டண்டு மற்றும் கத்தோலிக்க அமைப்புகள் உள்நாட்டு மக்களால் உயிர்த்தெழுந்த வார பிரச்சாரம் செய்தன. CIPCRE அமைப்பும் FEMEC அமைப்பும் இதை நடத்தின. 2002-2005 வன்முறையை படித்தன. 2002 பிரச்சாரத்தில் ' வன்முறையற்ற சமூகம் உருவாக்க ஊழலையும் பழங்குடிவாதத்தையும் விட்டுவிடுவோம்' என்று பேசின ஊழலையும், பழங்குடிகளுக்கிடையே விரோதப் போக்குகளைக் குலைப்பதுமே வன்முறையற்ற சமூகம் உருவாக்க வழி என்றனர் 2000-2010 வன்முறைக்கு எதிரான பத்தாண்டு பரிசாக இது நடைபெற்றது.

## 3.3 அருட்பணி அமைப்புகளின் அனுபவங்களும் மற்றும் நடவடிக்கைகள் :

3.3.1 உலகத்தில் ஜெர்மன் மிஷன் அமைப்புகளும் அதன் பங்காளர்களுமே ஒப்படைப்புள்ள ஆட்கள் என்பேன். இரண்டு அலைகளாக அவர்கள் ஊழலை எதிர் நின்றார்கள். 1995-2002ல் முதலில்,பின்பு 2007ல் பணியாளர்களுக்கு பயிற்சி,நடத்தை விதிகள்,உள் விதிகள் போன்றவை ஆயுதங்கள். மிஷன் சொசைட்டிகளுக்கு முன்பு, 1995ல் GKKE மிஷன் அமைப்பு ஒரு டாகுமென்டரியை வெளியிட்டது. வளர்ச்சிக்கு எதிர் ஊழல் என்றது 1997ல் மிஷனுக்கு எதிரான ஊழல் என்ற அணியை ஜெர்மனி சேர்ந்த தனி நபர்கள் அருட் பணியில் வேலை பாாத்தோர் உருவாக்கினர்.

EMW பல வருடங்களாக ஊழலுக்கு எதிராக இருக்கிறது தொடர்ந்து தனது பங்காளர்களுடன் பேசுகிறது. Wuppertal ல் 20-21, பிப்ரவரி 2002ல் உலகலாவிய தொழில் கூட்டத்தை நடத்தியது. ஜீன் 2009ல் ஹாம்பர்கில் ஒரு கலந்தாய்வை நடத்தியது. திருச்சபை உறவுகளுக்கு வெளிப்படைத்தன்மை அவசியம் என்றது மார்ச் 2010ல் NCCI மற்றும் டான்சானியா ELCT தங்களது அனுபவங்களை வெளியிட்டன. EMWன் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தமது முழு ஆதரவைத் தெரிவித்தன.

UEM என்ற அமைப்பு தனது செயற்குழுவை ஜீன் 2011ல் கூட்டி ஊழலை விவாதித்தது. TI அமைப்பு உட்பட பலர் பங்கேற்றனர். இது UEM ன் 'ஊழலுக்கு எதிரான நடத்தை விதிகள் மற்றும் ஒழுங்குகளை' வெளியிட்டது. ஆண்டு 2002. (பார்க்க Appendix A8) காமரூனின் விதிகள் (பார்க்க A3) உதவிற்று. UEM உறுப்புத் திருச்சபைகளின் பொருளாளர்களுக்கு Appendix A8 உதவிற்று. 1999 ல் இந்த விதிமுறைகள் ஒரு உலகப்பணிமனையில் பொருளாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

EMS, 2007ல் தமக்கென விதிமுறையை உருவாக்கியது, அத்துடன் விதிமுறைகள் ஒழுங்குகள் 2008ல் இந்த விதிமுறைகளைக் கண்காணிக்க ஆளைப் போட்டன. இவர் குரல் எழுப்புவோரைப் பாதுகாத்தன. எல்லா நிலைகளிலும் அதிகாரங்களை வரையறுத்தன.

EMS அமைப்பு ஜனவரி 2001 ஒரு நாள் ஊழல் ஆய்வு தமது பணி தொடர்பாக நடத்தியது.

3.3.2 ஸ்விஸ் சார்ந்த மிஷன் அமைப்பு மிஷன் 21 என்ற (பேசல் மிஷன் அமைப்பு மற்றும் நான்கு மிஷன் சொசைட்டிகள்) திட்டச் செயல்பாடுகளில் 1 மிஷன் 21ன்படி ஊழல் எதிர்ப்பு மிக முக்கியம். மிஷன் 21 ஊழலை விவாதித்தது.

CWM லண்டனில் உள்ளது. Inside Out என்ற அதன் இதழிலில் ஊழல்

எதிர்ப்புக்கென இணைய தளம் மற்றும் செயல்பாடுகளை அதன் தொடர்பு சபைகளில் ஊக்குவிக்கிறது.

3.4. மற்ற மதங்கள், மதங்களுக்கிடையே ஆன அனுபவங்கள் மற்றும் நடவடிக்கைகள் :

பல்வேறு மத அமைப்புச் சமூகங்கள், மதம் சார்ந்த நிறுவனங்கள் ஊழலுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இந்தோனேசியா, இந்தியா அல்லது NIGERIAவில் பல மதங்கள் உள்ளன. இவைகளுக்கிடையே உள்ள உறவுகள் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை உயர்த்துகின்றன. 2002ல் இந்தோனேசியாவில் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், இந்துத்தலைவர்கள் இணைந்து எழுப்பிய குரல் அரசில் தாக்கம் ஏற்படுத்தியது; திருச்சபை திருச்சபை நிறுவனங்கள் கொடுத்த குரலைக் காட்டிலும் பொதுவான இறையியல் பார்வை, ஆன்மீக பணி, வெளியீடுகளும் முக்கியமானவை. எல்லா மத புத்தகங்களும் ஊழலுக்கு எதிரான செயல்பாடுகள் உள்ளன.

3.4.1 முஸ்லீம் முயற்சிகள்:

சமய நடவடிக்கைகள், ஊழலுக்கு எதிராக உள்ள நடவடிக்கைகள் உட்பட அரசியல் சூழலை மையப்படுத்தியேயுள்ளது. இது எல்லா மதத்திற்கும் பொருந்தும்; சுதந்திரமான செயல்பாடுகள், நிறுவனங்களை விரைவாகச் செயல்படுத்தும். முஸ்லீம் அறிஞர் மூசா, சுகர்னோவின் சர்வாதிகாரத்திற்கு பின் வந்த நிகழ்வுகளைச் சொல்லும் போது மத்தியப்படுத்தப்பட்ட, அதிகாரம் நிறைந்த அடக்குமுறை அரசில், நிறுவனம் தன் தீர்க்கர் வேலையை இழந்துவிடும். ஏனெனில் அரசு கெடுபிடி பண்ணும். ஆனால் நடைமுறை ஜனநாயக அரசில் மக்களை மையப்படுத்திய அதிகாரத்தில், மக்களின் அரசியல் சுதந்திரம் போற்றப்படும் போது, சமூக மத நிறுவனங்கள் புதிய சமூக நெறி முறைகளுடன் அடிமட்ட மக்களை மையப்படுத்தும். ஊழலை எதிர்க்கும் சுயநலச் செயல்பாடுகளை எதிர்க்கும். பல முஸ்லீம் நாடுகளில் அறிஞர்கள், குழுக்கள், ஊழலுக்கு எதிராக செயல்படுகின்றனர்.

3.4.2 புத்தமத முயற்சிகள்:

சென் சியன் ஜென் தனது MBA கட்டுரையில் எவ்விதம் புத்த நெறிகள் ஊழலை மட்டுப்படுத்துகின்றன என தைவான் தனியார் கம்பெனியில் கண்டதை சொல்கிறார். நாலு பெரும் பிரச்சினைகளான 1) நீண்ட கண்ணோட்டமின்மை, 2. நிர்வாக நெறிமுறை இன்மை, 3)புதுமை இன்மை, 4)மற்றவர்கள் மீது கரிசனையின்மையே ஊழலுக்கு காரணம். இவற்றை நிவர்த்தி செய்ய. 1) போதிசத்துவர் காரணங்களுக்கே பயப்பட்டார், ஆனால் சாதாரண மனிதர் காரியங்களுக்கே பயப்படுகின்றனர் 2) நெறி முறைகளுக்கு கீழ்படிதல் நெறிகள்

மற்றும் நன்னெறிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறது, 3) புத்த தர்மத்தின் படி நடத்தல், 4) மற்றவர்கள் மீது கரிசனையாக நடத்தல் என்பவையாம்.

### 3.4.3 மதங்களுக்கிடையே தோழமை, இணையம்

நவம்பர் 2009ல், உலக தோழமையாக அருட்பணி அமைப்புகள் CAFODன் துணையுடன், கிறிஸ்தியன் எய்ட், Tear Fund, Islamic Relief, Uniting Church in Australia ஆகியவையும், கைச்சாத்து இட்டோரும் பலருக்கு கடிதம் எழுதினர் பான்கி மூனுக்கு; என்னவெனில் ' எல்லா மதங்களும் ஊழலைக் கண்டிக்கின்றன' என்ற UNCAC மாநாட்டு தீர்மானத்தோடு வெளிப்படைத்தன்மை மற்றும் சிவில் சமூகப் பங்கேற்பு ஆகியவை நன்னெறிக்கு அவசியம் என்றனர்.

INFOC என்ற ஊழலுக்கு எதிரான அனைத்துலக விசுவாச அமைப்புகளின் தோழமை அமைப்பு 2001ல் உருவாக்கப்பட்டது மே 2001ல் 28,30 தேதிகளில் நடந்த உலக மாமன்றமான ஊழல் எதிர்ப்பு, உண்மையை பாதுகாத்தல் II மாநாடு ஊழலுக்கு எதிராக விசுவாச அமைப்புகளின் பணி இருக்கிறது என்றது. அதற்கான Panel 13 நாடுகளிலிருந்து அமைக்கப்பட்டது. இதில் கிறிஸ்தவர், முஸ்லீம்,யூதர், மற்றும் பஹாய் அமைப்புகள் இருந்தனர். ஆசிரியரும் இருந்தார். கார்டினல் ஆஸ்கார் ரோடிரிக்ஸ் ஹோன்டுராஸ் நெறிப்படுத்தினார் மதங்களுக்கிடையே ஆன அமைப்புகளின் பணி சொல்லப்பட்டது. ஊழலுக்கு எதிராக இப்படிப்பட்டவர்கள் கூடியது இதுவே முதல் முறை. இதற்கு US மாநில அமைப்பும் Dutch அரசம் உதவி செய்தது. ஆசிரியரின் கருத்துப்படி, INFOC உருவாக்கப்பட்டது. INFOCன் நோக்கம் ஊழலுக்கு எதிராக விசுவாச அமைப்புகளை ஒருங்கினைப்பது ஆகும். நாடுகளில் பிராந்தியங்களில் அகில உலக அளவில் நீதிக்காய், வெளிப்படைத் தன்மை உண்மைக்காய் FBOக்களை பணித்து, இடையே தோழமை உருவாக்கல்.

தவிர, இவ்வமைப்பின் நோக்கம் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளை அழைத்து, இந்த விசுவாச அமைப்புகளின் 'ஊழலுக்கு எதிராக கருத்தாக, தனிநபர், அரசின், நிறுவன வாழ்வை மாற்றி அமைப்பதும், தவிர பல்வேறு மத அமைப்புகளை இந்த முயற்சியில் இணைப்பதுமாகும். தவிர பொது அறிக்கைகளை அகில உலக ஊழலுக்கு எதிரான கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் சமர்ப்பிப்பதுமாகும். 'ஊழலுக்கு எதிராக போராடுவோம்' என்ற பணிமனையை INFOC நடத்தியது. அக்டோபர் 2001ல் நடந்த 11வது அகில உலக ஊழல் எதிர்ப்பு மாநாட்டில், பிரேக்கில், மத அமைப்புகளின் பங்கு பிரதானமானது. INFOC உகாண்டா நவம்பர் 2001ல் ஊழலுக்கு எதிரான ஜெப நாளை நடத்தியது. INFOC அதன் வேலையை தொடர்ந்து நடத்த இயலவில்லை', எப்படியாவது அதைத் திரும்ப நடத்துவது நல்லது.

## 3.5 வணிகத்திலிருந்து கற்றுக் கொண்டவவை:

பல நாடுகளிலுள்ள தனியார் வணிக அமைப்புகள் ஊழலில் திளைத்துள்ளன. அதே சமயம் சில நாடுகளில், சில வணிக துறைகளில் ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் உண்டு. TI யின் Global Corruption Report 2009, மேற்படி ஊழலுக்கு எதிரான வாக்குதத்தம் நிறைந்த கருவிகள் வணிகத்துறையில் உள்ளன என்று நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

### 3.5.1 அகில உலக முயற்சிகள்

The UN Global Compact (UNGC), 2000ல் ஆரம்பிக்கப்பட்டது. பத்து கொள்கைகளை உடையது, குறிப்பாக தனியார் துறையில் மனித உரிமைகளை வலியுறுத்துவது. ஆதில் 10வது கொள்கை ஊழலுக்கு எதிரானது. ' வணிகம் ஊழலுக்கு எதிரான பணி செய்யவேண்டும் - அனைத்து தளங்களிலும் அதே சமயம் அது லஞ்சம் லாவண்யத்திற்கு எதிராக இருக்கவேண்டும்' UNGCயில் 7700 கார்பரேட் கம்பெனிகளும், 130 நாடுகளின் பங்குதாரர்களும் அதில் கைச்சாத்து இட்டனர். UNக்கு ஆதரவான மிகப் பெரும் தனியார் துறை முயற்சி இது, குறிப்பாக கம்பெனிகளின் நிர்வாகம் சார்ந்தது. இது ஒரு உதவாக்கரை சாசனம் என்று பலரால் விமர்சிக்கப்பட்டது. ஆனால் தன்னார்வ விதி முறைகளாக இது உள்ளன. தவிர அறிவிக்கை மற்றும் கணக்கு ஒப்புவித்தலை, குறிப்பாக சரியான அறிக்கை வழிகாட்டிகளை இது சொன்னது. கண்காணித்தல் - அறிக்கை அம்சங்களுடன் ஒரு விதிமுறைகள் அல்லது தீர்மானங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. Novartis என்ற கம்பெனியின், தலையெடுத்துச் செல்கின்ற கம்பெனி, முயற்சிகள் ஒரு புதிய புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

The International Chamber of Commerce, பத்து வருடம் மேலாக ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் முதன் புத்தகமான ' ஊழலுக்கு லஞ்சத்துக்கு எதிரான போராட்டம்' 1999ல் வந்தது. அதன் மூன்றாம் தொகுதி 2008ல் வந்தது. கணக்கொப்புவித்தல் சாதனங்கள், தணிக்கை, நிதிக்கட்டுப்பாடு, ஊழல், வரி ஏய்ப்பு விவரங்கள் சொல்லப்பட்டு, அவை சட்டபூர்வமான கட்டமைப்புக்கு உரிய சரத்துக்களை வெளியிட்டன. தேர்தல் சமய நிதிவழங்கல், தர்ம ஸ்தாபனங்களுக்கு நிதி வழங்கல் போன்றவை பிரச்சினைகளாக பார்க்கப்பட்டன. எல்லாவற்றிலும் கம்பெனிகளின் நிதி வழங்கல் மற்றும் வணிகக் கட்டுப்பாடுகள் நிதிவழங்களுக்கு கண்டிஷன் போட்டன. 'அரசியல் காரியங்களுக்கு நிதி வழங்கல் தடுத்தல் என்பது மாதிரி நடத்தை விதியாகப் பார்க்கப்பட்டது' TI இதற்கான அகில உலக வணிக கொள்கையை உருவாக்கி லஞ்சத்திற்கு கடிவாளம் போட்டது.

### 3.5.2 துறை ரீதியான முயற்சிகள், விதிகள்:

UN வணிகத் துறைகள், குறித்த சில ஊழல் வடிவங்களைச் சந்திக்கின்றன. TI லஞ்சம் தருவோர் குறியீடு (BPI), ராணுவத் துறை, தகவல்துறை, எரிசக்தித்துறை, சுகாதாரத்துறை போன்றோரைச் சுட்டிக்காட்டுகின்றன. சுரங்கத் துறை (எண்ணெய், மற்றும் எரிவாயு) தொழிற்சாலைகள் ஆகியவை நுண்ணிய தன்மையுடையன இவற்றின் குறித்த முயற்சிகள் Extractive Industries Transprancy Initiative (EITI) என்ற தலைப்பில் துறை தொடர்பான தீர்வுகளை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

நிதித்துறை தொழில், (உம்) Equator Principle, நிலைத்த மற்றும் சமூகப் பொறுப்புடன் கூடிய முதலீட்டை உருவாக்க உரிய கொள்கைகளை உருவாக்கியுள்ளன. தம் ஒத்த தொழிற்சாலைகளுடன் கூடிப் பேசுவது நன் முயற்சி. பள்ளிகளில் திருச்சபை ஊழல் ஒழிப்பதும் அவ்வாறான விஷயங்களே. முதலீட்டாளார்கள் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிரான முயற்சிகளில் ஈடுபடலாம் ஆனால் செய்யமாட்டார்கள். மத அமைப்புகள் நெறிச் சாதனங்களில் கம்பெனிகள் ஈடுபட உரிய முதலீட்டுக் கொள்கைகளை உருவாக்க பாடுபடலாம். பல Case Studies, கடந்த பத்தாண்டுகளில் பல வணிக நிறுவனங்கள் ஊழல் ஒழிப்பு விதி முறைகள் - சாதனங்களை உருவாக்கியிருக்கின்றன என்பது பெருமைப்படும் விஷயம்.

US வணிகவியலாளர் எடுத்த சர்வேப்படி, நெறி விதிமுறைகள் உள்ள கம்பெனி உலக லஞ்சத்தை ஏற்காது. உலக லஞ்சத்திற்கு வெறும் நெறி விதி முறைகள் பத்தாது. US சட்டப்படி லஞ்சம் கொடுப்பது கொடூரக்குற்றமாகவும், முப்பது வருடத் தண்டனை இருக்கிறது என்றாலும், சர்வே அப்படிக் கொடுப்பது எவ்வகையினும் ஏற்புடையது என்கிறது. முதலில் எடுத்த முயற்சிகள், Case Studies எல்லாமுமே அகில உலகக் கம்பெனிகளிடம் (எல்லாக் கண்டங்களிலும்) உள்ளவையே எனினும் சிறிய நடுத்தர உற்பத்தி மூலம் பொருட்களை தரும் (SME) கம்பெனிகளும் அதன் பரப்பில் வந்தன. தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் எழுந்து வரும் விரைவான பொருளாதார வளர்ச்சி கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள கலாச்சார வேறுபாடுகள் பல பல கவனங்களை நம் கண் முன் கொண்டு வருகின்றன. சட்ட ரீதியில் ஸ்திரமற்ற நிலையில் உள்ள பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது.

'விசில் ஊதல்' என்ற எச்சரிப்பு நிலை தனியார் கம்பெனி களிலும், பொது நிறுவனங்களிலும், NGOக்களிலும் அனுகுமுறைகளாக சாதனங்களாக வருகின்றன. ஒரு நிறுவனத்தில் நடைபெறும் சிக்கலை முதலில் கண்டு அதற்கு எச்சரிக்கை விடுக்கிறவர் ' விசில் ஊதி' என்று எண்ணப்படுகிறார். தவறான

நடவடிக்கை என்பது சட்டத்திற்கு புறம்பானது. லஞ்சம் வடிவிலானது, சுகாதார – பாதுகாப்புக்கு எதிரானது என்கிறது. உள் நிறுவனத்தில் விசில் ஊதிகள் தங்கள் பார்வையைச் சொல்லலாம் (உதாரணமாக குற்றம் சாட்டப்படும் நிறுவனத்தின் ஆட்களுக்கு கூறலாம்) அல்லது வெளிப்படையாக சட்டம் ஒழுங்கு பராமரிக்கும் நிறுவனங்களுக்கு, மீடியாக்களுக்கு சொல்லலாம்.

N.R. நாராயண மூர்த்தி, Infosys அமைப்பின் தலைவர், உலகம் தழுவிய கம்பெனி அது, வணிக நெறிமுறைகளை உடையது, வணிகத்தில் நெறியைக் குறித்துக் கூறும் போது வணிகத்தில் ஊழலை எதிர்ப்பது லாபமானது, சாத்தியமானது... நமக்கு துன்பம் தராதது நமது ஊழல் எதிர்ப்பு நமக்கு நிலைத்த வளர்ச்சிக்கும் செயலாக்குதலுக்கும் லாபம் தரக் கூடியது என்கிறார். இப்படி இருப்பதால்தான் உலக வணிக துறையில் சந்தர்பங்களைப் பெற்று விளையாட்டில் தீவிர கவனம் செலுத்த முடிகிறது என்கிறார். இந்த தரம் Infosys போன்ற திறமை வாய்ந்த திறன் நிறை பணியாளர் கொண்ட சக்தியை ஈர்க்க முடிந்தது. சூழலில் வெளிப்படையான வணிகம், தனித்த நேர்மை, கடின உழைப்பு ஆகியவை சக்தி வாய்ந்த பொருளாதாரச் சூழலை உருவாக்குகிறது. சமூக பொருளாதார நிலை வளர்கிறது.

## 3.6 அரசியலிலிருந்து கற்றுக் கொண்டவை:

### 3.6.1 அகில உலக அரசுகளின் ஒப்பந்தம் - சட்ட ரீதியில்

21ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில், பன்னாட்டு அளவில், கண்ட அளவில், ஊழலுக்கு எதிராக பல ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு, அவை அரசுகளால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை திருச்சபைகளுக்கும் உரிய சட்டங்களை உருவாக்க உதவுகிறது. குறைந்த பட்ச நெறிமுறைகளை சர்ச்சுகளுக்கு உருவாக்குவதுடன், குறைந்த நிலையிலிருந்து ஆரம்பிக்க உதவுகின்றன. ஐந்து உலகளாவிய சாதனங்கள் முக்கியமானவை, எல்லை கடந்து வடக்கு தெற்கை ஊழலுக்கு எதிராய் திருப்பும் கவனம் பெற்றவை. அவை கீழ்வருமாறு.

**The OECD Convention on Combating Bribery in International Transactions:**

இது 1997ல் கைச்சாத்து பெற்றது. 1999 பிப்ரவரியில் நடைமுறைக்கு வந்தது. பொருளாதார அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. வெளிநாட்டு பொது அதிகாரிகளின் லஞ்சம் வாங்கலைக் குறைக்கிறது. இதற்கு முன்பு லஞ்சம் வரித்தள்ளுபடிக்கு பல தொழில் நாடுகள் உட்பட்டிருந்தது. OECD கன்வென்ஷன் வரும் வரைக்கும் ! இப்போது பொருளாதார நலன் மற்றும் இரு தரப்பு தனிநபர் நலம், சட்ட மாற்று அரசியல் ரீதியான ஊழல் எதிப்புக் கொள்கைக்கு கீழ்படிவது

ஆயுத வியாபாரம் பொறுத்தவரை, அரசின் நிலைப்பாடு, பொருளாதார நலனுக்கு அப்பாற்பட்டது.

The United Nations Conventions against Corruption (UNCAC): இது 14 டிசம்பர் 2005ல் நடைமுறைக்கு வந்தது. 141 நாடுகள் இதில் கைச்சாத்து இட்டன. சட்டத்திற்கு உட்பட்டு நாட்டின் அரசியல் கட்சிகள் பல வகை ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த உதவுகின்றன. நாடுகளின் மாநாடு UACAC தோகாவில் நவம்பர் 2009ல் வந்தது. நல்ல செயல்பாடுகள். சொன்னதெல்லாம் சம தோழர்களின் நடவடிக்கைகளைப் பார்த்தே முன்னேற்றம். நடைபெறுகிறது என்பதே 356 சமூக இயக்கங்கள், 95 நாடுகளைச் சேர்ந்தவை, இந்த கன்வென்ஷனில் வெளிப்படையான, கணக்கு ஒப்புவிக்கும் கண்காணிப்புக் காரியங்களை பல Convention அமுல்படுத்த கோரிக்கை விடுத்தன.

<u>The World Bank's Strategy on Governance and Anti Corruption (GAC )of 2007:</u>

இதன் ஏழு வழிநடத்தும் கொள்கைகள், வங்கியின் கடமையான வறுமை ஒழிப்பை தொடர்புபடுத்தியுள்ளது. அமைப்பு சட்டங்களை சீர்துாக்கலும், எல்லா பங்காளர்களுடனும் தொடர்பும் அதன் கவனம் முக்கியமான கொள்கை 4 'வறுமை ஒழிப்பே உலக வங்கியின் முதல் கடமை, ஏழை நாடுகளை மையப்படுத்தியது, இரு மடங்கு திரும்பச் செலுத்த ஏழைகளை நிர்பந்திக்கக்கூடாது'. ஊழல் நாடுகளை ஆளும் ஆட்களை தொடர்பு வைத்துக் கொண்டே, அவர்களின் செயல்பாட்டை மட்டுப்படுத்துவது. இதற்கு என்ன பொருத்தமான கண்டிஷன் இருக்கமுடியும்? CIDSE என்ற கத்தோலிக்க வளர்ச்சி இணையம் சொன்னது எழுதப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் கடனின் மீது ஏகப்பட்ட கண்டிஷன்களை போடக்கூடாது. தவிர அரசுகளின் பணம் வெளிப்படையாகவும், கணக்கு ஒப்புவித்தலுடன் நடக்க வேண்டும் என்பதே. பங்காளர்களின் கண்காணிப்பில் இது செயல்பட வேண்டும் ; பார்லிமெண்டும் சமூக அமைப்புகளின் கண்காணிப்பும் இதில் அடங்கும். 2007ல் உலக வங்கியும் UNDC எனும் Un Office of Drugs and Crime ம் இணைந்து Stolen Asset Recovery Initiative என்ற ஒன்றை வெளியிட்டன. இதன் நோக்கம் ஊழல் சார்ந்து வெளி நாடுகளில் உள்ள சொத்து பணத்தை பிடுங்கிக்கொள்வது என்பதும், அதை தாய் நாட்டிற்கு கொண்டு வருவதுமாகும்.

<u>The Paris Declaration on Aid Effectiveness 2005:</u>

இது Official Development Assistance ODA ஐ சிறந்து செயல்படவும், குறிப்பாக நிதியில் ஊழல் செய்தலையும் குறைக்கிறது. நிதியாளர்களுக்கிடையே கூட்டுறவு, பரஸ்பர கண்காணிப்பு ஆகியவை இதன் முக்கிய சாதனங்களாகும்.

IMFம் ஊழலுக்கு எதிராக வேலை செய்கிறது. IMF ன் பணம் லஞ்சத்திற்கு தரப்படுவதால், குறிப்பான IMF ன் கடன் ரஷ்யா மற்றும் இதர நாடுகளுக்கு

கொடுத்த வகையில், உலக வங்கியுடன் இது இணைந்து வேலை செய்கிறது. WTO பல சமயம் ஊழல் என்பது வணிகத்திற்கு அப்படிப்பட்டது என்று எண்ணியிருந்தது. எனவே WTO க்கு பொருந்தாது என்று கருதியது. TI மாறாக WTO க்கு சொன்னதினால் செயல்பட WTOக்கு உதவியது. எனவே WTO தனது வட்டங்களில் ஊழல் எதிர்ப்பை கொண்டு வருகிறது.

**கண்டங்களின் அளவில்:**

The African Union Convention on Preventing and Combating of 2013; இது பொது அதிகாரிகளைக் கண்காணித்தாலும், இதன் வட்டத்தில் மீடியாக்களும் சமூக அமைப்புகளும் உள்ளன. இது ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும், ஆப்பிரிக்க யூனியனில், முயற்சிகளுக்கு உதவி புரிய வேண்டும். அரசு கொள்கை அடிப்படையில், திருச்சபைகள் தங்கள் இலக்கு மற்றும் ஆவணங்களை வெளியிடுதல் இதன் அம்சம். AACC ன் தொடர்பு அதிகாரி மேலாக்கு கிப்ளே இதைக் கேட்டார்: 'AACC ன் தொடர்பாளர் என்ற முறையில் நான் ஆப்பிரிக்க யூனியன் தலைவர்களிடம் கேட்டேன் ஏன் ஆப்பிரிக்காவில் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழலை வெளிப்படையாக ஏன் பேசவில்லை என்று அதற்கு அவர்கள் பதில்:' ஆப்பிரிக்க மதத் தலைவர்களுக்கே ஒழுக்க நன்நெறி அதிகாரம் இருப்பதால் தலைமையை வழிநடத்தலை அவர்களே ஏற்க வேண்டும் என்பதே. ' கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு எங்களால் கல்லை எறிய முடியாது' தான் செய்தியை அறிந்து கொண்டேன் என்கிறார்.

NEPAD என்ற ஆப்பிரிக்க வளர்ச்சிக்கான புதிய பொருளாதார பங்கேற்பு, அதன் ஆப்பிரிக்கன் தோழமை மீள்பார்வைக் காரியத்தை APRM உருவாக்கி, தரம் மற்றும் சாதனங்களை தேர்வு செய்த சில நாடுகளில் சமூக அமைப்புகள், சர்ச்சுகளின் தோழமையுடன் நாட்டு அறிக்கைகளை உருவாக்குகிறது. AACC தொடர்ந்து NEPAD ன் செய்தி கடிதத்தை வெளியிடுகிறது. இதில் APRM ல் தேசிய திருச்சபைகளை பங்கேற்க உதவுகிறது. சர்ச்சுகள் நல்ல ஆளுமையை உருவாக்கி, ஊழலைக் குறைக்க உதவுகின்றன.

EU என்ற ஐரோப்பிய யூனியன், தனது நாடுகளுக்கெல்லாம் ஊழலை ஒழிக்க திட்டங்களை உருவாக்கியுள்ளது. 1995ல் பொருளாதார நலன்களை பாதுகாக்கும் கன்வென்ஷனிலிருந்து, பொருளாதார நலனைப் பின்தள்ளும் லஞ்சத்தை ஒழிக்க கன்வென்ஷன் வேண்டிய Protocol களை உருவாக்கி தனது சமூக அதிகாரிகள் மற்றும் உறுப்பு நாடுகளை வழி நடத்துகிறது. EUக்கு பலமான லஞ்சப் பிரச்சினைகள் அதன் உட்கட்டமைப்பிலேயே உண்டு. அதனால்தான் முழு EUஆணையமே 15 மார்ச் 1998ல் ராஜினாமா செய்தது. EU அவசர மற்றும் மனித நேய உதவிகள் அதனால் பாதிக்கப்பட்டன.

கவுன்சில் ஆப் ஈரோப் லா கன்வேன்ஷன் ஆன் கரப்ஷன், நவம்பர் 1999ல் Strasbougல் நடைமுறைப்படுத்தியது நவம்பர் 2003ல் பொதுவான உலக அளவு விதிமுறைகள் உருவாக்கப்பட்டது ஊழலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுபற்றி இங்கு பேசப்பட்டது ஊழலுக்கு எதிரான சட்ட வரைமுறைகள் உருவாக்கப்பட்டன. இது ஊழலைப் புரிந்து கொள்ளவும், நேரடி மற்றும் மறைமுக லஞ்சத்தில் ஈடுபடுவோர் பற்றியும் லஞ்சம் உருவாக்கும் சூழலும் புரிந்து கொள்ளப்பட்டது. இந்தக் கன்வென்ஷன் ஜனவரி 1999ல் வந்தது. நடப்புக்கு வந்தது ஜீலை 2002 இது Council of Europe Criminal Law Convention எனப்பட்டது. தேசிய அளவில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் சொன்னது.

Organization of American States தனது கன்வென்ஷனை 1996ல் நடத்தியது. லஞ்சத்திற்கு விரிவான விளக்கம் தருகிறது. தவறான சொத்துச் சேர்த்தல் பற்றிப் பேசுகிறது.

3.6.2 தேசிய அகில உலக ஊழல் எதிர்ப்பு நிகழ்வு மூலம் அறிதல்:

பல நாடுகளின் முயற்சிகளை அட்டவணைப்படுத்தலாம். எல்லா அரசுகளும் இன்றைக்கு ஏதாவது அளவில் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றன.

தெற்கு ஆப்பிரிக்கா:

நிற வெறிக்குப்பிறகு தென் ஆப்பிரிக்கா ஊழலுக்கு எதிராக நிறைய நடவடிக்கை எடுத்து வருகிறது பொதுவாக பொது நிர்வாகம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் நிறைய திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. TIன் CPI (பார்க்க 2.4.1), போட்ஸ்வானாவுக்கும்,மௌரிஷியஸ் சேவுல்ஸக்கு அடுத்து ஆப்பிரிக்காவில் நாலாவது நல்ல மாநிலமாக அது இருக்கிறது. ஆனால் ஊழலுக்கு பஞ்சமில்லை 1997ல் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தது. 1999ல் அதன் உச்சி மாநாடு நடந்தது. பொது சேவை ஆணையம் பொது ஊழியர்களுக் கென நடத்தை விதிகளை உருவாக்கியது. தவிர வணிகத்தில் வரைவு நன்னெறிக் கோட்பாட்டை உருவாக்கியது. 2001லிருந்து ஊழல் எதிர்ப்பு அணிகளும் பொதுச் சேவை ஊழல் எதிர்ப்பு அணுகுமுறைகள் 2002லிருந்தும் பின்பற்றப்படுகின்றன. ஒன்பது முயற்சிகள் சட்ட அமைப்பை சரிப்படுத்துவது விசில் ஊதுவோரை காப்பாற்றுவது தனிநபர் வணிக ஊழலை கட்டுப்படுத்துவது, நிர்வாக கொள்கை, நிர்வாக நன்நெறி கல்வி, சமூக பகுப்பாய்வு பயிற்சி முதலியன 1999லிருந்து 2005 வரை தேசிய அளவில் ஐந்து சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த பொதுச் சேவை நடத்தை விதிகள் (Code of Conduct) , பொதுத்துறை ஊழியர்களுக்கு தரம் சொல்கிறது. Batho-Pale என்றபடி மக்கள் முதலில் என்ற கொள்கை பொதுச் சேவையைப் பொறுத்த வரை மக்களின் உரிமைகளைக் காட்டுகின்றன.

தெற்கு ஆப்பிரிக்கா ஒரு ஒருங்கிணைந்த தேசிய உண்மை சட்ட அமைப்பை பொதுத் துறை, தனியார்துறை,குடிமைச் சமூகத்திற்கு அளிக்கிறது. தனியார் துறையில் விலை நிர்ணம் என்பது வெளிப்படையாய்த் தெரியாத ஊழல் அம்சம் என்கிறது. வணிக நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் நன்னெறி மற்றும் ஊழல் எதிர்ப்பு நிலைகளைக் கூறவேண்டும் என்கிறது.

GCA எனும் உலகளாவிய ஆப்பிரிக்க அமைப்பு என்பது ஆப்பிரிக்க கொள்கையாளர்களை அதன் பங்காளர்களை ஆழமான உரையாடலுக்கு அழைக்கிறது. அழைத்து ஆப்பிரிக்காவின் முக்கிய வளர்ச்சிப் பிரச்சினைகளை பேசுகிறது. அரசு தலைமையாளர்கள், உலக வங்கி ஆகியோரை அழைத்து ஊழலை ஆப்பிரிக்காவில் வேரறுக்க உதவுகிறது.

ஸ்விட்சர்லந்து:

திட்ட ஒப்பந்தங்களில் ஊழல் எதிர்ப்பு ஷரத்துக்கள். 1999லிருந்து ஸ்விஸ் Agency for Development Cooperation(SDC) ஸ்விஸ் அரசுடையது NGOக்கள் உட்பட ஊழல் எதிர்ப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்து அழைக்கிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் எவரும் இன்னொருவரிடம் எந்த நன்கொடையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெற்றுக் கொள்ளக் கூடாது என்கிறது. Bread for allம் அப்படிப்பட்ட ஷரத்தை வலியுறுத்தியது. மார்ச் 1999ல் சொல்லப்பட்ட காமரூனின் Code of Conduct ஐ வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பின்பற்றியது.

SDC ஒரு உதாரணமே. பல காரியங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக நான்கு விஷயங்கள் 1) கிரிமினால் விதிகள், சட்டங்கள் தண்டனைகள், பண தவறான பரிமாற்றத்திற்கு தண்டனை, இவற்றை கட்டுக்குள் வர தொழில் நுட்ப உதவி, பொதுத்தணிக்கை, நிதி நிர்வாக கட்டுப்பாடு, இவற்றை செயல் அதிகாரிகள் சட்ட நீதி மன்ற அளவில் கொண்டு வருதல்,2) அரசுக்க அப்பால் செயல்படும் புலனாய்வு பத்திரிக்கைகள் பயன்பாடு, மக்களை கற்க வைத்தல், சமூக அமைப்புகளுக்கு உதவி செய்தல், தனியார் துறையில் நடத்தை விதிகளை உருவாக்கல் ஆகியவை 3)அகில உலக Convention களில் கையெழுத்திடல் குறிப்பாக ஊழலுக்கு எதிரான OECD கன்வென்ஷன் 4)பன்முனைகளில் IFI, UN System, Bretton Woods Initiatives களில் நிதி சார்ந்து முயற்சிகளுக்கு உதவுதல்.

Swiss State Secretariat for Economic Affairs (SECO) ஸ்விஸ் வணிகத்திற்கு வழிகாட்டலைத் தந்தன. SECO பயிற்சி மற்றும் ஆலோசனைகளை அகில உலக வணிகத்திற்கு தருகிறது.

## 3.7. தொண்டு நிறுவனங்களிலிருந்து கற்றுக் கொண்டவை :

கடந்த 10 ஆண்டுகளில் கிறிஸ்தவ அமைப்புகள் அன்னியில் பல அமைப்புகளும் ஊழலுக்கு எதிராக தமது அமைப்பு முறைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்து வலப்படுத்தியுள்ளன.

UNCAC Coalition:

356 குடிமைச் சமூக அமைப்புகளை 95 நாடுகளிலிருந்து பெற்றுள்ள இந்த Coalition, UN Convention against Corruption ஐ அமுல்படுத்தியவைகளைக் கண்காணிக்க தனது அமைப்புகளைக் கேட்டுள்ளது. அகில உலக அளவில் இதன் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது. சர்ச் மற்றும் தொடர்பான அமைப்புகளை ஊழலுக்கு எதிராக செயல்படச் செய்வதில் இது உதவுகிறது.

TIம் அதன் நாடு சேர்ந்த கிளைகளும்:

உலகமெங்கு ஊழலை ஒழிக்க உள்ள NGO, பெர்லினில் தலைமையிடம் உள்ளது. 92 நாடுகளில் கிளை. பல சாதனங்களை உருவாக்கியுள்ளது. குடிமைச் சமூகங்களிடம் தொடர்பு வைத்துள்ளது மற்றும் தனியார் - அரசிடமும் சில நாடுகளில் சர்ச் நேரடியாக TI அதன் கிளைகளுடன் தொடர்பு கொள்கின்றன. குறிப்பாக ' தேர்தல் கண்காணிப்பு – உதாரணமாக ஜிம்பாப்வே மற்றும் மடகாஸ்கரில் சர்ச்சுகள் நேரடியாக ஈடுபடுவதில்லை. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த அமைப்புகள் TI யின் பல கிளை அமைப்புகளில் செயல்பாட்டாளர்களாக இருக்கின்றன. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்கள் TI யுடன் தொடர்பு கொள்வது கடந்த காலங்களில் பலமாயிருக்கிறது. உதாரணம் ஜெர்மனி ஆனால் TI யில் திருச்சபை மற்றும் நிறுவனங்கள் அதிகமாக பங்கு பெறவில்லை. TIயின் இணைம் மூலம் நன்னெறி செயல்பாடுகளை அங்கு கொண்டு வரலாம.

TI Switcherland: உதாரணமாக 90 நாடுகளில் ஒன்று அரசியல் பேரம், குறிப்பாக தேசிய சட்டங்களை ஊழலுக்கு எதிராக உருவாக்கல், லஞ்சம் ஊழலை கண்காணித்தல், விசில் ஊதுபவரை காத்தல், பொதுக் கொள்முதல் மற்றும் கட்டிடத் துறையில் கண்காணித்தல், அரசு முயற்சிகளை பலப்படுத்தல். 1995ல் TI ஸ்விட்சர்லாந்தை Bread for all உருவாக்கிற்று. அதன் தலைவராக ஆசிரியர் இருந்தார்.

## கணக்கு ஒப்புவித்தல் அட்டவணை மற்றும் நன்னெறி விதிகள்

1999களில் குடிமைச் சமூக அமைப்புகள் அரசு மற்றும் தனியாரைக் கண்காணிக்கும் அமைப்புகளே. குடந்த 10 ஆண்டுகளில் NGO க்களுக்குள் சுய பரிசோதனை நடக்கிறது. எல்லா NGOக்களுக்கும் ஊழல் எதிர்ப்பு மற்றும் அதன் செயல் நோக்கி கண்ணியமாக இல்லை. சிலர் அரசுப் பணம் வாங்கவே ஊழல் எதிர்ப்பு திட்டம் செய்கிறார்கள் சிலர் கண்ணியமிக்கவர்களாகி, Advocacy பணியில் ஈடுபடுகின்றனர். NGO க்களில் இது வந்த பின் புதிய பரிமானம் நடக்கிறது. Accountability Charter இப்படிப்பட்டதே.

International NGOs:

இவையும் Accountability Charter ல் கையெழுத்திட்டுள்ளன. தரத்தை வலியுறுத்துகின்றன. ஒன்பது கொள்கைகள் அகில உலக கொள்கைகளுக்கு மதிப்பு தருவது, பொறுப்பான Advocacy, பாகுபாடு காட்டாமை, வெளிப்படை, நல்ல நிர்வாகம், நேர்மையான நிதி சேகரிப்பு, சரியான மேலான்மை கடைசியில் ஊழல் எதிர்ப்பு. மனித வள கொள்கைகள் ஊழல் எதிர்ப்பை தரும். பணியாளர்கள் மதிக்கப்படுவார்கள். விசில் ஊதிகளும் சட்டத்திற்கு புறம்பான எச்செயல்களையும் நிர்வாகத்தின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வருவார்கள், இந்த நடத்தை விதிகள் உட்பட.

நடத்தை விதிகளின் பெருக்கம்:

நிறுவனங்களிலும் நன்னெறி விதிகள் வந்துவிட்டன. காமரூன் தொண்டு நிறுவனங்கள் கூட பாலியல் கொள்கை, ஆளுமை கொள்கை, சுதந்திரம், மனிதவளம், நிதி நிர்வாகம், கணக்கொப்புவித்தல் செய்கின்றன விருப்ப முரண்காடுகளை அலசுகின்றன.

நீங்கள் என்ன வாங்குகிறீர்களோ அதையும் பிரச்சாரத்தையும் வெளியே சொல்லுங்கள்:

இது உலக அளவு பிரச்சாரம் இதை செய்வதன் மூலம் வளம் மிக்க நாடுகளின் அரசுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்களின் தொழில்கள் மக்கள் பார்வைக்கு வருகின்றன. 280 நிறுவனங்கள் இதில் உள்ளன. எண்ணெய், எரிவாயு, சுரங்க கம்பெனிகள் அரசுக்கு என்ன கொடுத்தார்களோ அதை வெளியில் செல்ல அழைக்கப்படுகிறார்கள், வரி உட்பட லைசன்ஸ் வருவாய் பங்கீடு, பொருள் கொடுத்திருந்தாலும் கூட எதிர்கால கொடுத்தல் உட்பட Stock Exchange விபரம் உட்பட.

## 3.8 வெற்றியும், தடைகளும்:

திருச்சபை, திருச்சபை அமைப்புகள், வளாச்சித் துறை அமைப்புகள், மிஷன் சமூகம், வணிகம், அரசியல் துறை NGO இவற்றை ஒப்பிடும் போது பொது மற்றும் தனியார் துறைகளோ தலை எடுத்து ஊழல் ஒழிப்பில் ஈடுபடுகிறார்கள். திருச்சபைகள் REACTIVE ஆக இருக்கிறார்கள், சில வருடங்களில் செயல்படுவார்கள். கடந்த 15 ஆண்டுகளை (1995-2010) கீழ்க்கண்ட 3 பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1995 – 2000:

அரசியல் தளத்தில், அகில உலக கன்வென்ஷன்கள் உருவாக்கப்பட்டன. TI

பல விபரங்களை விழிப்புணர்வை அளித்தது. திருச்சபைகளில் சில தனிநபர்கள் மற்றும் சில அமைப்புகளே முயற்சிகளை எடுத்து வருகின்றன. 1999க்கு பின்னரே திருச்சபை சார்ந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டன.

2000- 2005:

முதல் தடவையாக சர்ச்சுகள் இதை செயல்படுத்தின, ஆனாலும் சர்ச்சுக்குள் நிறைய எதிர்ப்பு. சில நிகழ்வுகள், நெறி முறைகள், செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சரியான செயல்பாடுகள் இல்லை

2005- 2010:

முதல் பத்தாண்டு விழிப்புணர்வு 2008 ல் புதிய விழிப்புணர்வை தோற்றுவித்தது. திருச்சபை நிறுவனங்கள் நடத்தை விதிகளை ஏற்றுக் கொண்டன. வெளிப்படை நிர்வாகம் ஊழல் எதிர்ப்புக்கு உரிய வழிமுறைகளை யோசிக்க ஆரம்பித்துள்ளன. பெரிய முயற்சியாக ஊழல் எதிர்ப்பு வந்துள்ளது. சர்ச்சுக்குள் இம்முயற்சிகளை எதிர்ப்பார் இப்போது யாருமில்லை.

ஆனாலும் பேசுவதை செயல்படுத்துவது மிகக் கடினமே சர்ச்சில் இன்னும் ஊழல் நிலவுகிறது. டேபிள் மேலே இப்போது பிரச்சினை உள்ளது. அடுத்த 10 ஆண்டு Systematic ஆகவும் நீண்ட நாள் முயற்சியாகவும் இருக்கும். மதச் சார்பில்லாத அமைப்புகள், மற்ற மதங்களுடன் தொடர்பு வரும். வட உலக மக்கள் தெற்கு உலக மக்களின் ஊழலை கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியாக இது பார்க்கப்படமாட்டாது. இது இணைந்த முயற்சி. அநீதிக்கு எதிரானது. நிதி அளிக்கும் வட உலகத்தாரைக் காட்டிலும் தெற்கு பங்காளர்கள் மிக வேகமாக ஊழலுக்கு எதிராக வேலை செய்கின்றனர் சர்ச் இறையியல் ரீதியில் நெறி நீதியில் ஊழலுக்கு எதிராக பேசுகிறது. பிரசங்கம் மற்றும் இறையியல் கல்வி பிரசுரங்கள் சில நாடுகளில் உள்ளன. இன்னும் செய்ய வேண்டும்.

தடைகள்:

விசில் ஊதுபவர்கள் இன்னும் தடையாக சர்ச்சினால் பார்க்கப்படுகிறது. லே மக்கள் தங்களுக்கு மேலாய் உள்ள மதத் தலைவர்களை விமர்சனம் செய்வது படிநிலை அமைப்பு மற்றும் மத அதிகாரத் தலைமைக்கு சங்கடமாயுள்ளது. பல சமயம் பரிந்துரைகள் வெற்றுத் தாளில் மட்டுமே உள்ளது. திருச்சபை சொத்து நிலம் பிரச்சினைகளைத் தீர்க்க அதிக பணம் தேவை. நல்ல நிர்வாகம் மூலம் நீண்ட நாள் குறைந்த காலத் திட்டத்தில் திருச்சபை நிதி நிர்வாகம் சீர்படலாம் அதற்கு திட்டமிடல் அவசியம். அகில உலக கிறிஸ்தவ கவுன்சில்களான WCC, LWF, WCRC,CCA,CLA,AACC, European CEC, Middle East MECC, CCEE போன்றவை ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் பலத்த செயல்பாடுகள் இல்லை, காரணம் கடந்த 10 ஆண்டுகளில் பணமும் அமைப்பும் பலமிழந்து போய்விட்டன. எனினும் சர்ச்சின் உள்ளூர் உலக அளவு திட்டங்களுக்கு ஆதரவு தேவை. அறிக்கைகள், வழிமுறைகள், வெளியீடுகள்,மற்றும் பணிமனைகள் ஆகியவை இந்த மேற்படி நிறுவனங்களிலிருந்து தொடங்க வேண்டும்.

## அத்தியாயம் - 4

### 4 சமயம் மற்றும் நெறிமுறை அடிப்படைகள் ஊழலுக்கு எதிராக
### 4.1 விவிலிய அடிப்படை:

ஊழல் அநீதியானது பாவம் மனித சமூகம் போலவே ஊழலும் புராதானமானது. ஊழலுக்கு எதிராக நன்னெறிக் கோட்பாடுகளைப் பார்க்கும் போது, விவிளியம் தரும் பார்வைகள் மிகுந்த வெளிச்சத்தை தருகினறன.

### 4.1.1 பழைய ஏற்பாடு ஏழையருக்கு நீதி

பழைய ஏற்பாட்டில் ஊழலுக்கு எதிராக குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தை(யாத் 23: 8) யாத்திராகமம் புத்தகத்தில், பத்துக் கட்டளைகளைத் தாண்டி முன்று அத்தியாயங்களில் கொண்டுள்ளது. ' பரிதானம் வாங்காதிருப்பாயாக பரிதானம் அதிகாரிகளின் கண்களைக் குருடாக்கும். நேரிய வழியில் செல்வோரின் பாதையை இடறச் செய்யும்' அதே போல் நீதி 17:23 ராஜாக்களின் காலத்திற்கு முன்னரே இப்படிச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு சட்ட வடிவமும் நீதியான நிர்வாகத்தை எதிர்நோக்குகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எகிப்திலும், மெசப்த்தோமியாவிலும் ஊழல் இருந்திருக்கிறது. யாத்திராகமத்தில் ஊழலுக்கு எதிரான வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. நன்னெறிக் கோட்பாடுகளைத் தாண்டி, மெய்மை, நீதி மற்றும் சட்ட ரீதியாக ஏழைகளுக்கு தரவேண்டிய பாதுகாப்பு ஏனைய வசனங்களில் உள்ளன. ' பரிதானம் பெற்று குற்றவாளியை விடுவிக்கிறாய் அப்பாவிகளின் உரிமைகளைப் பறிக்கிறாய்' என்று ஏசாயா 5: 23 கூறுகிறது. ஊழலுக்கு எதிரான போராட்டம் என்பது ஆதிக்கம் படைத்தோரின் ஊழல் நடவடிக்கைகளிலிருந்து வலிமையற்றவர்களையும் ஏழைகளையும் பாதுகாப்பதாகும். ' நீதியைத் தடுக்க பெரும்பான்மையோரின் பக்கம் சாராதிருப்பாயாக ! வழக்கு வியாஜ்ஜியத்தில் ஏழைகள் மீது பாகுபாடு காட்டாதே (யாத் 23:2-3) ஊழல் வறுமையைக் கொண்டு வரும் என்பதால் ஊழலை நியாயப்படுத்திட இயலாது.

ஊழலற்ற சமூகம் உருவாக பொறுப்பான தலைவர்கள் தேவை மோசேயின் மாமனார் மோசேயை நோக்கி ' 'நீ தலைவர்களைத் தேர்வு செய்யும் போது கடவுளுக்கு பயந்தவர்களையும், நம்பிக்கைக் குரியவர்களையும், நீதியற்ற பொருளுக்கு ஆசைப்படாதவர்களையும் தெரிவுசெய்' என்றார் (யாத்18:21) ராஜாக்களின் காலத்திற்கு முன்னால் சாமுவேலின் பிள்ளைகள் பரிதானம் வாங்கினார்கள் (1 சாமு 83) ராஜாக்களின் புத்தகத்தில் வெளியுறவுத்துறை மற்றும் ராணுவத்துறையில் ஊழல் பயன்படுத்தப்பட்டதற்கு குறிப்புகள் உள. எதிரியின்

நண்பர்களுக்கு பரிதானம் கொடுத்து, ராஜாவுக்கு எதிராக அவர்கள் ஆயுதம் எடுப்பதிலிருந்து தடை செய்யப்பட்டார்கள் (1 ராஜா 15: 19, 2ராஜா 16: 8)

லஞ்ச ஊழலின் தாக்கத்தைப்பற்றி தீர்க்கதரிசிகள் முற்றும் உணர்ந்திருந்தார்கள் லஞ்ச ஊழல் வாழ்வை நசுக்கிப் போடுகிறது என்றார்கள் (எசேக் 22:12) அதேபோல் சங் 15ல் ‘ யார் உம் கூடாரத்தில் தங்குவான்? வட்டிக்கு பணம் கொடாதவனும், அப்பாவிகளிடமிருந்து பரிதானம் வாங்காதவனும்‘ என்றிருக்கிறது (சங் 15:15) ஊழலினால் சுரண்டலும், ஆயுசு நாட்கள் குறைவுபடுதலும், நீதியான பகிர்ந்தளிப்புக்கு தடையும் ஏழைகளுக்கு ஏற்படுகிறது. கடினமான நேர்மையான உழைப்பால் அதன் வேரால் செல்வம் ஈட்டப்பட வேண்டும். சுரண்டுவதினால் அல்ல நீதியினால் வரும் கொஞ்சம் செல்வம் போதும், அநீதியினால் வரும் பெருஞ்செல்வம் வேண்டாம் (நீதி 16:8) நீதி புரட்டிய தலைவர்கள் ஒரு நாட்டை அழித்து விடுவர் ‘நீதியால் ராஜா நாட்டிற்கு ஸ்திரத் தன்மை தருகிறான் மக்களிடமிருந்து பிடுங்குகிறவனோ நாட்டை குட்டிச்சுவராக்குவான் (நீதி 29:4) மீகா தீர்க்கதரிசி கிமு 8 ம் நூற்றாண்டுக்காரர், ஏசாயாவின் சம காலத்தவர், லஞ்ச ஊழல் நிறைந்த சட்ட அமைப்பைத் தாக்கினார். மதத் தலைவர்களின் லஞ்ச ஊழலையும் சேர்த்தே. ‘அதன் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்ககிறார்கள் அதன் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள் அதன் தீர்க்கதரிசிகள் பணத்துக்கு குறி சொல்கிறார்கள் ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மீது வராது என்கிறார்கள் (மீகா 6:11-12)

கடவுளின் எதிர்பார்ப்பு தெளிவானது. நீதி, கடவுள் மீது நம்பிக்கை கண்ணியம், ‘நீதியைச் செய்வதைத் தவிர ஆண்டவர் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறார்? அன்பாயிருக்கவும், ஆண்டவருக்கு முன்பு தாழ்மையாய் நடக்கவும் தவிர‘(மீகா 6:8)

யாவே கடவுள் ஊழலுக்கு எதிரானவர். ஊழலுக்கு இணங்காதவர் நீதியானவர். ஆதனால் தான் கோரேஸி ராஜாவின் காலத்தில் அவரது மக்கள் விடுவிக்கப்பட்டு தம் நாட்டிற்கு புறப்பட்ட போது யாவே எந்த லஞ்சத்தையும் கோரேஸ் ராஜாவுக்கு தரவில்லை. லஞ்ச ஊழலை உபயோகப்படுத்துகிறவன் பேலியாளின் மக்கள் கடவுளின் ஜனக் கூட்டத்திலிருந்து புறந்தள்ளப்பட வேண்டும் என்கிறது வேதம். பக்தியானவன் லஞ்சம் பெறமாட்டான் (சங் 26:11)

## 4.1.2 புதிய ஏற்பாடு : லஞ்ச ஊழல் வாழ்வைக் கொல்லுகிறது

புதிய ஏற்பாடு லஞ்சம் பற்றிய சில குறிப்புகளசைச் சொல்கிறது. இயேசுவின் பாடுகள் மற்றும் உயிர்த்தெழுதல் காலத்தில் யூதாஸ் ஸ்காரியத்து, பிரதான ஆசாரியர்களால் லஞ்சம் கொடுக்கப்பட்டான் (மாற் 14:10) ரோம சாம்ராஜ்யத்தின பிரபுக்கள் குறிப்பாக பொந்திவு பிலாத்துவின் தலைமையின் கீழ் பெரும் பரிதானம் வாங்குகிறவர்களாய் இருந்தனர். யூதா ஸ்கரியோத் நான்று கொண்டு செத்தான் - ஊழலினால் அவன் சுயமரியாதையை இழந்தான் (மத் 27:5 ) இயேசுவின் உடலை சீஷர்கள் தூக்கிக் கொண்டு போய்விட்டனர் என்ற பொய்யைப் பறைசாற்ற படைவீரர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது.

கிறிஸ்தவ சமூகத்தின் பகிந்தளிப்பு கோட்பாட்டிற்கு விரோதமாக அனனியாவும் சப்பீராளும் ஏமாற்றுதல் வஞ்சித்தல் செய்தார்கள் என்று அப்போஸ்தல நடவடிக்கைகள் கூறுகிறது. (அப் 5:1-11) நீதிபதிகளும் கவர்னர்களும் லஞ்சம் பெற்றனர். பெலிக்ஸ் கவர்னர் பவுலிடம் லஞ்சம் கேட்டான் குறைந்த பட்ச தண்டனை வாங்கித் தருவதற்கு (அப் 24: 26)ஆனால் பவுல் இதை எதிர்த்தார் வரிவசூலிப்பவர்கள் லஞ்சத்தில் திளைத்தனர். சகேயுவின் கதை, பிற்பாடு தான் வாங்கின லஞ்சம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்றும் தன் ஆஸ்தியின் பாதியை ஏழைகளுக்கு கொடுப்பதாயும் இயேசுவிடம் அவன் உறுதி கூறுகிறார் (லூாக் 19:1-10)

ஆவியின் வரத்தை லஞ்சம் பணத்தினால் வாங்க மந்திரவாதி சீயோன் எண்ணுகிறான். யார் தலையில் தன்கையை வைக்கிறானோ அவர்கள் பரிசுத்தாவியின் வரத்தைப் பெறும்படிக்கு பேதுருவுக்கும் யோவானுக்கும் லஞ்சம் கொடுக்க முன் வருகிறான் (அப் 8:8-24) பேதுரு அவனைக் கண்டித்து அனுப்புவதுடன் சீமோனின் முயற்சியை சாத்தானின் பாவக்கட்டு என்கிறார் கடவுளின் சித்தத்திற்கு எதிர் என்கிறார் இவன் பெயரால் பாவத்தில் திளைக்கும் ஊழல் ‘சிமோனி‘ (Simony) என்றழைக்கப்படுகிறது — ஆவிக்குரிய நன்கொடைகளை பணத்தைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளல் அது கடவுளின் நித்திய வல்லமையை டேபிலுக்கு அடியில் லஞ்சம் கொடுத்து வாங்க முடியாது. பேராசையே ஊழலின் ஊற்று என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல (லூாக்கா 12:15) கணக்கு ஒப்புவித்தலே கடவுளுக்கும் விசுவாசிகளுக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள உறவின் அடிப்படை. சுரண்டலுக்கு எதிர் அது பொருள்களுக்கு உண்மையாயிருத்தலுக்கும் மேலானது. கணக்கு ஒப்புவித்தல் என்பது ‘ உத்தரவு சொல்ல ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:15) என்பதே விசுவாசியிடம் எதிர்பார்க்கின்ற உள்ளார்ந்த நிலை. பேராசை ஊழலின் வேர். பேராசைக்கு கிரேக்க மொழியில் பணத்தை நேசித்தல் என்று பொருள். பணத்தை நேசித்தலே எல்லாத் தீமைக்கும் அடிப்படையானது. ‘சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளினாலே தங்களை உருவகித்துக் கொண்டு இருக்கிறார்கள் (1 தீமோ 6: 10)

வெற்றியுள்ள தனி மனித வாழ்வு மற்றும் சமூக வாழ்வு ஊழலை எதிர்த்து பண ஆசையை எதிர்த்து வாழ்வதாகும். ஊழலை பண ஆசையை நியாயப்படுத்தி வேதத்தில் எங்கும் ஆதாரமில்லை. ஊழலின் விளைவுகளைப் பற்றியும், ஊழலில்லாத சமூக வாழ்வைப் பற்றியுமே வேதம் பேசுகிறது.

ஊழல் வாழ்வை கொன்று வேரழிக்கிறது - கடவுள் வாழ்வை விரும்புகிறார்-
ஊழல் ஏழைகளின் உரிமையை மறுக்கிறது - கடவுள் நீதி விரும்புகிறார் -
ஊழல் பொருளாதர வளர்ச்சியை தடை செய்கிறது - நியாயமான செல்வத்தை கடவுள் விரும்புகிறார்.

ஊழல் நம்பிக்கையை சிதைக்கிறது- கடவுள் சமூகத்தை விரும்புகிறார்.
ஊழல் வன்முறையை விதைக்கிறது - கடவுள் சமாதானம் விரும்புகிறார்.
ஊழல் நம்பகத்தன்மையை அழிக்கிறது - கடவுள் கண்ணியத்தை விரும்புகிறார்.

### 4.1.3 வளமை இறையியல் - சுவிசேஷம்: கடவுளுக்கு லஞ்சம் கொடுத்தலும் நவீன சிமொனியும்

வளமை இறையியல் - வளமை சுவிசேஷமே இன்று திருச்சபையில் நிலவும் ஊழலுக்கு அடிப்படைக் காரணம், 1960களில் அமெரிக்க ஐக்கிய நாடு சேர்ந்த பெந்தகொஸ்தே சுவிசேஷகர்கள் ஒரல் ராபர்ட், வுடு ஆஸ்பார்ன், பாட் ராபர்ட்சன் மற்றும் ஜிம் பாக்கர் போன்றோரல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு இது லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்கா, ஆசியா நாடுகளுக்கும் தென் கொரியா பால் யாங்கி சோ போன்றவரால் தென் கொரியா, இந்தோனேசியா, சீனா, இந்தியா நாடுகளுக்கும் பரவிற்று. வளமை சுவிசேஷ இறையியல் இப்போது மிக வேகமாக பரவி வரும் கிறிஸ்தவ இயக்கம் - குறிப்பாக ஏழைகள் மத்தியல் வேகமாக பரவுகிறது. திருச்சபைப் பாஸ்டருக்கு நன்கொடை கொடுத்தும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருந்தால், அவர்களை பொருள் ஆசீர்வாத்திலும் சொத்தாலும் கடவுள் நிரப்புவார் என்று பேசுகிறது. எனவே இந்த பெந்த கொஸ்து தலைவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள். சொகுசுக் கார்களில் பயணம் செய்கின்றன. 5 நட்சத்திர ஹோட்டல்களில் தங்கி தங்களுடைய சுவிசேஷப்பணி மற்றும் ஏழைகளுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு நன்மை பெறுகின்றனர்.

வளமை சுவிசேஷ இறையியல் லாட்டரி அல்லது சூதாட்டம் போன்றது. இறையியல் அடிப்படையில் இது பாவம் - மாறுபாடு தன்மையுடையது கடவுளுடைய நன்கொடையைப் பணத்தால் பெற முடியும் என்றும் மனித முயற்சியினால் பெறமுடியும் என்றும் பொருள் நலம் கடவுள் தம் விசுவாசிகளுக்கு தருவது என்றும் கூறுகிறது. ஏன் இந்த மாற்றுப் போதனை? கடவுளுடைய அருட்கொடை மற்றும் அவரது சித்தம் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு கொடையை மறுக்கிறது. கடவுளுடைய சித்தத்தை லஞ்சம் கொடுத்து வாங்க இயலாது அல்லது மனித முயற்சியினால் வாங்க இயலாது. கடவுளுடைய ஆவியானவர் மற்றும் ஆவிக்குரிய ஊழியமான பாஸ்டர் ஊழியத்தை விலைக்கு வாங்க முடியாது. வளமை சுவிசேஷ இறையியல் நவீன சிமொனி. கடவுளின் ஆவியை விலைக்கு வாங்குதல் ஆகும்.

ஞானராபின்சன் என்ற புகழ்வாய்ந்த இந்திய இறையியலாளர், இந்தியாவின் மிகச் சிறந்த மூன்று இறையியல் கல்லூரிகளில் முதல்வராக இருந்த அவர் சொல்கிறார் ' வளமை இறையியல் சுவிசேஷம் மேடைகளிலிருந்து பேசப்படுகிறது' நீ கடவுளுக்கு கொடுத்தாயானால், கடவுள் உனக்கு மூன்றத்தனையாக, நான்கத்தனையாக, நூறு அத்தனையாக ஆசிர்வதிப்பார் என்று கூறுகிறது' என்கிறார். கடவுளுக்கு லஞ்சம் கொடுத்தல் இங்கிருந்தே ஆரம்பிக்கிறது கடவுளைப் பற்றிய நேரிய பார்வையிலிருந்தே ஊழலுக்கு எதிரான நமது போராட்டம்

ஆரம்பிக்கிறது. இயேசுவைப் பற்றிய பார்வையும் நேரிய பார்வையாக இருக்கவேண்டும். எந்த விதமான ஏசுவை நாம் வழிபடுகிறோம்? புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற தச்சன்மகன் - கேலி செய்யப்பட்ட, நகைக்கப்பட்ட, முகத்தில் துப்பப்பட்ட, முள்முடி சூட்டப்பட்ட சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை? வளமை இறையியல் பிரசங்கியார்களின் பொய் போதனைகள் ' வேறு ஓர் ஏசுவை' பவுல் பயந்தது போல(2கொரி11:4) தலையில் தங்ககீடம் உடையவராக, ஒரு கையில் உலக உருண்டையைக் கொண்டவராய், அதிகாரச் செங்கோலை அடுத்த கையில் பிடித்தவராய் உள்ள ஏசுவையை பிரசங்கிக்கிறார்கள். கான்ஸ்டைன்டன் காலம் தொடங்கி மகிமையின் ராஜாவாக வழங்கப்படுகிறார். நன்கொடை மற்றும் ஸ்துதி தோத்திரங்களுடன் வருகிறவர்களை உடனடியாக ஆசிர்வதிக்கிறவராக இருக்கிறார் என்று சொல்லப்பட்டது. எனவே கணக்கு ஒப்புவித்தல் வெளிப்படைத்தன்மை இவை விசுவாசம், கடவுள், கிறிஸ்து இவர்தம் பார்வையிலிருந்து வரவேண்டியவை. விசுவாசம் மற்றும் ஒழுங்குபிரிவான WCC ன் பிரிவின் அங்கம் ஒவ்வொரு திருச்சபையினின்றும் மிகக் கடுமையான பணி செய்து நம் பார்வையை வளமை இறையியிலிருந்தும் மெய்யான கடவுளுக்கு திருப்ப வேண்டியது அவசியம். இயேசுவின் உண்மையான சீஷன் ஊழலில் ஈடுபடமாட்டான:

## 4.2 பொறுப்புள்ள தலைமை: ஊழலற்ற திருச்சபைக்கு வழி

### 4.2.1 உக்கிரணத்துவமாய் கவனமுள்ளவராய் நடத்தல்

ஊழலின் சுருக்கம் இதுவே: C = M+D-A; C என்பது ஊழசசரிவழைெ ஊழல். M என்பது பணம் Monopoly Power. D. என்பது தீர்மானிக்கும் தன்மை Discretion to decide A என்பது கணக்கொப்புவித்தல் Accountability . கணக்கொப்புவித்தல் A இல்லாத ஒருவர், தனக்கு என்ன கிடைக்கும் என்று கணக்குப் போட்டு, தனது தன்னிச்சை அதிகாரத்தை (D) ஒரு சேவையின் போது, அல்லது பொருளின் மீது உபயோகித்து பலன் பெறுதல் அதுவே ஊழல். ஊழல் என்பது அதிகார துஷ்பிரயோகம், கட்டுப்பாடு இழந்ததும், கணக்கு ஒப்புவிக்காததுமான அதிகாரம்.

பொறுப்புள்ள தலைமை என்பது ஊழல் இல்லாத திருச்சபைகளுக்கு மையம் - தனிநபர் பிரச்சினை என்று கருதினால் அது அமைப்புப் பிரச்சினை. பொறுப்பான தலைமையே ஊழலை வேரறுக்க முடியும். எனவே தான் தலைமைக்குரிய நடத்தை விதிகள் அவசியமாகிறது (பார்க்க A13) வேத அடிப்படையில், அதிகாரம், வலிமை என்பது எல்லாம் உக்கிராணம் செய்வதற்காக. பொறுப்புகள் உக்கிராணத்தில் கணக்கு ஒப்புவித்தல், நேர்மை, பரஸ்பர அதிகார பகிர்வு உண்டு. இயேசுவின் உறவில் உள்ள மனிதர்கள் நல்ல உக்கிரக்காரர்காரர்களான பாதுகாவலர்களாக (தங்கள் விருப்பமின்றி, பொது விருப்பம் உடையவர்களாக) இருப்பார்கள். புதிய ஏற்பாடு பொறுப்புள்ள

நிர்வாகியைப் பற்றிக் கூறுகிறது பார்க்க லூக் 12:42:48(RSV)
**42. அதற்கு கர்த்தர்: பணிவடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுள்ள விசாரணைக்காரன் யாவன்?**

**43. எஜமான் வரும்போது, அப்படியே செய்கிறவனால் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்**

**44. தனக்குள்ளதெல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**45. அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக், குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால்.**

**46. அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும் அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடு அவனுக்கு பங்கை நியமிப்பான.**

**47. தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும், ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.**

**48. அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான் எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் ' மனிதர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ, அவனிடத்தில் அதிகமாய் கேட்பார்கள்.**

'உக்கிராணக்காரன்' என்ற கிரேக்க வார்த்தைக்கு Oikonomos, பொருளாதார மனிதர் என்று பொருள் Oikos எனில் இல்லம், அல்லது வீட்டைச் சார்ந்தது Oikonomos என்பவர் வீட்டை சரியாக பராமரிப்பவர் அவரே வீட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்கிறவர் மேலாண்மை செய்கிறவர், அனைத்து மக்களுக்கும், சமூகத்திய வேலை செய்கிறவர்களுக்கும் அவரே எல்லா வேலையாளுக்கும் தலைமை வேலையாள் இந்த வேதப்பகுதி பொறுப்பான மற்றும் பொறுப்பில்லாத நிர்வாகிகளைக்குறித்து கூறுகிறது.

1. நல்ல நிர்வாகி தான் வீட்டின் சொந்தக்காரர் அல்ல என்றும் பங்குதாரர் இல்லை என்றும் எண்ணுவார், மற்றபடி சொந்தக்காரர் சார்பில் பொறுப்பாய் நிர்வகித்து வளர்ச்சி பெறச் செய்பவர். சரியான நிர்வாகி இல்லாதவர் தானே

சொந்தக்காரர் போலவும், வீடோ, கம்பெனியோ தனது சொத்தாகவும் கருதுவார்.

2. உண்மையான உக்கிராணக்காரர் மக்களைப் பாதுகாப்பார் அது அவருடைய பொறுப்பு உரிய நேரத்தில் அவர் மக்களுக்கு உணவு, சம்பளம் மற்றும் சமூகக் பாதுகாப்பு தருகிறார். ஆனால் சரியில்லாத நிர்வாகி யாருக்காக தான் பொறுப்பு வகிக்கிறாரோ அந்த பொறுப்பை மீறுவார் மக்களைச் சுரண்டுகிறார்.

3. நல்ல தலைவர் நெறிமுறையுடன் கூடிய வேலை செய்கிறார் அவர் தம் உடன் வேலையாட்களின் நலனைப் பாதுகாக்கிறார் எனவே நல்ல முன் உதாரணம். பொறுப்பற்ற தலைவர்கள் வேலை செய்ய மாட்டார்கள், ஊழல் வாதிகள், குடிகாரர்கள், பேராசைக்காரர்கள், எல்லா தவறான சுகங்களுக்கும் தேடிப்போவார்கள் அவர்தம் சுரண்டல் மற்றும் அடிமைநடத்துதல் வீட்டை பராமரிக்கவில்லை என்றும், மனிதர்களை தனது தனிப்பட்ட சொத்தாக தவறாக நடத்துவார்.

4. ஞானமுள்ள வேலைக்காரன் பொறுப்பாய் ஒவ்வொரு கனத்திலும் நடக்கிறார். எப்போது எஜமான் வருவார் என்பது அவருக்கு தெரியாது. வியாபார நெறி மற்றும் கடவுளுக்கு பதில் சொல்லல் என்பது தின வாழ்வில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. முட்டாள் நிர்வாகி நியாயதிபதிக்கு லஞ்சம் கொடுத்திடலாம் என்று நினைக்கிறார். கடைசிக் காலங்களில் சர்ச்சுக்கு போய் ஜெபித்தால் போதும் என்கிறான.

இக்கதை பொறுப்பைப் பற்றி மிக எளிய புரியும் வகையில் சொல்கிறது. பிறருக்கு பொறுப்பாய் இரு என்கிறது. உடமையாளருக்கு நிர்வாக. கடவுளுக்கு கிறிஸ்தவன் தன்னிச்சையாக தவறான நிர்வாகிகள் நடக்கின்றனர். தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் பொறுப்பாயிருக்க விரும்புவர். பணத்தாசை அதிகாரத்தால் பேராசையால் கட்டுப்படுத்தப்படுவர். நல்ல உக்கிராணக்காரன் கடவுளுக்கு பொறுப்பானவர் Theonomous. ஏனெனில் அவர்தம் பொறுப்பு, கண்ணியம், கடமை அனைத்தும் கடவுளிடமிருந்தே வருகிறது. எவ்வளவு பொறுப்பாளராக அவர் இருக்கிறாரோ, அவ்வளவிற்கு அவர் பொறுப்பைப் பெறுகிறார். நிர்வகிக்கிறார்.

இந்த பொறுப்பான நடத்தை ஒவ்வொருவரின் கனவு குறிப்பாக தலைவர்களுக்குரியது. இந்தப் பாடம் வெறும் பாடமல்ல, செய்கை இதை ஊழியக்கார ராஜா தன் வாழ்வில் கடைப்பிடித்தார் அவர் தன் இன்னுயிரை ஒட்டு மொத்த சமூகத்தின் நண்மைக்காகவும், ரட்சிப்புக்கும் ஈந்தார். பிரசங்கித்தார், சுகம் தந்தார், நடனமாடினார், சிரித்தார், அவரது வாடிக்கையாளருக்கு தேவைகளை சந்தித்தார், வேலைகளை நெறிப்படுத்தினர். தமது சீடரின் கால்களை ஊழியக்காரராய் அடிமையாய் கழுவினார், சவால்விடும் உவமைகளால்

வழி நடத்தினார். உணவைப் பங்கிட்டார். தன் தகப்பனுக்கு உண்மையானார், சிலுவை வரை கடவுளுடைய நன்கொடைகளை மற்றவர்களுக்கு தர அவரது சீடர்களுக்கு பொறுப்பு தந்தார்.

பொறுப்பு என்பது புரிந்துணர்வு. கடவுளுடைய அழைப்புக்கு பதிலிறுத்தல். Spondre என்ற லத்தீன் வார்த்தைக்கு கொடு என்று பொருள், Sponsor என்று பொருள் ஒட்டு மொத்த சிருஷ்டியை அவர் Sponsor செய்கிறார் அந்த சிருஷ்டியில் நமது முழு வாழ்வையயும் பெறுகிறோம் அவரது கிருபையில் (யோவான் 1:16) மனிதர் பொறுப்பு இந்த நன்கொடைகளைப் பேனுவதே

இன்றைய சூழலில் Oikos என்ற வார்த்தை Economy, Ecology மற்றும் Ecumenism என்ற பரிமாணங்களில் உள்ளது. பொறுப்புள்ள ஊழியர் என்ற உக்கிராணக்காரர் கடவுளுடைய வீட்டில் உயிர் வாழ்வதற்குரிய பொருள்களை Economy என்ற நிலையில் அதை நிர்வகிக்கிறார். Ecology என்ற நிலையில் கடவுளுடைய வீட்டில் உயிர் வாழ்வதற்குரிய சுற்றுச் சூழலைப் பேணுகிறார். Ecumenism என்ற நிலையில் அனைத்து சபைகள், மத உறவுகள், சமூகங்களுக்கிடையே பரஸ்பர கலாச்சார உறவு என்ற உலக சமூகத்தைக் கட்டி எழுப்புகிறார். ஒரு கிறிஸ்தவ உக்கிராணக்காரர், ஆதரவளிக்கும் நிர்வாகி, பெறுப்புள்ள தலைவர் ஆதரவு தருகிறது, வழி நடத்துகிறார், கட்டளையிடுகிறார், ஊழியம் செய்கிறார், பகிர்ந்து கொள்கிறார் இந்தப் பரிமானங்களில் கடவுளுடைய வீடாகிய இந்த மண்ணில்.

லூாக்காவின் கதை இந்த முடிவில் நிறைவு பெறுகிறது யாரிடம் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ, அவனிடத்தில் அதிகமாய் கேட்பார்கள் (லூக் 12.48) கடவுள் அதிகமாய் கொடுத்து கணக்கு ஒப்புவித்தல் கேட்கிளார், நெறிமுறைகளின் அடிப்படையில் அதிகாரம் மற்றும் வளங்களின் அளவிற்கு ஏற்றாற்போல் பொறுப்பின் அளவும் கூடுகிறது. கிறிஸ்தவர்கள் கடவுளின் நண்பர்கள், எனவே கடவுளின் நம்பிக்கைக்கு பாத்திரமாயிருப்பது போல, கடவுளின் உடன் பங்காளர்களாக நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். 1 கொரி 4:1-2ல் சொல்லப்பட்டுள்ளது ‘ உக்கிரணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம்’

### 4.2.2 தெளிவுபெற்ற விசுவாசத்தையும், பாரம்பரீய ஞானத்தையும் ஒருங்கிணைத்தல்:

பாரம்பரீய பண்பாடுகள் ஊழலை நியாயப்படுத்துகின்றன என்பதில் உண்மையில்லை. உலகத்தின் எல்லா மதங்களிலும், பாரம்பரீய கலாச்சாரங்களிலும், ஊழல் என்பது அதிகாரத்தின் துஷ்பிரயோகம் அது

வன்மையாக கண்டிக்கப்படுகிறது. 2009 வரை WCC ன் பொதுக்காரிய தரிசியாக இருந்த கென்யன் இறையியலாளரும் பாஸ்டருமான சாமுவேல் கொபியா கீழ்க்கண்டவாறு கூறுகிறார். பாரம்பரீய ஆப்பிரிக்க தலைமைத்துவம் என்பது தலைவர்களின் மெய்மை என்கிறார். பேராசிரியர் அயிட்டி நினைவு படுத்துகிறார்: பாரம்பரீய ஆப்பிரிக்க தலைமை எப்போதும் கணக்கொப்புவித்தலில் உள்ளது. 1918ல் பதவி இறக்கம் செய்யப்பட்ட மான்ட்ரிஸ் ஒப்ளி டாக்கியைக் குறிப்பிடுகிறார். ஒப்ஸி நிறைய குற்றம் செய்தார். GA மக்களின் GA நிலத்தை அதன் உரிமையாளர்களைக் கலக்காமல், தன் நாற்காலியை கடனுக்குரிய செகுரிட்டியாக செய்துவிட்டார். இன்னொரு உதாரணம் சொல்வது சரியாக இருக்கும். 1883ல் உகான்டே மக்கள் தங்கள் அரசர் மென்சா பென்சு அதிக வரி விதிப்பைச் செய்ததால் பதவி இறக்கம் செய்யப்பட்டார். சமீபத்தில் கானாவின் தலைவர் பாரிமாவும் அவர் ஆதரவாளர்களும் அவர்களைக் கொல்வதிலிருந்து தப்பி ஓடினார்கள் இது கிராம வருவாய் தொடர்பானது. ஒவ்வொரு ஆப்பிரிக்க சமூகமும் ஊழலை வேரறுக்கின்றன. தண்டனை கடுமையானது. யோருபா அரசனின் ஊழல் உள்ளறைக்கு சென்று தற்கொலை செய்து கொள்ள வைத்தது. இவை ஆப்பிரிக்காவில் பாரம்பரீய சமூகம் ஊழலை எவ்விதம் பார்க்கிறது என்பதை சொல்கிறது. முடிவாக, இவ்வாறெல்லாம் ஆப்பிரிக்க தலைவர்கள் கண்ணியமாக வாழ தங்கள் உண்மைகளை எங்கு புதைத்திருந்தார்கள்? தாங்க முடியாத ஆட்களைக் கவனிக்க அவர்களின் ஆவியின் மையம் எங்கிருந்தது, இப்படி எல்லா மக்களின் நம்பிக்கையும் அவர்கள் பொய்க்க வில்லையே. ஆப்பிரிக்க தலைவர்களின் வாழ்வை எவ்வகை ஆவி வழி நடத்தியது, இதை விசாரிக்கும்போதுதான் சமூகத்தின் அடித்தளமாக ஆன்மீகத்தைப்பார்க்க வேண்டியுள்ளது. என்னுடைய வலியுறுத்தல் எல்லாம் ஆப்பிரிக்க மதிப்பீடுகள் தலைவர்களின் நன்னெறிகளை வலியுறுத்தின இந்த மதிப்பீடுகளும், கிறிஸ்தவ கொள்கைகளும் நீதியை வலியுறுத்துகின்றன, பொது வாழ்வில் நன்னெறிகளை உருவாக்குகின்றன ஆப்பிரிக்காவில் ஒருங்கிணைந்த சமூகமாக வாழ கலாச்சார வாழ்வைக் கட்டி எழுப்புகின்றன.

வேலை என்னவெனில் பாரம்பரீய ஞானமான ஊழலற்ற தலைமை, பொறுப்புணர்வு இவற்றை தெளிவான விசுவாசமான ஊழயத்திற்கு அழைத்துச் செல்லும் இயேசுவின் மீது நம்பிக்கை, மற்றும் பங்கேற்பு தலைமையை வலியுறுத்தலே. இது கண்ணியமான கலாச்சாரத்தையும், உண்மையையும் பொதுவாழ்வில் தனியார்துறை வாழ்வில் வெளிப்படைத் தன்மையும் உருவாக்கும்.

### 4.2.3 வெளிப்படைத்தன்மையை உருவாக்கம்:

'டேபிலுக்குக் கீழே' என்ற நிலையில் ஊழல் ஒரு இருளான சமாச்சாரமாக, சட்டத்திற்கு புறம்பான, ஒழுக்கத்திற்கு புறம்பானதாகக் கருதப்படுகிறது. எனவே

ஊழல் ஒழிப்பு வெளிப்படைத்தன்மையானது. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களின் நடவடிக்கை விதிகள் ' வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை விதிகள்' என்றே அழைக்கப்படுகிறது. இந்த வெளிப்படைத்தன்மைக்கு ஏதுவாக இருக்கும் இறையியல் மற்றும் நன்நெறிக் காரணங்கள் எவை?.

கடவுள் அன்பாக இருக்கிறார்:

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு (உடன்படிக்கை) அன்பிலானது. தவிர மனிதருக்குள்ள உறவும் அன்பின் அடிப்படையிலேயே பரஸ்பர நம்பிக்கையில் தான் அன்பு உள்ளன. நம்பிக்கை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. கட்டுப்பாடு வெளிப்படைத்தன்மை, திறந்தமனதுடையது.

கடவுள் ஒளியாக இருக்கிறாா :

இயேசுவாக கடவுள் மண்ணில் வந்தார் இருள் மத்தியில் ஒளி கொணர்ந்தார். (வருகைக் காலம் அதன் அடையாளமே) இருள் நல் உறவைப் பாதிக்கிறது. இது நம்பிக்கை சிதைக்கிறது. இது பாவத்தின் வெளிப்பாடு. ஒழுங்கீனம் மற்றும் சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது. ' உலகத்தில் ஒளி வந்திருந்தும், மக்கள் இருளை விரும்புவதால் ஒளியில் வரமாட்டேன் என்கிறார்கள். ஏன்எனில் அவர்கள் காரியம் வெளிப்பட்டுவிடும். சத்தியம் செய்கிறவர்கள் ஒளியில் வருகிறார்கள். அவர்களின் செய்கை வெளிப்படை, கடவுளின் பார்வையில் அதைச் செய்கிறார்கள் (யோவான் 3:19-21)

கடவுள் நீதியானவர்:

சமத்துவ நடத்தைக்கும், நீதிச் செயல்பாடுகளுக்கும் வெளிப்படைத் தன்மை அவசியம். தகவல் நமக்கு கிடைக்கவில்லை எனில் நமது உரிமைகள் மீறப்பட்டதையே, சரியான முறையில் நாம் நடத்தப்பட்டோமா என்பது நமக்குத் தெரியவராது.

உக்கிராணத்துவம்:

எல்லா கொடைகளையும், பொருட்களையும் நாம் சரியாகப் பயன்படுத்திடவேண்டும். இவைகள் கடவுளால் நமக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளவை. மனித சமூகம் கடவுளால் நிர்வாகியாகவும் கணக்காளர்களாகவும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளனர்.

கணக்கொப்புவித்தல்:

முதன்மையாக கிறிஸ்தவர்கள் கடவுளுக்குக் கணக்கொப்புவித்தல் செய்யக் கடமைப்பட்டுள்ளனர், தவிர சொந்த சகோதர்களுக்கும், குறிப்பாக வளங்களைக் கண்டறிய வேண்டும்

கிறிஸ்துவின் சரீரத்திற்கும், குறிப்பாக கிரித்துவ கடவுளின் சரீரத்திற்கும் பரஸ்பரக் கணக்கொப்புவித்தல் அன்பு, நம்பிக்கை, நேர்மை, பொறுப்பு மற்றும் கிறிஸ்தவ சமூகத்திற்கும் உரியது.

நீதி ஒழுங்கு (Procedural Justice):

நீதியின் இன்னொரு பரிமானம் நீதி ஒழுங்கு. இது அளவிடக் கூடியது, அமைப்புச்சட்டம் சார்ந்தது. வெளிப்படையானது ஊழலில்லாதது. பரஸபர உறவுகளைப் பேணுவது குறிப்பாக பொருளாதார உறவுகளில் நிதி உறவுகளில் வெளிப்படையாக இருத்தல் நீதி ஒழுங்கின் ஒரு பங்கு.

மனித உரிமையும் ஏழைகளின் சார்பில் நிற்றலும்:

வாழ்வில் இல்லாதவர்களுக்கே அதிக உரிமையுள்ளது. ஹெல்மட்சைமன் என்பவரின், ஜெர்மனி கோர்டின் முன்னாள் நீதிபதி, கூற்று வலுவிழந்தவர்களுக்கு உரிமை முக்கிய சாதனமாகும் ஊழல் வலுவிழந்தவர்களின் உரிமையை நசுக்குகிறது (யாத் 23.8) வெளிப்படைத் தகவல்கள் எல்லா ஏழைகளுக்கான சட்டபூர்வமான உரிமைகள.

சட்ட உதவிகள்:

சட்ட உதவிகள், கருவிகள் நிதியின் ஒரு பங்கென திருச்சபை ஏற்றுக் கொள்கிறது( கிறிஸ்தவ மதிப்பீடுகளை மீறாமல் இருக்கும்பட்சம்) தேசிய அகில உலக நன்னெறித் தரங்கள் கடந்த வருடங்களில் வெளிப்படையாக இருத்தல் சாதனங்களுக்கு உதவியுள்ளன. சட்டபூர்வமான கருவிகள், மற்றும் நெறித் தரங்களை திருச்சபை சந்திக்க வேண்டும்.

பொதுச்சட்டத்தின் அமைப்பே திருச்சபைகள்:

பெரும் சபைகள் பொதுச் சட்டத்தின் வட்டத்தில் உள்ளன. எனவே சட்டபூர்வமான காரியங்கள், எனவே தனியார் நிறுவனங்கள் மற்றும் மக்களைக் காட்டிலும் வெளிப்படையாக இருக்கவேண்டும். எனினும் சில இறையியல் நன்னெறிக் காரணங்களுக்காக முற்றிலும் வெளிப்படையாக இருத்தல் எளிதல்ல

துஷ்பிரயோகம்:

வெளிப்படுத்தும் தகவல்கள் பிறரால் தவறாகப் பயன்படுத்தக் கூடும் முழுமையான புரிதல் இல்லாததினால் அப்படி நிகழும்

போட்டி:

வணிக ரகசியங்கள் போட்டியின் நிமித்தம் வெளிப்படையாவதில்லை ஆனால் திருச்சபை வெளிப்படையாக இருக்க வேண்டும்.

தகவல்கள் குறிப்பிட்டவருக்கே:

பல சமயம் தகவல் ஆளுமை அமைப்புகளுக்கு மட்டுமே கூறப்படுகின்றன. ஆனால் முழுமையான நிதி நிர்வாகம் கணக்கு ஒப்புவித்தல் அனைவருக்கும் தெரியவேண்டும்.

### 4.2.4 லே மக்களை பலப்படுத்தல் மற்றும் பரஸ்பர கணக்கொப்புவித்தல்:

'எனக்குக் கீழ் இருப்பவன் என்னைக் கேள்வி கேட்பதா? அவனுக்கு நான் பதில் சொல்ல வேண்டுமா? என்றார் ஒரு பேராயர். உக்கிரக்காரணாக இருத்தல் என்ற கிறிஸ்தவப்பண்பாட்டை இந்த தலைமத்துவ புரிதல் வெளிப்படுத்துகிறது. அபிஷேகம் பண்ணப்பட்ட பாஸ்டர்களின் மீதும் பேராயர்கள் மீதும் ஆசிய ஆப்பிரிக்க லே மக்களுக்கு பெரிய மரியாதை இருக்கிறது. எனவே மேல் நிலை மக்களின் நடத்தைகள் திருப்தி தராவிடில் அதை வெளிப்படுத்தி தெரிவிக்க மக்கள் மிரண்டே போகின்றார்கள். தனக்கு மேலானாவனாலும், கீழானவனாலும் ஒரு கிறிஸ்தவனின் தோல்வி மற்றும் பலவீனத்தை சுட்டிக் காட்டுவது மரியாதைக் குறைவல்ல கிறிஸ்தவ அன்பே, தனித்து இருக்கும்போது அவனது குறையைச் சுட்டிக்காட்டு அவன் உனக்கு செவி கொடுத்தால் அவன் வெற்றி பெற்றான். செவி கொடுக்கவில்லையெனில் இன்னும் இரண்டு பேரை அழைத்துக் கொண்டு போ, ஏனெனில் இரண்டு பேர்களின் சான்று உதவியாயிருக்கும் சர்ச்க்கும் அவன் செவி கொடாதே போனால், அவன் உனக்கு புறநாட்டான் போலவும், வரி வசூல் செய்வோன் போலவும் இருப்பான் (மத் 18:15-17) இந்த பகுதி பாவத்திற்கு உடன்படக்கூடாது என்ற பகுதீ கானாமல் போன ஆடு மற்றும் மன்னிப்பை வலியுறுத்தும் பகுதி. இயேசு ரட்சிக்கவே வந்தார், நியாயந்தீர்க்க அல்ல பரஸ்பர கணக்கொப்புவிப்பு, புத்தி சொல்லல் ஆகியவை கிறிஸ்தவ பண்புகள். அபிஷேகம் பெற்றவரோ பெறாதவரோ, ஆவியானவர் இரண்டு பேரிடத்திலும் வேலை செய்கிறார், சகோதரத்துவம் என்ற இறையியல் திருச்சபையில் ஊழலற்ற நிலைமையை உருவாக்குகிறது.

### 4.2.5 விசில் ஊதிகளைக் காப்பாற்றுதல்:

பொறுப்புள்ள தலைவர்கள் விசில் ஊதிகளை காப்பாற்ற வேண்டும் நிறுவனத்தில் நடக்கும் சில குறைகளைச் சுட்டிக் காட்டுகிறவரே விசில் ஊதி. வலிமையற்றவராக நிறுவனத்தில் இருப்பார். விசில் ஊதிகளாகவே தீர்க்க தரிசிகள் இருந்தனர். மக்கள், தலைவர்கள், மன்னர்களின் தவறான நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டினர். ஆனால் எதிர்த்தரப்பு அதைக் கேட்க விரும்பவில்லை, அப்படிப்பட்ட செய்திக்கு காதை அடைத்துக் கொண்டனர். விசில் ஊதிகள் எதற்கு உண்மையாயிருக்கிறார்கள்? கம்பெனிக்கு! உண்மைக்கு! தலைமைப் பொறுப்பு

வகிப்போருக்கும் ! நல்ல தீர்வுக்கு? தண்டிக்கப்படுவோராய்!

வழமையான வழிகளுக்கு அப்பால் தன் கண்காணிப்பாளருக்கு தகவல் தருதல் - (அவர் அதைக் குறித்து கேட்க விரும்பாத நிலையில்) என்பது நெறியின் அடிப்படையில் சரியே. பொது நலன், மனித நேயமே அவர்கள் அப்படி நடந்து கொள்வதற்குக் காரணம். தனது மேலாளரை வெளியே அனுப்ப செய்யும் தந்திரவாளிகளிடமிருந்து விசில் ஊதுவேரை புரிந்து கொள்ளவேண்டும். அலுவலகத்தை விட்டுநீக்குவது, சஸ்பெண்டு செய்வது, பதவியிறக்கம் செய்வது, தவறாக அவர்களை நடத்துவது ஆகியவை நடக்கின்றனர். அப்படியில்லாமல் அவர்ள் பாதுகாக்கப்படவேண்டும். அவர்கள் கொடுக்கும் தகவல் பரீசிலிக்கப்படவேண்டும், ஒருவேளை அவர்கள் கொடுக்கும் தகவல் எப்போதுச் சரியாயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. பாலியல் குற்றச்சாட்டுகள் பல சமயம் பழி தீர்க்கவே பயன்படுத்தப்படுகின்றன அதைச் செய்வதின் மூலம் பழிக்கு ஒருவர் ஆளாக்கப்படுகிறார்.

திருச்சபைகள் பின்பற்ற பொதுத்துறை நிர்வாகமும் தனியார்துறையும் ஏகப்பட்ட சாதனங்களை வைத்துள்ளன. பயன்படுத்தப்படும் சாதனங்கள் நடுவர் நீதிமன்றம், மறைமுக விசில் ஊதலாக போன் கால்கள், சட்ட பாதுகாப்பு தரங்கள், நிர்வாகத்தினருக்கு மறுப்பு தெரிவித்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை, யார் தகவல் தருகிறாரோ அவரோடு சண்டை போடாமல் அவரைப் பாதுகாப்பது போன்றவை. 2009 ன் உலகத் திருச்சபை மாமன்றத்தின லஞ்சத்திற்கு எதிரான ஊழலுக்கு எதிரான கொள்கை உதாரணமாக (பார்க்க Appendix 7) தனது கொள்கை 4ல் கூறுவது: WCC தலைமைத்துவ வழிகாட்டின்படி, தனது மோலருக்கு தெரிவிக்க வேண்டும்.

## 4.2.6 கடவுளின் பொக்கிஷதாராக‘ பல வளங்களை நிர்வாகம் செய்தல்:

வேதாகமத் கதைகள் மற்றும் நெறி மதிப்பீடுகள் வாயிலாக, வளங்களைப் பொறுப்புடன் நிர்வகிக்கவும், நெறிமுறையுடன் கூடிய தலைமைத்துவம் நடத்திட வழி காட்டுதலும் கொள்கைகள் மதீப்பீடுகள் பொறுப்புத் தலைமைகள் இருக்கின்றன. ஜான் கால்வினின் 500வது ஆண்டு 2009ல் கொண்டாடப்பட்டது. அவர் மோசேயைப் பற்றி எழுதுகையில் ‘ மோசே தனக்குண்டான யாவற்றிலும் அவன் கடவுளின் பொக்கிஷதாரியாக நடந்துகொண்டான்‘ என்கிறார். திருச்சபை திருச்சபை நிறுவனங்கள் ஒவ்வொன்றும், வசதியானவைகளே ஏழைகளோ, ஏகப்பட்ட வளங்களை வைத்துள்ளன. வளங்கள் நிதி மட்டுமல்ல வறுமை மற்றும் பிச்சை எடுக்கிறோம் என்று கூறும் முன்னால் தனது வளங்கள் சரியாக நிர்வகிக்கப்படுவதே முதல் தேவை. காணாமல் போன நிதியை அல்ல, கானும்

13 வகையான வளங்களைக் கண்டறியலாம் இவை அனைத்தும் பொறுப்பாக, சரியாக நிர்வகிக்கப்பட வேண்டும். 1. மனித வளங்கள் (பணியாளர்கள், அமைப்பு ஆட்கள், தொண்டர்கள், மன, உணர்வு ரீதியான திறமைகள்) 2. நிதி வளங்கள், 3. அளிக்கப்படும் வளங்கள் (ஆராதனை,கல்வி), 4. அறிவு மற்றும் தகவல் வளங்கள்,5. இணைய வளங்கள் (ஊேஊஜ யுடன் தொடர்வு), 6. தகவல் தொடர்பு வளங்கள், 7. சிறப்பான கருத்துக்கள், 8. இயற்கை வளங்கள் (நிலம், காடு, போன்றவை) 9. ஆவிக்குரிய வளங்கள் (ஜெபம், பிரசங்கம்,ஆவிக்குரிய தலைமை) 10. பொருள் வளங்கள்(கட்டமைப்புகள்),11. நிறுவன வளங்களான (தீர்மானித்தல் அமைப்புகள்) சபையை நடத்தும் திறன், தொண்டர்கள் சட்ட உதவி), 12. கால வளங்கள் (நேர மேலான்மை, திறமை, நேரம் தவறாமை), 13. உயரிய மதிப்பு (நம்பிக்கைத் தளம்,முக்கியமான வளம்)

வளங்கள் தவறாகப் பயன்படுத்துவதற்கு பல காரணங்கள் உள்ளன. வளங்களை பயன்படுத்த திறன் இல்லாமை. அறிவு தகவல் அனுபவம் இல்லை, கணக் கொப்புவித்தல் கட்டுப்பாடு இல்லாமை, நிறுவனத்தின் அதி வேக வளர்ச்சி, நிறுவனத்திற்குள் தண்டனை தரும் நிலை, சட்டஅமைப்பு, ஏமாற்றுதல், ஊழல், தன் உறவினருக்கு சலுகை தரல், ஒத்துப் போதல், சமூக பொருளாதார சூழல் பிரச்சினை சமூகத்தில் இருப்பது பொறுப்புள்ள தலைவர்கள் தவிர்க்க இயலாத செயல்பாடுகளாக வளங்களை நிர்வகிப்பதில் ஊழல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தெற்கு ஆப்பிரிக்க அரசின் ஊழல் எதிரான திறன் வளர்ப்பு வழிகாட்டல் ‘ ஊழல் எதிர்ப்பில் நிர்வாகிகளின் பங்கு‘ என்ற தலைப்பில் தெளிவுகளை வெளியிட்டுள்ளது.

ஊழலை தடுத்தல்,கண்டறிதல், நிவிர்த்தி செய்தல் போன்ற நிர்வாகச் செயல்பாடுகளை மேலாளர் ஒவ்வொருவரும் செய்திட வேண்டும். சொல்லப்பட்ட எந்த அணுகுமுறையும் அவர்களின் பொறுப்புகளைக் குறைத்திடாது. சமரசத்திற்கு உட்படாதவாறு நிர்வாகிகள் நடந்திட வேண்டும். நெறிமுறைக் கலாச்சாரத்தை தங்கள் மத்தியில் பரவவிட்டு, வேலைகளில் ஊழல் இல்லாதவறும், கொள்கைகளை நடைமுறைப்படுத்தியும், ஊழல் நடைபெறாவண்ணம் விதிமுறைகளைக் கண்காணித்திடவும் வேண்டும். கணக்கொப்புவித்தல் மற்றும் ஊழலைச் சந்தித்தல் ஒரு போதும் மற்றவர்களிடத்தில் கொடுக்கக் கூடாது. ஆலோசகர்களின் உதவி குறிப்பாக கணக்காளர் உதவி, HR சிறப்பு மக்கள், மற்றும் இதர சட்டஉதவியாளர் உதவியுடன் கண்காணித்திடல் வேண்டும்.

வளங்களைப் பாதுகாத்திட உரிய பயிற்சிகள் அளித்துச் சரிப்படுத்திட வேண்டும். Appendix A11 ல் உரிய செக்லிஸ்ட் வழங்கப்பட்டிருக்கிறது.

## 4.3 ஏனைய உலக சமயங்களில் சமய அடிப்படைகள்:

அத்தியாயம் 2.4.2ல் கூறப்பட்டுள்ளது போல் ஊழல் பற்றி எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் கூறப்பட்டுள்ளன. கிறிஸ்தவ, யூத, முஸ்லீம், இந்து, புத்த, கன்பூசியஸ் மதங்களில். மற்ற எல்லா மத நூல்களிலும், விவிலியம் தவிர, ஊழல் எதிர்ப்பு காணப்படுகிறது. பேராசை பற்றியும் ஊழல் பற்றியும் எல்லா மதங்களும் குறிப்படுகின்றன. வணிக நெறிமுறைகள் கூறும் உலக மதங்கள் ஊழலுக்கு எதிரான செயல்பாடுகளை ஊக்கு விக்கின்றன.

யூத மதம்:

பழைய ஏற்பாட்டுப் பாரம்பரீயத்தில் ஊழலுக்கு எதிராக பல காரியங்கள் குறிப்பிடப்படுகின்றன. எபிரேய பதமான (சோகாத், பயிட்சா, கோபர்) போன்றவை அநீதியான பொருள் மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற உறவுகளைச் சொல்கிறது.

இஸ்லாம்:

பல விதங்களில் குரான் ஊழலை எதிர்க்கிறது. நீதிபதிகளுக்கு லஞ்சம் கொடுப்பது குரானில் தடைசெய்யப்பட்டுள்ளது (குரான் 2:188:5.8). நன்கொடைக்கும்(கிபா,ஹதியா) ஊழலுக்கு (ரஸ்வா) வித்தியாசம் கூறுகிறது. ' மனிதர் கைகளால் செய்யப்பட்ட தீய காரியங்களே நிலத்திலும் நீரிலும் ஊழல் என்கிறது (30.41). பிற உலகிற்கு உன்னை அழைத்துச் செல்லும் அல்லா கொடுத்த காரியங்களிலும், இந்த உலகில் உன் பங்கை மறக்காதே. அல்லா உனக்கு கொடுத்த நல்ல காரியங்களை செய் உலகில் ஊழலை விரும்பாதே (28.77) அரசன் கரூன், (குரோஸஸ்) தான் தோன்றித் தனமானவராகவும், கர்வம் நிறைந்தவறாகவும் மிகச் செல்வதால் விஷமானதாக இது சொல்லப்படுகின்றது.

பணத்தின் அதீதம் ஊழலுக்கு வழி வகுக்கிறது. வளத்தை அதிகமாக்கும் பொருளாதாரச் சமூகத்தின் பங்காக ஊழல் இருக்கிறது. அரசன் கரூன் அல்லாவை மறந்தான்,தன் சகோதரர்களை மறந்தான். வளங்களைப் பகிர்வது முஸ்லீம்களுக்கு பிரதானமானது. உண்மை விசுவாசிகள் விஷமத்தனமாய் இருக்க முடியாது. குரான் இஸ்லாம் விசுவாசிகளை எச்சரிக்கிறது (அல் - ரூம் 30:39) 'அநீதிமாய் சம்பாதிக்கும் பொருளை கடவுள் விரும்புவதில்லை. தர்மமாய் நீ தரும் பொருள் பலமடங்காய் உன்னை ஆசீர்வதிக்கும். பல ஆப்பிரிக்க பகுதிகளில் 'திருப்தி' என்ற வார்த்தை பேராசைக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது. எல்லா ஆசைக்கும் மேலாக பண ஆசை விரிவுபடும்போது தேவை 'பேராசையாய்' மாறிவிடுகிறது. தன் வளத்தை விஸ்தரிக்க பேராசைப்படும் ஒருவன் தன் விருப்பத்தை நிறைவேற்ற எதையும் செய்வான். இஸ்லாமிய பண வர்த்தகம் (இஸ்லாமிய வங்கி இன்சூரன்ஸ்) வட்டியின்றி உலகமெங்கும் வியாபிக்கிறது. இது ஊழலுக்கும் லஞ்சத்திற்கும் எதிரானது எனினும், முற்றிலும் ஊழலை ஒழிக்கும்

வண்ணம் சாதனமாயிருக்குமா?

இந்து மதம்:

இந்தியாவில் ஊழல் எங்கும் வியாபித்துள்ளது. ஆனால் இந்திய நெறிகள் தர்மா, அர்தா,காமா என்ற நிலையில் உள்ளன. இந்த மூன்று நெறிகளை வத்சானயானர் தமது காம சூத்திரம் நூலில் தெரிவிக்கிறார். தர்மா எனில் நல்ல நடத்தை, நேர்மை. சூதாடுதலும் லஞ்சமும் நேர்மையற்ற வழ்: தர்மத்திற்கு எதிரானது. நல்ல அரசன் தர்மத்தின் வழி நடப்பான். பொறுப்புள்ள தலைமைக்கு அவனை நடத்துகிறது. எச்சார்புமின்றி நடுநிலையாளனாக அவனிருக்க வேண்டும். பேராசையே ஊழலுக்கு வழி வகுக்கும் என்கிறது இந்துமதம். பொருளாசையை மேற்கொள்ள கர்மா யோகம் வலியுறுத்தப்படுகிறது. இந்து மதத்தின் அடிப்படையில் பொருள் பலம் தர்மத்தின் வழியில் நடைபெற வேண்டும். ஒழுக்கச் சிதைவே ஊழல், கலியுகத்தின் பகுதி அது. இந்து மதத்தில் பேரூன்றிய போராளி காந்தியவர்கள் (1869-1948) ஊழலுக்கு எதிராய் நின்றார். எளிய வாழ்வு வாழ்ந்தார். பொது அதிகாரத்திலிருந்து எந்த லாபமும் பெறக் கூடாது என அரசியல்வாதிகளை மந்திரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

அகிம்சை என்ற பவித்தரமான வாழ்வுக்கு, காந்தியைப் பொறுத்தவரையில், வன்முறையில் வாழ்வும், ஊழல் எதிர்ப்பும் முக்கியமானது. இருகாலத்தால் இந்து கண்ணோட்டத்தின் படி இந்து வணிக நெறிகளை வலியுறுத்தல் P&G ன் முன்னாள் CEO குர்சரன்தாஸ் எழுதிய புத்தகம் இந்தியாவில் பெருமளவிற்கு விற்கப்படும் புத்தகமாயிற்று. அவர் தனது மஹாபாரதத்தில் தர்மவானாய் ஒருவன் இருப்பது எவ்வளவு கஷ்டம் என்றும், தர்மவாழ்வு மிக நுட்பமாகக் கையாள வேண்டியதை வலியுறுத்துகிறார். பொய்மை, போர், பாலியல் உறவு ஒரு புறமும், மறுபுறம் வெளிப்படைத்தன்மை, உண்மை, மற்றும் பழீதீர்த்தல் ஆகியலை எதிர் எதிராக இருக்கின்றன. சமாதானம் ஒப்புரவு இவற்றையும் அது கூறுகிறது.

புத்த மதம்:

புத்த மதத்தின் அடிப்படையில் தீமையை வெறுப்பதே மனிதனின் இலக்கு. நிர்வானத்தை அடைய வேண்டும். ஊழல் உலகின் தீமையில் ஒரு பங்கு. நிர்வாணத்தை அடைய மனிதப் பேராசை, அதன் பங்கான ஊழல் முகம் நம்மைத் தடுக்கிறது. நிர்வாணா நமது ஆசைகளை விருப்பங்களை ஒழிப்பது. சரியான எட்டு வழிகள், மற்றும் ஐந்து கொள்கைகள் புத்த நெறியின் அடிப்படையில் அமைந்துள்ளன. புத்த மதத்தில் ஒரு மனிதனின் ரட்சிப்புக்கும், அவன் செயல்பாட்டிற்கும் உள்ள உறவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. தீமை நன்மையைப் பகிர்ந்துணரும் பண்பு மனிதருக்கு உள்ளது (தர்ம கொள்கையில் உள்ளது) அவர்களே அதன் தெரிவுக்கு பொறுப்பு. எல்லா வளர்ச்சி முயற்சிகளைப் பொறுத்த வரையில் பூட்டானும் அதன் ராஜாவும் GNP என்ற நிலையைக் காட்டிலும்

GROSS NATIONAL HAPPINESS ஐ மாற்றாக தெரிவு செய்துள்ளனர். ஊழலை எதிர்ப்பதே இதன் மைய நிலை. நீதியின்றி மகிழ்ச்சியும் சமாதானமும் இல்லை. புத்த வணிக நெறி வணிகத்தை மன உருக்கம், சாந்தத்துடனும், மற்றவர்களை வஞ்சிக்காத பயத்துடன் நடத்த அழைக்கிறது. புத்த கொள்கைகளைப் பின்பற்றி வணிகத்தில் நடப்பு காலத்தில் ஊழலை வேரறுக்க அழைக்கிறது.

கன்பூசியனிஸம்: கன்பூசியனிஸம் மதமல்ல மாறாக அது ஓர் தத்துவம் சீனாவில் மதம் போல அது முக்கிய அங்கம் வகிக்கிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சி ஊழலை ஒழிக்க முயன்றாலும் , ஊழல் எங்கு முள்ளது. சமீப கால கலாச்சார மாற்றத்தில் அதிகம் பரவியுள்ளது. உதாரணமாக சில்க் பாதை என்ற வணிக உறவில் ரோம ராஜ்யம் காலத்திலிருந்து பரவியுள்ளது. உண்மைக்கும் சமூகத்திற்கும் எதிர் ஊழலே என்கிறது கன்பூசியனியம் கன்பூசியனிஸத்தில் குடும்பமும் சமூகமும் பிரதான பங்கு வகிக்கின்றன. சமூக நன்னெறிகள் தனிநபர் காரியங்களுக்கு முன்மொழிவு தருவதில்லை, சொந்த உறவுகளுக்கு சலுகை காட்டுவதை ஊக்குவிப்பதில்லை. உறவுகளே முக்கியம். ஊழல் தனி மனித ஒழுக்க சிதைவு என்று கன்பூசியனிஸம் பார்க்கிறது. ஆனால் மேற்கு உலகில் விஞ்ஞான அரசியல் வலுமைப்படுத்தும் இடத்தில் அரசியல் கட்டமைப்பு மற்றும் பொருளாதார கட்டமைப்பு பிரச்சினையாக பார்க்கப்படுகிறது.

ஹான்ஸ் குங்கின் கலாச்சாரங்களுக்கிடையேயான நெறிமுறை மதிப்பீடுகள் உலக பெரு மக்களையும், தத்துவங்களையும் பார்க்கிறது. பொய் சொல்லாதே, திருடாதே என்ற முடிவுகள் உலகத்தின் முக்கிய மதீப்பீடுகள். தங்க கொள்கையான ‘எவர் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயோ, அதையே மற்றவர்களுக்கு நீ செய்‘ என்பது எல்லா மதங்களிலும் பொதுவாக உள்ளது.

## 4.4 ஊழலை வேரறுக்கும் நெறிமுறை மதீப்பீடுகள்:

நெறிமுறைகளின் அடிப்படையில் ஊழலை வேரறுக்க மூன்று காரியங்கள் உள்ளன. a) மதிப்புவாய்ந்த தனிநபர், கூட்டுத் தீர்மானம் செயல்பாடுகள் b) உண்மை அடிப்படையில் தனி நபர் குணம் நடத்தை இவை c) அமைப்பு ரீதியான சாதனங்கள் மற்றும் நிறுவன சங்கதிகளை (அமைப்பு நெறிகள், நிறுவன நெறிகளை) உருவாக்கல் நெறிமுறை நடத்தை நிறுவன தூண்டுதல் மற்றும் சட்டரீதியான தண்டனையுடன், அமைப்பை சமூகத்தில் தனி நபர் துறையில் கொள்ளல்.

மதிப்பீடுகள் மற்றும் உண்மைகளை கீழே விவாதித்துள்ளோம். அமைப்பு ரீதியான பரிந்துரைகள் 5 வது அத்தியாயத்தில் உள்ளன. 4.4.4 அத்தியாயத்தில் சிறப்பு சவால்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

## 4.4.1 பத்து தங்க மதிப்பீடுகள்:

மேலாகு கிப்ளே, AACC ன் தொடர்பு அதிகாரி நெறிமுறை சார்ந்த தீர்ப்பை ஊழலுக்கு எதிராக கூறுகிறார்: ஊழல் பெருங்குற்றம் மனிதச் செயல்பாட்டின் பாவம். ஏற்கத்தக்கதல்ல, யாரால் செய்யப்பட்டிருப்பினும். வடக்கு தெற்கு பாகுபாடில்லை. இது நிராகரிக்கப்படவேண்டும் ஏனெனில் ஊழல் தான் தோன்றித் தனமானது. பொது வாழ்வின் கூறுகளை அழிக்கிறது. சமத்துவமின்மை வளர்ச்சியின்மையை அதிகரிக்கிறது. பொது மற்றும் தனியார் துறைக்கு இடையில் உள்ளது. ஜனநாயகத்தை தகர்க்கிறது. எனவே Ecumenical இயக்கங்கள் சரியான தீர்மானம் கொண்டு நீடித்து ஊழலை எதிர்க்க வேண்டும். செயல்பாட்டின் மீது எதிர்ப்பு வர வேண்டும். ஊழல் மதிப்பீடுகளைக் குறைக்கிறது. சமூகம் சிதைகிறது வன்முறையைத் தூண்டுகிறது.

ஊழல் நெறிமுறை சார்ந்தல்ல என்பதால் தான் இருட்டில் நடக்கிறது. ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ள காலணியத்திற்கு முன்னால் உள்ளதும் பின்னால் உள்ளதுமான அதிகாரவிடங்களிலும், இன்றுள்ள வணிக நிலைகளிலும்' நன்கொடை வழங்கல்' என்பது ஓர் பிரிக்க முடியாத அம்சமானதால், தெற்கு நாடுகளில் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மறைமுகமாக ஊழலை நியாயப்படுத்துகிறது. எனவே நண்கொடைக்கும் லஞ்சத்திற்கும் வித்தியாசம் கண்டோம்.

மனித மாண்பே எல்லா நெறி முறைகளுக்கும் மேலான அடித்தளம்: கிறிஸ்தவ விசுவாசத்தின்படி, மனித மாண்பு அவன் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டதாலேயே உள்ளது. தனி நபரும் சமூகமும் கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்டவர்கள் (ஆதி 1:26:27) கடவுள் திரித்துவமானதால், மனிதரும் திரித்துவமே மனித மாண்பு சுதந்திரமான எண்ணமே, உடல் திறனோ அல்ல. இது மனித உறவை வலியுறுத்துவது. கடவுளுடனும் மனிதருடனும் கொள்ளும் பரஸ்பர உறவு (அகஸ்டினிலிருந்து 20ம் நூற்றாண்டு கார்ல் பாத் வரை இதை வலியுறுத்தியுள்ளன) இவ்வுறவு பாலின தன்மைக்கு அப்பாற்பட்டது. மட்டுமன்றி இயற்கையுடன் தொடர்புடையது. தோழமை மற்றும் பொறுப்புணர்வு சமத்துவம், மனிதர்களை வலிமைப் படுத்தலுடன் தொடர்புடையது. மனிதர்களின் மாண்பினை ஏற்றுக் கொள்வது மரியாதையுடன் நடத்துவதும் (UNDHR, A11) மனித உரிமைச் சாசனம் தொடர்புடையது. எல்லா மதிப்பீடுகளிலும் ஒன்று அல்ல அதன் அடிப்படை.

இந்த உலகளாவிய 10 நெறி மதிப்பீடுகள் வழி நடத்தும் கற்கள் ஊழலை வேரறுக்க உதவுகின்றன.

1. நீதி: கூலி உழைப்பின் அடிப்படையில், ஊழல் பெயராலோ, சொந்தம் எனும் நிலையிலோ அல்ல. அதுவே நீதி உழைப்பின் அடிப்படையில் அல்ல. தேவையின் அடிப்படையிலேயே வாழும் பொருள் மற்றும் சேவைகள் (MDG ன்

பார்வையில்) நல்ல திறமை வெளிப்பாடு என்பது கடவுள் நமக்கு அளித்த வரங்களை முறையாகப் பயன்படுத்தலே இது பொறுப்பான உக்கிராணத்துவம். செயல்நீதி என்பது உரிமையைப் பெறுவதும், சமத்துவமாய் நடத்தப் பெறுதலும். ஊழல் வளத்தை தவறாகப் பயன்படுத்துகிறது. ஊழல் திறமை உழைப்பை மட்டுப்படுத்துவதுடன் திருட்டை சாதனையாக பார்க்கிறது. சந்தையை பலவீனப்படுத்துகிறது. திறமை உழைப்பை அங்கீகரிப்பதில்லை சொந்தக்காரன், அமைப்பு நிலையை அசிங்கப்படுத்துகிறது. வளங்களிலிருந்து மக்களை அந்நியப்படுத்துகிறது. அரசியல் அதிகாரத் தரகர்களை ஊக்குவிக்கிறது. ஏழை பணக்காரர் வேற்றுமையை அதிகப்படுத்துகிறது.

2. சமத்துவம்: மனித சமூகம், மற்றும் மனித மாண்பு என்பது சமத்துவ உரிமை மற்றும் சம நடத்துதலில் உள்ளன. தங்க வசனம் சமத்துவ நடத்தலை ஊக்குவிக்கிறது. ஊழல் தங்க வசனத்திற்கு எதிரானது. ஊழல் வலிமையற்றவர்களை அதிகார மயமற்றவர்களாக்குவதுடன், ஊழல் நீதி மன்றங்களில் நீதி பெற இயலாது ஆக்கி விடுகிறது. (யாத 23:8) கூறுவது ‘பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்‘ ஏழைகள் பரிதானம் கொடுக்கக்கூடாது அது சமத்துவத்தைப் புறக்கணிக்கும் ‘அபாண்டமான‘ சொல்லை ஏற்றுக் கொள்வாயாக. கொடுமையிள்ள சாட்சிக்காரனாயிருக்க ஆகாதவனுடன் கலவாயாக‘ (யாத் 23:1) கடவுள் நீதியுள்ளவர் என்று கிறிஸ்தவ யூதக் கண்ணோட்டம் கூறுகிறது.

3. சுதந்திரம்: மனித மாண்பின் இன்னொரு அடையாளம் தீர்மானத்தை நிறைவேற்ற சுதந்திரம். சுதந்திரத்தின் கிறிஸ்தவ அர்த்தம் நன்மை, வாழ்வை நிலை பெறச்செய்யும் எதையும் நடைபெறாமல் தடுக்கும் நிலைகளிலிருந்து விடுதலை. (இயேசு கிறிஸ்துவின் பாவ விடுதலையே அது) சுதந்திரமின்மையையும், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தாமிலிருக்கவும் வழிச்சூழல்களை ஊழல் உருவாக்குகிறது. இதனால் கடமை உரிமை மனித உரிமை மற்றும் தீமையை வெறுக்கும் சுதந்திரமாகச் செயல்படல் இதில் சமரசத்தை உருவாக்குகிறது.

4. நிலைத்து நிற்றல்: நிலைத்த வளர்ச்சி கண்ணிய மான வாழ்வை இந்த சந்ததிக்கு தருகிறது. கண்ணியமான வாழ்வை எதிர்கால சந்ததிக்கு புறக்கணிக்காமலும், மனிதரில்லாத உயிரினங்களைப் பாதுகாத்தும். நிலைத்த நடவடிக்கைகள் மண்ணைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் உதவுகின்றன (ஆதி 1:27) வளங்களைச் சரியாகப் பயன்படுத்தல் மற்றும் அதை புத்துயிர் பெருக்கவும் உதவுகிறது. ஊழல் குறுகிய கால விருப்பங்களுக்கானது. பொது நலனுக்கு எதிரானது ஊழல் இயற்கை வளங்களை நாசப்படுத்துகிறது (சட்டத்திற்கு புறம்பான மரம் வெட்டுதல் நீர் மாசுப்படுத்தல்)

5. வலிமைப்படுத்தல்: வலிமைப்படுத்தல் என்பது சுய பலத்தை பலப்படுத்தி அதன் மூலம் தீர்மானம் எடுக்கும் நிலைக்கும், வாழ்வை தன் கையில் பயன்படுத்தவும் உதவுகிறது. சமமின்மை உறவுகளில், அதிகார சமன்பாடு இல்லாத சூழலில், பால் உறவுகளில் வேலை உறவுகளில், அரசியல் உறவுகளில், திருச்சபை உறவுகளில் வலிமைப்படுத்தல் உதவுகிறது. வலிமைப் படுத்தல் ஏழைகளின் சார்பான கடவுளின் செயல் வேதாகம விடுதலைக் கதைகளும், இயேசுவின் மீது விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுத்த ஆவியின் வரங்களும் மக்களை வலிமைப்படுத்தவே. ஊழல் மக்களை அதிகாரத்தினின்றும் அப்புறப்படுத்துகிறது. வலிமைக்கு எதிரானது. ஊழல் இருள் இடங்களில் செயல்படுகிறபடியாலும், வெளிப்படைத் தன்மையில்லாததாலும் ஊழலினால் மக்கள் தீர்மானங்களில் பங்கு பெறமுடியவில்லை. ஊழல் மக்களை பொருளற்றவர்களாக்குகிறது. சார்புடையவராக, ஒடுக்கப்படுகிறவராக மாற்றுகிறது.

6. பங்கேற்பு: தீர்மானங்களில் பங்கேற்பதே அது. உரிமை மற்றும் கடமைகளில் பங்கேற்பதுமே அது. சமத்துவத்திற்காக பங்கேற்பில் இருந்து தங்கள் வாழ்வை அவரவர் திறமைக்கேற்று (உம். குறைந்த வயது) வெளிப்படுத்தல். கடவுளின் உடன்படிக்கையில் விசுவாசிகள் உலகச் சமூகத்தில் பங்கேற்கிறார்கள் உலகத் திருச்சபையைக் கட்டுகிறார்கள். கல்வி, வேதாகமப்பயிலரங்கு, லே பயிற்சி மூலம் தெளிவு பெறுகிறார்கள். ஊழல் அவர்களை பங்கேற்க விடுவதில்லை. இந்த பங்கேற்பு நிலைக்கு எதிரானது வெளிப்படைத் தன்மையில்லாமல் இருப்பது, ஜனநாயகத்தை மறுப்பது, மற்றும் பொது நிலையில் பங்கேற்றல் இல்லாமல் இருப்பது. வெளிப்படைத் தகவலே வெளிப்படைப் பங்கேற்பை ஊக்குவிக்கும்.

7. சமூகம்: தனி நபருக்கோ இனத்துக்கோ, கடவுளின் கிருபை வரங்கள், வளங்கள் கொடுக்கப்படவில்லை மாறாக முழுச் சமூகத்திற்குமே சுய விருப்பங்கள் பொது விருப்பங்களுக்கும் சமநிலையில் செய்யப்படவேண்டும். ஊழல் பொதுநலனை சுயநலனால் கீழ்த்தள்ளுகிறது.

8. பொறுப்பு: (அதிகாரம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தல்) அதிகாரம் தீர்மானங்களை நிறைவேற்றும் திறனை இலக்கை அடைய உதவுகிறது. எவ்வளவு அதிகாரம் உள்ளதோ, அவ்வளவு பொறுப்பும் இருக்கிறது. மனிதன் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் சோதனைக்குள் செல்வான். இது ஒவ்வொரு மனிதரின் பாவ உணர்வைக் கூறுகிறது. வலிமை அதிகாரம் மேலிருந்து அடக்கப்படவேண்டும், ஜனநாயகரீதியில் கீழ் இருந்தும் கூட, மற்றும் நண்பர்களின் உதவியால் நல்ல பொறுப்புடன் கூடிய வளத்தின் மீதும் அதிகாரம் என்பது நல்ல உக்கிராணத்துவம். ஊழல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறது. அப்படிப்பட்ட பொறுப்பை துஷ்பியோகம் செய்கிறது.

9. கட்டுபாட்டுத் திறனுடன் நம்பிக்கை: நம்பிக்கையே நிலைத்த மனித உறவுக்கு அடிப்படை மற்றும் விளைவுக் கூட கட்டுப்பாடு என்பது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதல்ல. நம்பிக்கையை அது வலுப்படுத்துகிறது. ECLOF இப்படிக் கூறுகிறது ' கடவுளில் நாம் கட்டுப்பாட்டை திணிக்கிறோம்' ஊழல் நம்பிக்கையைச் சிதைக்கிறது. கட்டுப்பாட்டை தவறாக பயன்படுத்துகிறது. மனித உறவை அழிக்கிறது.

10. மன்னிப்பு: தவறுகளை தோல்விகளை மன்னிப்பது உறவை சமதானத்தை நடத்துகிறது. கிறிஸ்தவ நன்னெறிகளில் மன்னிப்பு முக்கியமானது. மனித பாவங்களை மன்னிக்கும் கடவுளின் தொடர்ந்த செயல்பாட்டின் ஒரு பகுதியே அது, இதன் மூலம் மனிதருக்கும் மனித உறவுகளுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுகிறது் மனித சமூகம் மீண்டும் மீண்டும் சுகப்படுகிறது. ஊழல் செய்கிறவனும் ஊழலால் பாதிக்கப்படுவனும் அவர் தம் நிறுவனங்களும் ஊழல் அநியாயமானது என்றும் அதனால் பாதிக்கப்படுகிறோம் எனவும் உணரவேண்டும் இது அமைந்தால் சர்ச்சும் சமூகமும் உருப்படும், சுகப்படும்.

### 4. 4. 2 பத்து தனிப்பட்ட மதிப்பீடுகள்:

ஊழலில்லாத தீர்மானங்களும் நடவடிக்கைகளும் பலமான மதீப்படுகளால் மட்டுமன்றி, தனி நபர் உண்மைத் திறனால் மதிப்பீடுகளாலும் வளர்க்கப்படுகின்றன. உண்மையாயிருத்தல் என்பது நெறி. உண்மையாக இருத்தல் பண்பு நெறி. உலக நிதிச்சுமைச் சிக்கல்கள், 2008லிருந்து தொடங்கியவை, பேராசை பிடித்த ஆட்களால் நிர்வாகிகளாலும், அவர் தம் துஷ்பிரயோகத்தாலும் நடைபெறுவை. இது தனி நபர் உண்மை மதிப்பீடுகளை சமூகத்தில் வலியுறுத்துகிறது.

ஊழலில்லாத நடவடிக்கைகள் என்பது

1. மெய்மை (நேர்மை, வெளிப்படை, திறந்த மனது)
2. உண்மையாயிருத்தல் (உயர் மதிப்பை தேடுவது)
3. கண்ணியம் (பேராசை, பெரும் ஆசை இவற்றிலிருந்து விடுதலை)
4. அடுத்தவர் துன்பத்தை தன் துன்பமாக உணர்வதில் (மற்றவர்களை கருதுதல்)
5. கவனம் (நிர்வாக வளங்கள் ஆட்களை சரியாக நிர்வாகம் செய்தல்)
6. ஆவியாயிருத்தல் (உயரிய விசுவாச அடிப்படை)
7. உண்மையாய் விசுவாசமாய் இருத்தல்( மதிப்பீடுகள், வாக்குத் தத்தங்களின் மீது)
8. நெறிமுறை பார்வை (நேர்பார்வை, மதிப்பீடுகளை காத்தல்)

9. பணி செய்யும் தைரியம் (தனி நபர் விருப்பத்திற்கு அல்ல பொது நலனுக்கு)
10. மன்னிப்பின் சிந்தை (தவறுகளை மன்னித்தல்)

### 4.4.3 பாலியல் ஊழல்களை மேற்கொள்ள பாலியியல் நெறிமுறைகள்:

மேலாளுமை நிலையிலுள்ள ஒருவர் குறிப்பாக ஆண்கள், தங்கள் கீழுள்ள பெண்களை (பொதுவாக)பாலியல் தொடர்பு அல்லது துஷ்பிரயோகம் செய்வது என்பது குறிப்பாக காசு தொடர்பான காரிய லாபம் இல்லாத, ஆனால் அதிகாரத்தை தன் சுயலாபததிற்கு பயன்படுத்தும் ஊழலாகும், குறிப்பாக ஆசிரியர்கள், மருத்துவர்கள், பாஸ்டர்கள் ஈடுபடுகின்றனர். துஷ்பிரயோகம் செய்பவர் லஞ்சம் தருகிறார், உதாரணமாக பள்ளியில் அட்மிஷன், அல்லது ஒரு பரீட்சையில் பாஸ்பண்ண. பாதிக்கப்பட்டோர் இந்த லாபத்தை பெறுகின்றனர். பொதுப் பள்ளிகளைக் காட்டிலும் திருச்சபைப் பள்ளிகளில் பாலியல் ஊழல் நடைபெறுகிறது என்பது கென்யாவில் நடைபெற்ற ஆய்வின் அறிக்கை, தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ளோர், அல்லது பள்ளியின் முதல்வர்களின் விருப்பத்திற்கு எதிராக நடந்து கொண்ட பெண்கள் ஆப்பிரிக்காவில் ஆசிரியர் பணியைப் பெறவில்லை. பாலியல் ஊழல் இருட்டறையில் உண்டு வெளிப்படையாக நடைபெறுவதில்லை. சட்டபூர்வமற்றது. கண்டுபிடித்தால் மறுப்பார்கள் பரஸ்பரம் துஷ்பிரயோகம் செய்பவருக்கும் பாதிக்கப்படுவருக்கும் இடையில் இது உள்ளது. எல்லா பாலியல் வற்புறுத்தல் மற்றும் பாலியல் துஷ்பரயோகமும் பாலியல் ஊழல் என கூறமுடியாது. பாதிக்கப்பட்டோருக்கு கற்பழிப்பு என்பது பிரதிபலன் இல்லாதது. பல இடங்களில் சிறுமிகள்,அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர். கத்தோலிக்க பாதிரிகளால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டதுபோல பாலியல் ஊழல் என்பது துஷ்பிரயோகம் செய்பவர் தனது அதிகாரப் பதவியை தவறாகப் பயன்படுத்துகிறார் (உம் பரீட்சையில் பாஸ் பண்ண உதவுதல்)

பாலியல் தொந்தரவை நீக்க, பல நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் (பார்க்க பரிந்துரைகள் 5.27,28) பாலியல் ஊழலைக் குறைக்க பாலியல் நெறி முறைகள் தேவை கிறிஸ்தவ பார்வையில் பாலுணர்வு என்பது கடவுளின் நன்கொடை, வாழ்வுக்குரிய மையம் நிலைத்த உறவு, வாழ்வு நீடித்தல், மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் பிள்ளைப் பேறுக்கானது. பாலுணர்வின் முக்கிய அம்சங்களான மேற் கூறப்பட்டவைகள், HIV AIDS, ஆபாசப் படம் பார்த்தல் விபச்சாரம் போன்றவைகள் விவாதிக்கப்படும் முன், இந்த புனித பாலுணர்வு போற்றப்பட வேண்டும். பாலுணர்வு நெறி மேலே கூறப்பட்ட பத்து மதிப்பீடுகள் மற்றும் 10 உண்மை நெறிகளை வலியுறுத்துவதைப் பரிந்து கொள்ள வேண்டும். தங்க விதியின் அடிப்படையில், சமத்துவம், வலிமைப்படுத்தல் மன்னிப்பு இவை போன்றவை பாலியல் நெறிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை, பாலியல் ஊழல் என்பதை நீக்க சமத்துவ பெண்ணிய உறவுகள், பொறுப்புள்ள தலைமைப் பண்பு

பயிற்சி, வெளிப்படை தகவல்கள், மற்றும் வெளிப்படையான பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள், விசில் ஊதிகளைக் காப்பாற்றுதல் போன்றவை மூலமும், பங்கேற்பு கல்வி மூலம், தண்டனைகள் மூலமும் மன்னிப்பு மூலமும் அடையலாம்.

### 4.4.4 நெறி சம்பந்தமான குழப்பங்களைச் சந்தித்தல்:

நெறி சம்பந்தமாக சில சமயம் குழப்பங்கள் வரலாம், இரட்டை நிலை மதீப்பீடுகள் ஒன்றுடன் ஒன்று முரண்படுபவை என்று கிரேக்க வார்த்தை கூறுகிறது. உதாரணமாக:

ஒரு நிவாரணப் பணி அமைப்பு உணவு அடங்கிய லாரியை டிரைவர் மூலம் அனுப்புகிறது. கொள்ளையர் தடுக்கிறார்கள் காசு கேட்கிறார்கள் அப்படிக் கொடுத்தால்தான் எல்லை கடக்கலாம் என்கிறார்கள். காசு கொடுக்காவிட்டால் மக்கள் உணவின்றி செத்துப் போவார்கள், உணவும் அழுகிப் போகும், ஆனால் கொள்ளையை தடுக்கப்படலாம் லஞ்சம் கொடுத்தால், உணவு மக்களுக்கு போய்ச் சேரும் ஆனால் பின்னாளில் லஞ்சம் மீண்டும் மீண்டும் கொடுக்க நேரிடும். பின் விளைவுகள் பாதகமாக வரும், இந்த நிலையே சுகாதாரத் துறையில் சிக்கிரம் மருத்துவர் நோயாளியைக் கவனிக்க, மருந்துப் பொருட்கள் கிடைக்க, துறைமுகங்களிலிருந்து பொருட்கள் பெற உபயோகப்படுத்தப்படுகின்றன. முரணியச் சூழலில் சிக்கல், அமைப்பு நிர்வாகிகள், நிதி அளிப்போர், மக்கள் சமூகம் யாவரையும் சந்திக்க வேண்டும்

### மூன்று நெறி முறைக் குழப்பங்கள் உள்ளன.

1. இரண்டு அல்லது மூன்று மாற்று வழிகள் உள்ளன. அதில் சிறந்ததை எடுத்தல்.
2. இரண்டு அல்லது மூன்று மாற்று வழிகள்: ஒன்று இன்னொரு மதிப்பை மீறுகிறது, அல்லதுஒரு உண்மைத் தன்மை இன்னொரு உண்மைத் தன்மையை மீறுகிறது.
3. சில சமயம் இது தவறாகவும் ஊழலுக்கு வழிவகுப்பதாகவும் இருக்கும். இருப்பினும் நல்ல இலக்குக்கு உதவும். ஆனாலும் நன்மை முடிவாக வர தவறு செய்யலாமா?

இதற்கு மூன்று விடைகள் உள்ளன (கிராபிக்கையும் பார்க்கவும்)

1. மெய்யான ஒரு மதிப்பீடு: ஒரு மதிப்பீடு பல மதிப்பீடுகளைக் காட்டிலும் முன்னுரிமையுள்ளது. மனித உயிரைக் காப்பாற்றுவது மற்ற எல்லா மதிப்பீடுகளைக் காட்டிலும் முன்னுரிமை பெற்றது. மனித நெறிமுறைகளில் இது பிரதானமானது, சரி தவறு என்னும் இரண்டு கொள்கைகள் இருப்பினும். Deontological Ethics.

2. மதிப்பீடுகளுக்குள் உறவுகள்: மதிப்பீடுகள் மற்ற மதிப்பீடுகளுடன் உறவு நிலையில் வைக்கப்படுகிறது. ஒன்று இன்னொன்றுக்கு மதிப்பு தருகிறது. மேலேயுள்ள சூழலில் உயிர் காப்பு, பாதுகாப்பு, சமாதானம் இவை ஒன்றுடன் ஒன்று மோதி சமநிலைக்கு வருகின்றது. ஒரு வேளை கொள்ளையருக்கு பணம் கொடுக்காவிடினும் உணவைக் கொடுக்கலாம். ஆனாலும் பின்னாளில் அவர்கள் துஷ்பிரயோகம் பண்ண, பயமுறுத்த, பிடுங்கிக் கொள்ள ஏதுவாயிருக்கிறது. Teleological Ethics என்ற இது எது முன்னுரிமையோ அதற்கு உத்தரவு அளிக்கிறது எது சரி எது தவறு என்ற அச்சூழலுக்கு பதில் அளிக்கிறது.

3. சாத்தியமான விதி: ஒவ்வொரு சூழலுக்கும் தகுந்தவாறு சாத்தியமான விதி வேலை செய்கிறது. X என்ற சூழலில், A என்பது B மதிப்பீட்டைக் காட்டிலும் Bஎன்ற மதிப்பீட்டைக் காட்டிலும் முன்னிரிமை பெறுகிறது. Y என்ற சூழலில் வேறு மதிப்பீடு முன்னுரிமை பெறலாம். இது சூழல் தன்மையில் மாறி மாறி வரும். நெறி முறை மாறி மாறி வரும் சூழல் அல்லது நெறி நெகிழ்வுத் தன்மை கட்டமைப்பில் இல்லாதது அல்ல, ஆனால் நெறி விதிகளையே பின்பற்றுகிறது. (அல்லது எல்லா மதிப்பீடுகளும் முன்னுரிமை, பெறும்) மேலே சொல்லப்பட்ட சூழலில், லஞ்சம் கொடுக்காமல் இருக்கும் நிலை கொள்கையை வலியுறுத்தினாலும், உயிர் காக்கப்படும் நிலையில் உயிருக்கே பிரதான முன்னுரிமை (பார்க்க: முரணியச் சூழலை தீத்தல்)

முரணியச் சூழலை தீத்தல



குழப்பச் சூழலில் பொதுவான விடைகிடைக்காது. அதே சமயம் மதிபீடுகளை சூழலில் முன்னுரிமைப் படுத்திட வேண்டும். குறிப்பாக பாதிப்புக்களை குறைக்க மதிப்பீடுகளை தரவரிசைப்படுத்தல் வேண்டும்'. பொது விதிப்படி, நெறி சார்ந்த முடிவு, நெறியில்லாத ஆயுதத்தை சரி என்று தீர்க்காது மஹாத்மா காந்தி கொள்கை: இலக்கே வழி ஒரு வன்முறை வழி வன்முறையற்ற காரியத்திற்கு உதவக் கூடாது. ஊழலற்ற சமூகம் ஊழலில் நியாயப்படுத்துவதிற்கில்லை. ஆனால் முரணியக் கடுமைச் சூழலில், சில நெறி பிழல்வு காரியங்கள் செய்யப்படுகின்றன, உயிர்கள் காப்பாற்றப்பட முரணிய கடுமைச் சூழலில் செய்யப்பட்டாலும் அது நீதி சார்ந்ததல்ல ஒழுக்க நெறிப்படி சின்னச் சின்ன ஊழல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. ஏன் ஒரு பணியாளர் தன் குடும்பத்தை பாதுகாக்க சின்ன வரும்படி உயர்வை ஏற்படுத்திக் கொள்ள ஏன் கடுமையாகப் பார்க்கப்படுகிறார்? அல்லது உயிர் காப்பாற்றும் மருந்தை மீட்க கஸ்டம்ஸ் ஆபிசருக்கு ஏன் லஞ்சம் கொடுக்கப்படுகிறது. இந்த சின்ன ஊழல்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இவை நெறியின் பால் சரியல்ல, அது போலவே பெரும் ஊழல்களும் நியாயப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் மக்கள் ஒற்றுமை ஜனநாயகம் சிதறடிக்கப்படுகிறது. (தனிப்பட்ட ஆளுக்கு பாதிப்பு இல்லை என்று கருதினாலும்) ஆனால் அநீதியால் பட்ட அமைப்பை சரி யென்றது. எனவே இந்த முரணியல் சூழல் அநீதியால்பட்ட சமூக அமைப்பே. இது நம் ஒருவரையும் ஒவ்வொருவரையும் குழப்பமான குற்றச் சூழலில் புகுத்துகின்றன. இங்கே கிறிஸ்தவ மன்னிப்பு வருகிறது. நாம் விடுபட நினைத்தாலும், விடுபட முடியாது சூழல் இந்தச் சூழலை மாற்றுச் சூழலை உருவாக்கிட வேண்டும்.

எனவே ஊழலில்லாத நிலையே நெறி விதிகள், அதுவே நமது இலக்கு. ஆனால் குழப்பச் சூழலில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், நியாயப்படுத்தாது ஊழலை, தவிர நாம் தொடர் போராட்டம் நடத்திட உத்வேகம் தருகிறது. குழப்பச் சூழல் குறித்த பயிற்சிகள் Case Studies மூலமாக நடத்தப்படவேண்டும். போலீஸ்காரரின் அநீதியான காரியத்தை மேற் கொள்வது CARITAS SWITZER LAND இந்த முரணியக் குழப்பச் சூழலில், நெறிமுறைக் குழப்பத்தில், விதிமுறைகளை விரிவாக்கியது. விதி 2,3ல் சில மீறுதல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன, இதன் மூலம் மக்கள் பாதுகாக்கப்படுவது சரியாக இருக்கும்.

### 4.4.5 ஊழல் போதை பிடியிலிருந்து மேய்ப்புப்பணி மூலம் குணம் தருதல்:

போதைப் பாதிப்பை ஊழலுக்கு ஒப்பிடுவோம். ஊழல்வாதிகள், ஒடுக்கப்படுவோர் எதிர் நிற்காத நிலையில் தொடர்ந்து ஊழல் போதையிலிருப்பார்கள். பேராசை ஆட்கொண்டு விடும். நெறி முறைகள் மட்டுமன்றி,

இச்சூழலில், மேய்ப்புப் பணி பாதுகாப்பும், குணப்படுத்தலும் தேவை. குணப்படுத்தலுக்கு ஆறு நிலைகள் உள்ளன.

### முதல் நிலை: குறைத்தல் மற்றும் நியாயப்படுத்தல்:

ஊழலை நன்கொடையென வாதித்தல். வணிக ரீதியில் லஞ்சம் என்று கூறாமல் உபயோகமான உபரிச் செலவு என்று அழைக்கப்படுகின்றது. லஞ்சத்தைத் தனியே பேசு என்கிறது.

### இரண்டாம் நிலை:

அழுத்தம் தரும் போது பிரச்சினை உருவாகிறது: நிறுவனத்தின் மீதும் தனி நபரின் மீதும் லஞ்சம் திணிக்கப்படுகிறது. பொருளாதார சொல்லால் சொல்வோமெனில் லஞ்சம் தனது தாங்கிக் கொள்ளும் நிலையில் வந்துவிட்டது.

### மூன்றாம் நிலை:

போதையை ஒத்துக் கொள்ளல்: ஆம் நான் நோய்வாய்ப்பட்டிருக்கிறேன் என் நிறுவனம் சமூகம் நோயில் உள்ளது மீட்கப்படவேண்டும்

### நாலாவது நிலை:

லஞ்சம் ஊழல் இல்லாத சகிப்பு நிலை: போதை வஸ்துக்காரர் போதையிலிருந்து விடுபடுதல் போல, லஞ்சம் வாங்கக் கூடாத வெறுமை நிலை, இதற்கு ஊழல் நிவர்த்தி செயல்பாடுகள் முக்கியம்

### ஐந்தாம் நிலை: உதவிகோரல்:

நமது போதையைப் போக்கி வாழ உதவி கோரல். தேசிய உலக கோட்பாடுகளின் உதவி

### ஆறாம் நிலை: குணப்படுதல்:

ஊழலில்லாத வாழ்வு. கவனத்துடன் இருத்தல். ஏன் எனில் திரும்ப அது வரும் அதற்கு இடம் கொடாத நிலை, ஊழல் குறைந்து கொண்டிருப்பினும்.

# அத்தியாயம் - 5

## திருச்சபைகள் மற்றும் தொடர்பான நிறுவனங்களுக்கான 35 பரிந்துரைகள்

திருச்சபைகள் மற்றும் தொடர்பான நிறுவனங்களான பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவ நிறுவனங்கள், வளர்ச்சித் திட்ட முகமைகள், அருட்பணி அமைப்புகள், பிரசுரம் செய்வோர் தவிர தேசிய, கண்ட அளவிலான பன்னாட்டு அமைப்புகள் ஊழலுக்கு எதிரான தெளிவான கொள்கைகளை வரையறுக்கு இயலும். ஏற்கனவே இருக்கும் தேசிய அளவிலான அல்லது கண்டம் அல்லது உலக அளவிலான அணுகுமுறைகளை கவனித்து தமக்கென கொள்கைகளை வரையறுத்தல் நல்லது. அவை உலகம் எங்கும் உள்ள ஒப்படைப்புகளில் பங்கு வகிக்க வேண்டும்.

கீழ்க்காணும் ஏரியாக்களில் 35 பரிந்துரைகளைக் கொண்டுள்ளது ஏரியாக்கள் வருமாறு

1. இறையியல் மற்றும் நன்னெறிக் கோட்பாடுகள்
2. ஆளுமை மற்றும் தலைமைத்துவம்
3. வளங்கள் மற்றும் போதனைகள்
4. பால் வலிமைப்படுத்தல்
5. நீதிமன்றம் தொடர்பானவை
6. தகவல் தொகுப்புகள், தொடர்பு சாதனங்கள், பிரசாரங்கள், திட்டங்கள்

### 5.1. இறையியல், நன்னெறிக் கோட்பாடுகள் மற்றும் திருச்சபை இயல் மூலம் ஊழலை வேரறுத்தல்.

பரிந்துரை 1. திருச்சபைகளின் ஒன்றிப்பு பார்வையில், கிறித்துவ கடவுளின் பார்வையில், ஊழலை மேற்கொள்வது

பரிந்துரை 2. திருச்சபைகளின் ஒன்றிப்பு பார்வையில், திருச்சபை தலைமை என்பது உக்கிராணத்துடன் நற்பணி செய்வதாக இருப்பதால், திருச்சபை இயலை மறுபார்வை பார்த்தல்கிறித்துவக் கடவுள் நீதியின்பால் செயல்படுகிறவராக இருக்கிறார் ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ளோரை பாதுகாக்கிறார். அவர்களை வலிமைப்படுத்தி விடுவிக்கிறார். இயேசு கிறிஸ்துவில் மன்னிப்பு தருகிறார் (பார்க்க அத்தியாயம் 4.1.1 மற்றும் 2)

பரிந்துரை 2. திருச்சபைகளின் ஒன்றிப்பு பார்வையில், திருச்சபை தலைமை என்பது உக்கிராணத்துடன் நற்பணி செய்வதாக இருப்பதால், திருச்சபை இயலை மறுபார்வை பார்த்தல்.

பரிந்துரை 3. ஆசிர்வாத இறையியல் விவிலியத்திற்கு ஒவ்வாததது. அது ஊழலை இறையியல் நீதியில் வளர்க்கிறது. ஊழலின் பால் சாரும் தலைமைத்துவ மாதிரிகளை ஊக்குவிக்கிறது. எனவே அவ் இறையியல் தகர்க்கப்படவேண்டும். வெறுத்து ஒதுக்கப்படவேண்டும்திருச்சபையில் தலைமைப் பொறுப்பையும் அதிகாரத்தையும் மேற்கொள்தல் என்பது தலைமைப் பொறுப்பாளரும், சேவை பெறுவோரும் ஒருவருக் கொருவர் கணக்கு ஒப்புவித்தலில் இருப்பதாகும். இது கண்ணியத்துடன் கூடிய பங்கேற்பு தலைமை மற்றும் சேவை புரிவோரின் தன்மையுடையதாகும். படிநிலை மறறும் ஆணாதிக்க மாதிரிகள் ஊழலை எந்த அளவிற்கு அனுமதிக்கின்றன என்று பார்த்து மதிப்பிட, மேற்படி மாதிரிகளை கடுமையுடன் மீள்பார்வை பார்க்கப்பட வேண்டும். ஆவிக்குரிய தலைமை என்பது விசுவாசத்தில் வேரூன்றியது. ஊழலை எதிர்த்திட உள்தன்மை பலம் தரக்கூடியது. (பார்க்க அத்தியாயம் 4.2 மற்றும் 4.4)

பரிந்துரை 3. ஆசிர்வாத இறையியல் விவிலியத்திற்கு ஒவ்வாததது. அது ஊழலை இறையியல் நீதியில் வளர்க்கிறது. ஊழலின் பால் சாரும் தலைமைத்துவ மாதிரிகளை ஊக்குவிக்கிறது. எனவே அவ் இறையியல் தகர்க்கப்படவேண்டும். வெறுத்து ஒதுக்கப்படவேண்டும்

ஆசிர்வாத இறையியல், உலக அளவில் வளர்ந்து வென்றாருக்கு இறையியல் இரட்சிப்பின் அடையாளமே செல்வக்குவிப்பு என்கிறது. இது கடவுளுக்கு லஞ்சம் தரும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது. வெளிப்படைத் தன்மையற்ற தலைமைத்துவ கூறுகளை ஊக்குவிக்கிறது (பார்க்க 4:1:3) அது போலவே, வேறு பல மத இயக்கங்களும் பிரிவுகளும் ஊழலையும் கணக்கு ஒப்புவித்தல் நிலையையும் ஊக்குவித்து சர்வாதிகார தலைமை, கணக்கு ஒப்புவித்தல் இல்லாத உடனடியான கீழ்ப்படிதல் தவிர, தவறான இறையியலுக்கு சப்பை கட்டுதலை வலியுறுத்துகிறது (உதாரணம்: காங்கோவில் உள்ள கிம்பாங்கு திருச்சபை அதன் மூன்று ஸ்தாபகர்களை திரித்துவக் கடவுளுக்கு ஒப்பிடுகிறது.) இறையியல் ரீதியில் திருச்சபையாலும் விசுவாசிகளாலும் ஆசீர்வாத இறையியல் தகர்க்கப்பட்டு, அது அரசியல் அதிகாரிகளால் சட்ட பூர்வமாகவும், ஜனநாயக ரீதியிலும் சந்திக்கப்படவேண்டும்: ஏனெனில் இவ் இறையியல் வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தலை நிராகரிப்பதுடன், மதத்தை மூடி வைக்கிறது.

பரிந்துரை 4. பாலியல் நெறி, சுற்றுச்சூழல்,அரசியல் நெறி, வணிக நெறி, சேவை நெறி போன்ற அனைத்து நெறிக் கோட்பாடுகளும் மறுபார்வைக்கு உட்படுத்தப்பட்டு ஊழல் புகாவண்ணம் தடை செய்யப்படவேண்டும்

நன்நெறிக் கோட்பாட்டைப் பயன்படுத்தும் அனைத்துத் துறைகளும் ஊழலை ஒழித்திடப் பணிக்க வேண்டும். எல்லாச் சேவை நெறிகளும், தனியார் துறை சேர்ந்த வணிக நெறிகள், வளங்களை பயன்படுத்தும் சுற்றுச்சூழல் நெறிகள், அரசியல் நன்நெறிகள், மருத்துவ நெறிகள், விளியாட்டு தொடர்பான நெறி பாலியல் தொடர்பான நெறிகள் அனைத்தும் ஊழலை எதிர்க்க வேண்டும், தனிநபர் நடவடிக்கைகளும், அமைப்பு சார்ந்த நடவடிக்கைகளும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆய்வுகள் மற்றும் நெறிக் கோட்பாட்டு ஆய்வுகள் பயன்படுத்தப்படவேண்டும் (பார்க்க4.4)

பரிந்துரை 5. மதங்கள் மற்றும் தத்துவம் சார்ந்த பாரம்பரீயங்களுக்கு இடையேயும், அதன் குறுக்கேயும் மதங்களுக்கிடையே உரையாடல், மற்றும் பொதுவான நன்னெறிக் கோட்பாடுகள், மற்றும் ஊழலை ஒழிப்பதற்காக நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

உலகின் பல்வேறு மதங்களில் ஊழலுக்கு எதிரான பொது மதீப்பீடுகள் உள்ளதாலும், மதம் சார்ந்த சமூகங்களில் ஊழலுக்கு எதிரான பொதுவான கரிசனை இருப்பதாலும், இறையியல் சார்ந்த உரையாடல், மற்றும் ஊழலை எதிர்கொள்ள யதார்த்த முறைகள் கடைப்பிடிக்கப்ப வேண்டும் (பார்க்க அத்தியாயம் 3.4)

## 5.2 பொறுப்புள்ள தலைமைத்துவ ஆளுமை மூலம் ஊழலை ஒழித்தல்

பரிந்துரை 6. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில் உள்ள தலைமைத்துவ அமைப்புகளில் உள்ள தலைவர்கள் மற்றும் மக்களுக்கான பொறுப்பான தலைமைத்துவ கோட்பாடு ஊக்குவிக்கப்படவேண்டும்.

ஆப்பிரிக்க திருச்சபைகள் மட்டுமல்லாது பல இடங்களிலும் உள்ள தலைவர்கள் ஒழுக்க நெறிக் கோட்பாட்டிற்குள் உட்படுத்தப்படுகிறார்கள். தலைமைத்துவக் கோட்பாடு என்பது தனிப்பட்ட ஒப்படைப்பு. அது தொடர்ந்த மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தக் கோட்பாடு ஏற்கனவே உள்ள சட்டரீதியான, தவறாது கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகளுடன் இணைந்து அவைகளுக்கு மாற்றாய் அல்ல, மேற்படி கோட்பாடு உயர் பதவியிலிருப்போரின் நம்பிக்கைத் தன்மையைக் கூட்டுவதுடன், இதர பணியாளர்கள் மற்றும் ஆளுகை அமைப்பில் உள்ளேர் குறிப்பாக சினாடு மற்றும் கமிட்டியில் உள்ளோரின் நம்பிக்கைத் தன்மையையும் கூட்டம் (பொறுப்புத் தலைமைக்கான கோட்பாடு Appendix A12)

பரிந்துரை 7. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில் உள்ள அமைப்புகளுக்கு தேர்வு செய்யப்படுவோருக்கென நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு அவர்கள் ஊழல் சார்ந்த நடவடிக்கைகளிலுருந்து விடுபடவும், வாக்குகளை காசு கொடுத்து வாங்காமல் இருக்கவும், சொத்துக்களை தெரிவிக்கவும் செய்தல்

பல நாடுகளில் தேர்தல்களை திருச்சபைகள் நடத்துகின்றன. (பார்க்க அத் 3.1.1 மற்றும் 3.1.6) ஆனால் ஊழல்கள் திருச்சபை தேர்தல்களில் மலிந்தே வடுகின்றன. ஆப்பிரிக்காவில் தேர்தல் ஜனநாயகத்திற்கென்று கீழ்க்கண்ட விசியங்கள் இருக்க வேண்டும் என்கிறார் இயேசு சபை நன்னெறியாளர் அந்தோணி ஈகன் அவை மனித மாண்பு, தோழமை, பொது நன்மை பங்கேற்பு. நாட்டு அரசியலுக்கும் இந்த கிறிஸ்தவ விழுமியங்கள் தேவை (பார்க்க Appendix A8) முக்கிய விஷயம் என்னவெனில், தேர்தலில் நிற்போர், அல்லது தேர்தலில் வெற்றிபெற்றோர் பதவி ஏற்கும்போதும், பதவிக் காலம் முடிந்தும் தம் சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்பது விவாதத்திற்கு உரிய பொருளாயுள்ளது. ஊழலால் அல்லது சட்ட பூர்வ மற்ற முறையில் சொத்துச் சேர்த்து இருப்பார்களோ என அறிய மேற்படி சொத்து விபரம் வெளியிடுதலை பல நாடுகள் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசாங்க ஊழியர்களுக்கு விதிமுறைகளாக வைத்துள்ளன. இது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தங்கள் பதவிக்காலத்தில் தவறான சொத்துக் குவிப்பில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது. ஊதாரணமாக 2002 உகாண்டா பராளுமன்ற கோட்பாடு 42 வகையான செயல்பாடுகளை ஜனாதிபதி முதல் கடைமட்ட ஊழியர் வரை கடைப்பிடிக்க வேண்டியவைகளைச் சொல்கின்றன.

பரிந்துரை 8. எல்லா திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் எல்லாப் பணியாளர்களுக்கும், தலைமைத்துவ பொறுப்பில் உள்ள அனைவருக்கும் நியாயமான சம்பளம் குறிப்பாக அவர்கள் கண்ணியமான வாழ்வு வாழும்படியாக சம்பளம் வழங்கப்படவேண்டும்

உலகத்தின் தெற்குப்பகுதி திருச்சபைகளில் நிலவும் வறுமையும் உலகத்தின் வட பகுதி திருச்சபைகளில் நிலவும் வருமானக் குறைவும் ஒப்பீட்டுச் சந்தை அளவில் திருச்சபைகளில் வழங்கப்படும் ஊதியம் குறைத்தே உள்ளது. எனவே சிறப்பான தகுதி பெற்றோர் தவிர்க்கப்பட்டு எதிர்மறையான மக்கள் திருச்சபையில் ஊழியம் செய்ய அழைக்கப்படுகின்றனர். வளமும், செல்வமும் தெற்கு மற்றும் வடக்கு சபைகள் சிலவற்றில் இருப்பினும் அச்சபைகளில் பேராசையே நிலவுகின்றது. வறுமையும், பேராசையும் ஊழலுக்கு வித்திடுகின்றன.

எனவே நோக்கம் ஊழலை கட்டுக்குள் வைக்க போதுமான கண்ணியமிக்க சம்பளம் வழங்கப்படவேண்டும். ஏழைச் சபைகளாலும், அப்படிப்பட்ட சம்பளம் வழங்கும் நிலையில் பல சபைகள் உள்ளதும் ஒப்புக்கொள்ளப்படவேண்டியது. உலகத்தில்,மாற்றாக, போதிய பொருளாதாரம் உருவாக்கப்பட்டு, பேராசை பிடித்த நிறுவனங்களுக்கு மாற்றாக, கிறிஸ்தவ நன்நெறிக் கோட்பாட்டில் திருச்சபை வளர வேண்டும். வேலை ஒப்பந்தத்தில் ஊழலுக்கு எதிரான கொள்கை செர்க்கப்பட வேண்டும்

பரிந்துரை 9. ஒப்பான தகுதி உடையோர்களால் திருச்சபைகளுக்கு இடையே கணக்குகள் / ஒப்பந்தங்கள் மீள் பார்வை பார்க்கப்பட்டு பரஸ்பர கணக்கொப்புவித்தல் பலப்படுத்தல்

சட்டவிதிகள் சேர்க்கப்பட்டு தரமான ஊதியம் வழங்கப்படவேண்டும். கத்தோலிக்க அமைப்புகளில் தனி நபர் ஊதியமோ, தனிநபர் சொத்தோ இல்லாததினாலும், குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள் என்று ஒன்றில்லாத பிரம்மச்சரியம் அனுசரிக்கப்படுவது இங்கே சுட்டிக் காட்டப்படவேண்டும்.

ஒப்பான தகுதி உடையோர்களால் கண்காணிக்கப்படுதல் (PRM: Review Mechanism) என்பது கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களை கண்காணிப்பது ஆகும். ஒப்பான தகுதியுடையோர்கள் அடங்கிய கலப்புக் குழு நான்கு ஆண்டுக்கு முறை எல்லா பங்காளர்களையும் மீள்பார்வை செய்ய வேண்டும். கணக்கு ஒப்புவித்தலின் வளர்ச்சிக் கேற்ற பரிந்துரைகளை இவை செய்யும்.

இப்படிப்பட்ட ஒப்பான தகுதி உடையோர் கண்காணிப்பு உதாரணமாக OECD எண்ணெய் ஏற்றுமதி வளர்ச்சி கமிட்டியில் உள்ளது. இது வளர்ச்சிக்கான கொள்கை ஒப்பந்தம் மற்றும் OECD நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மீள்பார்வை செய்கிறது. திருச்சபை அளவில், WCC 1989ல் EI Escorial ல் நடந்த கூட்டத்தில் முடிவெடுத்த – அனைத்துத் திருச்சபைகளும் தங்களுக்கிடையே உறவும் பரிமாற்றம் செய்து கொள்வது அவசியம் என்ற திட்டப்படி, அருட்பணி பங்கேற்பு கொள்கையின்படி, அனைத்துதிருச்சபை குழுக்கள் திருச்சபைகளுக்கிடையே பயணம் செய்து பரஸ்பர கணக்கு ஒப்புவித்தல் அருட்பணி பங்கேற்புக்கு இசைவாக இருப்பது குறித்து செயல்பட வேண்டும்.

தேசிய அளவிலான திருச்சபை அமைப்புகள், பேராயர்களின் கூட்டங்கள், WCC அமைப்பு, கத்தோலிக்க அமைப்பு பள்ளிகள், மருத்துவமனைகள் இப்படிப்பட்ட ஒப்பான தகுதி உடையோரைக் கொண்டு பரஸ்பரம் தமது நிர்வாகத்தை சீர்தூக்கிப்பார்த்தல் நல்லது. இந்தப் பரஸ்பர கண்காணிப்பு PRM நடத்தை விதிகள், நான்கு வருடத் திட்டம், சூழ்நிலை மாற்றல் குறித்த விதிகள் மற்றும் ஊழலற்ற திருச்சபை உருவாக்கத்திற்கு உதவிடவேண்டும். கணிணி மட்டத்தில் அறிக்கைகள் தயாரிப்பதும், பரஸ்பரம் வலைப்பின்னலில் அந்த ஆவணங்களைப் பெறவும் ஏற்பாடு செய்திட வேண்டும்.

பரிந்துரை 10. ஊழலைப் போக்கவும், வெளிப்படைத் தன்மைக்கும், வரையறுக்கப்பட்ட வளங்களை நேர்த்தியாய் ஆளுமை செய்வதற்கும் போதுமான 'செலவு மற்றும் நஷ்டஈடு தொடர்பான' விதிமுறைகளை மறுபார்வை பார்க்க வேண்டும்.

காலவதியான செலவு தொடர்பான விதிமுறைகள் ஊழலுக்கு வழிவகுக்கும். பயணச் செலவுக் கட்டுப்பாடுகள், கூட்டங்களில் பங்கேற்பாளருக்கு வழங்கப்படும் அதீதமான செலவுகள் ஆகியவை கட்டுபாட்டிற்குள் வைக்கப்படவில்லை எனில் முறைகேடான செலவு அதிகரிக்கும். உண்மையான செலவுகளை, ஈட்டுத் தொகைகளை இந்தப் புதிய விதிமுறைகள் கண்காணித்து நிகழ்வுகளுக்குச் சரியான செலவுகளைச் செய்ய உதவும்.

பரிந்துரை 11. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த அமைப்புகளில் நிலவும் ஊழல் மற்றும் தவறுகளைக் கண்டறிவோரைப் பாதுகாக்க வேண்டும். இவர்களை எச்சரிக்கையாளர் எனலாம் (WHISTLE BLOWER)

தனியார் நிர்வாகமோ அல்லது பொது நிர்வாகமோ, எச்சரிக்கையாளர்களாக செயல்படுவோரைப் பாதுகாக்க வேண்டும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவோருக்கு ஏதுவாக ஒரு தனி அமைப்பை உருவாக்கி அதில் அவர்கள் முறையிடவும், மேற்படி குற்றச் சாட்டுகளை விசாரிக்கவும் (பார்க்க WCC நெறிமுறைகள் Appendix 7) செய்ய வேண்டும். மற்ற அமைப்புகள் உருவாக்கினவற்றில் கிடைத்த அனுபவங்களை (பார்க்க அத்தியாயம் 4.2.5 மற்றும் Appendix 2, 7 மற்றும் 12) திருச்சபைகள் அறிவது நலம். பெர்லினில் உள்ள Transparency International ஐ அணுகுவது நலம்.

பரிந்துரை 12. வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் நிராகரிப்பு அறிக்கைகளை திருச்சபை மற்றும் திருச்சபை சாரா அமைப்புகள் வழங்கிட வேண்டும்.

பன்னாட்டு அமைப்புகள் தங்களது ஆளுமை மற்றும் சமூகப் பொறுப்பு தொடர்பாக (CSR), சமீப காலங்களில் ஆளுமை அறிக்கையை வெளியிடும் போது தனியார் துறையிலான அவை தமது சமூக அறிக்கையை வெளிப்படையாக தெரிவிக்கின்றன. ஊழலுக்கு எதிராக அது தொடர்பான நடவடிக்கைகளை அவை வெளியிட முயற்சிக்கின்றன. சட்டபூர்வமானதும், நெறி சம்பந்தமானதுமான தேவையானவைகள் தனியார் துறைக்கு மட்டுமின்றி, திருச்சபை அறிக்கை பொதுவான ஆண்டறிக்கையுடன், ஒப்பான தகுதியுடையோரால் தரப்பட்ட அறிக்கையாகவும் அது இருக்க வேண்டும்.

பரிந்துரை 13. உரிய கண்காணிப்பு முறைகளுடன் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்கள் இருக்கும் பகுதியை ஊழலற்ற பகுதியாக அறிவித்தல்

ஒரு கிறிஸ்தவப் பள்ளி, ஒரு மருத்துவமனை, ஒரு ஆதீன நிர்வாகப்பகுதி, ஒரு இறையியல் கல்லூரி அல்லது தொடர்பான எந்தப் பகுதியையும் ஊழலற்ற பகுதியாக அறிவிக்கலாம். 3.1.3 அத்தியாயததில் பார்க்கின்றபடி மேற்கு ஆப்பரிக்காவில் செய்யப்பட்ட ஊழலற்ற பள்ளிகள் பிரச்சாரம் ஊழலற்ற பள்ளிப் பகுதிகளை உருவாக்கியுள்ளது Appendix A13 ல் கூறப்பட்டுள்ளது போல் போட்ஸ்வானா ஊழியர் ஒருவர் தமது அலுவலகத் கதவில் இப்படி எழுதி ஒட்டியிருந்தார் ' நீங்கள் ஊழலற்ற பகுதியில் பிரவேசிக்கிறீர்கள்' என்று இதை யாரும் செய்யலாம். அலுவலகத்தில் வெளிப்படைத் தன்மை நெறிகள், அதைக் கண்காணிக்கும் விதிமுறைகள், கமிட்டிகள், மேற்பார்வையாளர்கள் இருப்பின் இப்படி நாம் எழுதி வரையறுக்கலாம். இன்றைய போட்டி உலகில் ஊழலற்ற அமைப்பு என்று நம்மை வெளிப்படையாக்கினால் சந்தையில் நமக்கு மிகுந்த மதிப்பு ஏற்படும்.

ஆரம்ப, நடுத்தர, உயர் நிலைக் கல்விக் கூடங்களை ஊழலற்ற அமைப்புகளாக மாற்ற வேண்டும். பள்ளிகளைக் கண்காணிப்பதில் அல்லது அவற்றில் ஈடுபடுவதில் பெற்றோர்கள் பெரும்பாலும் ஈடுபடுகிறார்கள். ஆனால் உயர்கல்விக் கூடங்களில் மாணவர்களே லஞ்சம் கொடுக்கிறவர்களாகவும், பெறுகிறவர்களாகவும் மாறிப் போகிறார்கள். பல்கலைக் கழக மாணவர்களே ஊழலின் அங்கமாக மாறிப்போனால் மிகவும் துரதிருஷ்டமே வெற்றியான எதிர்காலத்திற்கு ஊழல் இல்லாத படிப்பே முக்கியம். நல்ல ஆளுமை தன்னை நல்ல ஆளுமையில் வைத்துக் கொள்வதிலேயே உள்ளது. பரிந்துரை 14. திட்டமிடல், வெளிப்படை டெண்டர் விடுதல், சந்தை விலை நிர்ணயம் மற்றும் கட்டுப்பாடு விதிகள் மூலம் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களின் நிலம் மற்றும் கட்டிடங்களை திறம்பட வெளிப்படைத்தன்மையுடன் நிர்வகித்தல்.

## 5.3 வளங்கள் மற்றும் திட்டங்களின் உக்கிராணத்துவம் மூலம் ஊழலை ஒழித்தல்

பரிந்துரை 14. திட்டமிடல், வெளிப்படை டெண்டர் விடுதல், சந்தை விலை நிர்ணயம் மற்றும் கட்டுப்பாடு விதிகள் மூலம் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களின் நிலம் மற்றும் கட்டிடங்களை திறம்பட வெளிப்படைத்தன்மையுடன் நிர்வகித்தல்

அருட்தொண்டுப் பணிக்காக திருச்சபைச் சொத்துக்களை விற்றல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அதில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். பொதுவாக கடவுள் கொடுத்த சொத்துக்களை கடவுளின் நல்ல உக்கிராணக்காரர்களாக வெளிப்படைத் திட்டமிடல், வெளிப்படை டெண்டர் விடுதல், திறமையான திருச்சபைக் கமிட்டி மற்றும் திட்டங்களை மேற்பார்வை செய்வதில் சந்தை விலைக்கு திருச்சபைச் சொத்துக்களை அவசியம் நேரிடும் போது விற்றல் ஆகியவை அடங்கும் எவ்வகையில் ஆளுமைக் கமிட்டி தவறான பயன்பாட்டில் சொத்துக்களை நிர்வகிக்கக் கூடாது மகளிரின் பார்வை மிக முக்கியம். (பார்க்க பரிந்துரை 26) இன்னும் வெளிநாட்டு நிதியைக் கோரும் அமைப்புகள் தமது ஆண்டுச் செலவுகள் மற்றும் திட்டங்களை தங்கள் சொத்துக்களைத் திறம்பட நிர்வகிக்க வேண்டும் (அத்தியாயம் 3.1.1)

தென் கொரியா மற்றும் சீன திருச்சபைகள் சிறந்த உதாரணங்களைத் தந்துள்ளது. தமது சொத்துக்களை திறம்பட நிர்வாகம் செய்ததின் மூலம் நிதி மேலாண்மையில் தன் நிறைவு பெற்றுள்ளது. இந்தோனேசியா, கானா மற்றும் இந்தியாவில் நிர்வாகம் எதிர் மறையில் உள்ளது. நிலப் பிரச்சினையில் தனித்து ஆர்வம் காட்டிய சிலரால் திருச்சபை நிலத்தின் மூலம் தன்னிறைவு பெற எடுத்த முயற்சி காமரூனில் தடைசெய்யப்பட்டது. எனவே காமரூன் திருச்சபைக்கு உதவிட வந்த அமெரிக்க திருச்சபை ஒன்று தன் உதவியை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

கட்டிட கட்டுமானம் செய்வதில் வெளிப்படைத்தன்மையை (Appendix A9) இந்தியாவில் ஒரு உதாரணம் செய்துள்ளது. கடந்து போகிறவர்களுக்கு இது என்ன கட்டிடம், எவ்வளவு தொகைக்கு கட்டப்படுகிறது, வரைபடம் உள்பட சொல்லப்படுகிறது. கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்றும், செலவுத் தொகை எவ்வளவு என்றும் யார் இதைக் கண்காணிக்கிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. கானாவில் இதற்கு மேலே மேலும் விளம்பரங்கள் கூறப்பட்டு எதிர்பாராத செலவு ஏற்படும் நிலையில் மாற்றங்கள் பற்றிய விபரம் வெளியிடப்படுகிறது.

பரிந்துரை 15. கிறிஸ்தவ பன்னாட்டு ரியல் எஸ்டேட்டு திட்டம் (CIREP: CHRISTIAN INTERNATIONAL REAL ESTATE) மூலம் பன்னாட்டு திருச்சபைகளுக்கும் உள்நாட்டு திருச்சபைகளுக்கும் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு நிலக் கொள்முதல், நெறிப்படுத்தல், விற்பனை வெளிப்படையாக்கல்

பரஸ்பர கருத்துப் பரிமாற்றம் இதில் முக்கியம் தவிர அனுபவசாலிகள் திறமையானவர்களின் ஈடுபாடு இதில் கூட வரும். எதிர்பார்க்கும் திட்டங்களுக்கும், நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து நிதி பெறுவதில் சுணக்கம் இருக்காது. நல்ல நில வளம் உள்ள திருச்சபைகள் சரியாக நிர்வாகம் செய்யப்படாதவை இந்த திட்டத்தின் மூலம் வெளிநாட்டுத் திருச்சபைகளின் உதவி கொண்டு முறையாக நிர்வாக அமைப்புகள் செய்யலாம். உதாரணமாக ஆப்பிரிக்க திருச்சபைகள் பலவற்றுக்கு ஏராளமான நிலம் உண்டு. இவைகள் மாநில நில ஆவணங்களில் பதிவு செய்யப்படவில்லை. குறிப்பான இந்நிலையால் தங்கள் நில உரிமையை இழக்கும் தருவாயில் இருந்தன. பதிவு செலவும் அதிகம் எனவே இதைச் சரிப்படுத்த வழக்கறிஞர்கள், நிர்வாகத் திறமையுள்ளவர்கள் தேவை. உதாரணமாக காமரூன் பிரஸ்பைட்டிரியன் சர்ச் 1980லிருந்து 1990 வரை நிலப் பதிவை மேற்கொண்டது. அதற்கு BASEL MISSION உதவி செய்யாது போதுமான பணம் இல்லாததினால் நிலப்பதிவு முற்றுப் பெறவில்லை CIREP போன்ற அமைப்பினால் இது முற்றுப்பெற வைக்க முடியும். இப்படிச் செய்வதால் நில நிர்வாகம் சீர்பெறுவதுடன், அதன் மூலம் வரும் வருவாய் கூடும் திருச்சபைகளில்

பரிந்துரை 16. திருச்சபை மற்றும் திருச்சபை சாராத அமைப்புகளில் உரிய ஓய்வூதியம் நிர்வாகிக்கப்பட்டு அவை உரிய முறையில் பாதுகாக்கப்படவேண்டும்.

சமூகப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பெருமளவு பணம் இன்சூரன்ஸ், ஓய்வூதியம் போன்றவைகளில் ஈடுபடுத்தப்படுகிறது. சமூகப் பாதுகாப்பு திட்டம் மிகுந்த சிக்கலானது என்பதால் மிகுந்த திறமையான பணியாளர்களைக் கொண்டு அது நிர்வகிக்கப்படுவதுடன் எந்த நஷ்டத்திற்கும் அது உள்ளாக்கப்படாமலும் அவை துஷ்பிரயோகப்படாமலும் பாதுகாக்கப்பட வேண்டும். ஓய்வூதியம் வேறு சில காரணங்களுக்கென திசை திருப்பப்பட்ட காரியங்கள் உள்ளன. அவை திருச்சபைத் தலைவர்களின் செலவுகள் இறையியல் கல்லூாிகளுக்கும் செலவு பண்ணாட்டு சிக்கல் ஏற்பட்டன. ஊழியர்களின் பாதுகாப்புக்கென ஓவ்வூதியம் விபத்துக்காப்பு அவசியம். சிறு கடன் வசதி மற்றும் சிறு இன்சூரன்ஸ் திட்டங்கள் மூலம் ஊழல் ஒழிக்கப்படலாம்.

பரிந்துரை 17. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள், மற்றும் பணம் நிர்வாகம் செய்யப்படும் தன்மை குறித்ததான அறிக்கைகள் சுதந்திரமாயும், தகுந்த மரியாதையுடையதாயும், வெளிப்படையாகவும் வெளியிடப்படுதல்.

பெரும்பான்மை திருச்சபை நிறுவனங்கள் தமது நிறுவன தணிக்கை அறிக்கைகளை வெளியிடுகின்றன. அவற்றில் பல வெளிப்படைத் தன்மையுடையதாக இருப்பதில்லை. தணிக்கை ஒப்பந்தம் பாதிக்கப்படும் என்று எண்ணி பல நிறுவனங்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைப்பதில்லை தவிர அறிக்கைகள் வருடம் ஒருமுறை செய்யப்படுவதால் மீறல்களின் தன்மை நிர்வாக கமிட்டியின் கைக்கு அடங்காமல் போய்விடுகிறது.

இந்நிலையில் ஒப்படைப்பான தணிக்கை அறிக்கைகள் திருச்சபையின் மேலாண்மையை சிறப்புறச் செய்கின்றனர். திருச்சபைத் தணிக்கை அறிக்கைகளின் வெளியிடுதல் திருச்சபையின் வெளிப்படைத் தன்மையை அறிவிக்கும். மூன்று மாதம் ஒரு முறை நடக்கும்படியான பணம் செலவழிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லுதல், சம்பந்தப்பட்டவருடன் உரையாடுதல் இவற்றை அடக்கும். இது முறையற்ற நிர்வாகத்தைத் தடுக்கும். ஒரு கட்டிடத்திற்கு வந்த நிதி மற்றும் செலவு விபர வெளிப்படைத்தன்மை திருச்சபையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் மிகச் சிறந்த ஊழியர்கள், பேராசிரியர்கள்,

பரிந்துரை 18. அதிகார விளையாட்டில் விளையும் ஊழல் ஒழிய திறமையான நபர்களை திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்தல் அவர்கள் திறமைகளைப் பயன்படுத்தல்

தாதிகள், மருத்துவர்கள் தகுதியற்ற பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். இப்படி நிகழ்வது அதிகார விளையாட்டின் நிலையே, பாலியல், சாதி, இன ரீதியான காரணங்களினால் இந்நிலை நிகழ்கின்றது. இது ஊழலின் கறைபடிய ஏதுவாக இருக்கிறது. தலைமைத்துவம் தனிப்பட்ட சுயநலத்திற்கு பயன்படுத்தப்படுவதாலும், ஒட்டு மொத்த சமூக மனித வள மேலான்மைக்கு எதிராகவும் இது நிகழ்கிறது. பணியாள் ஊழியம் (பார்க்க அதிகாரம்4) பற்றிய மதிப்பீடுகள் குறைவதினாலேயே இப்படி ஆகிறது. போட்டியாளர் பற்றிய பயமும், திறமையான ஊழியர் பற்றிய பயமுமே இதற்கு காரணம். பொறுப்பான தலைமை என்பது மனித வளத்தை சரியாகப் பயன்படுத்தி திறமையானவர்களை அறிவுள்ளவர்களை மிகச் சிறந்த அளவில் பயன்படுத்துவதாகும்.

பரிந்துரை 19. இயற்கை வளங்களான நிலம், நீர், காடுவளம், மற்றும் மரவு சாரா எரிசக்தியை நல்ல உக்கிரக காரணாக பயன்படுத்தல்

இயற்கை வளங்களைத் தவறாகப் பயன்படுத்தல் ஊழல் ஆகாது அது கவனக் குறைவையையும், உக்கிராணத்துவக குறைவையுமே வெளிப்படுத்துகினறன. மரம் நடுதல், சூழல் நிவர்த்தி திட்டங்களின் மூலமாக திருச்சபை இயற்கை வளங்களை மீட்டெடுத்தல் பணியில் ஈடுபடுவது ஊழலற்ற திருச்சபையின் நோக்கத்திற்கு வலு சேர்க்கும் நன்கொடையாளருடன் இப்படிப்பட்ட உறவு ஊழலை ஒழுங்கினத்தை மேற்கொள்ளும். WCC ன் வட்ட மேஜை, Act International இவைகள் நல்ல

## 5.4 அருளுரை, போதனை மற்றும் கற்றல் மூலம் ஊழலை மேற்கொள்ளல்

ஊழலை மேற்கொள்ள சட்ட பூர்வ அமைப்புகள் கட்டப்படவேண்டும், ஊழலின் எதிர்மறை விளைவுகளைப் புரிந்துகொண்டால், விசுவாசத்தைக் கூட்டவும் மனசசாட்சியின்படி நடக்கவுமான மதிப்பீடுகளை முன்னெடுத்துச் செல்லலாம், போதனைகள, ஜெபங்கள், பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஊழலுக்கு எதிரான அணுகுமுறைகளாகும். நல்ல கல்வி தரும் நிறுவனங்களுக்கு வாய்ப்புகளும் பொறுப்புகளும் அதிகம்.

பரிந்துரை 21. வழிபாடு, பிரசங்கம், ஜெபம், பாடுதல் மூலமாக ஆவிக்குரிய அனுபவங்களை வளர்த்தெடுத்து ஊழலை வேரறுத்தல்

பெரும்பான்மை திருச்சபைகள் வழிபாட்டு முறைகள், விவிலிய விளக்கம், ஊழலற்ற நிலைக்கு ஆதரவான ஜெப வாரம் ஆகியவற்றை உருவாக்கியுள்ளன. ஊழலை வேரறுக்க முடியும் என்பதே பல கிறிஸ்தவர்களின் விசுவாசம், 2009, 2010களில் கத்தோலிக்க ரோமன் திருச்சபையில் நடந்த பாலியல் ஊழல்களால் பலர் வெளியேறினார்கள். எனவே வழிபாடு மற்றும் வேதாகபடிப்பினை ஆகியவை மிகவும் முக்கியமானவை. எனவே மதத் தலைவர்கள் தங்களைப் படிப்பித்துக் கொள்ள வேண்டும். பேசுவதை செயலில் காட்டிட வேண்டும்.

பரிந்துரை 22. திருச்சபை ஆளுமை, பொறுப்புள்ள தலைமை, நிதி மேலான்மை போன்றவைகளில் நன்னெறிக் கோட்பாடுகளைப் பொருத்திய படிப்புகளை வழங்கலாம். திருச்சபை தலைமைப் பொறுப்பு வகிப்போருக்கு நிறுவன நெறிகளைப் போதிக்கலாம்.

போதகர்களுக்கு நிதி மற்றும் நிர்வாகப் பொறுப்புகள் உள்ளன. ஆனால் அவற்றிற்கு அவர்கள் பயிற்றுவிக்கப்படவில்லை. நன்னெறிக் கோட்பாடு உள்ளிட நடைமுறை நிர்வாகம் ஊழலை ஒழிக்க உதவும். இந்நாள் வரை நன்னெளிக் கோட்பாடு தனியார் ஒழுக்கமாகவே பயிற்று விக்கப்படுகிறது. சமூக நன்னெறிகள், அதுவும் குறிப்பாக நிறுவன நன்னெறிகள், மதிப்பிடுகளையும், விடுமியங்களையும் தருபவைகளாக உள்ளன.

பரிந்துரை 23. ஓய்வு நாள் பள்ளி தொடங்கி பொது குடிமைச் சமூகக் கல்வி வரை எல்லா அளவிலும் ஊழல் எதிர்ப்புக் கல்வி தருதல்

ஊழலுக்கு எதிரான கல்வி எல்லா மட்டங்களிலும் தேவை, எல்லா மத குடிமை மற்றும் மனித உரிமைக் கல்வியில் ஒரு பங்காக அது இருக்க வேண்டும். ஊழலுக்கு எதிரான TRANSPARANCY INTERNATIONAL கைப்புத்தகம் அதன்

விதிமுறைகளை ஏற்படுத்தியுள்ளன. இவை இன்னும் வலுப்படுத்தல்பட்டு விரிவாக்கப்பட வேண்டும்.

பரிந்துரை 20. ஒரு நிறுவனத்தின் மொத்த கணக்கு தொடர்பான ஆவணங்களை நன்கொடையாளர்கள் பார்ப்பதில்லை மொத்த கணக்கையையும் பார்வையிடச் செய்தல் நன் கொடையாளருக்கும் திருச்சபைக்கும் பெரும் பிணைப்பை ஏற்படுத்தும்.

நிதி தரும் அமைப்புக்கு வழங்கப்படும் அறிக்கைகள் பலதரம் எதிர்பார்ப்பில், பல காலக்கட்டங்களில் எதிர்பார்க்கப்படுகின்றன. கணக்கு ஒப்புவித்தல் தொடர்பான எதிர்பார்பு நிலை பூர்த்தி செய்யப்படின் மனித வளம் மறறும் நிதிநிலையின் மீதுள்ள சுமை குறையும். OECD வளர்ச்சி கமிட்டிகள் அகில உலகில் தேசிய அளவில் கணக்கு ஒப்புவித்தல் மற்றும் அறிக்கை தருதல் தொடர்பான காரியங்களை வெளியிட்டுள்ளன. உதாரணம் Global Reporting Initiative GRI இவை நல்ல தொடக்கம். விரிவாக்கம் செய்யப்பட வேண்டும்.

திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்கள் திருச்சபை சார்ந்த நிறுவனங்களுடனும் மட்டுமன்றி இதர சமயம் சாரா அமைப்புகளுடன் பணியாற்றுவதால் நல்ல தரமான தணக்கு ஒப்புவித்தல் தேவை.
மனித சமூக முன்னேற்ற உதவித் திட்டங்களுக்கு TRANSPARENCY INTERNATIONAL HANDBOOK ல் உள்ள செக்லிஸ்ட் பொதுவான உபகரணமாக இருக்கும். (பார்க்க Appendix A1- A7) குறிப்பாக உலக அளவிலான கிறிஸ்தவ வெளிப்படைக் கோட்பாடு மற்றும் ஊழல் எதிர்ப்பு முன்வரைவு அடுத்து வரும் முதல்படி எங்கு விதிமுறைகள் உள்ளனவோ அவற்றை உலக அளவில் பயன்படுத்திடவேண்டும்.

ISO தரத்திற்கு திருச்சபை மனித வளத் திட்டங்களுக்கு வள ஆதாரங்களை ஒருக்கிணைந்து பயன்படுத்திட மத்திய அளவில் வெளிப்படையான DATA BASE தேவை இந்த DATA BASE பெரிய அளவு நிறுவனங்கள் மட்டுமின்றி, சிறிய அளவு நிறுவனங்களிலும் பயன்படுத்திடலாம். சின்ன நிறுவன அளவில் உள்ள DATA BASE பெரிய நிறவன ஒருங்கிணைந்த அளவில் காணப்படாத நன்கொடைகளைச் சுட்டிக் காட்டும் சின்ன நிறுவண அளவிலும் நடுத்தர நிறுவன அளவிலும் கணக்கில் காணப்படும் நன்கொடை முதலீடுகள் நமது பார்வையைச் சீராக்கி இந்த முதலீடுகளை மேம்படுத்திட உதவும், நன்கொடை தருவோர் பெறுவோர் இருவரும் இணைந்த நன்கொடை மேம்பாட்டை செய்ய இயலும். பலர் இந்த வெளிப்படைத்தன்மையை விரும்புவதில்லை எனினும் சின்ன நிறுவன அளவில் மட்டுமின்றி ஒருங்கிணைந்த நிறுவன அளவிலும் நிதி மேலாண்மை சின்னச் சின்ன விஷயங்களில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

புத்தகத்தில் கல்வித் தலைப்பில் ஊழலுக்கு எதிரான கல்வி ஜனநாயகத்தை வலியுறுத்தி, பங்கேற்பு, பொறுப்பு வகித்தல், பன்முகத் தன்மையை வலியுறுத்தலை வற்புறுத்துகிறது. மாணவர்கள் ஊழலுக்கு எதிரான மதிப்பீடுகளைக் கைக் கொண்டால் ஊழலை எதிர்கொள்வார்கள் என்றும் கூறுகிறது.

### உயர்மட்ட அளவில் ஒத்துழைப்பு :

ஊழலை ஒழிக்க உயர் மட்ட அளவில் ஒத்துழைப்பு தேவை. தலைவர்கள் தம் பதவிகளை தவறாகப் பயன்படுத்துவார் எனில் குடிமக்களும் லஞ்சம் ஊழல் என்பது நாட்டின் ஒரு பங்கு என்று நினைத்து அதைக் குறித்து எச்சரிக்கையடையமாட்டார்கள்.

### நம்பிக்கை:

அதிகாரிகளின் மீது நம்பிக்கை இழப்போர் ஊழல் வஷயங்களை அமபலப்படுத்தார், பொது ஊழியர்களும் இவ்விஷயத்தில் அக்கறை காட்ட மாட்டார்.

### விதிமுறைகள் ஒழுங்குகள்:

தீர்மானம் எடுத்தல் வெளிப்படைத் தன்மையுடையாதயும், விசாரணைக்கு உட்படுத்திட விரும்புவதாகவும் இருக்கும். வேலைக்கான ஊதியம், சரியான வேலைக்கு ஆள் அமர்த்தல் விதிகள், மனித வள மேலான்மை, மற்றும் வேலை தொடர்பான ஆற்றல் வளர்த்தல் சரியாக இருக்க வேண்டும். இவை சந்திக்கப்படாவிட்டால் நல்ல நடத்தைகளை ஊழழியரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

### ஆலோசனை வழிகாட்டல்:

நன்னெறி வழிகாட்டல் தேவை, சட்ட விதி மீறல் இல்லாமல் சட்டவிதிக்கு உட்பட்டு நடக்கும் கட்டுப்பாடு ஒவ்வொரு பணியாளருக்கும் தேவை

## 5. 5 பாலியல் சமத்துவம் மற்றம் மகளிர் வலுமைப்படுத்துவதின் மூலம் ஊழல் களைதல்

பாலியல் சமத்துவம் மற்றும் பெண்கள் மேம்பாடு ஊழலை மேற்கொள்ள உதவும், சுரண்டலுக்கு எதிராகவும், நிதி வளத்தை முறையாகப் பயன்படுத்திடவும் பெண்கள் மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள் (அத்தியாயம் 2:6) அதே சமயம் ஊழலில் ஈடுபட்ட பெண்களும் இருக்கிறார்கள் (அத்தியாயம் 3. 1. 3)

பரிந்துரை 24. திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில், பெண்களின் தலைமைத்துவத்தை நிதி மேலோண்மை பொறுப்புகளில் ஈடுபடுத்தல

திருச்சபையில் பாலின சமத்துவம் அடிப்படை நியதி. 1988-1998 காலங்களில் பெண்களுக்கான தோழமையை அனைத்துத் திருச்சபைகளும் மேற்கொள்ளும் பத்தாண்டுகள் கடைப்பிடிக்கப்பட்டது. எனவே திருச்சபை போதனை இடங்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று எனினும் உயர்மட்ட அளவில் தலைமைத்துவத்திற்கு பெண்கள் வரவில்லை அல்லது புறக்கணிக்கப்படுகிறார்கள் குறிப்பாக Orthodox திருச்சபைகளில் Roman Catholic திருச்சபைகளில் பாதிரியராக நியமிக்கப்படுவதில்லை. டீக்கன்களாக சகோதரிகளாக தலைமைத்துவத்தில் ஊழலை ஒழிக்க அவர்கள் பங்காற்ற வேண்டும். திருச்சபை தலைமைத்துவப் பணியில் பெண்கள் ஈடுபடுத்துவது குறித்த விவாதம் இன்னும் இருக்கிறது. ஸ்விஸ் புரோட்டஸ்டண்டு சபையில், குறிப்பாக சீர்திருத்த சபையில் 2007ல் 25க்கு 9 பேர் தலைவர்கள் பெண்களாக இருந்தார்கள்.

பரிந்துரை 25. எல்லா புரோட்டஸ்டண்டு திருச்சபையிலும் பெண்களை அபிஷேகத்தில்

பெண்கள் மீதான அபிஷேகம் (அருட் பொழிவு) திருச்சபையில் தலைமைத்துவம் பெற முக்கியச் சடங்காகும். சமீப காலத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலோ, Orthodox திருச்சபையிலோ பெண்கள் அபிஷேகம் சாதியமில்லை அறிவர் பட்டத்திற்கு பல பெண்கள் வர உதவித் தொகை பல திருச்சபைகளால் வழங்கப்படுகிறது. பின்னர் அவர்களுக்கு அபிஷேகம் மறுக்கப்படுகிறது. எதிர்காலத் தலைமைப் பொறுப்பு மறுக்கப்படுகிறது. Lutheran உலக மன்றமும், உலக சீர்திருத்த திருச்சபை ஒன்றிப்பு மன்றமும் தங்களது இறையியல் புரிதலை சரிப்படுத்திட வேண்டும். ஸ்விஸ் புராட்டஸ்டண்டு சர்ச் இதைச் செய்தது எல்லா திருச்சபைகளும் பெண்களை அபிஷேகிக்க ஆவண செய்ய வேண்டும்.

பரிந்துரை 26. பெண்கள் மற்றும் கிறிஸ்தவப் பெண்கள் அமைப்பிற்கு நிலம் வளம் கொடுக்கப்பட்டு அவர்கள் பொறுப்பில் நிர்வாகம் செய்திட ஊக்குவித்தல் வேண்டும்.

பல நாடுகளில், சபைகளில் பெண்கள் அல்லது கிறிஸ்தவ பெண்கள் அமைப்பிற்கு சொந்தமாக நிலமோ கட்டிடமோ இல்லை, சில இடங்களில் சொந்தமாக இருப்பினும் கடைசி வார்த்தை மற்றும் கட்டளை வேறு ஒரு இடத்திலிருந்து வரக் காத்திருக்கிறார்கள். கிறிஸ்தவ பெண்கள் அமைப்புகள் ஊழல் குறைந்த இடமாக உள்ளன. நிலம் ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதினால் ஊழலை ஒழிக்க சரியான நிர்வாகம் தேவை (பார்க்க பரிந்துரை 14,15)

பரிந்துரை 27. பல்வேறு மட்டங்களில், குழுக்களால், ஆலோசனை வழங்குவதால், சட்டபூர்வமான விதிகளால், நன்னெறிக் கோட்பாடுகளால், கல்வியால் திருச்சபை மற்றும் திருச்சபை சாராத நிறுவனங்களில் பாலியல் பாதிப்பு மற்றும் பாலியல் தவறுகளை எதிர்த்து நிற்றல்

சுயவிருப்பத்திற்கு (பார்க்க அத் 4.4.3) தனது அதிகாரத்தை பாலியல் இச்சையைப் பூர்த்தி செய்ய உபயோகப்படுத்துவது பாலியல் ஊழலாகும். எல்லாச் சமூகங்களிலும் அது நிகழ்கிறது. திருச்சபையின் முதல் நிகழ்வாக இது அங்கீகரிக்கப்பட்ட சவாலாக இருக்க வேண்டும். ரோமன் கத்தோலிக்க சபை மற்றும் இதர சபைகளில் குழந்தைகள் மீது காட்டப்படும் பாலியல் வல்லுறவு சம்பவம் நிகழ்ந்த பிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அல்லாது சம்பவத்திற்கு முன்னால் தடுப்பு நடவடிக்கை அவசியம் என ஆகிறது. இறையியல் கல்வியின் ஒரு பகுதியாக பாலியல் இச்சைக்கு எதிராக கல்வி அமைய வேண்டும். நன்னெறிக் கோட்பாட்டின் பகுதிகளாக இது அமைய வேண்டும். சில நாடுகளில் இது குற்றச் செயல் தண்டனையுடையது. பரிந்துரை 28. திருச்சபை ஆளுகையில் அல்லது திருச்சபையில் வேலைபார்ப்போர் சின்ன வீடு வைத்துக் கொள்வது ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதுடன், இது குறித்த விழிப்புணர்வு இந்நிலை இவ்வாறு ஒழித்தொழியவும் பெண் மாணவர்களை வலுமைப்படுத்துவதும், ஆசிரியர் இச்சைக்கு இணங்காமல் தடுப்பதும் முக்கியம். பாதிக்கப்பட்ட பெண்கள் இதை வெளியில் சொல்வதில்லை. அவர்களும், எச்சரிக்கை மணி அடிப்போரும், பாதுகாக்கப்படவேண்டும். பாலியல் ஊழல் குறித்த கருத்தரங்குகள் அனைத்து மட்டங்களிலும் தேவை. ஆண் பெண் பங்கேற்பாளர்கள் கூடி திறமையான நெறியாளர்களால் பல திருச்சபை மக்களுக்கு இது நடத்தப்படவேண்டும். Do No Harm 2011 மாநாட்டில், குறிப்பாக ஊழியத்தில் ஈடுபட்டோருக்கென, Commission on the Role of women of the United Methodist Church செய்தது மிக அவசியமானது

பரிந்துரை 28. திருச்சபை ஆளுகையில் அல்லது திருச்சபையில் வேலைபார்ப்போர் சின்ன வீடு வைத்துக் கொள்வது ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதுடன், இது குறித்த விழிப்புணர்வு தேவை.

சின்ன வீடு வைத்துக் கொள்வதாலேயே ஊழலுக்குள் சேர்ந்துவிட்டதாக உயர் அலுவலர்கள் பற்றிய கென்யா ஆய்வு தெரிவிக்கிறது. சின்ன வீட்டின் செலவிற்கென தங்களது சொந்தப் பணத்தை அல்லாது ஊழல் பணத்தைச் செலவிட்டு, தங்கள் மறைமுக உறவுகள் வெளியில் தெரியா வண்ணம் ஆண்கள் நடந்து கொள்கின்றனர். வணிக ரீதியான உயர்வு வாழ்வில் சின்ன வீடு வைத்துக் கொள்வது வெற்றியின் ஒரு படியாக சீனாவில் கருதப்படுகிறது. வயது முதிர்ந்தோர் சிறு பெண்களுடன் உறவு வைத்துக் கொண்டு ஊழலை வளர்க்கின்றனர்.

பொது ஊழியத்தில் ஈடு படுவோர்க்கு ஒழுக்க ரீதியான ஆவிக்குரிய ஒப்படைப்பு உண்டு. எனவே மேல்மட்ட தலைவர்கள் வெளிப்படைத்தன்மையை நிருபிக்க வேண்டும் நிதி ஒழுங்கினங்கள் மற்றும் ஊழல் இப்படி நிழல் ரீதியான காரியங்களுக்கு வழி வகுக்கும்.

## 5.6 நீதிமன்றங்கள், சட்டங்கள் மூலம்

பரிந்துரை 29. ஊழலுக்கு எதிராகவும், வெளிப்படைத் தன்மைக்கு ஆதரவாகவும் இருக்கும் நடப்பு மற்றும் புதிய விதிமுறைகள் மீறலுக்கும், நிர்வாக மீறுதலுக்கும் தண்டனை வழங்குதல் பற்றி

தண்டனையுடன் கூடிய நடத்தை விதிகளே சிறப்பானவை, பல அழைப்புகள் நன்னெறியுடன் நடக்கச் சொல்கிறவைகளே தவிர, பொறுப்பை மீறுகிறவர்களுக்கான தண்டனைகளை சொல்வதில்லை தண்டனைகள் மன்னிப்புக்கும் இரக்கத்திற்கும் எதிரானவைகள் அல்ல தாளமுடியாத அளவிற்கான மீறுதலுக்கான விதியே தண்டனையாகும்.

பரிந்துரை 30. தேவையின் அடிப்படையில் திருச்சபை மற்றும் திருச்சபை சார்ந்த நிறுவனங்களில் உள்ள ஊழல் வழக்குகளை நீதி மன்றத்திற்கு கொண்டு வரலாம், ஊழலுக்கு எதீரான நீதித்துறை அமைப்புகளுக்கான பிரச்சாரம் செய்தல்

ஊழல் கொல்கிறது என்பது வெறும் பேச்சு வழக்கல்ல, நீதியின் பால் உள்ள கடவுளை அது மறுதலிக்கிறது. ஊழல் குற்றம். வழக்கு மன்றத்திற்கு அப்பால் உள்ள விசாரனை குற்றம் சுமத்தப்பட்டவர் மீது நடத்தப்பட வேண்டும் முதலில் வெளிப்படைத் தன்மைக்கான நடத்தை விதிகளைப் பற்றி திருச்சபைகளும் NGO க்களும் Cameroon, கூறியவை உள்ளூர் நியாயங்கள் எடுபடவில்லையெனில் நீதி மன்றங்களுக்கு செல்லலாம்(Appendix 3,2.8) இப்படிச் செய்வதினால் ஊழலுக்கு எதிராக திருச்சபைத் தலைமை இருப்பது புரிந்துவிடும்.

நீதித்துறை வலுவில்லாத நாடுகளில் இதற்கு தடை ஏற்படலாம், ஆனால் நீதிமன்றத்திற்கு செல்லும் வழக்கு நெடுநாளாய்த் தீராது என்பதும் உண்மையே எனவே ஊழலுக்கு எதிரான நீதித்துறை மாற்றத்திற்கான பிரச்சாரமே உகந்தது.

## 5.7 ஊடகங்கள், பிரச்சாரங்கள், தகவல் தொகுப்புகள், வலைப் பின்னல்களை உபயோகித்து ஊழலுக்கு எதிராக செயல்படுதல்பரிந்துரை.

31. ஊடகங்கள் சுரந்திரமாக்கப்படவேண்டும் பத்திரிக்கையாளர்களும்கூட. திருச்சபை மற்றும் பொது வாழ்வில் நிகழும் சம்பவங்களை விமர்சித்தல்:

யார் ஊழலைக் கண்காணிப்பது' என்கிறார் ஹீகட்லெபல்லே, Transparancy International ன் தலைவர் அளுமை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்களே இதைச் செய்யவேண்டும். பல ஆட்கள் இணைந்து இக் கண்காணிப்பு வேலையில் ஈடுபட வேண்டும். Appendix A14 ஐப் பயன்படுத்தி தேவையான ஆட்கள் யார் யார் என்பதைக் கண்டறியலாம். கீழ்க்காணும் 4 பரிந்துரைகளில் கீழ்மட்டத்திலிருந்து 4 ஆட்களும், மேல் மட்டத்திலிருந்து 4 ஆட்களும் தேவை என குறிப்பிடப்படுகிறது. ஜனநாயக ரீதியான அமைப்புகளுக்கு இந்த ஆட்கள் தேவை.

பரிந்துரை 31. ஊடகங்கள் சுரந்திரமாக்கப்படவேண்டும் பத்திரிக்கையாளர்களும்கூட. திருச்சபை மற்றும் பொது வாழ்வில் நிகழும் சம்பவங்களை விமர்சித்தல்

ஊழலை ஒழிக்க உலக ஊடகங்கள் உதவுகின்றன. ஊழல் வெளிப்படுதல் பலருக்கு பயத்தை ஏற்படுத்துகிறது ஆனால் ஊடகங்கள் பல நாடுகளில் தம் சுதந்திரத் தன்மையை இழந்துள்ளன. பொருளாதார ரீதியாக அவை வலு குன்றியிருப்பதால் பத்திரிக்கையாளர்களும் ஊடகங்களும் விலைக்கு வாங்கப்படுகின்றனர். ஊழலை வெளிச்சம் போட்டுக் காட்டும் பத்திரிக்கையாளர்களுக்கு கொலை மிரட்டல் வருகிறது. கொல்லவும் படுகின்றனர். பத்திரிக்கையாளர்களும் ஊடகங்களும் தங்கள் சுரந்திரத்தைப் பேண வேண்டும். தகவல் தொழில் தொடர்பு சாதனங்களுக்கான UNESCO நெறி முறைகள் உதவும்.

பரிந்துரை 32. ஊழலுக்கு எதிரான கிறிஸ்தவ இயக்கங்களை பலப்படுத்திட வேண்டும் - கடைமட்டத்திலிருந்து

அரசியல் தளங்களில் குடிசைச் சமூகங்களுடன் பங்கேற்பு தேவை. கீழ்மட்ட அளவிலிருந்து நமக்கு இயக்கம் தேவை. பொறுப்பான தலைமையில் காரியங்களை நிகழ்த்தும் சகோதர சகோதரிகளுக்கு உதவிடவேண்டும் (பார்க்க அத் 3,3.1-3.3) லே மக்களும் பாஸ்டர்களும் இணைந்த இயக்கம் தேவை. தீர்க்கதரிசன இயக்கமாக, அதிகாரத்தை சமப்படுத்திட தேவை, அப்படிப்பட்ட இயக்கங்களும் வெளிப்படைத் தன்மையாக, சுவிசேஷத்தை செயல்படுத்துகிற இயக்கமாக நிற்றல் தேவை.

பரிந்துரை 33. CCRC எனும் ஊழலுக்கு எதிரான அனைத்து திருச்சபைகளுக்கான ஆதார மையம் தேவை அவை தகவல் தொகுப்புகள், வள ஆதாரம், உதவி மையங்கள் மற்றும் பயிற்சி மையங்களை உடையதாக இருக்க வேண்டும்.

U4 ஊழலுக்கு எதிரான வள ஆதார மையம் 8 நாடுகளின் உதவியில் உள்ளது. இது நிதி அமைப்புகள் ஊழலை மேற்கொள்ள உதவுகிறது. இதில் நார்வே NDRAD, UK DFID, கனடாவின் CIDA, ஜெர்மனியின் GTZ நெதர்லாந்தின் Min Bu Za, ஸ்வீடனின்

SIDA, பெல்ஜியத்தின் BTC, மற்றும் ஆஸ்திரேலியாவில் AusAID உறுப்பினர்களாக உள்ளன. ஆன்லைனில் இவை உதவுகிறது. U4 ன் செயல்பாடுகளை நாம் தகவல் தொகுப்புகளின் மூலம் தெரிவிக்கிறோம். U4 வளமையால் நார்வேயில் உள்ள Chr.Michelson institution நடத்தப்படுகிறது. U4 Desk ற்கு TI செயலகம் உதவுகிறது. 2002ல் இது ஏற்படுத்தப்பட்டது. பரிந்துரை 34. ஊழலற்ற வெளிப்படையான திருச்சபைகளின் நிறுவனங்களின் வலைப்பின்னல்- வலைப்பின்னல்களை உருவாக்கி ஆய்வு மற்றும் பரஸ்பர உற்சாகத்தை ஏற்படுத்தல்அதேபோல் CCRCஐ நாம் நடத்தலாம். U4 ன் சேவை மற்றும்TI யின் சேவையுடன் இணைக்கலாம். Globetheics.net (www.globetheics.net) இதற்கு தகவல் தருகிறது.

பரிந்துரை 34. ஊழலற்ற வெளிப்படையான திருச்சபைகளின் நிறுவனங்களின் வலைப்பின்னல்- வலைப்பின்னல்களை உருவாக்கி ஆய்வு மற்றும் பரஸ்பர உற்சாகத்தை ஏற்படுத்தல்

பரிந்துரை 35. அகில உலக அளவில், திருச்சபை அளவில், பிராந்திய அளவில், தேசிய அளவில் வெளிப்படையான ஊழலற்ற திருச்சபைகளை உருவாக்க திட்டமிட்ட நிகழ்வுகள் அமுல்படுத்தல். இந்த கட்டுரையின் பல்வேறு இடங்களில் கூறியுள்ளபடி, திருச்சபைகளும் திருச்சபை நிறுவனங்களும் பரஸ்பர கற்றல் நிகழவேண்டும். குறிப்பாக அரசியல், தனியார் துறை மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் கற்க வேண்டும். ஏற்கனவே வெற்றியின் பல படிகளை தன்னிடத்தில் கொண்டுள்ள Transparency Internatinol ன் 90 மையங்களில் ஏதானும் ஒன்றுடன் கூட்டுறவு நிகழ வேண்டும். Globethics.net தனது தளத்தை ஆன்லைன் பணிக்குழுக்களின் கூடுகையாக பங்கேற்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட ஆய்வுத் தலைப்பையே, வெளியீட்டையோ, ஒரு கான்பரன்ஸ் அமைக்கவோ, தங்களுக்குள் பரஸ்பர பகிர்தலுக்கோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

பரிந்துரை 35. அகில உலக அளவில், திருச்சபை அளவில், பிராந்திய அளவில், தேசிய அளவில் வெளிப்படையான ஊழலற்ற திருச்சபைகளை உருவாக்க திட்டமிட்ட நிகழ்வுகள் அமுல்படுத்தல்.

அழைப்புக்களோ, வெறும் தீர்மானங்களோ, பிரசுரங்களோ போதுமானவை அல்ல இவை தனி நபரைக் குறிவைக்மே ஒழிய அமைப்பைக் கேள்வி கேட்காது. சாதாரண அல்லது நடுத்தர அளவிலான அணுகுமுறைகள் வெளிப்படையாக்கி நிலைபெறச் செய்ய வேண்டும். இப்படிபட்ட நிகழ்வுகள் WARC திருச்சபையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன (WARC-Chapter 3.1.8) Appendix 2 உள்ள தேசிய இந்திய கிறிஸ்தவ கவன்சிலின் (NCCI) நிறைவேற்ற தீர்மானித்துள்ள திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்கள் திட்டங்களாக இம்மட்டும் நிறைவேற்றப்படவில்லை ஆனால் அவைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (3:1-3, 3) அகில உலக அளவில் திருச்சபையில் ஊழலை ஒழிக்க திட்டமொன்றை நான் முன்மொழிந்துள்ளேன் (POC) இது PCR என்ற நிறவெறி ஒழிப்புத் திட்டத்திற்கு ஈடானது மேலும் DOV என்கிற பெண்ணடிமைத்தனம் ஒழிப்பிற்கு நிகரானது. வன்முறை மற்றும் அநீதி போக்குதலுக்குரிய தொடாச்சியே ஊழல் ஒழிப்பாகும். 2013 ல் நடைபெறும் WCC பொது மன்றத்திற்கு இவற்றை தனது திட்டப்பங்காக்கிக் கொள்ள இது உரிய தருணமாகும் காலம் கனிந்துள்ளது.

# அத்தியாயம் - 6

## முடிவுரை

மேற்கூறிய பரிந்துரைகள் மற்றும் கருவிகள் திருச்சபையில் வெளிப்படைத்தன்மையையும், கணக்கொப்புவித்தலையும் கணக்கில் கொண்டது. கணக் கொப்புவித்தல் என்பது பதிவிறுத்தல், அமுலாக்கம், பதில் கூறுதல் மற்றும் வெளிப்படைத் தன்மையை உள்ளடக்கியது. இதில் அரசியல், சமூக, நன்னெறி, மற்றும் நிறுவன நிர்வாக கணக்கொப்புவித்தலின் பரிமானங்கள் உள்ளன. கணக்கு ஒப்புவித்தல் நிதி ஆய்வு, வாதிடுதல், விளைவுகளை ஆய்வுக்கு உட்படுத்தல், தேர்வு செய்யபட்டவர்களை மதிப்பீடு செய்தல், சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல், அவர்களுடைய திறன்களை வளர்த்தல், குடிமக்கள் மற்றும் ஊடகங்களால் செய்யப்படும் சமூக தணிக்கைகளை ஊக்குவித்தல், மற்றும் பொது விசாரணை மற்றும் அறிக்கை சமர்பித்தல் நடத்துதல். இந்திய கிறிஸ்தவ ஆய்வு மற்றும் வாதிடுதல் மூலம் தீர்மானிக்கப்பட்டவைகளான ஊழலற்ற திருச்சபைகளை சாத்தியமாக்கும் அமைப்பு முறைகள், நடைமுறைகள், திருச்சபை உறுப்பினர்களின் கண்காணிப்பு, திருச்சபைக்கு வெளியேயுள்ளவர்களால் கண்காணித்தல், மற்றும் அரசு சார்ந்த அமைப்புகளுடன் தொடர்பு தவிர பரஸ்பர கண்காணிப்பு செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

திருச்சபை மற்றும் திருச்சபை சாரா நிறுவனங்களின் ஆளுமை அமைப்பு முறைகள் பலப்படுத்தப்படவேண்டும். 2010 ஜு லையில் தேசிய அளவில் வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணித்தல் அம்சங்களுக்கு மேற்படி லுத்தரன் வேர்ல்டு கூட்டமைப்பு அழைப்புவிடுத்தது. ஒட்டுமொத்தமாக ஊழல் ஒழிவதில் அரசும் நம்பிக்கை கொண்டதால், இச் செயல்பாடுகளுக்கு உரிய ஒத்துழைப்பை தமது திருச்சபைகள் தெரிவிக்க லுத்தரன் உலக கூட்டமைப்பு கேட்டுக் கொண்டது.

கடன், நம்பகத்தன்மை, விசுவாசம் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பானது ஆகும். Credit என்றால் கடன். Credibility என்ற நம்பகத்தன்மை. Credo என்றால் விசுவாசம்.

உலகமெங்கும் திருச்சபைகள் ஊழலுக்கு எதிரான போர் செய்கின்றன.

சிறப்பான அனுகுமுறைகள் தைரியமான தனிநபர்கள், ஆவிக்குரிய அடித்தளங்கள் இச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும். இவை அனைத்தும் நம்பிக்கை ஊட்டுகின்றன.

மத நிறுவனங்களில் மதம் கூறும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. இன்னும் சில பேர் உயிர்வாழ ஊழல் தேவை என்கிறார்கள். தம் மீது அரசியல் பொருளாதார தேவைகள் செலுத்தப்படுவதால் பயத்தில் பலர் அமைதியாக இருக்கிறார்கள் பலர் அரைமனதுடன் இருக்கிறார்கள்.

ஊழலுக்கு எதிராக போராடுதல் சிறு பிரச்சினைகளை களைவதை விட வலுவானது ஊழல் நீக்கினாலே சமூகத்தின் ஒழுக்கம் நம்பகத்தன்மை உறுதியாகிறது. ஊழலற்ற திருச்சபை சாத்தியமே.

# Appendices
## இணைப்புக்கள்

(நடத்தை விதிகள், அறிக்கைகள், மற்றும் செயல்திட்டங்கள்)

## A1) இந்தியா 2001: வெளிப்படைத் திருச்சபைக்குரிய விதிகள்

நவம்பர் 29 முதல் டிசம்பர் 1, 2001 வரை நடந்த அனைத்து திருச்சபைகளுக்குரிய மறு சிந்தனை மற்றும் தலைமைத்துவம் தொடர்பாக கடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இந்த நடத்தை விதிகள் வகுக்கப்பட்டன (பார்க்க,அத்தியாயம் 3.1.1.2)

### வெளிப்படைத் திருச்சபைக்குரிய விதிகள்:

a) 98 அல்லது 99 வருடத்திற்கு திருச்சபைச் சொத்துக்களை குத்தகை விடலைத் தவிர்த்தல், தற்போதுள்ள கடன் சுமைக்காக

b) வலிமைப்படுத்தலுக்கு துணை புரிந்த அமைப்புகளை மூடாமல், ஏழைகளுக்கு உதவி புரிய அவைகளை திரும்ப சீர்படுத்தல்.

c) நிர்வாகத் தவறுகளுக்கு உடன்படாமல்,வேறு காரியங்களுக்கு திசை திரப்பாமல், நிதியை எதற்காக உருவாக்கப்பட்டதோ அதற்கே பயன்படுத்தல்

d) திருச்சபைப் பணியாளர்களுக்கும், இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கும் உரிய குறைந்த பட்ச தொழிலாளர் நலத் தரத்துடன் உரிய வேலைக்கான சான்று, வேலைத் தெரிவு, வேலைக்கான ஒப்பந்தம், மற்றும் பென்ஷன் பயன்களைத் தருதல்.

e) திருச்சபை நிர்வாகம் மற்றும் தீர்மானித்தல் காரியங்களில் குடும்ப உறுப்பினர்களை ஈடுபடுத்தாமலிருத்தல்.

f) பல ஆண்டுகளாய் நடந்தேறி வரக்கூடிய வழக்குகளைத் தவிர்த்தல், வழக்குகளைத் தேடாமல், (ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் குடிமை அதிகாரிகள் அடங்கிய) அனைத்து திருச்சபை வழக்கு ஆணையம் ஒன்றை நிறுவுதல் - ஒவ்வொரு திருச்சபையிலும்

g) வெளிப்படையாக இருத்தலுக்கும், ஊழல் மற்றும் சரியில்லாத நிர்வாகம் என்ற குற்றச் சாட்சிகளைத் தவிர்க்க, எல்லா திருச்சபைத் தலைமைகளும் தங்களுடைய தனிப்பட்ட சொத்துக்களை தன்னிச்சையாக வெளிப்படையாக ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அறிக்கை செய்தல்.

-----------

## A2) இந்தியா 2004: NCCI ன் செயல்திட்டம், தலைமைக்கான மற்றும் பிரச்சாரத்திற்கான விதிமுறைகள்.

பிப்ரவரி 9-13, 2004ல், திருநெல்வேலி, தென் இந்தியாவில் NCCIன் சார்பில் நடந்த மூன்றாண்டுக்கு ஒருமுறையான கூடலில் வெளியிடப்பட்டது. (பார்க்க 3.1.1.2) ஊழலற்ற திருச்சபைகளால் உண்மையும் சமாதானமும். NCCIன் ஊழலுக்கு எதிரான செயல்திட்டம்:

### அசெம்ப்ளியால் ஒப்புக் கொள்ளப்பட்டவை:

பிப்ரவரி 6-8ல் 2004ல் திருநெல்வேலியில் நடந்த ' திருச்சயையில் வாழ்வு' என்ற அசெம்ப்ளிக்கு முன்னதான கூட்டத்தில் கலந்து கொண்டோர், 25வது அசெம்பளி சார்பில், கொடுத்த அறிக்கை.

- நிறைவான வாழ்வை எல்லோரும் அனுபவிக்கும் படியும், எல்லோருக்கும் சம வாய்ப்புகள் வழங்கும்படியும், திருச்சபை நன்நெறி மற்றும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை மையப்படுத்தும் உண்மை, சமாதானம் மற்றும் நீதியை பலமாக உறுதிப்படுத்துகிறோம்.

- ஆண்டவருக்கு மற்றும் சமூகத்திற்கு சேவை புரிவதில் மிகச் சிறந்த உக்கிராணக் காரர்களாக இருந்திருக்கும் தலை சிறந்த திருச்சபை தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களின் பாரம்பரீயத்தில் நாம் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்

- இருப்பினும், திருச்சபை அருட்பணியையும், நிறுவனங்களின் நம்பகத் தன்மையையும், திருச்சபை இழந்ததாய், திருச்சபை மக்களைப் பிரிப்பதாய், நீதி உண்மை சமாதானத்தை தனது வாழ்வில் இழந்ததாய், சமூகத் தவறான கூறுகளை தனக்குள் உடைத்ததாய் திருச்சபை ஊழலின் காரணமாக முகம் மாறிப் போயிற்று என்று ஒத்துக் கொள்ளுகிறோம்.

- அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தலே இந்த ஊழலின் ஊற்றுக் கண் என்று உணர்கிறோம். ஒழுக்க குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகளுக்கு இந்த நெறியற்ற நடவடிக்கைகளே காரணம் என்கிறோம்.

எனவே NCCI அசெம்பளிக்கு கீழ்க்கண்ட செயல் திட்டங்களை முன்வைக்கிறோம்,

### செயல்திட்டம்:

அ. NCCI, அதன் உறுப்பினர் சபைகள், பிராந்தியக் கவுன்சில்கள், தொடர்பான நிறுவனங்கள், அனைத்திந்திய

சேர்க்கை ஒன்று :

திருச்சபை, திருச்சபை நிறுவனங்களின் திருச்சபைத் தலைவர்களுக்கென நடத்தை விதிகள் ஊழல் வேரறுப்பு என்பது பொறுப்பான தலைமையால் மட்டுமே இயலும் என்ற மையக் கருத்தில், NCCI யாகிய நாங்களும், உறுப்பினர் சபைகளும், பிராந்திய கவுன்சில்களும், திருச்சபை தலைவர்களுக்கு கீழ்கண்ட விதிகளை தருகிறோம்.

1. தனி நபர் விருப்பம் அல்லாது பொது மக்கள் விருப்பத்திற்கு முன்னுரிமை
2. பணமோ, பொருளோ லஞ்சம் எனும் தோற்றமுடைய எதையும் பெறாமலிருப்பது.
3. நிறுவனச் சொத்துப்பட்டியலை நிர்வகிப்பதும் சரிபார்ப்பதும் குறிப்பாக சொத்து நிறுவனத்தின் பேரில் அமைந்துள்ளதா என்று கண்காணித்தல்.
4. (அசையும் அசையாத சொத்துக்களை) தற்போதுள்ள கடனை திருப்பச் செலுத்த விற்பதோ, ஒத்திவைப்பதோ கூடாது.
5. (அசையும்,அசையாத் சொத்துக்களை) தனிநபர் சொர்துக்களை அரசிடம் கணக்குக் காட்ட வேண்டும். பொறுப்பு ஏற்கும் முன்னரும். பொறுப்பை விட்டு நீங்கும் போதும்.
6. நிர்வாக பொறுப்புகளையும் கடமைகளையும் அடிமட்ட அளவில் கொண்டு வருதல், மையப்படுத்தல் தவிர்த்தல்.
7. நீண்ட கால வழக்குகள்,நிலுவை வழக்குகள் தீர்க்கப்பட அனைத்துத் திருச்சபைகளை உள்ளடக்கிய நீதிமன்ற ஆணையம் ஒன்றை ஏற்படுத்தி முரண்பாட்டில் உள்ளவர்களுக்கு நடுவர் தீர்ப்பு ஏற்படுத்தலாம்.
8. ஊழலுக்கு எதிராக வேலை செல்வோரை ஊக்கப்படுத்தல், மட்டுமன்றி ஊழல் செயல்களை வெளிப்படுத்தும் விசில் ஊதிகளை ஊற்சாகப்படுத்தல்
9. கல்வி மற்றும் மனித மேம்பாட்டிற்கு உதவும் நிறுவனங்களை மூடாதிருத்தல்.
10. ஒதுக்கீட்டு நிதியை குறித்த காரியத்திற்கு குறித்த பணிக்கு எவ்வித அநீதியான செலவுக்கு உட்படுத்தாது பயன்படுத்தல்.
11. முறையான பணி அமர்த்தல் மற்றும் குறைந்த பட்ச வேலைத் தரம், தேர்வு முறை, ஒப்பந்தக் கடிதம் தரல், மருத்துவ பென்சன் உதவிகளை திருச்சபைப் பணியாளர்கள் மற்றும் அவர் குடும்பத்தினருக்கு தரல்.
12. தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ள அமைப்புகளில் குடும்ப உறுப்பினர்களை ஈடுபடுத்தாமலிருத்தல்.

இந்த நெறிமுறைகள் கடந்த 2004 பிப்ரவரி 9- 13ல் நடந்த 25 வது வருட ஆண்டு நிகழ்வில் கொண்டு வரப்பட்டது. தலைவர் அவர்களால், அரசின் அமைப்பைப் போல உள்ள அமைப்பால் இது அங்கீகரிக்கப்படவேண்டும்.

சேர்க்கை இரண்டு:

இந்தியாவில் ஊழலற்ற திருச்சபைகளுக்குரிய பிரச்சாரம் ஊழலற்ற உலகம் உருவாதல் என்பது முழுச் சமூகத்தின் பெரும் பங்கேற்பில் மட்டுமே இயலும். ஊழலை ஒழிப்பது என்ற சவாலில், சரியான முறையான பிரச்சாரமே நிறைவான மாற்றங்களைக் கொண்டு வர இயலும், எனவே NCCI ஐயும், அதன் உறுப்பினர் சபைகள், நிறவனங்கள், கவுன்சில்களை பிரச்சாரம் மையப்படுத்த கீழ்க்கண்டவற்றை ஏற்றுக் கொள்ளக் கோருகிறோம்.

1. ஒவ்வொரு நிறுவனத்தின் நிகழ்விலும் ஊழல் ஒழிப்பு முக்கியப் பங்காக இருக்கவாதிடுதல்.
2. ஊழலற்ற திருச்சபை உருவாக்க பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், குழந்தைகளை பங்கேற்கச் செய்தல்.
3. போஸ்டர் போட்டிகள், கட்டுரை எழுதுதல், பட்டிமன்றம், நாடகம், கார்ட்டுன், ஓவியம், கடிதங்கள் இவை பயன்படுத்தலாம்.
4. கையெழுத்து பிரச்சாரம் மூலம் விழிப்புணர்வு தருதல், வெளியீடுகள் கொணர்தல்
5. கிறிஸ்தவ மதிப்பீடுகள் பண்புகளை வலுப்படுத்தல்.
6. பிரசங்கங்கள், வெளியீடுகள், வழிபாட்டு முறைகளில் இறையியல் படிமங்களை அதிகப்படுத்தல்.
7. செயல் திட்டங்களில் திருச்சபைத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்களைக் கேற்க வைத்தல் நல்ல நாளைக்கு இன்றைய நிலையில் 'உண்மை மற்றும் சமாதான வாழ்வுக்கு திருச்சபையை வழி நடத்தல், மற்றும் பொது யாத்திரைக்கு' உதவும்.

-------------

## A3) இந்தியா 2010, உரிய திருச்சபைத் தலைவர்களுக்கு விண்ணப்பம்.

பாஸ்டர்களின் கூடுகை, தீர்க்கதரிசன இயக்கத்தின் தலைவர்கள், பங்களூர் சிந்தனையாளர் மன்றம், மற்றும் நிறைவாழ்வு இயக்கத்துடன் இணைந்து, இந்தியா மதுரை ஆகஸ்டு 18,2010ல் தென்னிந்திய திருச்சபைத் தலைவர்களுக்கு கீழ்க்கண்ட தகவலை அளித்தனர். அத்தியாயம் பார்க்க 3.1.1

திருச்சபைத் தலைவர்களுக்கு பொது விண்ணப்பம்: நோக்கம் மற்றும் அறிக்கை மதிப்பிற்குரிய திருச்சபைத் தலைவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் பெயரால் சமாதானம் மற்றும் நிறைந்த வாழ்த்துக்கள்.

நமது திருச்சபைகளில் மறுமீட்சியும் மாற்றமும் வேண்டி பரிசுத்த ஆவியாரின் உதவியால் பாஸ்டர்களும், லே தலைவர்களும் கூடி பேராயார்களுக்கு கீழ்க்கண்டவற்றைத் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த கூடுதல், எங்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்கு மட்டுமன்றி, இறையியல்- வேதாகம் ரீதியில் ஜெப உதவியுடன், எவ்வாறு மீட்சி மற்றும் மாற்றத்தையும் கொண்டு வருவது குறித்ததாகும். அறிவர் ஞான ராபின்சன் அவர்கள் தலைமையிலான தீர்க்க திரிசன மன்றமும், அறிவர் EC ஜான் தலைமையிலான சிந்தனையாளர் மன்றமும், Dr. ஜெயகரன் ஐசக் அவர்கள் தலைமையிலான நிறைவாழ்வு இயக்கம் வேலூரும் கூடி அறிக்கை மற்றும் விண்ணப்பங்களை வெளியிட்டு வருகின்றனர். சமீபத்தில் பாஸ்டர்களின் கூடுகையில், பாஸ்டர்கள் கூனூர், தாராபுரம், கோவை மற்றும் மதுரையில் கூடினார்கள். மதுரையில் கூடிய கூட்டம், அதன் கல்லூரி மாணவர்கள் அதிகம் பங்கேற்றதில், அதில் மேலும் பல பாஸ்டர்களும், லே லீடர்களும் கலந்து கொண்டனர் பல தலைவர்களின் ஒப்புதலின் பேரில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் இரண்டு பகுதிகள் உண்டு. சில இறையியல் பார்வை வைக்கப்பட்டது அதை பொதுவான பார்வையாக வைக்கப்பட்டது. மாற்றத்திற்கும் மீட்சிக்கும் எதிராக வளரும் Episcopal அமைப்பு ஓர் தடையாக பார்க்கப்பட்டது பாரம்பரீய தடைகள், மற்றும் அதிகார தடைகள் அனைத்தையும் தள்ளி வைத்துவிட்டு, கீழ்க்கண்ட அறிக்கையை வெளிப்படையான மனதுடன் கேட்க விண்ணப்பம் செய்கிறோம். இதை வாசித்த பின்பு, இறையியல் மாநாடுகளை நடத்த தூண்டுமாறு நீங்கள் ஆவியினால் உந்தப்படுவீர்கள் என்று நம்பிக்கை தெரிவிக்கிறோம். தென்னிந்தியாவில் நாலு மொழிகளிலும் மதுரைக் கூட்டத்தில் லுத்தரன் திருச்சபையாளர் சிலரும் கூடினர்.

1. புதிய இறையியல் பார்வை நோக்கி:

கடவுளுடைய உலகிற்கான அருட்பணியினை உள்ளூர் திருச்சபை பெற வலுவான திறன் வளர்த்தலை செய்ய போதுமானது செய்யவில்லை என்று

பாஸ்டர்களும் பேராயர்களும் எண்ணுகிறோம். ரட்சிப்பு எதிர் காலத்திற்குரியது; கிறிஸ்தர்கள் மட்டுமே ரட்சிக்கப்படுவார்கள் என்ற எல்லோரையும் உள்ளடக்காத நம்பிக்கையை பலரும் கைக் கொண்டுள்ளார்கள். குறிப்பாக கடவுள் கிறிஸ்தவர்களை மட்டுமே ஆசிர்வதிக்கிறார் என்றும், நிலவும் ஏற்றத்தாழ்வுகள் ஏழை பணக்காரன் வேறுபாடுகளை கடவுளே ஏற்படுத்தியுள்ளார் என்றும், உலகு மற்றும் திருச்சபைத் தலைவர்களை கடவுளே ஏற்படுத்துகிறார் என்றும் நம்புகின்றனர். இந்த பார்வைகள் சரியான சாட்சியம் இல்லாத வாழ்வுக்கு திருச்சபையை உட்படுத்துகிறது. எனவே, இதன் அடிப்படையில்

1. எல்லா உள்ளடக்காத பண்புகள் மற்றும் குண நலன்களை விட்டு ஒழிப்பது இன்றைய முக்கியத் தேவை.
2. மன்னிப்பு என்பது கிடைமட்ட அளவில் பாதிக்கப்பட்டவரும், பாதிப்பு ஏற்படுத்தியவரும் ஒன்று சேர்வதும், இணைந்த இருவரும் கீழ் மேல் அளவில் கடவுளுக்கு நேராக குழுவாக ஒன்றாவதுமாகும். இந்த நிலையில், மறுமலர்ச்சி காலத்திற்கு பிற்பாடு மென்னோனைட்டுகளுக்கு எதிராக லுத்தரன்கள் நடத்திய கொடுமைகளுக்கு மன்னிப்பு கேட்கப்பட்டது குறிப்பாக அனாபாஸ்டிஸ்டுகளுக்கும் மென்னோநைட்டுகளுக்கும் எதிராக சில மறுமலர்ச்சியாளர்கள் செய்த கொடுமைகள் நினைவுக்கு கொண்டு வரப்பட்டன.
3. நீதியின் சார்பில் துன்ப்படுகிற அனைவருடைய சார்பிலும் சிலுவை தொடரும் மனித குமாரனின் சிலுவை விளங்கப்படுகிறது. இந்தப் புரிதலில், பாவப் பரிகாரமாக ஏசு மரித்தார் சிலுவை ஒரு தண்டணை வடிவம் என்ற பார்வை – தவிர்க்கப்படுகிறது.
4. மதங்களுக்கு அப்பால், மக்களின் நீதி மற்றும் சமாதான சமூகத்தை நீதியன் பால் உருவாக்குவது பார்க்கப்படுகிறது. இதற்கு அனைத்துப் பங்கேற்பாளர்களின் ஒற்றுமை பார்க்கப்படுகிறது.
5. மில்லியன் மக்களின் துன்பங்களை நிக்குவதும், நீதியற்ற அமைப்புகளை எதிர்த்துப் போராடுவதுமே கிறிஸ்தவ வாழ்வு.

## 2. தடம் புரண்டவை நேராக வைக்கப்படுதல்:

நிறுவன அளவில் தடம்புரண்டவை நேராக வைக்கப்படவேண்டும். குறிப்பாக பாஸ்டர்களும், பேராயர்களும் ஒட்டு மொத்த மக்களையும் அருட்பணியில் தகுதிப்படுத்தல் பார்க்கப்படுகிறது. குழப்ப பண்புகள் உருவாகாமால் தடுக்கும் பல நடைமுறை தலைவர்களிடம் இருக்கும் பழக்கம் பார்க்கப்படுகிறது இவையே அருட்பணிகளுக்கு தடையாக இருக்கிறது என்றது.

1. இன்றைக்கு போராயர்கள் நடந்து கொள்ளும் சர்வாதிகார தான்தோன்றி வழிகள், ஆயர்கள் மற்றும் லே லீடர்கள் மத்தியில் அதிருப்தி உருவாக்கியுள்ளது. கமிட்டி அமைப்புகள் இருப்பினும் அவை குறுக்கு வழிகளுக்கும் அதை மீறியும் நடக்கும் வழிகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

2. தேர்தல்களில் பேராயர்கள் ஈடுபடுவது நடக்கிறது தங்கள் வேலைக்கு ஒத்துப்போகும் ஆட்களைத் தேர்வு செய்ய ஆயர்களை தூண்டுகின்றனர். மாறுபட்டும் பேசுபவர்களை சர்ச் உறுப்பினர் பதவியினின்றும் தூக்கி எறிகின்றனர். தாங்கள் பேராயராக இருப்பதினாலேயே தங்களால் அபிஷேகம் பண்ணப்பட்ட பாஸ்டர்கள் தரும் ஞானஸ்ஞானம் கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினராக ஒருவனை மாற்றுகிறது என்றும் ஒரு பேனாவின் உதவியால் ஒருவரை திருச்சபை அங்கத்திலிருந்து துண்டிக்கிறது இந்நிலையல் மென்னோனைட்டு திருச்சபை பன்னிரண்டு பேரால் ஒருவரையொருவர் ஞானஸ்ஞானம் கொடுத்துக் கொண்டவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை அறிய வேண்டும். இந்த திருச்சபை எண்ணிக்கையில் கொஞ்சமாயினும் சமாதானத்தின் கூறாக இந்த சபையை ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார் என்ற உண்மையை அறிய வேண்டும்.

3. மெய்யான மனந்திரும்புதலே நல்ல பேராயர்களுக்கு அழகாகும். அதன்படியே ஒழுங்குகள் நடைபெறுகின்றன மறுதலித்து பேதுருவிடம் அவனிடமே பொறுப்பு கொடுக்கப்பட்டு முழுத்திருச்சபைக்கும் தலைவராகிறார். போராயர் ஒருவருக்கும் பாஸ்டர் ஒருவருக்கும் உறவு சரியில்லையானால், முதலில் தான் இதற்கு காரணமா என பேராயர் முதலில் கேட்க வேண்டும். மற்ற பிரச்சினைகளில் சட்டபூர்வமான விஷயங்களைப் பின்பற்ற வேண்டும்.

4. இரட்டை நிலை ஒன்றுக்காக நாங்கள் துக்கித்து நிற்கிறோம். சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட ERD நிதியில், உதாரணமாக, தவறு செய்த பேராயர்களின் முட்டாள் தனம் மூடி மறைக்கப்பட்டுள்ளது இந்த முட்டாள்தனம் வெளிப்படையாக வந்தும் கூட நீதி மன்றம் கடினமான அறிக்கையை வெளியிட்டிருந்தும் பிஷப்புகள் தங்களுடைய தோழமையில் சாதுவான நடவடிக்கை எடுத்து, ஓய்வு வருட விடுப்பை முழு ஊதியம் மற்றும் அலவன்ஸ்களுடன் பாதுகாப்பான மறைவிடத்தை தவறு செய்தவருக்கு அளித்துள்ளனர் பேராயர்களை இதனை மிக முக்கியமாக பார்க்க அழைக்கப்படுகின்றனர்.

5. பிரச்சினைகளுக்கு மூல காரணமே பேராயர்கள் தங்களை அனைத்து நிறுவனங்களின் தலைமை நிர்வாகி என்று அழைப்பதில்தான் உள்ளது. இந்த நிலை நிறைய லே உறுப்பினர்களை பேராயர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதில் உள்ளடங்குகிறது. வேலையாட்களின் குடும்பங்கள் பணி மாற்றம் அல்லது இடமாற்றம் பெறுவதை பேராயர்களின் கட்டுப்பாட்டில் வைக்கிறது. எனவே வேலையாட்கள் பேராயர்களுக்கு எதிர்க்குரல் கொடுக்க இயலாது இருக்கிறது.

6. பேராயர்கள் பலருக்கு ஊழியம் பற்றி அக்கறையில்லை தங்களுக்கு விருப்பமில்லாத போதகர்களை இடமாற்றம் செய்வார்கள். அல்லது மிக உயர்ந்த வசதியான இடத்தில் வைப்பார்கள். சில பாஸ்டர்கள் தைரியவான்களாயிருப்பின் அவர் தொந்தரவு செய்பவர் என்று கருதப்படுவாராயின் அந்த பாஸ்டர் தனது முழு திறனையும் வெளிப்படுத்த இயலாத ஓரிடத்திற்கு தள்ளப்படுவார்.

7. தங்களது அதிகாரத்தை ஒருங்கிணைக்க, தாதாக்களை திருச்சபையில் உள்ள சிலர்தான் அவர்களை பாஸ்டர்களுக்கு எதிராக திசை திருப்பிவிடுவர். அப்படி புறந்தள்ளப்பட்ட ஆயர்கள் தங்களது ஊழியத்தை முழுவதும் நிறைவேற்றாதபடிக்கு ஒடுக்கப்படுவர்.

8. கூட்டம் கூடுதல் மற்றும் பாராம்பரீயத்திற்கு அல்லாத சுதந்திர வழிபாடுகளை நடத்தும் சபையார் தடுக்கப்படுகின்றனர். அங்கி அணிவரைக் கட்டாயமாக்கி, சபையாருக்கும் தனக்கும் பிரிவினையில்லாத நிலையை உருவாக்கும் ஆயரைக் கட்டுப்படுத்தல். அங்கி பல சமயம் அபிஷேகம் பெறாத சபையாருக்கு தடையாகவே உள்ளது. CSI உருவக்க நாளில் எனக்கும் என் சபையாருக்கும் இடையில் பிரிவினை உண்டாக்கும் எதையும் நான் கடைப்பிடிக்க மாட்டேன் என்பதை நினைவு கொள்வோம்.

9. அதே சமயம் வேதத்திற்கு புறம்பான ஆசீர்வாத இறையியல் பேசுவோருக்கு சபையில் முழுச் சுதந்திரம் வழங்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட பல விஷயங்கள் பேராயர்களுக்கு தகுதியற்றவர்களால் கடைபிடிக்கப்படுவதுடன், அவர்களே நல்ல மேய்ப்பன் என்பதற்கு அடையாளமான மேய்ப்பனின் கோலைக் கொண்டிருக்கின்றனர் அவர்களே தாழ்மையின் அடையாளமான (TAPEINOS என்று அழைக்கப்படும் கிரேக்க உயிர் எழுத்து சின்னது tan) 't' என்று தாழ்மையின் குறிப்பை பயன்படுத்துகின்றனர். வளரும் ஆயர் ஐக்கியக் காரணியம் குறித்த அறிக்கையை இத்துடன் இணைக்கிறோம்.

எல்லா பேராயர்களும் இறையியல் மாநாட்டை நடத்தி, எதிர்க் குரல்களுக்கு செவி கொடுத்து, கடவுளுடைய மகிமையை வலியுறுத்திடவேண்டும். இப்போது தேவை ஆழமான மாணாக்க ஒப்படைப்பு ( Deep Discipleship Commitment)

தங்களின் கடவுளின் நீதி ஆட்சி ஐக்கியத்தில்

(கையொப்பம்)

----------

A4) காமரூன் 1999 - 2002: NGO க்கள் மற்றும் திருச்சபைக்கான நடத்தை நெறி விதிகள்.

பின்னணிக்கு பார்க்க அத்தியாயம் 3.1.3

காமரூனில் NGO மற்றும் திருச்சபை புராஜக்ட்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு விதி முறைகள்

## முன்னுரை

ஊழல் எல்லை வரையற்றது, மதம் இனம் அப்பாற்பட்டது காமரூனில் கடந்த இரண்டு பத்தாண்டுகளில் வந்தது இன்று புற்று நோயாகப் புரையோடியுள்ளது. சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் தின்று கொண்டிருக்கிறது.

சமூகத்தின் நம்பிக்கையைத் தங்கள் மீது மக்கள் வைத்துள்ளார்கள் என்ற நிலையில், NGO க்கள் மற்றும் திருச்சபைகள் ஊழலை எதிர்க்கவும் வெளிப்படைத்தன்மையை உருவாக்கவும் முனைந்துள்ளார்கள். NGO க்கள் சர்ச்சுகளின திட்டச் செயல்பாடுகள் மீது நம்பிக்கை வைத்து, அரசம் தனியார் நடத்தும் திட்டங்களும் தங்களுடன் இனைவார்கள் என்றும், நேர்மையாக சண்டையை வலுவான கரங்களுடன் நடத்த அழைக்கின்றனர்.

இந்த நடத்தை விதிகளின் பேரில் கட்டப்பட்ட சட்ட வடிவை தன்னார்வ நோக்குடன் செயல்படுத்துவதே இதன் குறிக்கோள் கைச் சாத்து இடும் அமைப்புகள் (அமைப்புகள் என்று இனி அழைக்கப்படும்) கீழ்க்காணும் நடத்தை விதிகளுக்கு மரியாதை தருகின்றன.

### 1. நெறிகள்

### கீழ்கண்ட நெறிகளுக்கு மரியாதை செலுத்தப்படும்.

1.1 மனித கண்ணியத்தை மதித்தல்:

ஊழலின் காரணமாக பாதிப்பிற்கு உள்ளாக நேரிடும் ஒவ்வொரு ஆண், பெண், குழந்தையின் உரிமை, பாதுகாத்தல், மறு ஊறுதிப்படுத்தல், மரியாதைசெலுத்தல்.

1.2 ஒழுக்கத் தன்மையை மதித்தல்:

ஒழுக்கத் தன்மை, வாய்மை, வெளிப்படைத்தன்மையில் உள்ளது, இதுவே மனித உறவுகளை வளர்க்கின்ற தலையாய அம்சம்.

1.3 நீதியை உயர்த்தல்:

நீதி சமத்துவம் மற்றும் சம வாய்ப்பை அனைவருக்கும் வழங்குகிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கிறது. ஊழல் சமத்துவத்தை அநீதியை வலுப்படுத்துகிறது.

1.4 வெளிப்படைத்தன்மை ஊக்குவிப்பு:

சமூக செயல்பாட்டாளர் ஒவ்வொருவரும் சமூகத்திற்கு அதன் நோக்கம், செயல்பாடுகள், விளைவுகள், தன்னார்வமாக அல்லது விண்ணப்பத்தின் அடிப்படையில் தகவல் தர கடமைப்பட்டிருக்கின்றார்கள். சரியான காரணத்தின் அடிப்படையில் தகவல் தரலாம்.

1.5 ஊழலை எதிர்த்தல்:

ஒவ்வொரு ஊழல் நடவடிக்கையும் எதிர்க்கப்படவேண்டும். நீதி அல்லாத எந்த நன்கொடை அல்லது நன்மைகளை மூன்றாம் நபரிடமிருந்து பெறுவதோ, அளிப்பதோ, அதைக் கேட்பதோ, மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதோ, நேரிடையாகவோ மறைமுகமாகவோ சட்ட பூர்வமற்ற ஒன்றைச் செய்யக் கூடாது.

1.6 சட்ட விதிகள் படி நடத்தல்:

அரசின் சட்ட விதி மற்றும் திருச்சபை NGO வின் உள் சட்ட விதிகள் பின்பற்ற படவேண்டும். நடத்தை நெற விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதாக அவை இருக்கக் கூடாது.

1.7அறிக்கை வெளியிடுதல் - ஊழல் எதிர்த்தல்:

ஊழல் நடவடிக்கைக்கு யாரும் துணைபோகாமல் எதிர்க்க வேண்டும் ஊழலை எதிர்க்க வேண்டும். அதற்காக துன்பப்பட்டாலும் கூட திருச்சபை – NGO க்கள் நடத்தை விதிகளில் கைச் சாத்து இட்டோரை பாதுகாக்க வேண்டும் அவரை எதிர்த்தோ அவரை மிரட்டியோ பலர் செயல்பட்டாலும்

1.8 பொது விருப்பமே முக்கியம் சுயவிருப்பமல்ல:

சுய விருப்பத்திற்கு மேலான பொது விருப்பம் வளர வேண்டும்.

## 2. அமுல்படுத்தல்

நடத்தை விதிகளை அமுல்படுத்திட கீழ்க்கண்ட காரியங்களைக் கடைபிடிக்க வேண்டும்.

2.1அமைப்பு சட்டம்:

கீழ்காணும் காரியங்களில் இந்த நடத்தை விதிகளை தனது அமைப்புச் சட்டம் மற்றும் ஒழுங்குகளில் கடைப்பிடிக்க வேண்டும்.

- சுயசார்புடையாதாய் இருக்க வேண்டிய அமைப்புகளை தனித்தனியே பிரித்து விடுதல் (நிர்வாகம், அமுல்படுத்தல், கண்ட்ரோல்)
- நிதி விஷயத்தில் வெளிப்படைத்தன்மை (இரண்டு கையெழுத்துக்கள், கணக்கு வழக்குகளை வெளிப்படையாக அறிவித்தல், நடத்தை விதிகளை ஏற்றல்)
- வெளியாரினால் கணக்கு தணிக்கை
- பணிக்கு ஏற்ற ஆட்களை தேர்வு செய்தல்
- திருச்சபைத் திட்டங்கள், பேழு க்களில் பதவி ஆண்டை வரைமுறை செய்தல்.

2.2. நடத்தை நெறி விதிகளை தெரிவித்தல்:

நிறுவன அமைப்பின் எல்லா தளங்களிலும் நடத்தை நெறி வதிகளைக் கூறுதல், அதற்கான ஆட்கள், ஆலோசகர்கள் மற்றும் பங்காளர்களைச் சொல்லுதல்.

2.3. உள்ளூனர்வாக்கல், உந்துதல், மற்றும் உள்ளான பயிற்சிகள்:

உள்ளுணர்வாக்கல், உள்ளுதல், மற்றும் ஆட்களை பயிற்றுவித்தல் எல்லாத் தளங்களிலும்.

2.4. தகவல்களை வெளிப்படையாக வைத்தல்:

அமைப்பு தன் வளர்ச்சி மற்றும் நிதி அறிக்கைகளை வெளியிடுதல் வருடாவருடம்

2.5. உள்ளான தடை ஒழுங்குகள்:

நடத்தை விதிகள் மீறும் எந்த ஒரு உறுப்பினரும், அமைப்புச் சட்டப்படி தண்டிக்கப்படுவார். இந்த தண்டனை ஒழுங்கு வெளிப்படையாக அறிவிக்கப்படும்.

2.6. முறையான வெளி மதிப்பீடுகள்:

அமைப்பு, முறையான மதிப்பீடுகளை ஆய்வின் மூலம் கண்டறியும்

2.7. கணக்கு ஒப்புவித்தல்:

கணக்கு ஒப்புவித்தல் மூலம் ஒவ்வொரு பணியாளரும் அமைப்புக்கு கணக்கு ஒப்புவிப்பார். விதிமுறை மீறல்களை, ஊழல் எதிர்ப்பைக் கூறுவார். தவறுகளை நிறுவனத்திற்கோ, ஊடகத்திற்கோ தருவார். அப்படிபட்டவர் பாதுகாக்கப்படவேண்டும். நடத்தை நெறி விதிகளுக்கு கட்டுப்பட்ட அமைப்பு அதைச் செய்ய வேண்டும்.

2.8. சட்டபூர்வமான காரியங்கள்:

உள் ஒழுங்கு தடைவிதிகள் செயல்பாடுகள் சரியாக இல்லையெனில் கோர்ட்டுக்கு செல்லலாம். தனது சுதந்திரச் செயல்பாட்டின் மீது நம்பிக்கையில்லாவிடில் நீதி அமைப்போ இறுதியானது.

2.9. சட்டபூர்வமான காரியங்கள்:
வலைப்பின்னல் ஊழல் எதிர்ப்பு இணையத்தை உருவாக்குதல் முக்கியம்

3. தொடர் பார்வை மற்றும் நடத்தை விதிகளை மதிப்பீடு செய்தல்:
3.1 ஒழுங்கான முறையான மதிப்பீடுகள்:
நடத்தை வதிகளை அமுல்படுத்தலை தொடர்பார்வை செய்து, கண்டறிந்தவவைகளை வெளியிடுதல்.

3.2. நடத்தை விதிகளை மறுபுணரமைத்தல்:
கைச்சாத்து இட்ட அமைப்புகளால் புணரமைப்பு செய்யலாம் தங்களது அனுபவம் சார்ந்து நடத்தை விதிகள் அமலாக்கம் பெற்ற ஒரு ஆண்டில் அதை புணரமைப்பு செய்யலாம்.

4. கடைசியாக :
இந்த நடத்தை விதிகள் மிபாலமெயா என்ற இடத்தில் 1999 மார்ச் 29-31 வரை நடந்த கூட்டத்தில் திருச்சபை, NGO க்கள் மற்றும் திட்ட ஆட்களால் வரைமுறை செய்யப்பட்டது.

இது அமுல்படுத்திட கீழ்க்கண்டவர்கள் அமைப்புகளின் இயக்குநர்கள் சார்பில் அதன் பிரதிநிதி தலைவர்களால் கைச்சாத்து இடப்பட்டன.

இந்த நாளில்............................................................... அமைப்பின்

பெயர்...................................... பிரதிநதி தலைவர் .......................

தேதி ................. கையெழுத்து.................................

- பணி ஒப்பந்தத்தில் ஊழலை எதிர்க்க உரிய விதிமுறைகள் சேர்த்தல். ஊழல் புரிவோர் தண்டிக்கப்பட விதிமுறை சேர்த்தல். தவிர ஊழலை எதிர்கொள்வோர் கோர்ட்டினால் பாதுகாக்கப்படல் விதிகள்

- ஊழலை எதிர்ப்போர் உரிய ஆவணச்சான்றுகளுடன் எதிர்கொள்ளவேண்டும்.

- பணியாளர்கள் அடிக்கடி கூடவேண்டும், ஊழல் விஷயங்கள் அப்போது பேசப்படவேண்டும். அக் கூட்டத்தில் ஊழல் விஷயங்களைக் காணுவோர் கண்டறியப்பட்டு உற்சாகப்படுத்தப்படவேண்டும்.

- இயக்குநர்களுக்கும் பணியாளர்களுக்கிடையே தனிப்பட்ட சண்டை கூடாது. ஊழல் நிறைந்த இயக்குநருடன் மற்ற இயக்குநர்கள் கூட்டுச் சேரக் கூடாது.

## சேர்க்கை கேமரூனின் நடத்தை வதிகள்:

பின் தொடர்பு பணிமனை 25,26 அக்டோபர் 2002ல் யாவுண்டியில் நடைபெற்றது. கைச்சாத்து நிறுவனங்கள் கீழ்க்கண்ட காரியங்களை ஒத்துக்கொண்டன இவை வதிமுறைகளின் சார்பானவை.

### சேர்க்கை 1

தேர்தலில் வெளிப்படை – குறிப்பாக கைச்சாத்து நிறுவனங்களுக்கு நிறுவனங்களில் வெளிப்படைத் தேர்தல் முக்கியமானது. தேர்தலின் எல்லா நிலைகளிலும் இவற்றைக் கொணர்தல்.

- பதிவகளின் எண்ணிக்கை, தன்மை, பதவியின் தேவை இவற்றை உரிய காலத்தில் வெளியிடுதல்.
- தேர்தல் ஆளுமைக்கான விதிமுறைகள் உருவாக்கல்.
- தேர்தலில் நிற்போர், ஓட்டளிப்பவர் பற்றிய பதிவு.
- தேர்தல் நடத்த சமநிலைக் கமிட்டி. நேர்மைப் பண்புகள் அடங்கிய ஆட்களால் நடத்துதல், தேவைப்படின் விவரமான நபர்களை சபைக்கு வெளியிலிருந்து அழைத்தல்.
- தேர்தல் தேர்வுகளை மதிப்பீட்டுடன் வெளியிடுதல், அத்துடன் அந்தப் பதவிக்குரிய கடமை மற்றும் பொறுப்புக்களை DOC ஆக தருதல்.

### சேர்க்கை 2

நிறுவனத்தில் ஊழலை வெளிக் கொணரும் ஆட்களைப் பாதுகாத்தல்

ஊழலின் பிரதிநிதியாக பணியாளர்கள் மாற்றப்படும் நிலை இருக்கிறது. அல்லது தலைவர்களால் மிரட்டப்படுவார்.

பணியாளர்கள் ஊழலைக் கண்டறிவதுடன், அதைக் குறித்துக் கணித்து சொல்ல ஊக்குவிக்கப்படவேண்டும் இந்த எல்லா நிலைகளிலும் பணியாளர் மன ரீதியாக, உள ரீதியான பயமுறுத்தலைச் சந்திப்பார். வேலையும் பறி போகும். எனவே அமைப்புகள்.

- மாற்றம் பெற விரும்பவேண்டும்.
- அல்லது ஊழல் நிறுவனமாக மாறிப்போகலாம் எனவே கைச் சாத்து இட்டோர், கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பின்பற்ற விரும்புகின்றனர்.

- பணியாளர் ஒவ்வொருவரும் ஊழலை எதிர்க்க நடத்தை விதிமுறைகளை அதன் ஒழுங்கு முறைகளை ஏற்றுக் கொள்ளல்.
- பணி ஒப்பந்தத்தில் ஊழலை எதிர்க்க உரிய விதிமுறைகள் சேர்த்தல். ஊழல் புரிவோர் தண்டிக்கப்பட விதிமுறை சேர்த்தல். தவிர ஊழலை எதிர்கொள்வோர் கோர்ட்டினால் பாதுகாக்கப்படல் விதிகள்.
- ஊழலை எதிர்ப்போர் உரிய ஆவணச்சான்றுகளுடன் எதிர்கொள்ளவேண்டும்.
- பணியாளர்கள் அடிக்கடி கூடவேண்டும், ஊழல் விஷயங்கள் அப்போது பேசப்படவேண்டும். அக் கூட்டத்தில் ஊழல் விஷயங்களைக் காணுவோர் கண்டறியப்பட்டு உற்சாகப்படுத்தப்படவேண்டும்.
- இயக்குநர்களுக்கும் பணியாளர்களுக்கிடையே தனிப்பட்ட சண்டை கூடாது. ஊழல் நிறைந்த இயக்குநருடன் மற்ற இயக்குநர்கள் கூட்டுச் சேரக் கூடாது.

## சேர்க்கை 3

தணிக்கைக் குழுவை சுதந்திரமாக்கல
சுதந்திரமில்லாத எந்தத் தணிக்கையும் தரமற்றதே

- திறனற்ற தணிக்கையாளர்
- தணிக்கையாளரின் உதவி புரியும் வகையில் உருவாக்கப்பட்ட வேண்டிய விதிமுறைகள் இல்லாதது.
- தணிக்கையாளரின் நிறுவனச் சார்பு அதனால்தான் நீண்ட ஒப்பந்தம் பெறுகிறார் பெரும் ஊதியமும் பெறுகிறார்.
- கமிட்டி இல்லாமல், இயக்குநரே தணிக்கையாளரைத்தீர்மானித்தல் எனவே இவற்றைச் சரிப்படுத்திடவும், சுதந்திரமான தணிக்கையாளர் பெறவும், தணிக்கையாளரை நியமிக்க, நீக்க உரிய விதிமுறைகளை உருவாக்கல்.

1. தரமான நம்பிக்கையுடைய தணிக்கை நிறுவனத்தை தேர்வு செய்தல்.
2. தணிக்கை செய்யும் அமைப்புப் பிரதிகளை அவர்களின் பட்டியலை நிதி நிறுவனத்திற்கு அனுப்பி,அவர்களே முடிவு செய்யவைத்தல்.
3. முயற்சிக்கட்டும் என்று ஒருவரை நிரமித்தல் தவிர்த்தல்.
4. ஆடிட்டர் தேர்வு முறையை ஒழுங்கு செய்தல்.

## சேர்க்கை 4

நிறுவனத்தின் வாழ்வைப் பாதிக்காது இந்த நெறி நடவடிக்கை விதிமுறைகள் இருக்குமா? ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை என்று ஒன்று இல்லாது நாம் பயணிக்க இயலுமா? கைச்சாத்து இட்ட நிறுவனங்கள் ஊழலை ஒழிக்க விரும்புகின்றன.

ஆனால் ஊழல் நிறைந்த உலகில் அவை வாழவேண்டியிருப்பதால் சவால் உள்ளது. எனவே இல்லாது, ஒத்த நிறுவனங்களுடன் எப்படி பணியாற்றுவது?

- சாத்தியமான சில சூழல் உள்ளன. நமது செயல்களை தொடர்ந்து நடத்த அதிகாரத்தில் உள்ளோர் நம்மிடம் பணம் கேட்கலாம்?
- ஒரு பொது ஒப்பந்தத்தில், தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ளோருடன் 'ஒப்பந்தம்' செய்யும் நிலை இருக்கிறது.
- வரி விதிப்பு எக்கச்சக்கம். நிறுவனத்தை இதன் மூலம் கட்டிப் போட நினைக்கலாம். அதிகாரிகள் கடிவாளம் போடலாம்.
- மேற்கண்ட பிரச்சினைகளில் தீர்வு காண்பது மிகவும் கடினம். கைச் சாத்து இட்டோர் இக்கட்டளை நிலைக்கு எதிராக சிலதைக் கைக் கொள்ளலாம்.
- ஆப்பிரிக்க பாரம்பரியத்தில் நன்போடை கொடுப்பது தவறல்ல. ஆனால் அதன் மதிப்பும் விலையும் மிகக் குறைவு.
- நிறுவனங்கள் தங்களது கடமைகளையும் உரிமைகளையும் உரிய காலத்திற்குள் நிறைவேற்றினால், கால தாமதத்தால் வரும் சிரமங்களைப் போக்கிவிடலாம்.

------------------

## A5) காமரூன் 2002 ஊழலுக்கு எதிராக இளைஞருக்கு நடத்தை விதிகள் :

FEMEC இளைஞர் பேரவை, பியூவாவில், BHS காம்பவுண்டில், 2002 ஆகஸ்டு 4லிருந்து 8 வரை கீழ்க்கண்டவற்றை எங்களது நடத்தை விதிகளாக வெளிப்படையான சமூகத்திற்கு ஊழல் ஒழிப்பை முன்னிறுத்தியுள்ளோம். (FEMEC என்பது Cameroon Federation of Portestant Church and Missions).

### இளைஞர்கள் கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ள

1. தங்கள் உரிமைகளை அறிந்து அதன்படி நிற்றல்.
2. தங்களது நடவடிக்கை நியாயமானதும், மரியாதையுள்ளதாயும், பொறுமையுள்ளதாயும் இருத்தல்.
3. ஊழல் உதாரணங்களைப் பினபற்றுவதில்லை, பெற்றோர் கடைப்பிடித்தாலும், நண்பர்களோ, அதிகாரிகளோ அப்படி நடந்து கொண்டாலும் (1 கொரி 15:33).
4. நேர்மையாக நடப்பது; லஞ்சம் கொடுப்பதுமில்லை – வாங்குவதிமில்லை.
5. ஒருங்கினைந்து நீதிக்காக போராடுதல், சமூக நன்மைக்காகவும்.
6. திறன் வாய்ந்தவர்களாகவும், கடின உழைப்புள்ளவர்களையும் இருத்தல்.
7. சார்புத்தன்மை, சொந்தங்களுக்கு துணைபோதல், தன் இனச் சார்பு, இனவெறி கடைப்பிடிக்காமை.
8. பல்வேறு சான்றிதழ்களில் மாறுபாடு செய்யாமை: பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், பள்ளி சான்றிதழ், விசா சான்றிதழ், பணி, நியமன சான்றிதழ், தவிர கள்ள நோட்டுக்கு அடிபணியாது இருத்தல்.
9. எந்த ஊழல் நடவடிக்கைகளிலும் சாராது இருத்தல் வாழ்தல்
10. இயேசுவின் சுவிசேஷ அடிப்படையில் வாழ்தல் (பிகிரி 1: 27)பங்கேற்பாளர்கள், எங்களிலிருந்து இந்த நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்று விரும்பி, கைச்சாத்து இடுகிறோம்.

பியூவோ / காமரூன் 8 ஆகஸ்டு 2002

A6) All Africa Conference of Churches 2003 பரிந்துரைகள் பார்க்க அத் 3:1:4

நவம்பர் 2003, காமரூன் யாவுண்டேயில் நடந்த அனைத்து ஆப்பிரிக்க திருச்சபை மாநாட்டில் (AACC) ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள்.

A. ஊழலின் ஆணிவேர் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் நெறிபிறழ்வு நடவடிக்கைகள் அவை ஒழுக்கக் கேடான விஷயங்களுக்கு கொண்டு செல்லும் என்பதினால், மாநாடு கீழ்க்கண்டவற்றை முன் கூறுகிறது.

AACC ம் அதன் உறுப்பினர் திருச்சபைகளும் ஊழல் எதிர்ப்பை முக்கியப் பணியாக கருதி, குறிப்பாக இப்போது முதல் அடுத்த மாநாடு வரை முன்னிலைப்படுத்துகிறது.

1999 கேமரூன் நடத்தை விதிகள் அடிப்படையில் AACC ம் அதன் உறுப்பினர் திருச்சபைகள், ஐக்கியங்கள் ஓர் புதிய ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை விதிகள் உருவாக்குகிறது.

AACCக்கு திருச்சபை தங்கள் நடக்கைகளைத் தெரிவிக்கும். AACC அவற்றை வாங்கி ஒருங்கினைத்து விவரங்கள் வழங்கும்.

AACCன் திருப்பணி பணி தன்னிடத்திலேயே புறப்படுவதால் தனது நிறுவனங்களான பள்ளிகள், கிளினிக்குகள், ஆஸ்பத்திரிகள், அலுவலங்கள் இவற்றை ஊழல் இல்லாத இடமாக பார்ப்பது.

AACC, ஐக்கியங்கள், தேசிய கவுன்சில் மற்றும் சர்ச்சுகள் வெளிப்படையாக தன் நிர்வாகத்தை நடத்தி ஊழல் அற்ற இடங்களாக அவற்றைக் கொண்டுவருதல்.

ஆப்பிரிக்க முழுதும் ஊழல் எதிர்ப்பு வாரத்தை AACC பொதுக் கமிட்டி ஊக்குவிப்பது மற்ற குடிமைச் சமூகங்கள், அரசுகளிடம் ஊழல் ஒழிப்பு ஊழல் வெளிப்பாடு நிகழ்வுகளில் பங்கேற்பது
பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்பந்தங்களை கண்காணிப்பது

AACC, பொதுக்கமிட்டிக்கு வளர் அறிக்கைகளை சமர்ப்பிப்பது

B. கடன் சுமையே ஊழலுக்கு காரணம் என்பது திருச்சபைகளும், குடிமை அமைப்புகளும் தேசிய பட்ஜெட்டை வெளிப்படையாக விவாதித்தல். அவை அனுமதி பெற்று வெளி வருமுன்பு.

A7) உலகத் திருச்சபை மாமன்றம் 2009: நெறியுடன் அலுவல் நடத்துதல் விதிகள்:

வஞ்சித்தல் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கை

I. நெறியுடன் கூடிய அலுவல் விதிகளுக்கான கொள்கை: பார்வை

தனது திட்டப் பணிகள் நிறைவேற்றம், மற்றும் அதன் நிர்வாக சேவைகளில், WCC பணியாளர்கள் (WCC பணியாளர்கள் ஜெனிவா மற்றும் இதர அலுவக பணியாளர்கள், மற்றும் ஆலோசனைக்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் அலுவலர்கள் உள்ளடக்கியது) ஆளுமை உறுப்பினர்களிடமும், நிதி அமைப்புகளுடனும், அரசு அதிகாரிகளிடமும், பொருள் வழங்குபவரிடமும், பயணாளிகளிடமும், தொடர்பான நிறுவனங்களிடமும், நண்பர்கள் மற்றும் மூன்றாம் நபரிடமும் தொடர்பு கொள்கின்றனர். இந்த கீழ்க் கண்ட நெறிக் கொள்கை WCC அமைப்பு செயல்பாடுகளை மேற்கண்ட தொடர்புப்பணிகளில் ஆளுமை செய்கிறது.

<u>முக்கிய கருத்தியல்கள்:</u>

1984 முதல் 1993 வரை பன்மை விசுவாச கலந்தாய்வுகளில் கிறிஸ்தவ – முஸ்லீம் - மற்றும் யூதர்களினால் அகில உலக அலுவல் நெறிமுறைக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. அதன்படி நான்கு முக்கிய கருத்துக்கள் மத இலக்கியங்களில் மீண்டும் மீண்டும் எழும்புகின்றன. மனித உறவுகளின் அடிப்படைகளை அவை விளக்குகின்றன. WCC இந்த நான்கு அடிப்படை விதிகளுக்கு தலை வணங்குகிறது. அவை

வணிகத்தில் நீதி, உண்மை, பரஸ்பர மரியாதை, உக்கிராணத்துவம், நேர்மை

கொள்கைகள்:

நல்ல செயல்பாடுகளுக்கு வழிமுறைகள் அவசியம். தனி நபர் நீதி பார்வை நடைமுறைகச் செயல்பாடுகளுக்குத் தக்கவாறு அமுல்படுத்திட வேண்டும்.

a) அலுவலில் நீதி, உண்மை:

பணியாளர்கள் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், WCC கொள்கைகள் ஆகியவற்றை மதித்து நடக்க வேண்டும். சந்தேகம் வரும்பொழுது. WCC தலைமை, இயக்குநர்கள், மற்றும் மேலாளர்களுக்கு சிறப்பு பொறுப்பு உள்ளது. நீதி மற்றும் உண்மை, உதாரணங்கள், உரையாடல்கள் மூலம் தனக்கு கீழ் உள்ளவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் நெறி முறைக் கோட்பாடு நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டும்.

பணியாளர்கள் பணி வாழ்வு மற்றும் தனிப்பட்ட வாழ்வுக்கு இடையே எழும் முரண்பாடுகள் கிளம்பினால் அவை வெளிப்படையாக்கப்பட்டு அவைகளுக்கு வழிமுறை காணப்படவேண்டும்.

b) பரஸ்பர மரியாதை:

ஒவ்வொருவரின் கண்ணியமும் மதிக்கப்படவேண்டும் தனிநபரின் முற்போக்கு சிந்தனைகள், செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படவேண்டும். கூட்டுறவு நம்பிக்கை வலியுறுத்தப்பட வேண்டும். குழுவாக முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும் தனிநபர் மரியாதை காக்கப்படவேண்டும். ருகசியமான எந்த தகவலும் பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டவை மரியாதையுடன் காக்கப்படவேண்டும்.

c) உக்கிராணத்துவம்:

WCC ன்கைக்கு ஒப்படைக்கப்பட்ட வளங்களை முறையாக பணியாளர்கள் உக்கிராணத்துவம் செய்ய வேண்டும். ஞானமாய் பலமாய் எதற்கு பயன்படுத்தப்படவேண்டும், அதற்கு வளங்கள் பயன்படுத்திட வேண்டும்.

தனி நபர் உறவுகளை சிபாரிசுகளுக்கோ, பயணாளிகளுக்கு நிதிவழங்க எடுக்கும் தீர்மானங்களிலோ பயன்படுத்திடக் கூடாது.

அலுவல்கள் மதிப்பிடனும், சூழலைப் புரிந்தும் நடத்திடவேண்டும். நிகழ்வுகளை மிகச் சிறப்பாய் நடத்திட பணியாளர்கள் உக்கிராணப் பொறுப்புடன் நடக்க வேண்டும் அதன்படி மதிப்பீடுகள் நடத்தப்பட வேண்டும்.

நிதி தொடர்பான அறிக்கைகள் நேரத்தில் வழங்கப்படவேண்டும் உண்மைத் தனிமையுடன் இருக்க வேண்டும். நல்ல ஆவணம் அலுவல் வெளிப்படைத் தன்மையை தெரிவிக்கும்.

d) நேர்மை:

சுமரசம் செய்தாத நேர்மை உண்மை எல்லா உறவுகளிலும் அலுவல்களிலும் செய்யவேண்டும். பணியாளர்கள் எக்காரணம் கொண்டும் தமது அதிகாரத்தை தகவல்களை தனிப்பட்ட உபயோகத்திற்கோ, கவுரவத்திற்கோ வசதி வாய்ப்புக்கோ பயன்படுத்தக்கூடாது.

கொள்கை அமலாக்கம்:

அலுவலின் நேர்மை விதிகள் கொள்கை சூழலில் எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து பணியாளர் விதிமுறைகளில் மற்றும் கொள்கைகளில் உள்ளன.

ஒழுங்கு நடவடிக்கைகள் பணியாளர் விதிமுறைகள் சார்ந்தும் இதர கொள்கைகள் சார்ந்தும் எடுக்கப்படும்.

## II வஞ்சித்தல் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கை:

### முன்னுரை மற்றும் பொது அறிக்கை

WCCன் அலுவல் நடத்தை நெறி விதிகள் கொள்கை இவ்வாறு கூறுகிறது:

WCC ன் கண்காணிப்பிறது உட்பட்ட வளங்களை முறையாக நிர்வாகம் செய்ய வேண்டியது பணியாளர்களின் உக்கிராணத்துவம் வளங்கள் அதன் தன்மைக்கு ஏற்ப பயன்படுத்திட வேண்டும். இந்த கொள்கை அடிப்படையில் நிர்வாகக் குழு, 'வஞ்சித்தல் மற்றும் ஊழலைக் கண்டுபிடித்து' உரிய நடவடிக்கை எடுக்க பொறுப்பு ஏற்றுக் கொள்ளுகிறது.

விளக்கம்:

நிறுவனத்தின் வளங்கள் அல்லது சொத்துக்களை வேண்டுமென்றே தவறாகப் பயன்படுத்தல் வஞ்சித்தல் ஆகும். இந்த தவறான செயல்கள் நிதியை தன் தனிப்பட்ட உபயோகத்திற்கும், எந்த நோக்கத்திற்கு வளம் உருவாக்கப்பட்டதோ அதற்கு மாறாக பயன்படுத்தலும் வந்து சேரும்.

வஞ்சித்தலில் ஊழலும் சேரும். ஊழல் என்பது அதிகாரத்தை தனிப்பட்ட வசதிக்கு பயன்படுத்தலாகும் (TI)

எதிர்பார்ப்பு :
நிறுவனம் செயல்படுகிற செயல்களில் பணியாளர்கள் வஞ்சித்தலில் ஈடுபடாமல் வழிநடத்தப்பட இக்கொள்கை உதவுகிறது

கொள்கை:
WCC தலைமை, இயக்குநர்கள், நிர்வாகம் ஆகியவை நேர்மைக் கலாச்சாரத்தையும், விமர்சிக்கப்படாத நடத்தைகளையும் வெளிப்படுத்துவார்கள்.

WCC தலைமை, இயக்குநர்கள், நிர்வாகம் ஆகியவை உரிய விதிமுறைகள், கட்டுப்பாடுகளை உருவாக்கி, வஞ்சித்தல் இல்லாமல் பார்த்துக் கொள்வார்கள் இதன்படி கணிணிகள், ஆவணத் தொகுதிகள் பாதுகாக்கப்படும. ஆடிட் கமிட்டி உதவியுடன் வஞ்சித்தல் நேரும் அம்சங்கள் கண்டறியப்படும். வஞ்சித்தல் நடக்கக் கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு, அதன்படி வருடாந்திர அறிக்கை உருவாக்கப்பட்டு நிதி உபகமிட்டிக்கு அனுப்பப்படும் அது உரிய வணங்களை நிர்வாகக் குழுவிற்கு அனுப்பும்.

தமது மேலதிகாரிகளுக்கு சந்தேகப்படும் எந்த வஞ்சித்தல் தொடர்பான நிகழ்வகளையும் பணியாளர்கள்.

## A8) ஐக்கிய சுவிசேஷ மிஷன் 2002: நடத்தை நெறிகள்

பின்னனிக்கு பார்க்க 3.3.1

ஐக்கிய சுவிசேஷ மிஷனின் நடத்தை நெறிகள் ஊழலுக்கு எதிரானது; வெளிப்படைத்தன்மைக்கானது 2002

### தொடக்கவுரை

ஐக்கிய சுவிசேஷ மிஷன் என்பது மூன்று கண்டங்களின் திருச்சபைகளின் ஒன்றிப்பு: இது பழைய புதிய ஏற்பாடுகளின் விவிலியக் கட்டுமானத்தின்மேல் அமைந்துள்ளது. மிஷன் கூட்டுறவுக்கென இருக்கிறது. ஆப்பிரிக்க, ஆசியா, ஐரோப்பிய சபைகளின் இணையத்தில் வேலை செய்கிறது. ஒன்றித்து இயேசுவே ஆண்டவர் என்றும் ரட்சகர் என்றும் கூறுகிறது. இன்றைய மிஷன் சவால்களுக்கு பதிலிறுக்க விழைகிறது. பிளந்து கிடக்கும் உலகில் இயேசுவின் சரீரமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள விழைகிறது. எனவே ஆராதனையில் வளர்கின்றது. சமூகத்திற்கு சேவை புரிகின்றது.

வளநன்கொடைகளை பகிர்கிறது, அத்துடன் புதிய கருத்துக்களையும், பொறுப்புக்களையும் கூட எல்லா மனிதரையும் மன்னிப்பு மற்றும் புதிய வாழ்வுக்கு அழைக்கிறது. நீதி, சமாதானம் மற்றும் படைப்பின் ஒன்றிப்புக்கு பரலோக ராஜ்யத்திற்கு சாட்சியம் கூறுகிறது.

(UEM சட்ட அமைப்புவிதிகள்)

மறுமலர்ச்சி இறையியல் பாரம்பரியத்தில் 34 சபை மற்றும் நிறுவனங்களின் ஜனநாயக அரசியல் அமைப்பு- பரஸ்பர மரியாதை கண்ணியமாக நடத்தலில், அது மனித சமூகம் கடவுளின் சாயலாக படைக்கப்பட்டதில் இருக்கிறது. இதுவே அநீதிக்கும் பாகுபாடுகளுக்கும் எதிரான நமது அடிப்படை. நீதி சமாதானத்திற்கும் சபைகளின் ஒன்றிப்புக்கும் UEM என்பது தன்னார்வமாக இந்த நடத்தை விதிகளை தன் அன்றாட அலுவல்களில் வழிகாட்டியாக இது அங்கீகரிக்கிறது (இனிமேல் அது விதிகள் என்றே அழைக்கப்படுகிறது)

ஊழல் சமூகத்தை சீரழிக்கிறது. UEM சமூகத்தைக் கெடுக்கிறது. எந்த வித தவறான லாபம் சம்பாதிக்க நினைத்தாலும் அது ஊழலே (தன்காகவோ, மூன்றாம் நபருக்காகவோ அது இருக்கலாம்) இதனால்ப் பொது மற்றும் தனியார் அதிகாரம் துஷ்பிரயோகப்படுகிறது. சமூகத்தை பாழ்படுத்துகிறது.

1. கொள்கை:

ஐக்கிய சுவிசேஷ மிஷன் (UEM) கீழ்க்காணும் கொள்கையை மதிக்கிறது.

1. 1மனித கண்ணியம் மதித்தல்: ஒவ்வொரு பெண், ஆண், குழந்தை உரிமையும் ஊழல் பிடியிலிருந்து காக்கப்படுதல் என்பது வலியுறுத்தப்படுகிறது மதிக்கப்படுகிறது.

1. 2 நீதியை முன்னிருத்தல்: நீதி சமத்துவத்தையும் சம வாய்ப்பையும் அனைவருக்கும் வழங்குகிறது. சமூக ஏற்றத்தாழ்வு பாகுபாடுகளை குறைக்கிறது. ஊழல் அசமத்துவத்தையும் அநீதியை நிலைநிறுத்துகிறது வளர்க்கிறது.

1. 3 ஒழுக்கத்தை மதித்தல்: ஒழுக்கம் என்பது நம்பிக்கை, நேர்மை மற்றும் சமூக நெறி வளர்ச்சி, UEM நிறுவனங்களின் மற்றும் தனி நபர்களின் நம்பிக்கை வளர்த்தல் ஆகியவற்றிற்கு இது பிரதானமானது.

1. 4 வெளிப்படைத்தன்மையை முன்னிறுத்தல்: ஒவ்வொரு வேலை செய்யும் பகுதியும் அதன் இலக்கு, செயல்பாடுகள், அதற்கு ஒதுக்கீடு செய்துள்ள வளங்கள் மற்றும் தகவல்கள் பெறவேண்டும்.

1. 5 பங்கேற்பை முன்னிறுத்தல்: சிறப்பான பங்கேற்றல், உருவாக்கல், நிலைத்த தீர்மானிக்கும் நிலை ஆகியவை எல்லா நிலைகளிலும், வரையறுக்கப்பட்ட பொறுப்புகள், ஆசியவை வெளிப்படைத் தன்மையான தகவல் பரிமாற்றத்தில் உள்ளன.

1. 6 ஊழலை மறுத்தல்: ஒவ்வொரு ஊழல் நடவடிக்கையும் கண்டனத்துக்கு உள்ளாக வேண்டும். மூன்றாம் நபருக்கு நேராகவோ மறைமுகமாகவோ எந்த அன்பளிப்பும் வழங்க UEM தடைசெய்கிறது தனக்காகவோ பிறருக்காகவோ எந்த நன்கொடையையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெறக்கூடாது வேறு எந்த சலுகையும் பெறக் கூடாது கேட்கக் கூடாது. அவை சட்டபூர்வமற்றவை. ஊழல் செயல்கள்

## 2. அமுல்படுத்தல்

கீழ்க்காணும் செயல்கள் மூலம் ஊழலுக்கு எதிரான கொள்கையை நடைமுறைப்படுத்தும்

### 2.1 கட்டமைப்புகளில்:

UEM அமைப்பு எந்த தனிநபர் அல்லது உறுப்பினர் திருச்சபைகளுக்கும் நிதி கையாளும் கூடுதல் அதிகாரம் தராது UEM பொதுமக்கள் நலம், தர்மகாரியங்கள் மற்றும் திருச்சபை சார்ந்த நோக்கங்களுக்கே செயல்படும்.

UEM ன் வேலையை கண்காணிக்கும் வழிகாட்டல் மற்றும் கொள்கையை பொது அசெம்ப்ளி உருவாக்கும். அத்துடன் நிதி முன்னுரிமையை, நான்கு ஆண்டுகளுக்கு, நிர்வாக பதவி உட்பட திட்டங்கள், வேலைக்கு அமர்த்தல் பெறும் ஆட்கள், நிதி மற்றும் சட்ட விவகாரங்கள், மற்றும் பொது அசெம்ப்ளியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை கவுன்சில் மேற்கொள்ளும். அவசரகாலத்தில் பொது அசெம்ப்ளி சார்பில் கவுன்சில் வேலை செய்யும்.

கவுன்சில் எல்லா நிதி விவகாரங்கள், பட்ஜெட் உட்பட, ஆட்கள் நிர்வாக பதவிக்கு அல்லாதவை உட்பட தீர்மானிக்கும். கவுன்சில் சந்திக்காதபோது நிர்வாகக் கமிட்டி முடிவு எடுக்கும். நிர்வாகக் கமிட்டி உதவியுடன் தலைமை அலுவலக உதவியுடன் அலுவல் செய்யும்

பொது அசெம்பளியால் தேர்வு செய்யப்படும் மாடரேட்டர் ஜெனரல் செக்ரட்டரி, பரஸ்பர ஒப்பந்தத்துடன் UEM கமிட்டிகளில் உறுப்பினர் ஆவார். UEM க்கு சட்டபூர்வமான கவுன்சில் பொறுப்பேற்கும். ஆறு நிர்வாக ஊழியர்களிடம் கவுன்சில் இதைத் தரும். அங்கீகாரம் பெற்ற இரண்டு பணியாளர்கள் சட்ட பூர்வமான ஒப்பந்தத்திற்கு கைச்சாத்து இடுவார்கள்

### 2.2 நிதியைக் கையாளுவதில் வெளிப்படை:

UEM நிதி (நன்கொடைகள், திருச்சபை கலக்ஷன், வீடு கலக்ஷன், உறுப்பினர் சந்தா, இதர) சட்ட அமைப்புக்குட்பட்ட காரியங்களுக்கு மட்டுமே செலவழிக்கப்படவேண்டும். பொறுப்புள்ள பணியாளர் ரசீதுகளை சரிபார்ப்பார். கணக்குக் கூட்டல் சரியாக இருக்கிறதா என பார்ப்பார். பணம் வெளியில் சென்றால், அதற்கு இரண்டு பணியாளர்கள் உரிய அங்கீகரிப்புடன் கைச்சாத்து இட்டு நிர்வகிப்பர்.

எதற்கு பணம் பயன்படுத்தப்படவேண்டும் என்பதும், அதற்கான கணக்கு ஒப்புவித்தலும், நிதி ஒதுக்கீடும் உறுப்பினர் சபைகளின் விதிக்கு உட்பட்டே நடக்க வேண்டும் இதன் தொடர்பான நடத்தை விதிகள் வகுக்கப்படவேண்டும்.

வருடாவருடம் சுதந்திரமான தணிக்கை நிறுவனம் UEM கணக்கை தணிக்கை செய்யும் சான்றிதழ் அளிக்கப்பட்ட தணிக்கை அறிக்கை கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டு உறுப்பினர் திருச்சபைகளுக்கு அளிக்கப்படும். வரி அலுவலக உதவியுடன் வரி தணிக்கையும் செய்யப்படும். முறையாக UEMன் தர்ம ஸ்தாபன புதுப்பித்தல் சரிபார்க்கப்படும்.

தணிக்கை நிறுவனத்தின் தணிக்கை அடுத்த ஆண்டிற்கும் நீட்டிக்கப்படும். இவை UEM திருச்சபை கமிட்டிகளில் வெளிப்படைத் தன்மையும் பரஸ்பர கணக்கொப்புவித்தலையும் தரும்.

### 2. 3 விதிகள் பற்றிய தகவல்

- UEM வதிகள் எல்லா உறுப்பினர் திருச்சபைகளுக்கும் அளிக்கும். அதன் பணியாளர் உட்பட அமுல்படுத்தலை கண்காணிக்கும்.
- UEM, இதர நிறுவனங்களுடன், ஊழலை எதிர்க்கும், வெளிப்படை தன்மையை வலியுறுத்தும்
- UEM அதன் ஆவணங்களில், (ஜு லை 2000) கடன் நிவாரணச் சூழலை வெளிப்படுத்தும். ஊழலை எதிர்க்கும். பணியாளர் மற்றும் கமிட்டிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க உதவி செய்யும்.

### 2. 4 கண்டிப்பான அறிக்கை சமர்பித்தல்:

எல்லா நிலைகளிலும் தளங்களிலும் ஊழலுக்கு எதிரான விதிகளை அமுல்படுத்தும். இதைச் செய்து எங்கே தவறுகள் நடந்தாலும், காரியக்கமிட்டி / கவுன்சில் மூலம் தண்டனை வழங்கி, ஒவ்வொரு இரண்டு வருடம் ஒரு முறை அறிக்கை தொகுத்து, பொது அசெம்பளிக்கு வழங்கும்.

### 2. 5 முடிவுக்காரியம்:

பொது அசெம்பளி இந்த விதிமுறைகளை வகுக்கும் இதை அமுல்படுத்தல் தொடர்பான தொடர்ந்த அறிக்கைகளைப் பெறும்

### பின் சேர்க்கை :

கீழ்க்கண்ட வழிமுறைகள் தொகுக்கப்பட்டு,1999 ஏப்ரல் 25 முலதல் மே2 வரை நடந்த அகில உலக பொருளாளர்கள் பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

A) UEM உறுப்பினர் திருச்சபைகளில் பொருளாளருக்குரிய வழிகாட்டுதல்கள் பொருளாளர் என்பார்.

1. திருச்சபை வரவு செலவைத் தயாரிப்பார். திட்டங்களின் பொறுப்பாளர்களிடமிருந்து திட்ட அறிக்கைகளைப் பெற்று, திருச்சபைக்கென பொது வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பார்.

துறைகளுக்குரிய ஆலோசனைகளை பொருள் வழங்குவார் எவ்வாறு சரியான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது எப்படி என்று இந்த திட்டத்திற்கு நிதி நிறுவனங்கள் தரும் நிதிப்படி தயாரிக்கப்படும். வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க உரிய இடத்திற்கு இதை எடுத்துச் செல்வார். அவரின் இதர பணிகள் வருமாறு.

2. அமுல்படுத்தும் போது கண்காணித்தல். பட்ஜெட் அடிப்படையில் நடக்கிறதா என்றும், உரிய நிதிகள் எதிர்பார்த்த வண்ணம் வருகிறதா என கண்காணித்தல்.

3. போதுமான நிதி திருச்சபைக்கு வருகிறதா, குறைகிறதா என பார்த்தல் திருச்சபைக்குரிய நிதி எல்லா செலவுகளையும் சந்திக்கிறதா என பார்த்தல், மற்றும் எல்லா செலவையும் சரியாக செலுத்தல். பண செலவை ஒழுங்காக கட்டுப்படுத்தல் அவசியம்.

பண செலவு ஒழுங்கை லாபமாக மாற்றல். துவிர உபரி நிதியை பொறுப்பான வைப்புகளில் வைத்தல். நீண்ட கால வைப்பில் பணம் செலுத்திட நிதி முதலீடு கமிட்டி ஒன்றை ஏற்படுத்திட வேண்டும்.

4. வெளிநாட்டு நிதி வரவை அந்தந்த நிதி உதவியாளருக்கு உரிய தகவல் தருதல். அலுவலக வரவு ரசீதும் உரிய நன்றிக் கடிதமும் அனுப்புதல் நிதிகள் உரிய உறுப்பினர் சபைக்க அனுபப்பட்டு தகவல் பொறுப்பு பொருள்களுக்கு அனுப்ப வேண்டும்.

5. திருச்சபை வளங்களை சரியாக பயன்படுத்தல். உரிய மேல் திறனுடன் திருச்சபை வளங்கள் உயர்த்தப்படவேண்டும் பணி மனைகள், திருச்சபை இயந்திரங்கள் திருச்சபை வருமானத்தைப் பெருக்க உதவ வேண்டும், சும்மா கிடக்கும் கட்டிடங்களிலிருந்து வாடகை வரவேண்டும் ஒவ்வொரு சர்ச்சுக்கும் சொத்துக் கமிட்டி வேண்டும்.

6. தனி ஒதுக்கீடாக வந்த நன்கொடை என்ன நோக்கத்திற்கு வந்ததோ அதற்கு பயன் அளிக்க வேண்டும். மேற்படி நன்கொடைகள் வேறுவேறு வங்கிக் கணக்கில் வரவுவைக்க வேண்டும் எதற்காகவும் நிதி வேறு காரியங்களுக்கு திருப்பப்பட்டால், நிதி தருவோரிடம் கலந்தாய்வு செய்தே திருப்ப வேண்டும். UEM உறுப்பினர் திருச்சபைகளின் பொருளாளர்களுக்கு முழுப் பொறுப்பையும் தர வேண்டும். திருச்சபைக்குரிய நிதி பற்றி அனைத்து கணக்கு வழக்குகளையும் தரவேண்டும்.

B) UEM உறுப்பினர் திருச்சபைகளை நிதி கையாள பொது விதிகள்

1. திட்ட மிட்ட நோக்கமான, திருச்சபை அருட்பணிக்கு உறுப்பினர் திருச்சபைகள் வரவு செலவைப் பயன்படுத்திட வேண்டும்.
2. நிதி நிர்வாகம் செய்யும் பணியாளர்களைக் கண்கானிக்க பணியாளர்களுக்கு வேலைப் புரிதல் இருக்க வேண்டும். அதன் அடிப்படி அவர் /அவள் தனது பணியை நிர்வகிக்க வேண்டும்.
3. திருச்சபை வழிகாட்டும் அமைப்புகள் நிதி வளர்ச்சித்திட்டம் தயாரிக்க வேண்டும். வரவு செலவுத் திட்ட வேறுபாடுகள் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிதி அறிக்கையாக அந்தந்த துறைக்கு வழங்குதல் வேண்டும். லாப நஷ்ட கணக்கு நிலுவை அறிக்கைகள் உரிய அமைப்புகளுக்கு வழங்க வேண்டும்.
4. பொருள் வாங்கிட (உ.ம் தளவாட சாமான்கள், இயந்திரங்கள், பயணச் சீட்கள்) இரண்டு பணியாளர் தனியாக சுரந்திர வாளாராக தேவை.
5. எல்லா நிதி வழங்கலும் (செக்குகள், பரிமாற்றம் ஆகியவை) இரண்டு பொறுப்பான அலுவலர்களால், செயலாளர் மற்றும் பொருளாலாரால் நடத்திட வேண்டும் பொருளாளரின் கையெழுத்து மிக அவசியம்.
6. (இரட்டைப் பதிவு) கணக்கு ஆவணங்களை UEM செய்ய வேண்டும் வருடாவருடம் தணிக்கை முடிய வேண்டும். லாப நஷ்ட நிலுவைக் கணக்கு சமர்பிக்க வேண்டும்.
7. கணக்குத் தணிக்கையாளாரின் உதவியுடன் எல்லாக் கணக்குகளும் தணிக்கை செய்யப்பட வேண்டும். தணிக்கை கட்டணம் வருடாந்திர பட்ஜெட்டில் இருக்க வேண்டும்.
8. நிர்வாகச் சீர்படுதலுக்கு பொருளாளரும் நிதி கையாளும் பணியாளர்களும் உரிய நிதி மேலாண்மை செய்ய வேண்டும். அவர்களது கணிணி அறிவித்திறன் வளர்க்க வேண்டும் சட்ட விசயங்கள் மற்றும் கணக்கு ஒழுங்குகள் ஆகியவை.

C) பணப்பரிமாற்றளளளம் மற்றும் உரிய பண வரவிற்கு வழிகாட்டும் நெறி முறைகள்
UEM தலைமை உப்பர்டாலில் இருந்து பங்கு மாவட்டங்களிலிருந்து பங்கு சபைகளுக்கு வழங்க வேண்டும். UEM அலுவலகத்திற்கு நிதி விவரம் தெரிவிக்க வேண்டும். எதற்காக பணம் வழங்கப்பட்டதோ, அதற்கே செலவழிக்க வேண்டும. அரையாண்டு நிதி அறிக்கைகள் பங்கு மாவட்டங்கள் மற்றும் UEM ஆபிஸிற்கு அனுப்ப வேண்டும்.

----------

## A9) திருச்சபைத் தேர்தல்களில் நிற்க குறைந்த பட்ச தகுதிகள்:

திருச்சபை சினாடு தேர்தலில் குறைந்தபட்ச பன்னிரண்டு தகுதிகளை PFLWC என்ற தீர்க்க தரிசன அமைப்பு தென் இந்தியாவில், சென்னை இந்தியாவில் நாலாவது பணி மனையில் அறிமுகப்படுத்தியது (பார்க்க அத் 3.1.1)

1. தங்களுக்கோ, தங்கள் உறவினர்களுக்கோ நன்கொடை, பாரபட்சம், பதவி வாங்கித் தந்தல், ஊழல் நிர்வாகம் ஊழல் இவற்றை தமது வாழ்வில் இல்லா நன் நடத்தை ஆவணங்கள் பெற்றவர்கள்.
2. அதீத வாழ்வு வாழாதவர்கள். விளம்பரம் தேடாதவர்கள் ஒத்து ஊதும் படை இல்லாதவர்கள்.
3. ஒப்புரவு மற்றும் சமாதானத்திற்கு விரும்புபவர்கள் பரஸ்பர பேச்சு வார்த்தை மூலம் சட்ட வியாஜ்ஜியங்களை தீர்ப்பவர்கள்.
4. பாரபட்சமில்லமல் யார் மீது ஊழல் குற்றச்சாட்டு அமர்கிறதோ, அதை முறையாக விசாரணைக்கு உட்படுத்துகிறவர்.
5. CSI TA சொத்துக்களை விற்பதை முற்றிலும் நிறத்துபவர் இதுவரை வழங்கப்பட்ட விற்பனை அதிகாரத்தை விசாரித்து எந்த காரணங்களுக்காக விற்பனை ஏற்றக் கொண்டடிருப்பதை விசாரிப்பவா.
6. திருச்சபை நிறுவனங்களை சுயாதீனமாக ஆக்குபவர் அவற்றை விற்காதவர். கல்வி மற்றும் சுகாதார நிறவனங்களை சுரண்டாதவர். அதன் சொத்துக்களையும் கூட
7. நிர்வாகத்தில் கணக்கு, ஒப்புவித்தல் மற்றும் வெளிப்படையாக இருத்தல்
8. மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பவர். தம் சொத்தை வெளியிடுபவர். குடும்ப உறுப்பினர்களின் சொத்தையும் கூட
9. முன்னுரிமையாக தன் நேரத்தை திருச்சபைக்கு தருபவர் தனது நேரத்தை முறையாகப் பயன்படுத்துபவர்.
10. வெற்றி பெறுதலுக்காக பதவி ஆசை பிடித்தவர்களுடன் தவறான நட்பு மற்றும் வியாபாரம் பணம் தராதவர்.
11. ஆண்டவரின் உண்மையான ஊழியர்.
12. கேள்வி கேட்போரை துன்புறுத்தாதவர். நல்ல நோக்கத்திற்காக விமர்சனம் செய்பவரை துன்புறுத்தாதவர்.

----------

## A10) வள நிர்வாகம் மற்றும் கட்டு மானங்களில் ஊழல்

தென்னிந்திய திருச்சபையின் ஒரு பேராயத்திலிருந்து வந்துள்ள இந்த அறிக்கை கட்டிடம் கட்டுதல், வாங்களை குறிப்பாக நிலததை தவறாக பயன்படுத்தல், திட்ட நிதியை தவறாகப்பயன்படுத்தலைக் குறித்து விளக்கி கணக்கு ஒப்புவித்தலை வளப்படுத்திட உதவுகிறது.

CSI மத்திய கேரளா பேராயத்தின் பேராயரால் நியமிக்கப்பட்ட திரு. ஜோசப் V ஜார்ஜின் அறிக்கையின் சுருக்கம். 2002 டிசம்பரில் வெளியிடப்பட்டது. பேராய நிதி 1996 / 7 முதல் 2001/2 வரை பற்றிய ஆய்வு இது.

1. CSI மத்திய கேரளா (CSI MKD) ஆய்வுக்குட்பட்ட நிதியில் 86 மில்லியன் பணத்தை வரவு செலவு திட்டத்தில் சேராத நிகழ்வகளுக்கு பயன்படுத்தியுள்ளது.
2. இந்த காலக்கட்டத்தில் 83 மில்லியன் ரூபாய்கள் ஒழுங்கற்ற செலவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
3. 85 மில்லியன் ரூபாய் கட்டடிடம் கட்ட செலவு ஆயிற்று. இதற்கான டெண்டர், முற்சிந்தனை செலவு விவரம், பணி ஒதுக்கீடு பட்டியல், மற்றும் வேலை முற்றுப் பெறுதலுக்கான சான்றிதழ் இதுவும் அலுவலகத்தில் இல்லை. கேட்ட போது எனக்கு வழங்கப்படவில்லை.
4. பொறுப்பான எந்த கமிட்டி உத்திரவு இன்றி வேலைக்கான பணம் வழங்கப்பட்டிருக்கிறது.
5. வேலை முடிந்த பொழுது, இரட்டிப்பாய் அல்லது அதற்கு மேலே பணம் வழங்கப்பட்டிருக்கிறது.
6. யதார்த்த செலவு நிர்ணயிக்கப்பட்ட செலவைக் காட்டிலும் கூடும்போது, மறுபட்ஜெட் செய்ய வேண்டும். அதற்கு நிர்வாக அனுமதி வேண்டும். அது நடக்கவில்லை.
7. ஆர்கிடெக்ட்கள் தயார் செய்த நிர்ணயச் செலவு பட்டியலில் கம்பிகளின் அளவு மற்றும் சிமெண்டு செலவு குறிப்பிடப்படவில்லை.
8. கம்பிகளின் அளவும் சிமெண்டின் அளவும் சொல்லப்படாது போனதால் அதன் விலை பற்றி தெரியவில்லை.
9. இந்த முறையற்ற எஸ்டிமேட்டுகளுக்கு மொத்த செலவில் மூன்று சதவிகிதம் ஆர்கிடெகிட்க்கு கமிஷனாக வழங்கப்பட்டுள்ளது.

10. ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்பட்டவோது, ஆர்கிடெக்ட் பயன்படுத்திய பொருள் அளவு தரம் இவற்றை ஆய்வு செய்திருக்க வேண்டும். அப்படி நடக்கவில்லை.
11. எனவே CSI MKD யின் கட்டிடப்பணியில் ஒழுங்கினம் நடந்துள்ளது.
12. ஒவ்வொரு நிலையிலும் அதன் பணி நிறைவிற்கென சான்றிதழ் இருக்க வேண்டும். அது இல்லை நம்பிக்கை துரோகம் நடந்துள்ளது.
13. செகுரிட்டி பணம் வாங்காமல் 36 பேருக்கு வணிகவளாக அறைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. ஒரு ஒழுங்கு முறை இதன் அடிப்படையில் நிகழவில்லை.
14. ஒத்தி ஆவணங்கள் இலாது 17 பேருக்கு அறைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.
15. 160 லட்சம் ரூபாய் மக்களிடத்தில் பெறப்பட்டதில் 120 லட்சம் பயன்படுத்தப்பட விலை

A11) பொறுப்பாக வளங்களை நிர்வகித்தல். செக்லிஸ்ட்பொறுப்பாக வளங்களை நிர்வகித்தல் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கான செக்லிஸ்ட்

கீழ்க் கண்ட செக்லிஸ்ட் வளங்களின் ஆதாரங்களையும், இலக்கை அடைய எவை குறை தருகின்றன என்பதையும் தருகின்றன. ' ஊழலுக்கு சார்பானது' என்ற பகுதி தனிப்பட்ட விருப்பு மற்றும் ஆதாயத்திற்கு திருச்சபை வளங்களைப் பயன்படுத்திடாது இருக்க உதவுகின்றது. இது தனிப்பட்ட நபர் மற்றும் நிறுவனங்கள் பயன்படத்திட உதவுகிறது பொறுப்பான தலைமை தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட வளங்களை நிர்வகிக் உதவுகிறது

பெயர்கள்.............................................................................

நிறுவனம் பெயர் / வகிக்கும் பொறுப்பு.......................................

குறிப்பு :

1. வளம், 2. கணக்கெடுப்பில் வந்துள்ளது பகுதியாக / முழுமையாக, 3. கணக்கெடுப்பில் வராதது, 4. இலக்கை அடைய உதவுபவை, 5. ஊழலுக்கு உதவுபவை 6. தேவைப்படும் செயல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) மனித வளம் (திறனுள்ள மனித சக்தி, மனநலம், உடல் நலம்) அனுபவம் வாய்ந்தவர் / இடை நிலை ஊழியர் நிர்வாகம் மற்ற பணியாளர்கள் கமிட்டிகள் தன்னார்வர்கள் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள்: | | | | | |
| 2. நிதி ஆதாரம் வரவு (பீஸ், வட்டி, பங்குதாராரிடமிருந்து நன்கொடை, பண முதலீடு வருவாய், இதர வருவாய்) இன்சூரன்ஸ் பாங்க் லோன் பத்திர உத்திரவாதம் சொத்து விற்பனை மற்றவை | | | | | |
| 3. சேவைகள் / உற்பத்தி பொருட்கள் உற்பத்தி பொருட்கின் பல்வகை அளவகள் தரம் மற்றவை | | | | | |
| 4. அறிவு / தகவல்வளங்கள்<br>அறிவு வளம் இணையதள அனுபவம் ஆவணப்படுத்தல் மற்றவை | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. புதிய வளம் கண்டுபிடித்தல் நிறுவனங்களிலிருந்து தகவல், புர்மைகள் மற்ற நிறுவனங்களிலிருந்து அறிந்து கொள்ளல் | | | | | |
| 6. நிறுவன வளங்கள் நிறுவனப் பெயர் நிறுவன மதிப்பு இடம் வளங்கள் தீர்மானம் எடுப்பதில் சிறப்பு பணியாளர் மதிப்பு பணியாளர் தரம் தகவல் மேலாண்மை அமைப்பு முறை | | | | | |
| 7. வலைப்பின்னல ் வளங்கள ் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து கற்றல் சமூகத் தொடர்பாளர் தொழில் நுட்ப தொடர்பாளர் அரசுத் தொடர்பு | | | | | |
| 8. தொடர்பு வளங்கள் இணையம், அலைபேசி இணையதளம் தொடர்ப ஊடகங்களுடன் தொடர்பு மாநாடுகள் கடிதங்கள் பணியாளரின் திறன் மற்றும் நிர்வாகத்திறன் | | | | | |
| 9. இயற்கை வளங்கள் நிலம், காடு, நீர் மறு எரி சக்தி மரபு சாரா எரி சக்தி | | | | | |
| 10. பொருள் வளம் அலுவலக சாதனங்கள் ஊர்திகள் சொந்த வாடகை நிலம் | | | | | |
| 11. ஆவிக்குரிய வளம் ஆவிக்குரிய ஒப்படைப்பு விசுவாசப்பிரமானம் பைபில் ஸ்டடி வழிபாடு ஜெபம் கற்றுத்தரல் | | | | | |
| 12. நேரவளம் நேரம் தவறாமை சரியான நேரம் திட்டமிடல் நேரநிர்வாகம் | | | | | |
| 13. மரியாதை வளங்கள் பணியாளர் மதிப்பு நிர்வாக மதிப்பு நிர்வாக மக்களின் மதிப்பு கமிட்டி மதிப்புகள் மற்ற நாடு நிறுவன மதிப்புகள்விருதுகள் | | | | | |
| 14. இதரவை | | | | | |

## A12) நன்நெறி மற்றும் ஆவிக்குரிய தலைமைப்பண்பு குறித்த பரிசோதனை

நன்னெறி மற்றும் ஆவிக்குரிய தலைமைப்பண்பு பரிசோதனை இந்த கேள்விகளுக்கு கவனத்துடன் பதில் சொல்லி தனது தலைமைத்துவ திறன் மற்றும் ஆளுமைத்திறன் அளவிடுக. தனி இடத்தில் அமர்ந்து நேரம் எடுத்து பதில் கூறுக.

என் பெயர்...........................................................................

என் நிறுவனப் பெயர்.............................................................

| | |
|---|---|
| மதிப்பீடுகள், நேர்மை, தடுமாற்றம், முரண்கள் | |
| மதிப்பீடுகள் | |
| பொறுப்புத்தன்மை (அதிகாரத்துடன் தொடர்பு): என் தலைமைத்துவ பங்களிப்பில் இது என்ன அர்த்தம் தருகிறது? இதை எப்படி வலுப்படுத்துவது | |
| நீதி/சமத்துவம்: (இதன் பல வடிவங்கள்) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள். இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதை எப்படி பலப்படுத்துவேன்? | |
| தோழமை (மனஉருக்கம் / அதனால் அதற்கான பணி) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள் இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதை எப்படி பயன்படுத்துவேன்? | |
| வலுமைப்படுத்தல் (தனி நபர் திறனை வளர்த்தல், பலப்படுத்தல்): என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள் இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதை எப்படி பயன்படுத்துவேன்? | |
| சமூகப் பங்கேற்பு (ஒவ்வொரு தனி நபர் கண்ணியத்தை வலியுறுத்தல், அவர்களது திறனை | |

| | |
|---|---|
| சமூகத்திற்கு பயன்படுத்தல்) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள் இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதை எப்படி பயன்படுத்துவேன்? | |
| நம்பிக்கை (நிச்சயமில்லாத நிலையிலும் உறவு) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள். இது எனக்கு எவ்வளவு பொருந்தும். இதனை எப்படி பயன்படுத்துவேன்? | |
| வெளிப்படைத்தன்மை (வெளிப்படை, கணக்கொப்புவித்தல்) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள். இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதனை எப்படி பயன்படுத்துவேன. | |
| மெய்மை (நேர்மை, வெளிப்படை, வெளிப்படைத்தன்மை) என் தலைமைத்துவ பணியில் இதற்கு என்ன பொருள். இது எனக்கு எவ்வளவு பொருந்தும் இதனை எப்படி பயன்படுத்துவேன். | |
| பேராசைபற்றிருதல் (பேராசையிலிருந்து விடுபடல், அகங்கரம் விடுதலை)<br>என் தலைமைத்துவ பண்புக்கு இது எவ்வளவு பயன்படும்? இதை எப்படி பலப்படுத்துவேன். | |
| சேவை (பொதுச் சமூக நன்மை வேலை செய்தல்) என் தலைமைத்துவ பண்பில் இதன் பொருள் என்ன? இதன் முக்கயியத்துவம் என்ன? இதை எப்படி பலப்படுத்துவேன் | |
| மன்னித்தல் (என் தவறுகளையும் பிறர் தவறுகளையும் மன்னித்தல்) என் தலைமைத்துவ பண்பில் இதன் பொருள் என்ன? இதன் முக்கயியத்துவம் என்ன? இதை எப்படி பலப்படுத்துவேன் | |

| | |
|---|---|
| இரக்கம் கொள்ளுதல் (மற்றவர்களுக்காக பரிதபித்தல்) என் தலைமைத்துவ பண்பில் இதன் பொருள் என்ன? இதன் முக்கயியத்துவம் என்ன? இதை எப்படி பலப்படுத்துவேன். | |
| உண்மையாயிருத்தல் (நெறிகளுக்கும் வாக்குறதிகளுக்கும் உண்மையாயிருத்தல்) என் தலைமைத்துவ பண்பில் இதன் பொருள் என்ன? இதன் முக்கயியத்துவம் என்ன? இதை எப்படி பலப்படுத்துவேன். | |
| ஜாக்கிரதையாயிருத்தல் (வளங்களை ஆட்களைப் பயன்படுத்துவதில் ஜாக்கிரதை) என் தலைமைத்துவ பண்பில் இதன் பொருள் என்ன? இதன் முக்கயியத்துவம் என்ன? இதை எப்படி பலப்படுத்துவேன். | |
| ஆவிக்குரிய மூலங்கள் | |
| பொது: என் உந்துதலுக்கும் என் சக்திக்கும் மூலங்கள் யாது? இவைகளை எப்படி சந்திப்பேன்? | |
| என் விசுவாசம்: என் விசுவாசம் என் உந்துதலுக்கும் சக்திக்கும் மூலமா? ஆம் எனில் எப்படி? எந்த வழிபாட்டு முறைகள்? இல்லையெனில் ஏன்? இதை எப்படி வளர்த்தெடுப்பேன்? | |
| என் ஆவிக்குரிய தன்மை: என் ஆவிக்குரிய தன்மை எவ்வளவு தூாரத்திற்கு என் மதிப்பீகள் நெறிகளுக்கு பாலமாக இருக்கிறது? இதை எப்படி வளர்த்தெடுப்பேன்? | |
| என் பாதுகாப்பு வளையங்கள்:<br>என் சங்கடங்களில், தலைமைத்துவ வளர்ப்பில் என் பாதுகாப்பு வளையங்கள் யாவை? இவற்றை எப்படி வளர்த்தெடுப்பேன்? | |

| | |
|---|---|
| என் ஆலோசகர்? என் ஆலோசகர் யார்? என் பாஸ்டர்? என் ஆடிட்டர் யார்? என் ஆவிக்குரிய வாழ்வுக்கு தடுமாற்றம் | |
| நெறி முறைகளைப் பயன்படுத்துவதில் தர்ம சங்கடங்கள் வரும் போது எப்படி நடப்பேன்? | |
| என் தனி நெறிகளும், நிர்வாக நெறி முறைகளும் முரண்டும் போது எப்படி கையாளுவேன முரண்பாடுகள் | |
| என் நண்பர்களுடன் முரண்பாடுகளை எப்படி கையாளுவேன்? எப்படி வளர்த்தெடுப்பேன் | |
| என் எதிரிகளுடன் முரண்பாடுகளை எப்படி சந்திக்கிறேன் யார் எதிரிகள்? எப்படி தீர்வகளை உருவாக்குவேன் | |
| என் தலைமைத்துவத்தை குறைத்து மதிப்பிடுவோர் அல்லது ஆதரிப்போரை எப்படி நடத்துவேன்? என் செயலை எப்படி வளர்த்தெடுப்பேன் | |
| எப்படிபட்ட குணநலன்களை என்னைப் பினபற்றுபவர்களிடம் எதிர் பார்க்கிறேன். நான் நேசிக்க உருவாக்கப்பட்டேன? மரியாதை பெற அழைக்கப்பட்டேனா? | |

## A13) பொறுப்பான தலைமைத்துவத்திற்குரிய நெறிகள்

பொறுப்புள்ள தலைமைத்துவத்துக்கான வழிகாட்டல், ECLOF அமைப்பு, ஜெனிவா 2010 எழுத்தாளர்: கிறிஸ்டோப் ஸ்டுடல்பெக்கர், ECLOF அமைப்பான அனைத்து சபைகளின் சிறு கடன் வசதி அமைப்பின் ஆதரவுன் சுருக்கம்.

சில மதிப்பீடுகள், ஒழுங்குகள் இவற்றைக் கடைப்பிடிக்கும்படிக்கு ஒரு தனி நபரோ, நிறுவனமோ சில தன்னார்வ ஒப்பந்தங்களில் ஈடுபட நேரிடும் அப்போது இவை உதவுகின்றன. இவை உருவாக்கப்படலாம், அல்லது இருக்கும் வழிகாட்டல் தனிநபராகவோ நிறுவனத்தாலோ கைச்சாத்து அளிக்கப்படலாம். சில சட்டங்கள் அதோடு இணைந்த சில தண்டனைகள் இவற்றில் இல்லாது இருப்பது இதன் பலவீனம். கைசாத்து இட்ட ஆடகளினால் சரியாக கண்காணித்தல் செய்தால் அன்றி, இது மதிப்பு பெறாது. அப்படி செய்தால் தவிர, இது ஒரு துண்டுப் பேப்பர் மட்டுமே. அலங்கரிப்பு மட்டுமே. நடைமுறைப்படுத்திடவேண்டும். இல்லையெனில் இது மதிப்பை இழந்து விடும். தவிர, யார் யார் கைச்சாத்து இட்டார்களோ அவர்கள் மீது சந்தேகம் கொள்ளவும் நேரிடும்.

எல்லா மட்டங்களிலம் உள்ள தலைமைப் பொறுப்புகளை இந்த தலைமைப் பண்பு நெறிமுறை தாக்கும். குறிப்பாக உயர்மட்ட குழு உறுப்பினர்கள், நிர்வாக அந்தஸ்தில் உள்ளோர் கலந்தாலோசிக்கும் நிலையில் உள்ளோர் ஆகியயோரை கீழ்க்கண்ட 'பொறுப்பான தலைமைக்கான நெறி முறை' தேசிய பிராந்திய அளவில் நமது சொந்த நிறவனத்தின் தலைமைத்துவத்தை வலுமைப்படுத்துகிறது. தலைமைப் பண்பில் வளர வேண்டிய தரங்களை அது சொல்கிறது. (இதை www.eclof.org/www.globethics.net/web/guest/library) இதில் Download செய்யலாம்.

-----------

## என் பொறுப்பான தலைமைக்கான வழிகாட்டும் நெறி

I. (பெயர்)................................................................................

பொறுப்பான பதவியான.....................................................................ஐ

..........................................................நிறுவனத்தில் வகிக்கும் நான் என்

பொறுப்பான தலைமைக்கு கீழ்க்கண்டவற்றிற்கு என்னை ஒப்படைக்கிறேன்.

### விசுவாசம், மதிப்பீடு, மற்றும் மெய்மை:

- கடவுளின் நன்கொடைகளுக்கு நல்ல உக்கிரக்காரணாக நிறுவனத்தின் நல்ல பணியாளராக செயல்பட
- (என் நிறுவனத்தின் ) தரிசனம், செயல்நோக்கு, மற்றும் மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்த, உயர்த்த
- உண்மை, நேர்மை, வெளிப்படைத்தன்மை, பரிவு, மன்னிப்பு, உண்மையாயிருத்தல், ஜாக்கிரதை, மற்றும் நெறி சார்ந்த தைரியம்

### வளங்களின் மீது ஆளுமை :

- மேன்மைகள் உருவாக்க எல்லா நல்ல முயற்சிகளையும் தேட நாட

- திறமையான, நிலைத்த, வெளிப்படைத்தன்மை நடக்க இருக்கும் எல்லா வளங்களையும் மேன்மைப்படுத்த, பயன்படுத்த, உயர்த்த, நிர்வகிக்க
- தனி நபர் நலன் அல்லது பொது நலன் ஊக்குவிக்க
- பொருள்-மனநலம்-ஆவிக்குரிய நலனில் வளங்களை உயிர்ப்பிக்க, மதிக்க, நிர்வகிக்க
- நிறுவனச் சொத்துப்பட்டியல் உருவாக்கி அதை நடைமுறைப்படுத்த, நிறுவனம் சார்பில் அவற்றைப் பதிவுசெய்ய
- (அசையும் அசையாத) சொத்துக்கள் அனைத்தையும் நிலவும் கடனுக்கென (குறிப்பிட்ட காலத் தேவையில் அவசியமாக தேவைப்படும் பட்சத்தில் வெளிப்படையாக சரியான தீர்மானத்துடன் அன்றி) குத்தகைக்கோ, விற்பனைக்கோ விற்பதற்கில்லை. குறித்த நிதியை குறிப்பான காரியத்திற்கன்றி வேறு எதற்கும் பயன்படுத்துவதில்லை

  நாட்டின் (நிறுவனத்தின்) சட்டத்தை மதிப்பது

### வெளிப்படைத்தன்மையை, அறிக்கை வெளியீட்டை உறுதிப்படுத்தல்

- நிறுவனத்தின் அறிக்கை வெளியீடு,கணக்கு ஒப்பவித்தல், தணிக்கை தரத்தை சந்தித்தல்
- லஞ்சம் எனக் கருதும் எந்த நன்கொடையையோ,பணத்தையோ ஏற்க மறுத்தல்
- ஊழலுக்கு எதிராக பணி செய்வோரைப் பாதுகாத்தல் ஊழலை வெளிப்படுத்தும் விசில் ஊதிகளை பாதுகாத்தல்
- பாலியல் ஊழலை எதிர்த்தல்
- பதவி ஏற்கும் போதோ, அல்லது பதவியினின்று விலகும்போதோ அனைத்து தனிப்பட்ட சொத்து வருமானம் இவற்றை வெளிப்படையாக அறிவித்தல்
- எல்லா முரண்பாட்டுச் சூழலையும் தவிர்த்தல் தேவைப்படின் மூத்தவர்களுடன் கலந்தாலோசித்தல்
- தனிப்பட்ட மற்றும் பொது மற்றும் திறன் வாழ்வில் வெளிப்படை
- நிறுவனத்தின் மதிப்பைக் காப்பாற்றுதல்

### பணியாளர் மற்றும் தலைமைத்துவ வளர்ச்சி

- பணியாளர் தேர்வு, பணியாளர் நியமனம், வேலை ஒப்பந்தக் கடிதம், மருத்துவ மற்றும் இதரக் காப்பீடுகளில் குறைந்த பட்சம் தொழிலாளர் தரம் இவற்றை உருவாக்கல்
- குடும்ப உறுப்பினர்களை தீர்மானம் செய்யும் இடங்களில் வைக்காது இருத்தல், குறிப்பாக நிர்வாகத்தில்
- நிர்வாகப் பொறுப்புகள், கடமைகளில் பணிகளை பகிர்தல் கிடைமட்ட பகிர்தல்
- பணியாளர்,கமிட்டி இவைகளை பயிற்சி கொடுத்து பொறுப்பில் வளர்த்தல்
- என்னை விமர்சிக்கும் நண்பர்களை, ஆலோசகர்களை முக்கியப் பணிகளில் நியமித்தல்
- தனக்குப் பின்னால் வரும் தலைமையைப் பயிற்றுவித்தல்
- தலைமைத்துவத்திற்கென குறிக்கப்பட்ட பதவி நாட்களை மதித்தல்

### கண்காணித்தல்

இந்த நெறிமுறை விதிகள் என் தனிப்பட்ட ஒப்படைப்பு என் நிறுவன மேன்மைக்காக எல்லா பதவிகளின் சார்பில் நான் தன்னார்வமாக கைச்சாத்து இடுகிறேன். என் மூத்த அதிகாரிகள் வருடா வருடம் இந்த நெறிமுறையில் நான்

செயல்பட்டேனா என பார்வையிட உறுதி கூறுகிறேன் வருடம் ஒருமுறை அதன் அறிக்கையை என்னுடன் கலந்தாலோசித்து என் மேல் தலைமைக்கு வெளியிட ஒத்துக் கொள்ளுகிறேன்

இடம்................................ தேதி.............................................

கைசாத்து..................................................................

மேல் அதிகாரியின் கையொப்பம்.................................................

A14) யார் ஊழலை கண்காணிப்புக்கு உட்படுத்துவார்? செக்லிஸ்ட் நிறுவனத்தில் யார் இதைச் செய்வார். பல பதில்கள்

| | உள்ளூர் | தேசியம் | பிராந்திய அளவில் | உலக அளவில் |
|---|---|---|---|---|
| தனி நபர் மனச்சாட்சி, மதிப்பீடு | | | | |
| குடும்ப மேற்பார்வை | | | | |
| பணித்தள கண்ட்ரோல் | | | | |
| நிறுவன தரம் | | | | |
| நிறுவனங்கள் மற்றவை | | | | |
| சட்டம் :நீதித்துறை | | | | |
| ஊடகம்: புலன் விசாரனை | | | | |
| மதம்: ஆவிக்குரிய மேன்மை மதிப்பீடுகள் | | | | |
| பள்ளிகள்:கல்வி | | | | |

## A15) பாலியல் ஊழலை தவிர்த்தல் நெறிமுறைகள்

Act Alliance, 100க்கு மேற்பட்ட திருச்சபை – திருச்சபை நிறுவனங்களை உடையது. 2002ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மறு ஏற்றுக் கொள்ளல் மார்ச் 2010ல் வந்தது, வழிகாட்டல் வழிமுறைகள் இல்லாத நெறி முறைகள் மட்டுமே (பார்க்க அத் 3.1.8)

## Act Alliance ன் பாலியல் ஊழல் தவிர்ப்பு நெறிமுறைகள்

Act பணியாளர் ஒப்பந்தம் சார்ந்தது. பணியாளர்கள் மற்றுமத் தலைமைச் செயலக ஊழியர்கள் பற்றியது

1. பாகுபாடு எதுவுமின்றி மனித உரிமைகளை மதித்தல், போற்றுதல் சமூக அந்தஸ்து, இனம், மொழி, மதம், பாலினவேறுபாடு, வயது, திருமண நிலை, தேசம், கட்சி சார்பு இவற்றைக் கடந்து மனித உரிமை.

2. உள்ளூர் சடங்காச்சாரம், அகில உலக சட்டம், தேசிய சட்டங்களை மதித்து எல்லாரையும் மதித்து நடத்தல் (பாதிக்கப்பட்ட மக்கள், வெளியேற்றம் பெற்றவர்கள், அகதிகள்)

3. ஊழல், அதிகார துஷ்பிரயோகம் இவை நடைபெறாது, பாலியல் ஊழல் நடைபெறாத சூழலை உருவாக்கி நடத்துதல், நிர்வாகிகள் இப்படிப்பட்ட சூழலை மதித்து நடக்கவேண்டும்.

4. பணிகளில் நல்ல தரம், வெளிப்படைத்தன்மை, திறமை, உண்மையை நடத்தல்

5. தனி நபரோ, பெண்களோ, குழந்தைகளோ யாருக்கும் துன்பம் விளைக்கும் உடல ரீதியான பாலியல் ரீதியான மனரீதியான துன்பம் தராமல் பாதுகாத்தல்

6. எந்த தனி நபர் மற்றும் குழுவின் வலிமையின்மையை சாதகமாக பயன்படுத்தாமலிருத்தல்

7. அனுமதிக்கான வயது என்று இல்லாது எல்லா குழந்தைகளுக்கும் 18 வயதுக்கு உட்பட்டோருக்கு பாலியல் தொந்தரவு தராதிருத்தல். குழந்தைகளுடன் பாலுறவு கூடாது பரிசு கொடுத்து செய்வது சரியல்லை.

8. எந்த நபருடனும் பாலியல் ஊழல் கூடாது இது பதவி நீக்கலுக்கு கொண்டு செல்லும்.

9. பணம் பதவி, பொருள் கொண்டு பாலியல் ஊழல் கூடாது. எல்லா தவறான பால் உறவும் தடுக்கப்படுகிறது. பணம் பொருள் உதவி உட்பட.

10. பாலியல் உறவு வேண்ட பதவியை பயன்படுத்த கூடாது பாலியல் உறவுக்கான நன்கொடைகள் தவிர்த்தல் தன்னுடைய கண்ணியம் காக்க பணியாளர் எந்த நன்கொடையும் பெறக் கூடாது.

11. பணி செய்யும் எந்த மக்கள் மத்தியிலும் பால் உறவு கூடாது. இந்த உறவுகள் தவிர்க்கபடவேண்டும். எல்லா நேரங்களிலும் கவனமாக இது பார்க்கப்படவேண்டும்.

12. பாலியல் ஊழல் உறவு வைப்பதை எந்த பணியாளரும் கூடாது. வேலை நேரம் மற்றும் வேலை நேரம் தாண்டியும்.

13. எல்லா ரகசிய தகவலும்,பணியாளர் பற்றி நிறுவனத்திலிருந்தும் வெளியிடங்களிலிருந்து வரும் தகவல்கள் அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்படவேண்டும்.

14. எந்த வகை மீறலும் அறிக்கை வடிவமாக உயர் நிர்வாக அதிகாரி அல்லது மனித வள அதிகாரி(அல்லது யாரிடம் புகார் கூற வேண்டுமோ) அங்கு புலன் விசாரணைச் செயலுக்கு அனுப்பப்படவேண்டும்.

15. நடத்தை நெறி விதிகளின் எந்த மீறலும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படு. அந்தந்த நிறுவனத்தின் வழிமுறைகளின் படி

16. மற்ற பணியாளர்கள் மீது தவறாக புகார் கூறும் எவரும் இந்த நெறிமுறைகளை மீறுவதால் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுவார்.

கைச்சாத்து இடும் (Act பணியாளர் அல்லது Act தலைமைச் செயலக பணியாளர்) மேற்படி காரியங்களை வாசித்து அறிந்து கொண்டதற்கும், இவற்றை ஏற்றுக் கொண்டதற்கு ஏதுவாக,குறிப்பாக1 to 16 விதிமுறைகள் இவை மீண்டும் காலகட்டத்தில் விரிவான மீள் பார்வைக்கு உட்படுத்தப்படுமென்று அறிகின்றனர். மீறல்களுக்கான விளைவுகளை,ஏதும் ஒரு விதியிருப்பினும், ஏற்றுக் கொள்கின்றனர்

பதவி ________ கையெழுத்து

# ஊழலற்ற திருச்சபை சாத்தியமே!

கடந்த இருபது வருடங்களில் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகள் மற்றும் வெற்றிகளின் மத்தியில், உலகில், ஊழல் ஒரு நெறி சார்பற்ற சவாலாகவும் வளர்ச்சிக்கு தடைக்கல்லாகவும் உள்ளது. இந்த ஆய்வு தவிர, இத்தலைப்பில் அதிக வெளியீடுகள் இல்லை. திருச்சபைகளில் மிஷன் அமைப்புகளில், நிறுவனங்களில், மற்றும் வளர்ச்சி நிறுவனங்களில் முயற்சிகளும் ஆய்வுகளும் பல தீர்வுகளைத் தருகின்றன.

கடந்த பதினைந்து வருடங்களில் (1995-2010) திருச்சபை மற்றும் வளர்ச்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் இங்கு குறிக்கப்படுகின்றன; மதிப்பிடப்படுகின்றன. செயல்பாட்டிற்கான நெறிமுறைத் தகவுகள் மற்றும் இறையியல் தகவுகள் தரப்படுகின்றன. வெற்றிக்கான நடத்தை விதிகள் மற்றும் வழிமுறைகள் பிரச்சினைகளையல்ல, தீர்வுகளையே காண்கிறது. 35 பரிந்துரைகளை இந்த ஆய்வு கூறுகிறது. விட்டு ஓடாமல், ஊழலைத் தகர்க்கும் நம்பிக்கையைத் தருகிறது. ஊழலற்ற திருச்சபை சாத்தியமே!

**ஆக்கியோன்**

கிறிஸ்டோப் ஸ்டுக்கல்பெர்கர் குளோப்எதிக்ஸ் நெட்டின் செயல் இயக்குநர் மற்றும் நிறுவனர், பேசல் ஸ்விட்சர்லாந்து பல்கலைக்கழக நெறித்துறை பேராசிரியர், ஸ்விட்சர்லாந்து TIயின் நிறுவனர் மற்றும் தலைவர். பல புத்தகங்கள மற்றும் கட்டுரைகளின் ஆசிரியர் www.globethics.net

தமிழ்ப்பதிப்பாளர்

அருள்திரு. ஜேகப் பெல்லி, குளோப்எதிக்ஸ் இந்தியாவின் இணை இயக்குநர் முகவரிஎண் 9, கந்தசாமி தெரு, கவுண்டம்பாளையம், கோவை – 641037 தொலைபேசி +91 94432 13836 மின்அஞ்சல்: bellyjacob@gmail.com

மொழிபெயர்ப்பாளர்

அருள்திரு. ச. சந்திரமோகன், சி.எஸ்.ஐ. திருச்சி, தஞ்சை திருமண்டல கௌரவ ஆயர். சி.எஸ்.ஐ. சினாடு மன்ற அருட் தொண்டுத் துறையில் பணியாற்றியவர். திருச்சபை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான தலைமைத்துவம் சமாதானம் உருவாக்கல் பயிற்சியில் ஈடுபடுகிறார். தொலைபேசி : 0 98840 13137 மின் அஞ்சல் : revchandramohans@gmail.com